

கல்கி
KALKI
23-8-1959
30
காசு



உங்கள்
அழகுக்கு
அழகு
செய்பவை...

ஹிமாலயா
புக்கே



நறுமணங் கமழும், குளுமையான ஹிமா
லயா புக்கே ஸ்நோ உங்கள் மேனியை மிருது
வாகவும் மழமழப்பாகவும் வைத்திருக்கிறது.
வெல்வெட் போன்ற ஹிமாலயா
புக்கே டாய்லெட் பவுடர்
உங்கள் மேனியின் இயற்கை
அழகைப் பன்மடங்
காக்குகிறது.



ஹிமாலயா புக்கே
ஸ்நோ,
டாய்லெட் பவுடர்

லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி சார்பாக
இந்துஸ்தான் லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

HBS. 15-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி" யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 19 இதழ் 4	தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்	விகாரி௵ ஆவணி௴ 7௳

குருஷேவின் நல் முயற்சி

ருஷ்யப் பிரதமர் குருஷேவ் அமெரிக்காவுக்கு விஜயம் செய்கிறார் என்ற செய்தி உலகம் முழுதும் ஒரு புது நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளித்திருக்கிறது. அதிலும் பிரதமர் நேருஜி, "சமீப காலத்தில் வந்த செய்திகளுக்குள் எல்லாம் மிகச் சிறந்த செய்தி குருஷேவை அமெரிக்க ஜனாதிபதி வரவேற்றிருக்கிறார் என்ற செய்தி!" என்றார். இது பாரத மக்கள் உணர்ச்சியின் உண்மை பிரதிபலிப்பு.

யுத்த காலத்தைவிட மிகக் கடுமையான பீதி, யுத்தம் முடிந்த பிறகும் உலகில் நிலவி வருகிறது. இந்த பீதி மனிதனின் உயரிய பண்புகளையும் ஆத்மாவையும் அழித்து வருகிறது.

'இந்த பீதி ஓயாதா? சாந்தியும் சமாதானமும் உலகில் நிலவாதா?' என்று உலக மக்கள் ஏங்குகிறார்கள். இப்படி ஏக்கங் கொண்டுள்ள மக்கள், இரண்டு வல்லரசுத் தலைவர்களும் கூடிப் பேசப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் விடிவு காலம் ஏற்படும் போலிருக்கிறதே என்ற நம்பிக்கை ஒளி காண்கிறார்கள்.

இன்று உலகில் இரண்டு வித ஆட்சிமுறை நிலைத்துவிட்டன. ஒன்று மக்கட் பிரதிநிதி சபை முறை; மற்றையது கம்யூனிஸ ஆட்சி முறை.

இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து இந்த இரண்டு ஆட்சிமுறைகளும் இந்த உலகில் வாழக்கூடும் என்று பரஸ்பரம் அங்கீகரித்து விட்டார்களானால் உலகில் பாதிப் பிரச்னைகள் தீர்ந்து போகும்.

இத்தகைய பரஸ்பர நல்லெண்ணம் ஏற்படாமல் தடுத்து வருவது, பரஸ்பர அவநம்பிக்கையும் பீதியும்தான்.

அணுகுண்டை முதலில் உண்டாக்கி உபயோகப் படுத்தியது அமெரிக்கா. 'அதைக் கடைசி வரையில் தனக்குத் தெரிவிக்காமல் ஏமாற்றியது, பார்த்தாயா!' என்று ருஷ்யா அமெரிக்காவின்மேல் கோபமும் அவநம்பிக்கையும் பயமும் கொண்டது. அமெரிக்காவோ, இந்த ருஷ்யா, யால்டா ஒப்பந்தம் போன்ற எத்தனை ஒப்பந்தங்களைக் காற்றில் பறக்க விட்டு விட்டது என்று ருஷ்யாவின் வார்த்தையில் அவநம்பிக்கை கொள்கிறது.

இந்தப் பரஸ்பர அவநம்பிக்கையில் இத்தனை நாட்களும் இரண்டு வல்லரசுகளும் போட்டுக் கொண்ட சண்டையில் அவதியுறுவது பலவீனமான நடுநிலைமை வகிக்கும் நாடுகள்தான். தங்கள் அணுகுண்டு பலத்தைப் பரஸ்பரம் காட்டிக் கொள்வதில் உலகம் முழுவதும் விஷ வாயுவைப் பரப்பி, உண்ணும் நீரும், சுவாசிக்கும் காற்றும் விஷமய மாக்கி வருகின்றன.

ருஷ்யா அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகள் கண்டுபிடித்து எப்பொழுது சோதிக்கத் தலைப்பட்டு விட்டதோ, அப்போதே ருஷ்யா அமெரிக்காவுக்குச் சமமான ஆயுத பலம் பெற்று விட்டது என்பதை உலகுக்கு நிரூபித்து விட்டது. வான்வெளியில் 'ஸ்புட்னிக்' விட்டதிலிருந்து அதன் சக்தி அமெரிக்கச் சக்தியையும் மிஞ்சக் கூடியதுதான் என்று நிரூபித்து விட்டது.

அது மட்டுமல்ல; ஹைட்ரஜன்குண்டு சோதனைகளை ஒருதலைப்பட்சமாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டார் ராஜாஜி. அமெரிக்கா அதைக் கேட்கவில்லை. "ருஷ்யாவைக் கேட்கட்டுமே, பார்ப்போம்!" என்றார்கள். அப்படியே ருஷ்யாவைக் கேட்டுக் கொண்டார். ருஷ்யா ராஜாஜியின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தது. ஆறு

மாத காலம் சோதனை நடத்தாமல் நல்லபடியாக நடந்துகொண்டது. இவையெல்லாம் ருஷ்யாவின் சரித்திரத்தில் புதிய சகாப்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உலக மக்களுக்கு அறிவுறுத்தின.

மேலும் இரண்டு வருடங்களாக ருஷ்யப் பிரதமர் குருஷேவ் உலக வல்லரசுத் தலைவர்கள் கூடி உலகப் பிரச்னைகளைப் பற்றிப் பேச வேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறார். ஆனால் அமெரிக்கா இதற்குச் சாக்குகள் சொல்லிச் சற்றும் இடம் கொடுக்காமல் வந்திருக்கிறது. இத்தகைய நிலையில் இப்போது ருஷ்யப் பிரதமர் குருஷேவுக்கு அமெரிக்கா அழைப்பு அனுப்பி யிருப்பதானது அமெரிக்க எண்ணத்திலும் மாறுதல் ஏற்பட்டு விட்டது என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த உலகப் பெருந் தலைவர்கள் முன்னிலையில், பெர்லின் பிரச்னை, இரண்டு ஜெர்மனிகளை இணைக்கும் பிரச்னை என்று எத்தனையோ பிரச்னைகள் எழலாம். இவற்றில் எல்லாம் சுமுகமான முடிவு காண்பது சிரமமாக இருக்கலாம். பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் அபிப்பிராயத்தையும் சேர்த்துக் கொண்டே அந்தப் பிரச்னைகளில் அமெரிக்கா தன் முடிவைத் தெரிவிக்க வேண்டியதாக இருக்கலாம்.

ஆனால் விஷகுண்டு சோதனைகளை நிறுத்தும் நல்ல முடிவுக்கு இந்த இரு தலைவர்களும் வந்தார்களானால் உலகம் முழுதும் அவர்களுக்கு என்றென்றும் நன்றி செலுத்தும். சச்சரவில் சேராத மக்களின் க்ஷேமத்துக்கு ஹானி உண்டாக்க அமெரிக்காவுக்காவது ருஷ்யாவுக்காவது யாருக்கும் உரிமை இல்லை என்பதை ராஜாஜியும் ஆல்பர்ட் ஷ்வேட்ஸரும் ஆவேசத்துடன் சொல்லி வந்திருக்கிறார்கள்.

அதனால்தான் இந்த இரு தலைவர்களின் சந்திப்பு வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று உலகமே பிரார்த்தனை செய்கிறது.

என்ன சேதி?

திருமதி விஷயம்

சென்னை நகரசபை தி. மு. க. அங்கத்தினர்கள் 'ஸ்ரீ' என்று குறிப்பிட வேண்டிய இடங்களில் எல்லாம் திரு என்றும், 'ஸ்ரீமதி' என்று குறிப்பிட வேண்டிய இடங்களில் எல்லாம் திருமதி என்றும் குறிப்பிடலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீக்கு ஏற்ற தமிழ்ச் சொல் 'திரு' என்பதுதான். திருவாய்மொழி, திருவாசகம், திருப்பதி என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியங்களில் திரு கையாளப்பட்டு வந்திருக்கிறது. அதை எந்தத் தமிழரும் மன நிறைவோடு வரவேற்பார்கள்.

ஆனால் 'திருமதி' என்ற சொல் ஒரு கலப்படச் சொல். தமிழ் காதுக்கோ, நாவுக்கோ ருசிக்காத சொல்லாக இருக்கிறது.

திரு என்பது திருவாளர் என்று விரியும். திருவாளருக்குப் பெண்பால்சொல் திருவாட்டி என்பது. திருவாட்டி என்று விளிக்கக் கூச்சப்படவேண்டியதில்லை. அல்லது 'திரு' என்பதை இரு பாலாருக்கும் சமமாக உபயோகப்படுத்திக்கொண்டு போகலாமே!

காஷ்மீர் நிதி

கஷ்டங்கள் அளிப்பதனால் ஆண்டவன் மீது கோபம் வந்தாலும், கஷ்டத்தைக் கண்டு இரங்கும் உள்ளத்தை மக்களுக்கு அளித்திருப்பதைக் கண்டு கையெடுத்துக் கும்பிட வேண்டியிருக்கிறது.

காஷ்மீரில் வெள்ளப் பெருக்கெடுத்து, மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உள்ளாகி யிருக்கின்றனர் என்ற செய்திகள் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியதிலிருந்து மக்கள் உள்ளங்களிலிருந்து இரக்கமும் அனுதாபமும் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடின. பலர் நேர்முகமாகக் காஷ்மீர் சர்க்காருக்குப் பணமாக அனுப்பினார்கள். சிலர் காஷ்மீர் கஷ்ட நிவாரண நிதி திரட்டி அவர்களுக்கு அனுப்பினார்கள். இன்னும் சிலர் டில்லியில் எங்கே அனுப்புவது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறோம்.

புது டில்லியில் விஞ்ஞான பவனத்தில் இம் மாதம் 23ம் தேதி மாலை ஸ்ரீமதி எம். எஸ். காஷ்மீர் மக்களின் கஷ்ட நிவாரண நிதிக்காக ஓர் கச்சேரி செய்கிறார். கர்நாடக சங்கீதத்தில் ஆர்வம் மிக்கவர்கள் எல்லாம் சேர்ந்து, காஷ்மீர் கஷ்ட நிவாரண நிதிக்குப் 'போதும் போதும்' என்று சொல்லும் அளவுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்!

அபிரகாம் பண்டிதர்

"வாழ்வு சிறிது; வளர் கலை பெரிது" என்பார்கள். கலைத் துறையில் மனத்தைப் பறி கொடுத்தால் ஒரு மனித ஆயுள் போதாது என்பது தெரிய வரும். இன்னும் பலப் பல பிறவிகள் எடுத்து இக் கலைத் துறை ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்ய மாட்டோமா என்றுதான் தோன்றும். இப்படிப்பட்டவர்களை உலகம் என்றும் போற்றிப் பாராட்டத்தான் செய்கிறது.



தஞ்சை அபிரகாம் பண்டிதர் அவர்கள் செய்துள்ள பெரும் பணியை நினைத்துப் பார்த்தால் அவர் எப்படிப்பட்ட கலாரசிகர், கலை விற்பன்னர் என்று நினைக்கத் தோன்றுகிறது!

அவர் சங்கீதக் கலையில் அபார மோகம் கொண்டார். சங்கீதம் பாடுவதிலேயோ, கேட்பதிலேயோ ஆர்வம் காட்டுவதுடன் நிற்காமல் சாஸ்திரத்தை, இலக்கணத்தை ஆராய்

வதில் தீவிர ஆர்வம் கொண்டார். பலப்பல சங்கீத வித்வான்களைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தினர். பண்ணுக்கும் ராகத்துக்கும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ந்தார். தமிழிசையில் பன்னிரண்டு ஸ்வரங்கள், இருபத்திநான்கு ஸ்ருதிகள், பண்கள் இவையெல்லாம் எப்படி ஏற்பட்டன என்றெல்லாம் 40 ஆண்டுகளுக்கு முன் ஆராய்ந்து 'கருணாமிர்தசாகரம்' என்ற அருமையான நூலை வெளியிட்டார். கர்நாடக சங்கீதத்திலும் தமிழ்ப் பண்களிலும் ஒருங்கே விருப்பு, வெறுப்பில்லாத பற்றுக் கொண்டு இந்த அற்புத நூலை வெளியிட்டார். இதற்காக அவர் செலவிட்ட காலமும் பொருளும் கணக்கில் அடங்கா.

இந்த அருமையான நூல், இன்று சங்கீத சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரும் பொக்கிஷமாக விளங்குகிறது.

இப்படிச் சங்கீதக் கலைக்கு, தமிழிசைக்கு அருந் தொண்டாற்றிய பெரியாரின் நூற்றாண்டு விழாவை இம்மாதம் 23, 24 தேதிகளில் தஞ்சையில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப் பெரியாரின் தொண்டும் புகழும் தமிழகத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

வெளிநாடுகளில் தமிழர் கல்வி

கொழும்பு, ஆகஸ்டு, 13உ

தமிழ் மாணவ மாணவிகள் இந்தியாவில் நடனம், சங்கீதம் முதலிய அருங் கலைகளில் பயிற்சி பெறச் செல்லுவதாயின் அவர்களது கல்விச்செலவுக்கு முன்பெல்லாம் செலாவணிக் கட்டுப்பாடு இலாகா தங்குதடையில்லாமல் பர்மிட் வழங்கி வந்தது. இப்பொழுது கொஞ்ச காலமாக இந்த மாணவர்களுக்குப் பணம் அனுப்பப் பர்மிட் கொடுக்கப்படுவதில்லை யென்று பல புகார்கள் கிளம்பியிருக்கின்றன. இதைப் பற்றி இவ்வாரம் ஒரு அங்கத்தினர் பார்லிமெண்டில் கேட்டபொழுது, இலங்கையில் கிடைக்காத கல்வியை வெளிநாடுகளில் கற்பதா யிருந்தால்தான் பணம் அனுப்ப பர்மிட் கொடுக்க முடியுமென்றும், மற்ற மாணவர்களுக்குப் பணம் அனுப்ப அனுமதி யில்லையென்றும் இதுதான் அரசாங்கக் கொள்கையென்றும் நிதி மந்திரி விளக்கிக் கூறினர். படிப்புச் செலவுக்காக இலங்கை மாணவர்கள் வெளிநாடு செல்வதையும் அவர்கள் பணமெடுத்துச் செல்லுவதையும் கட்டுப்படுத்த அரசாங்கம் சமீப காலத்துக்கிடையில் தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறது.

கவர்னர் ஜெனரல் குதிரைப் பந்தயம்

இலங்கையில் குதிரைப் பந்தயங்கள் நடைபெறும்பொழுது கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடப்பது பல்லாண்டுகளாக இருந்து வரும்

வேலியே பயிரை மேய்கிறது! சுதந்திரக் கட்சி அதைத் தடுக்கிறது!



வழக்கம். அந்நிய ஆட்சியாளரின் காலத்திலிருந்து வந்தது இந்த வழக்கம். இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகும் இவ்வளவு காலமும் இது நீடித்து வந்தது. பண்டாரநாயகா அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குடியையும் குதிரைப் பந்தயத்தையும் ஒழித்துக் கட்டப் போவதாக மகாஜனங்களுக்குக் கூறியிருந்தது. குடி விஷயத்தில் அரசாங்க வைபவங்களில் மதுவை விநியோகிக்கக் கூடாதென்று உத்தரவிட்டார்கள், ஆனால் மதுபானத்தைத் தடுக்க எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு மாருக, அரசாங்கமே சாராயத்தை வடித்துப் பொது ஜனங்களுக்கு விற்பனை செய்யும் வழக்கம் எப்பொழுதும் போல் நீடித்திருந்து வருகிறது. சாராயம் வடிப்பதும் விற்பதும் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாயிருப்பது போதாதென்று கள் விற்பனையில் நேரடியாக இறங்கவும் உள்நாட்டு அமைச்சு ஒரு திட்டம் தயாரித்திருக்கிறது. இந்த லட்சணத்தில் குதிரைப் பந்தயத்தைத் தடை செய்வது அரசாங்கத்தின் இலட்சியமாயிருக்கும் பொழுது கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடப்பது குதிரைப் பந்தயத்தை அரசாங்கம் நேரடியாக ஆதரிப்பதைப் போலிருக்கிறதென்றும், ஆகையால் இனி கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடக்கக் கூடாதென்றும் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஸ்தாபனம் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க கவர்னர் ஜெனரல் ஸர் ஆலிவர் குணதிலகா குதிரைப் பந்தயத்துக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார். இதன் பயனாக, இனி இலங்கையில் கவர்னர் ஜெனரல் கப் ரேஸ் நடைபெற மாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கேரளப் பிரச்னை

இரண்டு தினங்களுக்கு முன்னால் இலங்கை மலையாளி மகாஜன சபையினர் கொழும்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்திக் கேரளத்தில் இந்திய மத்திய அரசாங்கம் தலையிட்டதை வன்மையாகக் கண்டித்து ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தின் நகலைத் தில்லி சர்க்காருக்கு அனுப்பி வைப்பதற்காக இந்திய ஹை கமிஷனரிடம் சமர்ப்பிப்பதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி சென்ற திங்கட்கிழமை சுமார் இருநூறு மலையாளிகள் இந்திய ஹைகமிஷன் முன்னிலையில் பெருங் கூட்டமாகக் கூடி நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். கூட்டத்திலிருந்து ஏழெட்டுப் பேர்கள் அடங்கிய ஒரு கோஷ்டியினர் உள்ளே வந்து ஹைகமிஷனரைச் சந்திக்கலாமென்று கூறப்பட்டதாயும்; இது சம்பந்தமாகப் பேச்சுகள் நடந்து கொண்டிருக்கையில் வெளியே காத்திருந்த போலீசார் கூட்டத்தினரைக் கலைந்து போகுமாறு உத்தரவிட்டதாயும் கூட்டத்தினர் கலைய மறுக்கவே, அவர்களைக் கலைக்கத் தடியடிப் பிரயோகம் செய்ததாயும் தெரிய வருகிறது.

போலீசாரை அங்கு தருவித்தது யார் என்ற பிரச்னையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கிளப்பியிருக்கிறார். இந்திய ஹைகமிஷன், போலீசாரைத் தாங்கள் அழைக்கவில்லையென்றும் போலீசார் தாங்களாகவே வந்ததாயும் கூறப்படுவதால் இது ஒரு முக்கியமான சட்டப் பிரச்னையைத் தோற்றுவித்திருக்கிறது. வெளிநாடுகளிலுள்ள ஸ்தானிகராலயக் கட்டடம் இருக்குமிடம் அந்நாட்டுக்குச் சொந்தமானதாகையால் அங்கு அழைப்பின்றி அத்துமீறிப் போலீசார் நுழைவது துராக்கிரகமென்றும் போலீசாரின் இந்த அடாத செயலைப் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு பீட்டர் கெனமென் பிரதம மந்திரி பண்டாரநாயகாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இந்திய ஹைகமிஷன் அதிகாரிகளோ விசாரித்ததில் தாங்கள் போலீசாரை அழைக்கவில்லையென்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களின் தூதுகோஷ்டிக்கு இந்திய ஹைகமிஷனர் திரு கண்டேலியா பேட்டியளித்து அவர்கள் மகஜரை வாங்கிக் கொண்டிருக்கிறார். அதைத் தில்லிக்கு அனுப்பி வைக்க உத்தரவாதம் அளித்திருக்கிறார்.

— ரஜனி

சுதந்திரக் கட்சியும் மக்கள் எழுச்சியும்

எஸ்.வி.எஸ்.

(சென்றவாரத் தொடர்ச்சி)

அகமதாபாத் பெரும் ஆலைகள் உள்ள நகரம். பணக்காரர்கள் வாழும் நகரம் என்றெல்லாம் சிறப்புப் பெற்றிருக்கலாம். அவை யெல்லாவற்றையும்விட மேலானசிறப்பு ஒன்று உண்டு. காந்தி மகான் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்ததும் முதன் முதலில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்து தேசசேவை புரியத் தொடங்கிய இடம் அகமதாபாத். இதைவிட மேலான புகழ் என்ன இருக்க முடியும்?

நம் நாட்டில் பக்தர்கள் யாதாகிலும் ஒரு க்ஷேத்திரத்துக்குப் போனால், பாடல் பெற்ற ஸ்தலமா என்று விசாரிப்பார்கள்.

அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞான சம்பந்தர் இவர்களில் யாராகிலும் ஒருவர் வந்திருந்து, அந்தக் கோவில் சுவாமியின் பேரில் ஒரு பதிகம் பாடியிருந்தால் இன்றைய பக்தர்கள் அடையும் புளகாங்கிதம் இவ்வளவு அவ்வளவு அல்ல. 'அப்பர் மிதித்த மண்ணை நாமும் மிதிக்கிறோம்; அப்பர் பாடிப் பரவிய ஆண்டவனை நாமும் வணங்குகிறோம்' என்று பெருமை கொள்ளுகின்றனர்.

நம் நாளில் மனிதருள் தெய்வமாகத் திகழ்ந்த காந்தி மகான் வாழ்ந்து, புனிதப் படுத்திய இடம் அகமதாபாத்துக்கு அருகில் இருக்கிறது என்றால் அங்கு போகாமல் இருக்க முடியுமா? அகமதாபாத்துக்குப் போய்ச் சேர்ந்ததும் முதல் காரியமாகக் காந்தி மகான் வாழ்ந்து புனிதப்படுத்திய சபர்மதி ஆசிரமத்துக்குப் போக வேண்டும் என்ற ஆசை எழுவது இயல்பேயல்லவா?

சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள், ராஜாஜி அகமதாபாத்துக்கு வருகிறார் என்ற செய்தியைக் கேட்டதும் ராஜாஜியை ஆசிரமத்துக்கு அழைத்திருந்தார்கள். அதனால் ராஜாஜியுடன் ஆசிரமத்துக்கு ஏகும் அரிய வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

அகமதாபாத் நகரத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் சபர்மதி ஆற்றங்கரையிலே அழகான சோலைகள் சூழ்ந்த சூழ்நிலையில் ஆசிரமம் அமைந்திருக்கிறது.

ராஜாஜியை ஆசிரமத்தின் தற்போதையத் தலைவரும் மற்றவர்களும் மிகுந்த மனமகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

ஆசிரமத்தின் ஒரு பகுதியில் காந்தி மகான் வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்த புகைப்படங்களைக் கண்காட்சியாக வைத்திருக்கிறார்கள். அவற்றைப் பார்த்துக் கொண்டே வந்தபோது, ஓரிடத்தில் ராஜாஜியும் மகாத்மாஜியும் இரண்டு நாற்காலிகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் புகைப்படம் இருந்தது. இதைப் பார்த்ததும் ராஜாஜி, "இது பேஷின்பிரிட்ஜ் ஸ்டேஷனில் எடுத்தது. நானும் மகாத்மாஜியும் ரயிலுக்காகக் காத்திருக்கிறோம்" என்றார். அந்தப் பகுதியைப் பார்த்து விட்டு வந்தபோது, வெளியே ஆசிரமவாசிகளும் அக்கம்பக்கத்தவர்களுமாகச் சுமார் ஆயிரம் பேர்கள் ராஜாஜியின் பொன்மொழிகளைக் கேட்க வேண்டுமென்று ஆவலுடன் கூடியிருந்தனர். உண்மையிலேயே அப்போது அவர் பேசிய பேச்சு பொன்மொழிகளாகவே அமைந்தது!

ராஜாஜிக்குப் பழைய நினைவுகள் எல்லாம் வந்தன. அவற்றில் சிலவற்றைச் சொல்லிக் கொண்டு வந்தபோது கேட்டவர்கள் மெய் சிலிர்த்தனர்.

"நான் நாற்பதாண்டுகளுக்கு முன் முதன் முறையாக ஒரு நாள் இரவு மகாத்மாஜியுடன் இங்கு வந்து சேர்ந்தேன். நான் படுத்துக் கொள்வதற்காக மகாத்மாஜி தமது கையாலேயே துடைப்பத்தை எடுத்து இந்த இடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்தார்.

பம்பாய் மகாநாட்டில் ராஜாஜி தமது துவக்க விழாப் பிரசங்கம் செய்கிறார்





ராஜாஜிக்கு இடதுபுறம் நிற்பவர் ஸ்ரீராஜாராமதத்தியெ

" 'நானே பெருக்கிக் கொள்கிறேன்' என்றேன். மகாத்மாஜி கேட்கவில்லை. எனக்கு அவ்வளவு நன்ருகப் பெருக்க வராது என்று நினைத்தார். இந்த விஷயத்தில் அவரோடு சர்ச்சை செய்ய வேண்டாம் என்று சும்மா இருந்து விட்டேன்.

" அதற்குப் பிறகு எத்தனையோ முறை இங்கு வந்திருக்கிறேன். எவ்வளவோ முக்கியமான விஷயங்கள் இங்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. காந்திஜி பிறகு வர்தா-சேவா கிராமத்துக்குப் போனர். என்ருலும் எனக்கு இந்த இடம்தான் ரொம்பவும் பிடித்திருக்கிறது. சபர்மதி ஆற்றங்கரையிலே அமைந்துள்ள இந்த இடம் போல வேறு எதுவும் ஆக முடியாது !

" நாற்பதாண்டுகளுக்கு முன் காந்தி மகான் இங்கிருந்தபோது எப்படியிருந்ததோ அப்படியே இந்த ஆசிரமம் இன்றும் இருந்து வருவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

" இந்தியா எவ்வளவோ மாறி விட்டது. உலகம் எவ்வளவோ மாறி விட்டது. ஆனல் இந்த ஆசிரமம் மட்டும் மாறவில்லை. சபர்மதி நதியும் அப்படியே இருக்கிறது. அதனல் தான் மாருத்தன்மை பெற்ற நதியையும், மலையையும் நம் முன்னேர்களும் ரிஷிகளும் வணங்கினர்கள். அவற்றைத் தொடர்ந்து வணங்கி வரவேண்டும்.

" இப்பொழுதெல்லாம் எங்கும் சுயநலம் தலை விரித்தாடுகிறது. என்ருலும் இந்த ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தனியானதோர் பொறுப்பு இருக்கிறது. உயர்ந்த லட்சியங்கள் கொண்ட எளிய வாழ்க்கை நடத்தி மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்களாக இருக்கிருர்கள். இதை நினைவில் வைத்துக் கொண்டு நடந்துகொள்ளவேண்டும்" என்ருர்.

சபர்மதி ஆசிரம விஜயம், இந்தப் பிரயாணத்தில் மறக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

* * *

அகமதாபாத் சர்வகலாசாலையில் பேராசிரியர் பி. ஆர். ஷெனாய் பொருளாதாரத் துறைத் தலைவர். அவர் பொருளாதாரத் துறை மாணவர்களுக்கு ராஜாஜி பொருளாதாரம் சம்பந்தமாகப்பேசவேண்டும் என்று ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார். பொருளாதாரத்துறை மாணவர்கள் மட்டும்தான் வருவார்கள் என்று எதிர்பார்த்தார் பேராசிரியர் ஷெனாய். அதனல் முந்நூறு பேர்கள் கொள்ளக் கூடிய ஒரு அறையில் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். ஆனல் அவர் போட்ட கணக்கு தவறு என்று மாணவர்கள் நிரூபித்து விட்டார்கள். அந்தச் சர்வகலாசாலையிலுள்ள ஐயாயிரம் பேர்களும் ராஜாஜியின் பேச்சைக் கேட்டே தீருவோம் என்று சொல்லி விட்டார்கள். ஆகவே, கூட்டத்தைத் திறந்த வெளி மைதானத்தில் ஏற்பாடு செய்ய வேண்டியதாகி விட்டது.

அத் திறந்த வெளி மைதானத்திலும் கூட்டத்துக்கு இடம் போதாமல் போகவே மாணவர்கள் ஜன்னல்கள் மீதும், மூன்ருவது மாடி கைப்பிடிச் சுவர்கள் மீதும் நெருக்கியடித்து உட்கார வேண்டியதாகி விட்டது. அவர்கள் உட்கார்ந்திருந்த முறையைப் பார்த்த போது, யாரும் மூன்ருவது மாடியிலிருந்து கீழே விழாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை ராஜாஜி உள்ளத்தில் எழுந்தது.

இவையெல்லாம் மாணவர்களிடையே ராஜாஜியைக் கண்டதும் உண்டான உற்சாகம் எவ்வளவு என்பதற்கு எடுத்துக்காட்டு.

அந்தக் கூட்டத்தில் ராஜாஜி செய்த நல்லுரை மற்ற சர்வகலாசாலை மாணவர்களும் ஏற்கக் கூடியதாகும்.

" மாணவர்கள் தங்கள் கல்லூரி நாட்களில் படிப்பில்தான் கவனம் செலுத்த வேண்டும். அதனல் அரசியலில் கவனம் செலுத்தக் கூடாது என்பதல்ல. அரசியல் போக்கையும் கவனித்து வரவேண்டும். ஆனல் கல்லூரிப் படிப்பு முடியும்வரையில் அரசியலில் நேரிடையாகப் பங்கு கொள்ளக் கூடாது. படிப்பு முடிந்த பின்னரே அதைப் பற்றி நினைக்க வேண்டும்" என்ருர்.

* * *

அகமதாபாத்தில் கணிசமான தமிழர்கள் இருக்கிருர்கள். தமிழர்கள் எங்கே போனல் என்ன? அவர்களால் கர்நாடக சங்கீதத்தையும் பரதநாட்டியத்தையும் மறக்க முடியவில்லை. இத் தமிழ்நாட்டுக் கலைகளை ரசிப்பதற்கென்றே சங்கம் அமைத்துக் கொள்கிருர்கள். தமிழ் நாட்டிலிருந்து சிறந்த கலைஞர்களோ, பிரமுகர்களோ வந்தால் அவர்களைத் தங்கள் சங்கத்துக்கு வரவழைத்துக் கௌரவிப்பதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள். அப்படிப்பட்டவர்கள், ராஜாஜி அகமதாபாத்துக்கு வந்தால் சும்மா விருப்பார்களா?

அகமதாபாத் மேயர் தலைமையில் ராஜாஜிக்கும், பேராசிரியர் ரங்காவுக்கும் வரவேற்புரை நல்கிக் கௌரவித்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் ராஜாஜி பேசியபோது, ''இந்தச் சங்கம் சங்கீதம், நடனம், மதப் பிரசாரம் ஆகியவைகளைப் பரப்புவதே குறிக் கோளாகக் கொண்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. இதில் முதலாவதாகிய சங்கீதம்— என்னால் பாட இயலாது. நடனம், அதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லே!'' என்று ராஜாஜி கூறிய போது, 'கொல்' என்று சபையில் சிரிப்பொலி எழுந்தது. ''கடைசியாக மத சம்பந்தமான விஷயம் பற்றி இச்சங்கத் தில் பேசப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதை வேண்டுமானால் நான் செய்யலாம்!'' என்று ஆரம்பித்து, சுதந்திரக் கட்சி நமது தர்மத்தின், பண்பாட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று மிக விரி வான பிரசங்கம் செய்தார்.

* * *

நாற்பது வயதுக்குட்பட்ட உத்தியோ கஸ்தர்கள், தொழில் துறையிலுள்ளவர்கள் சேர்ந்து 'ஜூனியர் சேம்பர்' என்று ஒரு சங்கம் அமைத்துக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள். இந்தச் சங்கத்தில் ஆடவர் களும் பெண்களும் அங்கத்தினர்களாக இருக் கிறார்கள். இச்சங்கத்துக்குத்தலைவியாக ஸ்ரீமதி சின்னுபாய் இருக்கிறார். அறிவும் சாமர்த்திய மும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு மாது தலைவியாக இருக்கும் சங்கம் பிராபல்யமாக இருப்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

அங்கு ராஜாஜி சிறிது நேரம், சுதந்திரக் கட்சியின் லட்சியங்களைப் பற்றிப் பேசினார்.

பிறகு அங்கத்தினர்கள் சந்தேக விளக்கங்கள் கேட்டார்கள்.

அதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய சந்தேகம்: '' சுதந்திரக் கட்சி காங்கிரஸுக்கு விழக்கூடிய வோட்டுக்களைப் பிரித்துவிட்டால் கம்யூனிஸ்டுகளின் பலம் பெருகி விடாதா?''

''காங்கிரஸே கம்யூனிஸ்ட் கொள்கைகளே மேற்கொண்ட பிறகு, காங்கிரஸுக்கும் கம்யூ னிஸ்டு கட்சிக்கும் வித்தியாசம் என்ன இருக் கிறது? கம்யூனிஸ்டு ஆட்சி முறையை எதிர்க் கும் மக்கள் எப்படிக் காங்கிரஸுக்கு வோட்டு போடுவார்கள்? காங்கிரஸ் வோட்டுக்கள் பிரிக்கப்படும் என்ற பேச்சே எழவில்லை!'' என்றார் ராஜாஜி.

* * *

முன்னாள் மக்கள் சபையின் சபாநாயகராக இருந்து மக்கள் பேரபிமானத்தைப் பெற்ற வர் காலஞ் சென்ற ஜி. வி. மாவலங்கர். அவ ருடைய புதல்வர் திரு புருஷோத்தம் மாவ லங்கர், 'லாஸ்கி கழகம்' என்று ஒரு கழகம் அமைத்து, மக்களின் சிந்தனையைக் கிளறும் ஆராய்ச்சிப் பணி புரிந்து வருகிறார்.

லாஸ்கி என்பவர் பிரிட்டனைச் சேர்ந்த சிறந்த சிந்தனையாளர். சமுதாய அமைப்புக் களைப் பற்றியும், பிரச்னைகளைப் பற்றியும் தீவிரமான கருத்துக்களை வெளியிட்டவர். அவ ருக்கு உலகம் முழுதிலும் சீடர்கள். திரு புருஷோத்தம் மாவலங்கர் பொருளாதாரத் துறை பேராசிரியராகப் பணியாற்றி வருவ தால், லாஸ்கியின் பெயரிலே ஒரு ஆராய்ச்சிக் கழகம் அமைத்து, சர்க்கார் உதவியோ, மற்ற வெளி உதவியோ நாடாமல் அங்கத்தினர்க ளின் சந்தாவைக் கொண்டே கழகத்தை நடத்தி வருகிறார். அந்தக் கழகத்தில் தம் தந்தையின் பெயரிலுள்ள ஒரு அறையை ராஜாஜி திறந்து வைக்க வேண்டும் என்று மாவலங்கர் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த அறையில் பாராளுமன்ற முறை யைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்துவதற் குரிய நூல்களும் பத்திரிகைகளும் இடம் பெற்றிருக்கும் என்றார். அந்த அறையை ராஜாஜி திறந்து வைத்துப் பேசிய போது, காலஞ் சென்ற மாவலங்கர் இன்று உயிருடன் இருந்தால் நமக்கு எத்தகைய பக்கபலமாக விளங்குவார் என்று குறிப்பிட்டார். இங்கும் பல அன்பர்கள் பல கேள்விகள் கேட்டு ராஜாஜியிடம் விளக்கம் பெற்றார்கள்.

அகமதாபாத் 'குஜராத்தி கிளப்' ராஜாஜி அவர்களுக்கு வரவேற்பளித்தது. குஜ ராத்தி கிளப்பில் வக்கீல்கள், டாக்டர்கள், வர்த்தகர்கள் ஆகிய பல துறைகளைச் சேர்ந்த வர்களாகச் சுமார் இரண்டாயிரம் பேர்கள் கூடிவிட்டார்கள். இந்தக் குஜராத் கிளப்பி னிடம் காலஞ் சென்ற ஸர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுக்குத் தனியானதோர் அன்பும் பற்றுதலும் உண்டு. இந்தக் குஜராத் கிளப்புக்கு காந்திமகானும் வந்து பேசியிருக் கிறார். பல பெரியோர்களுடைய தொடர்பு கொண்ட பழம்பெரும் சங்கமான குஜராத் கிளப் ராஜாஜிக்கு வரவேற்பளித்தது அதன் மரபுக்கு உகந்த வகையிலேயே இருக்கிறதல் லவா? இங்குமின். ஜி. ரங்காவும் ராஜாஜியும் சுதந்திரக் கட்சியைப் பற்றியே பேசினர் மக்கள் மிகுந்த சிரத்தையோடு கேட்டனர்.

* * *

சாதாரணமாகவே என்றிருந்தாலே அங்கு ஒரு ரோட்டரி சங்கம் இருக்கும். அகமதாபாத் போன்ற நகரத்தில் கேட்க வேண்டுமா?

ரோட்டரி சங்கத்தில் பொதுவாகப் பெரும் வியாபாரிகள், தொழில் அதிபர்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், பாங்கர்கள் இப்படிப் பலதரப்பட்ட உயர்தரப் பிரமுகர்கள்தான் அங்கத்தினர்களாக இருப்பார்கள். இங்கே ராஜாஜி பேசும் போது, ''அகமதாபாத் தங்கச் சுரங்கம் என்று அறிந்து இங்கு வந் திருக்கிறேன். இங்கு எனக்கு எல்லாதர மக்க ளிடமிருந்தும் வரவேற்பு கிடைத்தது. இதி லிருந்து என் கட்சிக்கு இங்கு நல்ல ஆதரவு இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் தங்கம் தானாகக் கிடைப்பதில்லே. மெள்ள வெட்டித் தான் எடுக்க வேண்டியிருக்கிறது. ஜாக்கிரதை யாக வெட்டினால் தங்கம் கிடைக்கும் என்பது தெரிகிறது'' என்று கூறினார்.

இந்தக் கூட்டத்தில் ராஜாஜி ''செல்வந் தர்கள், ஏழை எளியவர்களுக்கு உதவக் கட மைப்பட்டவர்கள். அதற்காகப் பிச்சை இடு வது போல் பணத்தைக் கொடுக்கக் கூடாது. உதவி நாடி வருபவர்கள் தங்கள் சொந்த முயற்சியை உபயோகித்து வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்குப் பல தொழில்கள் வியா பாரங்கள்ஏற்படுத்தித்தரவேண்டும்'' என்றார்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான நபரைக் குறிப்பிட வேண்டும். அவர்தான் ராஜா ஹத்தி

சிங். இந்தப் பெயர் எங்கோ கேட்டிருப்பதாக நினைக்கிறீர்கள் அல்லவா? அவர்தான் பிரதமர் நேருஜியின் சகோதரி ஸ்ரீமதி கிருஷ்ணாவின் கணவர். ஒரு காலத்தில் தீவிர சோஷலிஸ்ட்டாக இருந்தவர். இப்போது பம்பாய் சுதந்திரக்கட்சியின் காரியதரிசியாக இருக்கிறார். இவர் ராஜாஜி பம்பாய்க்கு வந்ததிலிருந்து, புறப்பட்டுப் போகும் வரை உடனிருந்து ராஜாஜியைப் பல விதத்தில் கவனித்துக் கொண்டார். அவரது எளிய சுபாவமும் சீரிய தொண்டும் மறக்கக் கூடியதன்று.

ராஜா ஹதீசிங் குடும்பம் அகமதாபாத்தில் மிகப் பழைய பெரிய குடும்பம். அவரது முன்னோர்கள் அரும்கலை விநோதர்களாகவும், சிறந்த பக்திமான்களாகவும் இருந்திருக்கிறார்கள். எங்கும் ஆலைகள் சூழ்ந்த அந்த நகரத்தில் இன்று கலையழகு மிக்க ஒரு ஜைன மதக் கோவில் இருக்கிறது. இந்தக் கோவில் ஹதீசிங் அவர்களின் பாட்டனார் நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டியது. அந்தக் கோவிலுக்கு ராஜாஜியை அழைத்துப் போய்க் காட்டினர். அக்கோவிலுள்ள அழகிய சிற்பச் செல்வங்களைப் பார்த்தபோது தமிழ் நாட்டுச் சிற்பச் செல்வங்களின் நினைவுதான் யாருக்கும் வரும்!

இத்துடன் ராஜாஜியின் அகமதாபாத் விஜயத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. இரண்டு நாள் விஜயத்தில் அகமதாபாத்தில் பாமர மக்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், ஆலை முதலாளிகள் ஆகிய வாழ்க்கையில் எல்லாப் படிகளிலுமுள்ள மக்களைச் சந்தித்தார். எல்லாரும் ஒரு முகமாகச் சுதந்திரக் கட்சிக்கு மனப்பூர்வமான வரவேற்பு அளித்தார்கள்.

அகமதாபாத் மக்களை மகாகுஜராத் பிரச்னை ஆட்கொண்டிருக்கிறது. அவர்கள் பம்பாய் மாகாணத்தைவிட்டுப் பிரிந்து தனி மாகாணம் அமைத்துக் கொண்டு வாழத் துடிக்கின்றனர். இந்தப் பிரச்னை சம்பந்தமாக ராஜாஜியோ சுதந்திரக் கட்சியோ ஏதும் கூறவில்லை. இவை பிராந்திய பிரச்னைகள். அந்தந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டிய பிரச்னைகள் என்றே சொல்லி வந்திருக்கிறார் ராஜாஜி. இதனால் குஜராத்திய மக்கள் மனப்பூர்வமான வரவேற்பு சுதந்திரக் கட்சிக்கு அளிப்பார்களா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் குஜராத்திய மக்கள் ராஜாஜியின் நிலையை, சுதந்திரக் கட்சியின் கொள்கையை மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டு மகத்தான வரவேற்பு அளித்து விட்டார்கள்! பாரத மக்கள் முழு மனத்துடன் சுதந்திரக் கட்சியை வரவேற்கத் தயாராய் இருக்கிறார்கள் என்பதை அகமதாபாத் நிரூபித்து விட்டது.

ஆகாச வெடி!

"காங்கிரஸ் மந்திரிகள், விருந்துகளைக் குறைத்துக் கொண்டு அலுவல்களில் ஈடுபட வேண்டும்."

— மத்திய காங்கிரஸ் பார்லிமெண்டு குழு

"அலுவலில் ஈடுபட நேரம் இருந்தால் அந்த நேரத்தில் ஒரு விருந்துக்குப் போக மாட்டோமா?" என்கிறார் ஒரு மந்திரி.

★

"மாமனார் வீட்டில் பாத்திரங்களைத் திருடியதாக மருமகன் கைது."

— குமரி வட்டச் செய்தி

"பாத்திரமறிந்து பெண்ணைக் கொடுக்க வேண்டும்" என்றது இதனால்தானோ?

★

"ஒரு போலீஸ் கோஷ்டியை 400 ஆப்பிரிக்கர்கள் கழிகளைச் சுழற்றிச் சென்று விரட்டினார்கள்."

— டர்பன் செய்தி

கழிகளுக்குப் பதிலாகத் தம் கண்களை அவர்கள் சுற்றுவார்கள் என்று போலீஸ்காரர்கள் நினைத்தார்கள் போலும்!

★

"சேலம் ஜில்லா சூரியமலையில் சுரங்கம் வெட்டுவது பற்றி லோக சபையில் ஒரு தமிழ் எம். பி. கேள்விகள் போட்டு மந்திரியைக் குடைந்தார்."

— செய்தி

குடைந்ததற்குப் பின் மலையை விட, கடினமானது மத்திய மந்திரிகளின் மனம் என்ற முடிவுக்கே அந்த எம். பி. வந்திருக்க வேண்டும்.

"டெல்லி வேடிஹார்டிஞ்சு ஆஸ்பத்திரி நிர்வாகத்தை இந்திய சர்க்கார் ஏற்க பார்லிமெண்டு வட்டத்தில் எதிர்ப்பு."

— டெல்லி செய்தி

தனிப்பட்ட ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் தலையிடும் வியாதிக்கு, இந்திய சர்க்காருக்கு ஒரு ஆஸ்பத்திரி வேண்டாமா?

★

"ஜீவ ஜந்துக்களை இம்சை செய்வதைத் தடுக்கும் மசோதா சீக்கிரமே பார்லிமெண்டுக்கு வருகிறது!"

— செய்தி

"இதனால் மாம்பலம் கொசுக்கள், தங்களை அதிகமாக அல்லவா கடிக்கும்?" என்று கேட்கிறார் ஒரு நகரவாசி.

★

"கடன் கொடுக்க மறுத்த கடைக்காரரின் கால் எலும்பை முறித்துவிட்டு ஓடியவன் பிடிபட்டான்."

— செய்தி

கடன் கொடுத்தபின் வசூலிப்பதில் காலை ஒடித்துக் கொள்பவர்களும் உண்டு.

★

"பயங்கரமான கவி நதி வெள்ளத்தைத் தாண்டிக் காதலியைச் சந்திக்க வந்த ஒரு பாகிஸ்தானி போலீஸாரிடம் சிக்கினான்."

— செய்தி

"ஒரு கவி வெள்ளத்தைப் பெருக்கிப் போலீஸாரிடமிருந்து விடுதலை பெற முடியவில்லையா?" என்று இங்கு ஒரு மண்ணடிக் கவிஞர் கேட்கிறார்.

[ஸர்தார் உஜ்ஜல் சிங் பஞ்சாப் அரசாங்கத்தில் முன்னாட்களில் நிதிமந்திரியாகப் பணியாற்றியவர். இந்தியாவின் இரண்டாவது நிதிக்கமிஷனில் ஒரு அங்கத்தினர். கிழக்குப் பஞ்சாப் பகுதியில் விவசாயத் துறையில் நேரடி அனுபவமுள்ளவர். மேல்நாட்டு முன்னேற்றங்களையும் நம் நாட்டுத் தேவைகளையும் 'விவசாயி' என்ற முறையில் உணர்ந்தவர். கிராம மக்களுக்குள்ள பசி உணவுப்பசி; நிலப் பசி அல்ல என்று உச்சவரம்பின் அறிவீனத்தை வெகு ரசமாக எடுத்துச் சொல்லுகிறார். — ஆசிரியர்]

நிலத்துக்கு உச்சவரம்பு

ஸர்தார் உஜ்ஜல் சிங்

கடந்த சில ஆண்டுகளாகப் பல நாடுகளில், நிலச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்நிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் அறியாமையிலும் வறுமையிலும் அழுந்திக் கிடந்த எல்லா நாட்டு மக்களும் அயல் நாட்டு ஆட்சி ஒழிந்து விடுதலை பெற்றதும் தங்கள் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமென்று விரும்பியதில் ஆச்சரியமில்லை. இந்தப் புத்துணர்ச்சியின் வேகம் பல்லாண்டுகளாக வெளிநாட்டினரின் உதவியால் தங்களை முன்னேற விடாமல் சிரமப்படுத்தி வந்த ஜமீன்தார் முறையின் மீதுதான் முதன் முதலில் தாக்கியது. இதுகாறும் தாங்கள் முன்னேறாமல் இருந்ததற்கு இந்த மத்திய சகாப்த முறையே காரணம் என்று அவர்கள் கருதினர். சுதந்திர அரசாங்கங்கள் இந்தச் சூழ்நிலையில் நிலச் சீர்திருத்தத்தைத்தான் முதலில் கவனிக்கத் தொடங்கின.

கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளைப் பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அங்கெல்லாம் தனி உடைமைகள் ஒழிக்கப்பட்டன; தொழிற்சாலைகள் தேசியமயமாக்கப்பட்டன; நிலங்களும் கட்டடங்களுங்கூடச் சர்க்கார் சொத்தாக மாறின. ஆனால் யூகோஸ்லேவியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து முதலிய நாடுகளில் காணப்பட்ட மாறுதல்கள் நமக்கு ஒரு பாடமாக இருக்கின்றன. எல்லா உடைமைகளும் தேசியமாக்கப்பட்ட போதிலும், நில உடைமை விஷயத்தில் மட்டும் கூட்டுறவுப் பண்ணை, சமுதாயப்பண்ணை முதலிய பரீட்சைகள் சில ஆண்டுகள் நடத்திப் பார்த்துப் பிறகு தனி உடைமை முறைதான் சிறந்ததென்று முடிவுக்கு வந்து, அங்கே தனிப்பட்ட விவசாயிகளுக்கு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது. நிலங்களுக்கு உச்சவரம்பு மட்டும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. யூகோஸ்லேவியாவில் 25லிருந்து 40 ஏக்கர் வரையில் வரம்பும், கிழக்கு ஜெர்மனியிலும் போலந்திலும் 250 ஏக்கர் வரையில் உச்ச வரம்பும் கட்டப்பட்டுள்ளன.

பாரத நாடு சுதந்திரம் அடைந்த பிறகு சமஸ்தானங்களெல்லாம் அண்டை ராஜ்யங்களுடன் இணைக்கப்பட்டு ஜமீன்தாரி முறையும் ஒழிக்கப்பட்டு விட்டது. நிலச்சுவான்தார்களுக்கும் அரசாங்கத்துக்கும் நேரடியாகத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அரசியல் சட்டத்தின் மூலம் தனி உடைமைச் சொத்துக்குப் பாதுகாப்பளிக்கப்பட்ட எந்த நாட்டிலும் நில உடைமைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. இந்த நாடுகள் அனைத்திலும் - மிகச் சிறு நாடுகளாகிய டென்மார்க்கு, ஹாலந்து உள்பட—விவசாய உற்பத்தித் துறையில் அசாதாரண முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. சொந்தக்காரர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம்தான் இம்முன்னேற்றம் ஏற்பட்டதே தவிர நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டியதின் மூலம் உண்டாகவில்லை. உதாரணமாக இங்கிலாந்து வருஷந்தோறும் பெருவாரியான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கிறது. உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக அரசாங்கம் விவசாய முறைகளுக்குத் தர நிர்ணயம் செய்து எல்லாப் பண்ணைகளும் இத்தரத்துக்கு எட்ட வேண்டுமென்று ஏற்பாடு செய்தது. எந்தப் பண்ணையாவது இந்த அளவுக்கு அபிவிருத்தியடைய வில்லையானால் அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டு மற்றவர்களுக்குக் குத்தகைக்கு விடுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு இதர வகைகளில் ஊக்கமளிக்கிறது. கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளுக்குள் ஈரான், எகிப்து இரு நாடுகளும் 250 ஏக்கர் அளவில் நில உடைமைக்கு வரம்பு கட்டியிருக்கின்றன. பாகிஸ்தானில் 500 ஏக்கர் வரம்பு ஏற்படுத்தியிருந்தும் தோட்டம் தோப்புக்கென்று அதிகப்படியாக மேலும் 150 ஏக்கரை வைத்துக்கொள்ள அனுமதித்திருக்கிறது. வியட்நாம் நாட்டில் கூடச் சமீபத்தில் 250 ஏக்கர் அளவில் வரம்பு கட்டப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளுள் ஜப்பான் தேசத்தில் மட்டுமே அமெரிக்க ராணுவத்தின் நிர்ப்பந்தத்தாலும், அரசியல் காரணங்களாலும் குறைந்த அளவில் வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு ஈடாக ஜப்பானிய அரசாங்கம் மற்ற நாடுகளில் காணப்படாத அளவுக்குக் கடன் வசதி, உர விநியோகம் முதலிய வகைகளில் உதவி அளிக்கிறது. இதைத் தவிர, ஜப்பானில் விவசாயத்துக்குத் துணையாகப் பல்வேறு குடிசைத் தொழில்கள் பெருவாரியாக அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. இத்தொழில்களெல்லாம் பெரிய தொழில் ஸ்தாபனங்களுடன் இணைக்கப்பட்டிருப்பதால் இவற்றில் ஈடுபட்டிருக்கும் குடிசைத் தொழிலாளிக்கு மூலப் பொருள்கள் வாங்கும் கவலையும் தயாரான சாமான்களை விற்பனை செய்யும் பிரச்னையும் ஏற்படுவதில்லை. ஆகையால் குறைந்த அளவில் வரம்பு கட்டியிருந்தபோதிலும் அதனால் கஷ்டம் ஏற்படவில்லை.

நிலத்துக்கு மட்டும் வரம்பு ஏன்?

இந்தியாவில் மற்ற எந்த உடைமைகளுக்கும் உச்சவரம்பு நிர்ணயிக்காமலிருக்கும் போது நிலத்துக்கு மட்டும் வரம்பு கட்ட வேண்டுமென்று ஏன் தீர்மானித்தார்களென்று தெரியவில்லை. 'நிலம் வேண்டுமென்று எல்லோரும் விரும்புகின்றனர்; நிலப் பரப்பு ஏராளமாக இல்லாததால் நிலப் பசியைத் தீர்க்க வரம்பு கட்டவேண்டும்' என்று சொல்லுகிறார்கள். தவிர, இதர சொத்துக்கள் மனித உழைப்பினாலும் முதலீட்டின் விளைவினாலும் உண்டானவை; நிலமோ இயற்கை அன்னையிடமிருந்து இலவசமாகக் கிடைக்கப் பெற்றது: அதனால் இதற்கு வரம்பு கட்டுவது தகும் என்று மற்றொரு காரணமும் காட்டி வருகிறார்கள்.

இந்த இரண்டு வாதங்களும் தவறு என்பது உடனே விளங்கும். கிராமாந்தரப் பகுதிகளில் வறுமை தாண்டவமாடுகிறதென்பதும் அங்குள்ளவர்களுக்கு விவசாயம் ஒன்றுதான் ஜீவனத்துக்கு வழி யென்பதும் உண்மையே. இந்நிலையில் குடிசைத் தொழில்களிலும், சிறு தொழிற்கூடங்களிலும், பெரிய தொழில் ஸ்தாபனங்களிலும் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் தேடித் தருவது தான் புத்திசாலித்தனமான செயலே தவிர, நிலத்தையே நம்பி மேலும் மேலும் அதிகமான மக்களை வாழும்படி செய்வதில் அர்த்தமில்லை. கிராமங்களில் பசி இருக்கிறது உண்மையே. ஆனால் அது வயிற்றுப் பசி; உணவுப் பசி; நிலப்பசி அல்ல. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள்தான் தேவை. முன்னேற்றமடைந்துள்ள எல்லா நாடுகளிலும் நிலத்திலிருந்து மக்களை அப்புறப்படுத்தி, தொழில் ஸ்தாபனங்களில் அமர்த்தி, அவர்களுக்கு வருமானத்தைப் பெருக்கித் தேசிய வருமானத்தையும் உயர்த்தித்தான் முன்னேறியுள்ளார்கள். அதுதான் சரியான பாதை. வேகமாக விருத்தியாகிக் கொண்டு வரும் கிராமவாசிகளை உபயோகமுள்ளவர்களாக ஆக்கத் தொழில் அபிவிருத்தி மூலம்தான் முடியும்.



ஸர்தார் உஜ்ஜல் சிங்

விவசாயமும் ஒரு தொழில்

மேலும், ஒரு தொழில் ஸ்தாபனத்துக்கு எவ்வளவு மூலதனம், முன் ஆலோசனை, திட்டம், நவீன முறைகளின் அறிவு எல்லாம் தேவைப்படுகின்றனவோ அதேபோல் விவசாயத்துக்கும் தேவைப்படுகின்றன. எவ்வளவு மூலதனம் போட்டு, எவ்வளவு உழைத்து, எப்படியெல்லாம் மண் வளத்தைப் போஷித்துத் தரிசு நிலத்தையும் மட்டரக நிலத்தையும் உயர்தர விளைபொருள் சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்ய வேண்டும் என்பது விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத்தான் தெரியும். இயற்கை பளித்துள்ளபடி இயற்கை நிலையில் தரிசாகக் கிடக்கும் ஏராளமான நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர அரசாங்கம் பிரயத்தனப்படுவதுதானே? விவசாய இலாக்கா சேகரித்து வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள்படி சாகுபடிக்கு அருகதையான நிலம், ஆனால் சாகுபடிக்கு வராத நிலங்கள் 10 கோடி ஏக்கர் அளவுக்கு இந்தியாவில் இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. இவ்வளவு பரந்த விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பைச் சாகுபடிக்குக் கொண்டு வர அரசாங்கம் சிறு முயற்சிகூட எடுத்துக்கொள்ளவில்லை. சோவியத் ருஷ்யாவில் 1954 ம் ஆண்டுக்குப் பின் குருசேவின் உற்சாகத்தினால் ஒன்பது கோடி ஏக்கர் தரிசு நிலங்கள் உபயோக முள்ளவையாகச் செய்யப்பட்டன.

பத்துச் சென்டு நிலம் போதுமா?

தரிசு நிலங்களிலிருந்து பயிர் எழுப்பி மகசூல் உண்டாக்க வேண்டுமானால் பெருவாரியான மூலதனமும் நவீன விவசாய முறைகளும் கைக்கொள்ளவேண்டும். முழுதும் இல்லாவிட்டாலும் பாதியளவுக்காவது இந்தியாவிலுள்ள தரிசுநிலங்கள் அரசாங்கத்தாலோ அல்லது தனிப்பட்டவர்களாலோ விவசாயத்துக்குக் கொண்டு வரப்பட்டால், நிலமில்லாதவர்களின் நிலப் பசியைத் தீர்க்கப் பெரிதும் உதவும். சராசரியாக 30 'ஸ்டான்டர்ட்' ஏக்கர் என்று உச்சவரம்பு கட்டி, உபரியாகக் கிடைக்கும் நிலத்தை விநியோகம் செய்து எத்தனை நிலமில்லாத விவசாயிகளுக்கு எவ்வளவு நிலம் வழங்க முடியுமோ, அதைக் காட்டிலும் அதிகமாக இம்முறையில் நிலம் அளிக்க முடியும். கிராமாந்தர மக்களுக்கு வேண்டியது அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்துக்கும் அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வகை செய்ய முடியாத பத்துச் சென்டு துண்டு நிலமல்ல, அவர்கள் கோருவது. உழைத்துச் சம்பாதிக்க வாய்ப்பளிக்கும் வேலையே.

நில உடைமைகளைப் பற்றி 1955 மார்ச…
அரசாங்கம் நடத்திய ஆராய்ச்சியில் ருசிகரமான விவரங்கள் கிடைத்திருக்கின்றன. மிகவும் குறைந்த அளவாகிய 20 சாதாரண ஏக்கர் அல்லது 10 'ஸ்டான்டர்ட்' ஏக்கரில் உச்சவரம்பு கட்டுவதாக வைத்துக் கொண்டாலும், உபரியாகக் கிடைக்கும் நிலத்தை நிலமில்லாதவர்களுக்கும், ஒரு ஏக்கராவுக்கும் குறைவாக நிலமுள்ளவர்களுக்கும் பங்கீடு செய்தால் ஐந்து நபர்களடங்கிய ஒரு குடும்

பத்துக்கு இரண்டு ஏக்கர் நிலம்கூடக் கிடைக்காது. முப்பது ஸ்டாண்டர்ட் ஏக்கர் அளவில் வரம்பு கட்டினால் ஒரு குடும்பத்துக்கு ஒரு ஏக்கர்கூட முழுமையாகக் கிடைக்காது. இதற்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டுமா?

சமத்துவம் வேறு; நிலச்சீர்திருத்தம் வேறு

மேலும் சமூகத்தில் சமத்துவத்தை நிலை நிறுத்த இந்த நிலச் சீர்திருத்தம் தேவை என்று கூறப்படுகிறது. நகர்ப்புறங்களில்தான் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கு மிடையே அதிகமான ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அங்கெல்லாம் உடைமைகளுக்கு உச்சவரம்பு அவசியமில்லையென்று கருதப்படும்போது நில உடைமைக்கு மட்டும் வரம்பு கட்ட அவசியம் என்ன? சமூகத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வரி விசாரணைக் கமிஷன் தீர்க்கமான ஆலோசனைக்குப் பின், ''வருமான வரி கொடுத்தபிறகு ஒருவருடைய அதிகபட்ச வருமானம் சாதாரண ஒரு குடும்பத்தின் சராசரி வருஷ வருமானத்தைவிட முப்பது மடங்குக்குமேல் இருக்கக் கூடாது'' என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறது. இந்தச் சிபாரிசு அமுலாக்கப்பட்டிருந்தால் கிராமப் பகுதியிலுள்ளவர்களுக்கும் நகர்ப் பகுதியிலுள்ளவர்களுக்கு மிடையே அரசாங்கம் பட்சபாதமாக நடந்துகொள்ளுகிறதென்ற குற்றச்சாட்டாவது இல்லாதிருக்கும். ஆனால் நகர்ப்புறங்களிலுள்ள வருமானத்துக்கோ, உடைமைக்கோ வரம்பு கட்டினால் தொழில் அபிவிருத்தியில் உற்சாகம் குறைந்து விடுமென்று அரசாங்கம் கருதுகிறது. இதே வாதத்தை ஏன் நில உடைமைக்கும் வருமானத்துக்கும் ஒப்புக் கொள்ளவில்லை என்பதுதான் விளங்கவில்லை.

கிராமவாசிகள் அதிகமாக நகரங்களை நோக்கிச் சென்று விடுகின்றனர் என்று குறை கூறுகிறார்கள். எனினும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்நடவடிக்கைகளோ நிலத்தை விட்டு மக்கள் வெளியேறுவதற்கே உதவுகின்றன.

பஞ்சாப் சொல்லும் பாடம்

மேற்குப் பஞ்சாபில் கால்வாய்கள் ஓரத்தில் விவசாயக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற ஒவ்வொருவருக்கும் 125 ஏக்கர் விதம் நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டு ஒரு பட்டதாரி கிராமமே நிர்மாணித்தனர். இப்பட்டதாரிகள் நடத்தும் விவசாயப் பண்ணையைப் பற்றி உயர்வாகப் பேசியதைக் கேட்டு அண்டை கிராமத்து விவசாயிகள் பலர் இதைப் பார்க்க விரைந்தனர். அங்கே கையாளப்பட்ட முறைகளைக் கண்டு அவர்கள் பாராட்டியதுடன் அதனால் பலனும் அடைந்தனர். சர்க்கார் பண்ணைகளை விட இந்தப் பண்ணைகள் ஒரு கண்காட்சியாகவே விளங்கின. ஆனால் இங்கே 125 ஏக்கர் நிலமிருந்ததால் இவ்வளவு சாதிக்க முடிந்தது. முப்பது ஏக்கர் நிலத்தை ஒரு படித்த இளைஞனுக்குக் கொடுத்தால் அதைக் கொண்டு தனது பிள்ளைகளுக்கு அவன் எப்படி உயர் படிப்பு சொல்லிக் கொடுக்க முடியும்? அரசாங்கம் நில உடைமைக்கு உச்சவரம்பு அவசியம் என்று கருதினால் வரம்பு கட்டும் நிலப்பரப்பு யந்திர சாதனங்களைக் கொண்டு பயிரிடும் அளவுக்காவது பெரிதாக இருக்க வேண்டுவது அவசியம்.

குறைந்தபட்ச வரம்புதான் தேவை

சின்னஞ்சிறு பண்ணைகளுக்குக் கூட்டுறவு முறை விவசாயந்தான் பிணி தீர்க்கும் மருந்து எனப்படுகிறது. ஆகையால் குறைந்த அளவில் வரம்பு கட்டினாலும் கூட, நவீன விவசாய முறைகளைக் கைக்கொள்ளுவதில் கஷ்டமிராது என்று வாதிக்கப் படுகிறது. இது ஒரு விசித்திர வாதம்தான். ஏற்கனவே நன்றாகச் செயலாற்றி வரும் பெரும் பண்ணைகளை உச்சவரம்பு கட்டிச் சிறுசிறு துண்டுகளாக்கிவிட வேண்டுமாம். பிறகு அத்துண்டுகளை மறுபடியும் ஒன்று சேர்த்து ஒரு புது விவசாய முறையைப் புகுத்த வேண்டுமாம். ஏன் இந்த நடவடிக்கை? தற்போதுள்ள பண்ணைகளில் 10க்கு 9 சிறு பண்ணைகள்தானே. மீதியுள்ள சில பெரிய பண்ணைகளையும் உச்சவரம்பு கட்டிச் சிறு பண்ணையாக்குவானேன்? பாரதத்திலுள்ள வாரிசுரிமைச் சட்டங்கள் பெரிய பரப்புள்ள நிலங்களைச் சிறு உடைமைகளாக்கி உணவு உற்பத்தியைக் குறைக்க வகை செய்து வருகின்றன. உண்மையில் இந்தியாவில் இப்போது நில உடைமைக்கு வேண்டியது குறைந்தபட்ச வரம்பு.

விவசாயிகளுக்கு உதவியளிக்கக் கடன் வசதிகள், ரசாயன உரங்கள், பூச்சி மருந்து தெளிக்கும் கருவிகள், உயர்தர விதைகள், குழாய்க் கிணறுகள், துரவுகள், பொருள்களைச் சேமித்து வைத்து நல்ல விலைக்கு விற்றல் ஆகியவற்றை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். இம்மாதிரி நலன் தரும் முறைகளில் கவனத்தைச் செலுத்தாமல் விவசாயிகளின் நிலங்கள் கூட்டுறவுப் பண்ணைகளாக இணைக்கப்படும் என்று பறைசாற்றி வீணான பீதியை விளைவிக்கிறார்கள். பலாத்காரமின்றிச் சுயேச்சையாக இயங்கும் கூட்டுறவு முறை வெற்றியடைந்திருக்கிறது என்று இது வரையில் எங்கும் கேட்டதில்லை. யூகோஸ்லேவியாவின் அனுபவம் நமக்கு இந்த விஷயத்தில் ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

கடன் வசதி முக்கியம்

விவசாயிகளுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது கடன் வசதி. இப்போது விளைபொருள்கள் குறைவாக உற்பத்தியாவதற்குக் கடன் வசதி இன்மை, நீர்ப்பாசனக் குறைவு, நல்ல விதையில்லாமை, நவீன முறைகள் மேற்கொள்ள இயலாமை—இவைகளே காரணம். ஐக்கிய நாடு ஸ்தாபனம் 1957 நவம்பரில் வெளியிட்ட ''கிழக்கு ஆசிய நாடுகளின் பொருள் நிலை'' என்னும் ஏட்டில், ஆசியாவில் ஒரு விவசாயி உற்பத்தி செய்யும் அளவு, வட அமெரிக்காவில் ஒரு தனி விவசாயி உற்பத்தி செய்வதில் பன்னிரண்டில் ஒரு பாகமே யென்றும், ஐரோப்பாவில் உற்பத்தியாவதில் நான்கில் ஒரு பாகமே யென்றும், தென் அமெரிக்காவில் உற்பத்தியாவதில் பாதி என்றும் கணக்கிடப் பட்டிருக்கிறது. இதே ஏட்டில் இந்தியாவில் அரசாங்கப் பத்திலாதவர் கணித்துள்ள

கணக்குப்படி விவசாயிகளுக்குக் கடன் வசதி 1300 கோடி ரூபாய் அளவில் தேவைப்படும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் பாங்கி கிராமப் புறங்களில் கடன் நிலைமை பற்றி வெளியிட்டுள்ள யாதாஸ்தில் ஆண்டு தோறும் கிராமவாசிகளின் விவசாயத்துக்காக 750 கோடி ரூபாய் கடன் தேவைப்படுகிறது என்று குறித்துள்ளது. ஆனால் உயர் வகுப்பு விவசாயிகளின் கடன் தேவைகளில் நாலில் ஒரு பாகமும், கீழ்த்தர வகுப்பு விவசாயிகளின் கடன் தேவைகளில் பத்தில் ஒரு பாகமுமே கடன் எழுப்ப முடிந்தது. இந்தத் தொகையில் பத்தில் ஒரு பாகம்தான் அரசாங்கம், கூட்டுறவு ஸ்தாபனங்கள், பாங்கிகள், மற்றும் இவை போன்ற ஸ்தாபனங்களிலிருந்து கிடைத்தவை. ஏனைய 90 சதவீதம் விவசாயிகளின் உறவினர்கள், இதர நிலச்சுவான்தார்கள், வர்த்தகர்கள், தனிநபர் பாங்கர்கள், லேவாதேவிக்காரர்கள் ஆகியவர்களிடமிருந்து கிடைத்தவை. இவ்விவரங்கள் ரிசர்வ் பாங்கியின் வெளியீட்டில் கொடுக்கப் பட்டவை. இவற்றிலிருந்து கடன் வசதி தேவைப்படும் அளவுக்கும், கிடைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கும் எவ்வளவு ஏற்றத் தாழ்வு இருக்கிறதென்பது விளங்கும்.

உச்சவரம்பினால் நன்மையில்லை

ஏற்கனவே சிறு பண்ணைகளுக்குப் போதிய கடன் வசதி இல்லை. இவ்வசதியைச் செய்து தர ஒருவரும் முன் வரவில்லை. இந்த லட்சணத்தில் தங்கள் தேவைகளைத் தாங்களே சமாளித்துக் கொண்டு, முற்போக்கான முறைகளையும் கையாண்டு, ஊக்கம் குன்றாது வெள்ளாமை செய்யும் நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலத்தைப் பறிமுதல் செய்தால், உற்பத்தி குறையத்தானே செய்யும்? நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டினால் நிலத்தில் முதலீடு செய்வது குறையும்.

முற்போக்குடன் நடத்தப்படும் பெரும் பண்ணைகளை உச்சவரம்பு கட்டிச் சிதைப்பதற்குப் பதிலாக அவற்றை விதைப் பண்ணைகளாகவோ முதல் தரப்பண்ணைக்கு எடுத்துக் காட்டாக மாதிரிப் பண்ணைகளாகவோ, புது முறைகளைப் புகுத்திக் காட்டும் ஆராய்ச்சிப் பண்ணைகளாகவோ அமைத்துக் கொண்டால் தேசத்தின் நன்மைக்கு நல்லது.

பெருஞ் செலவு செய்து, நிலங்களை விலைக்கு வாங்கி, சர்க்கார் விதைப் பண்ணைகள் ஏற்படுத்துவதை விட இந்தப் பண்ணைகளையே மாற்றிக் கொள்வது சிக்கனமாகும். தனியார் வசமுள்ள பெரிய பண்ணைகள் விவசாய இலாக்கா அதிகாரிகளின் மேற்பார்வையிலும் செய்முறையிலும் உயர்தர விதைகளை உற்பத்தி செய்யும் பண்ணைகளாக மாறி விடும். அரசாங்கம் சில இடங்களில் புதிய ரக விதைகளை உண்டுபண்ணப் பரீட்சார்த்தப் பண்ணைகள் வைத்துக் கொண்டாலே போதும்.

நிலத்தில் பணம் போடுவார்களா?

மேலும், புறம்போக்கு நிலத்தையும் தரிசு நிலத்தையும் சாகுபடிக்குக் கொண்டு வருவதில் இப்போதே மந்தகதிதான் காண்கிறது. நிலத்துக்கு உச்சவரம்பு கட்டினால் இந்தக் கதி இன்னும் குறையத்தான் செய்யும். நிலத்தில் பணத்தைப் போட்டுத் தனது பொருளாதார நிலைமையை உயர்த்திக் கொள்ள வாய்ப்பில்லாத போது இக்காரியத்தில் ஈடுபடச் சுறுசுறுப்புள்ள எவனும் முன் வர மாட்டான். உச்சவரம்பினால் இவ்வாறு பிரதிகூலங்கள் நிச்சயமாக இருக்கின்றன. இதற்கு மாறாக, ஏற்படக் கூடிய அநுகூலம் ஒன்றுமில்லை. நிலமில்லாத விவசாயிக்கு உபரி நிலத்தைப் பங்கீடு செய்வதன் மூலம் குடும்பத்துக்கு ஒரு ஏக்கராவுக்கும் குறைவாகவே கிடைக்கும். தவிரவும் உச்சபட்சவரம்புக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகத்தான் இருக்குமென்றாலும், சிறுபான்மையினருக்குக் கூட அநீதி விளைவிப்பது ஜனநாயகக் கொள்கைக்கு முற்றிலும் முரணானது. ஒன்றிலிருந்து மற்றொன்று என்று இதிலிருந்து இதர சொத்துக்களுக்கும் படிப்படியாக ஆபத்து வரத்தான் செய்யும்.

அமைதிக்குப் பங்கம் விளையும்

நகர்ப் புறங்களில் சொத்துக்கு வரம்பு கட்டாமல் கிராமப் பகுதியில் வாழும் மக்களுக்கு மட்டும் நிலவரம்பு ஏற்படுத்தினால், விவசாயிகளிடையே வளரும் மனக் கொதிப்பும் அதிருப்தியும் பெரும் பிரச்னையாகி நாட்டின் அமைதிக்கே பங்கம் விளைவிக்கும். அமைதியை நிலைநாட்டுவது ஒரு பிரச்னையாகப் போவதுடன், தற்போதுள்ள கிராம நகர ஏற்றத்தாழ்வை அதிகரிக்கச் செய்யும்.

இவ்வாறு பல்வேறு காரணங்களால் தீமையே விளைவிக்கக் கூடிய இச்சீர்திருத்தத்தை, நன்மை தீமையைச் சீர்தூக்கிப் பாராமல் அரசாங்கம் செய்தே தீரும் என்று பிடிவாதம்செய்தால், கீழ்க்கண்ட சில விஷயங்களையாவது கவனத்தில் வைத்துக் கொண்டு செயலாற்றட்டும்.

1. உச்சவரம்புக்குப் பின் சொந்தக்காரருக்கு விடப்பட்ட நிலப்பரப்பு யந்திர சாதனங்களைக் கொண்டு நவீன முறையில் வெள்ளாமை செய்வதற்கு ஏற்றதாகப் பெரிய விஸ்தீர்ணம் உடையதாக இருக்க வேண்டும்.

2. முன்னேற்ற முறைகளைக் கடைப்பிடித்து ஒரே சதுரத்தில் அமைந்துள்ள நிலப்பரப்புகளுக்கும் தோட்டங்களுக்கும் உச்சவரம்பு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

3. உபரியாகக் கிடைக்கும் நிலத்துக்கு மார்க்கெட் நிலவரத்துக்கு ஏற்ப ஈடு கொடுத்து, சொத்திழந்த நிலச்சுவான்தார்கள் இதர வகைகளில் தங்கள் வாழ்க்கைத்தரத்தையும் முறையையும் பாதுகாத்துக் கொள்ள வழி செய்ய வேண்டும். இம்பீரியல் பாங்குப் பங்குதாரர்களுக்கும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிப் பங்குதாரர்களுக்கும் மார்க்கெட் விலைப்படி நஷ்ட ஈடு கொடுத்த அரசாங்கம், அதிக விலை கொடுத்து வாங்கிப் பணச் செலவு செய்து பண்படுத்திய நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு மட்டும் முழு விலை ஈடாகக் கொடாவிட்டால் அநீதியே யாகும்.

[காங்கிரஸ் நிறைவேற்றிய நாகபுரித் தீர்மானம் சீன கம்யூனிஸ்டு நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள கம்யூன் முறையாக முடியும் என்று பரவலாக அபிப்பிராயமுள்ளது. அந்தச் சீனக் கம்யூன் முறை என்ன, அது எப்படி உண்டாயிற்று, எவ்வாறு செயல் புரிகிறது என்பனவற்றைச் சீனாவுக்கு நேரில் சென்று பார்த்துவந்த டாக்டர் எஸ். சந்திரசேகர் அனுபவ வாயிலாக விவரிக்கிறார்.

— ஆசிரியர்]

சமுதாயப் பண்ணைகளும் கம்யூன்களும்

டாக்டர் எஸ். சந்திரசேகர்

சோவியத் ருஷ்யாவில் கூட்டுமுறை உற்பத்தியை விவசாயத் துறையில் புகுத்திப் பரீட்சை நடத்தியதற்கு முக்கிய காரணம் நாட்டை வேகமாகத் தொழில் மயமாக்க வேண்டுமென்பதே. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கும் தொழில் அபிவிருத்திக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கத் தோன்றும். இதை முதலில் புரிந்து கொள்ளலாம்.

சோவியத் ருஷ்யா சில ஆண்டுகளுக்கு முன் விவசாயத்தில் பின் தங்கிய நாடாக இருந்தது. தொழில் வளர்ச்சியை எப்படியும் துரிதப் படுத்த வேண்டுமென்று உறுதி கொண்டார்கள் அரசாங்கத்தார். இதற்கு அத்தியாவசியமான தேவை மூலதனம்; முக்கியமாக அந்நிய உதவி என்பதை அவர்கள் உணர்ந்தனர். இது இரண்டு வகையில்தான் கிடைக்க வேண்டும் — ஒன்று பிற நாடுகளிலிருந்து கடன் உதவி; இரண்டாவது உள் நாட்டுச் சேமிப்பு, முக்கியமாக விவசாய மக்களின் சேமிப்புத் தொகை. கொள்கை காரணமாக அயல் நாட்டு உதவி ருஷ்யாவுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. எனவே விவசாய உற்பத்தியைத் தேசிய மயமாக்கி மக்கள் தேவைக்குச் சிறிதளவு விட்டு வைத்து, பெரும் பாகத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. இதன் மூலமாகத்தான் சேமிப்பும் மூலதனமும் கிடைக்கும். ஆகவே, விவசாயத்தைக் கூட்டுப் பண்ணை முறைக்கு மாற்றி, உற்பத்தியான பண்டத்தில் பெரும் பாகத்தை அரசாங்கம் நிர்ணயித்த குறைந்த விலைக்குச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டே சோவியத் விவசாயக் கொள்கை வகுக்கப்பட்டது. இதன் மூலம் இரண்டு நன்மைகள் எதிர்பார்க்கப்பட்டன. அரசாங்கத்துக்கு விவசாய உற்பத்தியில் பெரும் பங்கு. இது கிடைத்து விட்டது. இரண்டாவது கூட்டுப் பண்ணையின் மூலம் உற்பத்திப் பெருக்கு. இது கிடைக்கவில்லை. இந்தப் பாடத்தைத்தான் நமது பாரத நாடு ருஷ்யா நடத்திய பரீட்சையிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

உற்பத்தி ஏன் பெருகவில்லை?

உற்பத்தி ஏன் பெருகவில்லை என்பதைக் கவனிப்போம். சோவியத் விவசாய முறை பழங்கால ஐரோப்பிய முறைக்கும் நவீன மேற்கு நாடுகளில் கையாளப்படும் முறைக்கும் மாறுன ஒரு தனிமுறை. தனி நிலச்சுவான்தார் தன் சொந்த நிலத்தைப் பயிரிடும் முறையும் அன்று; கம்பெனி முறையில் தொழிற்சாலை போல் அபரிமிதமான மூலதனம் போட்டு நடத்தப்படும் முறையும் அன்று. தனி நபர்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்து, அவற்றை ஒன்றாக இணைத்துப் பெரிய பரப்புள்ள பண்ணையாக்கி, அரசாங்கத்தினரால் டிராக்டர்கள் அளிக்கப்பட்டு, அரசாங்கத்தின் மத்திய கேந்திரத்தின் உத்தரவுப்படி பயிரிடப்படும் முறை அங்கே நிலவுகிறது. நிலம் வைத்திருந்தவர்களெல்லாம் நிலமில்லாதவர்களாக முதலில் மாற்றப்பட்டார்கள். பிறகு அவர்கள் அரசாங்கத்துக்காகக் கூட்டுப் பண்ணையில் கூலி வேலை செய்தார்கள். இந்த முறையை எதிர்த்தவர்கள்—ஒரு சில லக்ஷம் பேர்கள் எதிர்த்தனர்—"தீர்த்துக் கட்டப் பட்டனர்." இதுதான் அவர்கள் கையாளும் முறை. எதிர்ப்பு என்பதே கூடாது. எதிர்த்தவர்கள் ஒழிக்கப்பட்டு விடுவர்.

இரண்டு சலுகைகள்

சமுதாயப் பண்ணைகளுக்கு 1930-ம் ஆண்டில் இரண்டுவித சலுகைகள் அளிக்கப்பட்டன. முதலாவது, அரசாங்கத்துக்குக் கட்டாயமாக அளிக்கப்படவேண்டிய பங்கை அளித்த பின்னர், மீதியைக் கூட்டுப் பண்ணை அங்கத்தினர்கள் தங்கள் உபயோகத்துக்கு வைத்துக் கொள்ளலாம் என்பது. இதை ஒரு முக்கிய சலுகையாகப் பண்ணை அங்கத்தினர்கள் எண்ணவில்லை. ஏனெனில் உற்பத்தி அதிகரித்தால் அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய பங்கும் உயர்த்தப்படும். உற்பத்தி அதிகரித்தாலும் குறைந்தாலும் பண்ணை அங்கத்தினர்களுக்கு மிச்சப்படுவது எப்போதும் குறைந்த அளவுதான். இரண்டாவதாக, ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கூட்டுப் பண்ணைக்குட்படாத சொந்த நிலமாக ஒரு ஏக்கர் அளவுள்ள 'தோட்ட நிலங்கள்' அவரவர்கள் வீட்டைச் சுற்றி அளிக்கப்பட்டன. இதில் பசு, மாடு, கோழி, கால்நடைகள் முதலியவற்றைச் சொந்தமாக வைத்துக் கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதுதான் முக்கியமான சலுகை. ஏனெனில் ருஷ்ய விவசாயிகள் பண்ணையில் கூலிக்கு உற்பத்தியைப் பெருக்குவதில் ஊக்கம் காட்டாமல், தங்களுடைய சொந்த நிலமாகிய ஒரு ஏக்கர் தோட்ட நிலங்களில் அதிக அக்கறை காட்டத் தொடங்கினர். பண்ணை நிலங்களுக்கு உபரியாகவே தோட்ட நிலங்களை அதிகாரிகள் கருதினார்கள். ஆனால் விவசாயிகளோ சொந்த நிலமான

தோட்ட நிலங்களுக்கு உடமியாகப் பண்ணை நிலங்களைக் கருதத் தலைப்பட்டனர்.

இந்தக் கூட்டுப் பண்ணை சம்பந்தமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு-பலாத்காரத்தினாலும் கட்டாயத்தின் பேரிலும்தான் கூட்டுப் பண்ணைகள் உருவாக்கப்பட்டன என்பது ஒன்று; விவசாயிகளின் ஒத்துழையாமையால், கூட்டுப் பண்ணைகளில் உற்பத்தி பெருகவில்லை என்பது மற்றொன்று. இந்தக் கூட்டுப் பண்ணை அதிகாரிகள் எல்லாம் தீவிர கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்கள். அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி அதிகமாகத் தெரியாது.

1949-50 ஆண்டுகளில் கூட்டுப் பண்ணைகளில் உற்பத்தி பெருகவில்லை என்பதைக் கண்டு அதிருப்தியடைந்த ருஷ்ய அரசாங்கத்தார் கூட்டுப் பண்ணைக் கிராமங்களை கிராம நகரங்களாக மாற்றி வமைத்தார்கள். முதலில் ஒவ்வொரு கூட்டுப் பண்ணையும் ஏறக்குறைய ஒரு கிராமமாக இருந்தது. கிராம-நகரங்களாக மாறிய பிரதேசங்களில் கூட்டுப் பண்ணைகள் அழிக்கப்பட்டுக் கிராமப் பொருளாதார அமைப்பே நகரப் பொருளாதார அமைப்புக்கு மாற்றப்பட்டது. பிற்காலத்தில் இதுவும் கைவிடப்பட்டது.



டாக்டர் எஸ். சந்திரசேகர்

குருஷேவ் காட்டிய காரணங்கள்

கூட்டுப் பண்ணைகள் எதிர்பார்த்தபடி பலன் அளிக்காமற் போனதற்கு குருஷேவ் இரண்டு காரணங்களைக் காட்டினார். முதலாவது தகுதி வாய்ந்த தலைவர்கள் இல்லாமை; இரண்டாவது ஊக்கமின்மை. இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை மூலம் விவசாயத்தில் தலையிட்டுக் கொண்டிருந்த எண்ணற்ற அதிகாரிகள் ஒழிக்கப்பட்டுப் போயினர். ஊக்கமளிக்கும் அம்சம் கூடச் சிறிது புகுத்தப்பட்டிருக்கிறது. சர்க்காருக்குக் கொடுக்கப்படும் தானியத்துக்கு முன்னைவிட இப்போது அதிக விலையும் கொடுக்கப்படுகிறது. விவசாய வரிகளும் சிறிதளவு குறைக்கப்பட்டுள்ளன. உற்பத்தியைப் பெருக்க இம்மாதிரி சலுகைகள் தேவைப்பட்டன.

இதிலிருந்து சென்ற முப்பத்தைந்து ஆண்டு அனுபவத்தில் சோவியத் ருஷ்யாவில் கூட்டுப் பண்ணை விவசாயம் தோல்வியே அடைந்திருக்கிறது என்பது தெரிய வரும். இதனால் உற்பத்தியும் பெருகவில்லை. கம்யூனிஸக் கொள்கைக்கு விவசாய மக்களின் ஆதரவும் கிடைக்கவில்லை. ஆனாலும் இதைப் புகுத்துவதற்காக எவ்வளவு மனத்தாங்கல்கள், கிளர்ச்சிகள், ரத்தக் களரிப் போராட்டங்கள் நிகழ்ந்தன என்பதை நினைத்துப் பார்த்தால் அந்தோ, பரிதாபம்!

கம்யூன்கள்

கம்யூனிஸக் கொள்கையின் இறுதி லட்சியமாகிய 'மக்கள்விவசாயம்' என்பதை அடையும் பாதையில் கம்யூன்கள் கடைசிப் படி. ருஷ்யா இதைப் பரீட்சித்துப் பார்த்துக் கைவிட்டது. இப்போது கம்யூனிஸ்டு சீனாவில் இந்த முறை அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

சீனக் கம்யூன்கள் என்றால் என்ன? உணவுப் பிரச்னையைத் தீர்க்கச் சீனக் கம்யூனிஸ்டுகள் என்ன செய்திருக்கின்றனர்? மூன்று வருஷங்களுக்கு முன் உணவு உற்பத்தியில் சிறிதளவு பற்றாக்குறை இருந்தது உண்மையே. சிற்சில பிராந்தியங்களில் பஞ்ச நிலைமை கூட இருந்தது. ஆனால் இப்போது இந்த நிலை இல்லை. தானிய அளவுகளை மட்டும் கொண்டு கணக்கிட்டால் உணவுப் பற்றாக்குறை நீங்கிவிட்டது என்றே சொல்லலாம். இப்போது சீனாவில் பசியால் யாரும்வாடுவதில்லை. சாதாரண ஒருவனுக்கு மாமிச உணவோ, பழங்களோ உண்பதற்குக் கிடைக்காது என்பது என்னவோ வாஸ்தவம் ஆனால் எல்லோருக்கும் ஒரு கிண்ணம் சாதமும், சிறிது கீரையும் கிடைக்கிறதே. அந்த அளவுக்கு இது ஒரு சாதனை யல்லவா? சீனாவின் ஜனத்தொகை 65 கோடி; அதாவது உலக ஜனத் தொகையில் நாலில் ஒரு பாகம் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தால், இந்த நிலைமை எய்தியதே ஒரு மகத்தான காரியம் என்றுதான் சொல்ல வேண்டும். *

மாறுதல்கள் ஏற்பட்ட விதம்

ஆசியா பகுதியைச் சேர்ந்த எந்த நாட்டிலும் உணவுப் பிரச்னையைத் திருப்திகரமாகச் சமாளிக்க வேண்டுமானால் நில உடைமையிலும் விவசாய முறையிலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டே ஆகவேண்டும். இம்மாதிரி மாறுதல்களைச் சீனக்கம்யூன்கள் செய்து விட்டன. 1949 லிருந்து 1959 வரையில் நிகழ்ந்த இந்த மாறுதலை நான்கு தனிப் பிரிவுகளாக வகுக்கலாம். இந்த நான்கு வகைப் பாகுபாடு திட்டமிட்டுச் செய்யப்பட்டதன்று. சூழ்நிலை மாறிக் கொண்டே போகையில் நடவடிக்கைகளும் அவைகளுக்கு ஏற்ப மாறிக் கொண்டே சென்றன. ஒரு காலத்தில் சீன கம்யூனிஸ்டுகள் உண்மையில் கம்யூனிஸ்டு

---

* குறிப்பு: நடப்பு ஆண்டில் உணவு உற்பத்தி எதிர்பார்த்த அளவு திருப்திகரமாக இல்லையென்றும், உற்பத்திக் குறைவுக்குக் காரணம் பருவநிலை சரியாக இல்லாதிருப்பதே என்றும் சொல்லப்படுகிறது.

களை அல்ல; அவர்கள் வெறும் நிலச் சீர்திருத்தக்காரர்களே என்று கூட எண்ணும்படியாக இருந்தது. எனினும் நிலைமையை உள்ளபடி புரிந்து கொள்ள இந்த நான்கு மாறுதல்களையும் கவனிக்க வேண்டும்.

எல்லோரும் குற்றவாளிகள்!

முதலாவது நடவடிக்கையில் நிலச்சுவான்தாரர்கள் மீதெல்லாம் ''குற்றவாளிகள்'' என்று குற்றம் சாட்டப்பட்டுப் பகிரங்க விசாரணையும் நடத்தப்பட்டது. நெடுங்காலமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த விவசாயிகள் நிலப் பிரபுக்கள்மீது என்னென்ன குற்றங்கள் மனத்தினால் கற்பனை செய்ய முடியுமோ அவ்வளவையும் சாட்டினார்கள். தங்களைக் கொடுமையாக நடத்தினார்கள்; பட்டினி கிடக்கும் பண்ணையாட்கள் குடும்பத்துக்குத் தானியம் கொடுக்க மறுத்தனர்; விவசாயிகளின் பெண்களைக் கற்பழித்தனர்; ஈவிரக்கமின்றிக் கொலை புரிந்தனர் — இப்படி யெல்லாம் குற்றம் சாட்டப்பட்டன. சில நிலப் பிரபுக்கள் சேர்ந்த தலைவர்களென்ற முறையில் இந்தக் குற்றங்களில் சிலவற்றையோ, எல்லாவற்றையுமோ இழைத்திருக்கலாம். ஆனால் ஒரு வர்க்கம் முழுமைக்கும் இவை பொருந்தாது. எப்படியும் ஒரு கம்யூனிஸ்டு, நீதிபதியாக விசாரணை நடத்தியபோது என்ன எதிர்பார்க்கலாம் என்பதை உணர்ந்த நிலப் பிரபுக்கள் எல்லாக் குற்றங்களையும் ''தாங்களே'' ஒப்புக்கொண்டனர். அவர்களுக்காக வாதாடவும் வழக்கறிஞர்கள் கிடையாது. இப்படிக் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்டுக் கொலையுண்ட நிலப் பிரபுக்களின் எண்ணிக்கை 20 லட்சம் என்று மதிப்பிடப்பட்டது. அவ்வளவு பேர்களுடைய நிலங்களும் சர்க்காருக்கு இப்போது கிடைத்து விட்டது.

பகிர்ந்தளித்தல்

இரண்டாவது நடவடிக்கை இந் நிலங்களை யெல்லாம் நிலமில்லாதவர்களிடையே பகிர்ந்து கொடுத்தல். 1950-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டப்படி ''பழைய நிலப் பிரபுத்துவ முறை ஒழிக்கப்பட்டுத் தனி விவசாய நில உடைமை முறை புகுத்தப்படும்; அப்போதுதான் கிராமப் பகுதியின் சக்தி முழுவதும் வெளிப்பட்டுப் புதிய சீனாவின் தொழில் வளர்ச்சிக்கான வழியை விவசாய உற்பத்தி மூலம் வகுக்க முடியும்'' என்ற கொள்கை உருவாயிற்று. இதன்படி நிலத்தைப் பங்கீடு செய்வதற்கு மிக விரிவானதும் சிக்கலானதுமான முறைகள் மேற்கொள்ளப்பட்டன. சாதாரண ஒரு குடியானவனுக்குச் சராசரி ஒரு மௌ (மௌ என்பது $16\frac{2}{3}$ சென்டு நிலத்துக்குச் சமானம்) நிலம் கொடுக்கப்பட்டது. 50 கோடி குடியானவர்களிடையே சந்தோஷம் தாண்டவமாடியது. சொந்த நிலம் கிடைத்து விட்டதல்லவா! ஆனால் இந்த சந்தோஷம் நீடித்திருக்கவில்லை.

பிரசாரம். பிரசாரம்!

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் மூன்றாவது கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது பிரசாரக் கட்டம். நிலத்தில் சொந்த உரிமை பாராட்டுவதும் தனிப்பட்டவர் நிலம் சொந்தமாக வைத்துக் கொள்வதும் சோஷலிஸம் அல்ல; கம்யூனிஸமும் அல்ல. அப்படி உரிமை பாராட்டுவதால் நாட்டுக்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் உணவு உற்பத்தி தடைப்படுகிறது. அதுமட்டுமல்ல; சோஷலிஸ பாணியில் நாட்டின் புனரமைப்புப் பணிக்கு இது தடங்கல் செய்கிறது என்று பிரசாரம் செய்யப்பட்டது. குடியானவர்களுக்குச் சொந்தமாக நிலம் அளிக்கப்பட்டாலும், அவர்களால் சிக்கனமாகவும் லாபகரமாகவும் பயிர்த்தொழில் செய்ய முடியாது. அவ்வாறு செய்வதற்கு இந்தத் துண்டு நிலங்கள் ஏற்றதல்ல. கூட்டாகச் செய்யும் விவசாய முறை ஒன்றுதான் சீன மக்களின் பசியையும் குடியானவர்களின் வறுமையையும் போக்கவல்லது என்று விவசாயிகளுக்குப் படிப்படியாக உணர்த்தப்பட்டது. இப்படித்தான் கூட்டுப் பண்ணை முறை புகுத்தப்பட்டது.

தங்களைச் சர்க்கார் ஏமாற்றி விட்டார்களென்ற உணர்ச்சி மட்டும் குடியானவர்களை விட்டுப் போகவில்லை. ஆனாலும் அவர்களுடைய துண்டு நிலத்தில் ''கைக் குட்டையில் பண்ணை'' செய்வது போல் செய்தால் லாபகரமாக இருக்காது, கூட்டுப் பண்ணைதான் ஏற்றது என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். யந்திர சாதனங்களைக் கொண்டு பயிரிடுவதும், அதிக எருவிடுதலும் சிறு நிலத்தில் செய்ய முடியாது என்பதை அரசாங்கம் வலியுறுத்தியது. இப்படித்தான் கூட்டுப் பண்ணை முறை கொஞ்சம் கொஞ்சமாக அமுலுக்கு வந்தது சீனாவில். 1952-ல் 300 உற்பத்திக் கூட்டுறவுகளும் 1953-ல் 14,000 சங்கங்களும், 1954-ல் 6,00,000 சங்கங்களும் 1956-ல் 13 லட்சம் சங்கங்களும் நாடெங்கும் பரவலாக உண்டாயின. அதாவது சீனாவின் 50 கோடி மக்களில் இக் கூட்டுறவுகளுக்குப் புறம்பாக உள்ள மக்களின் எண்ணிக்கை மிகவும் கொஞ்சம். இதைச் செயலாற்ற எவ்வளவு நிர்ப்பந்தம், பலாத்காரம் உபயோகப்படுத்தியிருக்க வேண்டுமென்பதைச் சொல்லத் தேவையில்லை. அந்தக் கூட்டுப் பண்ணை மூலம் இரண்டு வருஷங்களுக்கு முன்னர் குடியானவர்களுக்கு ஆடம்பரமாக விநியோகம் செய்த சொந்த நிலங்கள் எல்லாம் மீண்டும் சர்க்காருக்குப் போய்ச் சேர்ந்து விட்டன.

உணவுப் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை

கூட்டுப் பண்ணை ஏற்படுத்தியும் சீனாவின் உணவுப் பிரச்னை தீர்ந்தபாடில்லை. சீனாவின் ஜனத்தொகை வருஷத்துக்கு 150 லட்சம் வீதம் பெருகிக் கொண்டே யிருக்கிறது. ஜனப் பெருக்கத்துக்கும் உணவு உற்பத்திக்கும் சம நிலையை ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே, நான்காவது நடவடிக்கையான கம்யூன்கள் முறை கடந்த இரண்டாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நான் சீனாவுக்குச் சென்றிருந்தபோது நான்கு கம்யூன்களை நேரில் பார்த்தேன். இவற்றில் சீனாவிலேயே மிகவும் சிறந்தது, ஒப்பற்றது என்று அதிகாரிகள் வானளாவப் புகழ்ந்து

பேசும் கம்யூன் ஒன்று. அயல் நாட்டினர்களுக்கெல்லாம் தங்கள் சாதனையின் வெற்றிக்குச் சான்றாக இதைத்தான் அவர்கள் காட்டுகிறார்கள். இங்கே காலை முதல் இரவு வரையில்; பிறப்பு முதல் இறப்பு வரையில் மனித நடவடிக்கைகள் எவ்வளவு உண்டோ அவ்வளவும் அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கு இணங்கி நடைபெறுகின்றன. அவற்றில் ஒரு கம்யூனில் நான் கண்டதை விவரிக்கிறேன்.

சில்லி—மின்—மக்கள் கம்யூன் என்பது ஹோனான் பிராந்தியத்தில், சிங்செள நகருக்கு 80 மைல் வடக்கே உள்ளது. இதில் 68 கிராமங்கள் அடங்கியுள்ளன. குடியிருப்பு வீடுகள், நிலங்கள், விவசாயக் கருவிகள், குடிசைத் தொழில்கள், சமையல் சாமான்கள் முதலிய எல்லாப் பொருள்களும் கம்யூனுக்குச் சொந்தம். இவற்றைத் தவிர சில உருக்குச் சாலைகள், (எஃகு உற்பத்தி கூடச் சீனாவில் குடிசைத் தொழிலாக மாறிக்கொண்டிருக்கிறது என்பது கவனிக்கத் தக்கது)* பழுதுபார்க்கும் நிலையங்கள்; கோதுமை மாவு யந்திர சாலைகள், தையல் நிலையங்கள், செங்கல் ஓடு தயாரிப்புச் சாலைகள், உரம் தயாரிக்கும் நிலையங்கள் முதலியன கம்யூன்களுக்குச்சொந்தமாக இருக்கின்றன. இந்தக் கம்யூனில் 228 பொது போஜன விடுதிகள் இருக்கின்றன.

மாணவர் ஹாஸ்டல்களில் இருப்பது போல் பொதுக் கூடத்தில்தான் எல்லோரும் உணவு உட்கொள்ளுகின்றனர். 135 குழந்தைப் பராமரிப்பு விடுதிகள் உள்ளன. ஏழுநாள் பச்சிளங் குழந்தைகள் முதல் நான்கு வயது குழந்தைகள்வரை எல்லாக் குழந்தைகளும் இங்கே பராமரிக்கப்படுகின்றன. 150 கிண்டர்கார்டன் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. நான்கு வயதிலிருந்து ஆறு வயது வரையில் குழந்தைகள் இங்கேயே தங்கிக் கல்வி பயில வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு மத்திய தரப் பள்ளிகள் இருக்கின்றன. ஏழிலிருந்து பதினாறு வயது வரை சிறுவர்கள் இங்கே கல்வி கற்கின்றனர். இவை தவிர, 36 கம்யூனிஸ்டு பிரத்தியேகப் பள்ளிகளும் தொழிற் கல்விப் பள்ளிகளும் இருக்கின்றன. இங்கே கம்யூனிஸ்டுத் தத்துவங்களில் ஆர்வம் காட்டும் சிறுவர்களுக்குத் தொழிற் கல்வி அளிக்கப்படுகிறது.

கம்யூனில் வாழ்க்கைமுறை

கம்யூனில் இரண்டு ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. வெளியிலிருந்தபடியே வைத்தியம் செய்து கொள்ள இரண்டிலும் பதினைந்து தனி இலாக்காக்கள் இருக்கின்றன. இங்கே நாட்டு மருந்தும், கஷாயங்களும் வழங்கப்படுகின்றன.

வயது வந்த மக்கள் எல்லோரும் 146 சிறு அணிகளாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு தொழிலுக்கு அனுப்பப்படுகிறது. நெற்பயிருக்கு ஒரு ஜதை; காய்கறித் தோட்டத்துக்கு ஒரு ஜதை; பருத்தி நிலத்துக்கு ஒரு ஜதை; சிறு தொழிற்கூடங்களுக்கு ஒரு ஜதை; உணவுச் சாலைகளுக்கு ஒரு ஜதை; குழந்தைகள் பராமரிப்பு நிலையத்துக்கு ஒன்று; பள்ளிகளுக்கு ஒன்று; ஆஸ்பத்திரிகளுக்கு; தையற் கூடங்களுக்கு — இப்படித் தனித் தனியே வேலை மீது அவர்கள் அணிவகுத்து ஏவப்படுகின்றனர்.

வீடுகள் அனைத்தும் கம்யூனைச் சேர்ந்தவை. ஆளில்லாத அறை என்பதைக் காணவே முடியாது. கணவன் மனைவியரும், தனிப்பட்ட ஆண்கள் பெண்கள் எல்லோரும் கம்யூனுக்குச் சொந்தமான வீடுகளிலுள்ள அறைகளில் தங்க அனுப்பப்படுகிறார்கள், குழந்தைகளெல்லாம் குழந்தை விடுதிகளிலும் கிண்டர் கார்டன் பள்ளிகளிலும் வசிக்கும். முதியோர்கள் 'ஆனந்த விடுதிகள்' என்ற தனி விடுதிகளில் வசிக்கிறார்கள். இந்தக் கூட்டுறவு முறை மூலம் புதியதாக வீடுகள் கட்டப்படாமலே குடியிருப்பு நெருக்கடி தீர்த்து வைக்கப்பட்டது.

முதியோர்களுக்கான 24 ஆனந்த இல்லங்கள் இந்தக் கம்யூனில் இருக்கின்றன. இவற்றில் இரண்டை நான் நேரில் பார்வையிட்டேன். அவர்கள் வசித்த வீடுகள் முன்னாள் நிலப் பிரபுக்களின் மாளிகைகள். அங்குள்ளவர்கள் 65-67 வயதுள்ளவர்கள். பார்ப்பதற்கு சந்தோஷம் உள்ளவர்களாகக் காணப்பட்டனர். நால் நூற்றல் நெசவு போன்று கடினமில்லாத வேலைகளை அவர்கள் செய்தனர்.

ராணுவ முறையில் வேலை

கம்யூனில் வேலை முறை ராணுவத்தில் இருப்பது போல் இருக்கிறது. அதிகாலையில் தெருத் தெருவாக ஊதுகுழல் ஓசை கேட்கும். (ராணுவத்தினரை எழுப்புவதற்காக ஊதப்படும் குழலோசை போல.) இது ஒலித்ததும் ஆண் பெண் அனைவரும் எழுந்துவிட வேண்டும். முதல் அரை மணி நேரம் திறந்த வெளியில் தேகப் பயிற்சி செய்ய வேண்டும். இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. உடல் வலிமை கம்யூனில் முறையில் மிகவும் வலியுறுத்தப்படுகிறது. அங்கிருந்து போஜன சாலைக்குக் காலை உணவுக்காக எல்லோரும் செல்லுகின்றனர். பிறகு வேலைக்கென்று, திறமைக்கும் ஆற்றலுக்கும் தக்கவாறு அணிகளாகப் பிரிகின்றனர். கணவனும் மனைவியும் தகப்பனும் புதல்வர்களும் ஒரே அணியில் தான் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அணிகள் தங்கள் தங்கள் வேலைக்குப் பண்ணைகளுக்கோ, தொழிற்சாலைகளுக்கோ விரைந்து செல்லும். உச்சிப் பொழுதில் அவர்கள் எல்லோரும் உணவு உட்கொள்ள ஒன்றாகச் சேருவார்கள். பகல் உணவு என்பது சாதம், முட்டைக் கோசு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு இம்மூன்றும் கலந்தது. சில சமயங்களில் இறைச்சியும் கொடுக்கப்படும். பகல் உணவுக்குப் பின், அவர்கள் மறுபடியும் வேலை மீது சென்று விடுகிறார்கள்.

---

* குறிப்பு: தோட்டத்துப் பட்டறை என்னும் இம்முறையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பும் எஃகும் தரக் குறைவாக இருப்பதால் இம்முறை அங்கே வேகமாகக் கைவிடப்பட்டு வருகிறதென்று சமீபத்தில் வெளிவந்த சீனச் செய்திகள் கூறுகின்றன.

ரேடியோ மூலம் போதனை

மாலையில் எல்லோரும் ரேடியோ கேட்கிறார்கள். 'மக்களின் தினசரி'யிலிருந்து தலையங்கங்களையும், விவசாயத்திலும் தொழில்களிலும் உற்பத்திப் புள்ளி விவரங்களையும், அமெரிக்க முதலாளித்துவத்தைத் தீர்த்துக் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், 'சியாங்' கூட்டத்தை முறியடிக்க மேற்கொண்டுள்ள முறைகளையும், சீனா எப்படி ஆங்கிலேயத் தொழில் உற்பத்திகளையும் மிஞ்சி விட்டது என்பதையும் ரேடியோ ஒலிபரப்பியவண்ணம் இருக்கும். கடைசியில் ஒரு திரைப்படக் காட்சி, அல்லது நாடகம். முடிவான அம்சம் கட்சிக் கூட்டம். இதற்கு ஒவ்வொருவரும் போக வேண்டியது அவசியம். இங்கே ஒவ்வொருவனும் தன்னைத் தானே பரிசோதித்துக் கொள்ளுகிறான். இதை ஒரு கலையாகவே கம்யூன் வளர்த்திருக்கிறது. தன்னுடைய குறைபாடுகளைச் சொல்லி அதற்குப் பரிகாரத்தையும் ஒவ்வொருவனும் சொல்லுகிறான். மற்றவனுடைய குறைகளையும் சொல்லுகிறான். உற்பத்திப் பெருக்குக்குப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுகிறான். இதற்குப்பின் இரவு படுக்கச் செல்லுகிறார்கள்.

16 உத்தரவாதங்கள்

இந்தக் கம்யூனைச் சில அதிகாரிகள் "16-உத்தரவாதங்களடங்கிய" கம்யூன்கள் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றனர். ஒவ்வொருவனுக்கும், வயதுக்கும் ஆண் பெண் வித்தியாசத்துக்கும் ஏற்பப் பதினாறு வித உத்தரவாதங்கள் அளிக்கப்படுகின்றனவாம். அவை பின்வருமாறு :— 1. உடை. (சீனாவில் இது ஒரு பெரும் பிரச்னை. இன்னமும் சரிவரத் தீர்க்கப்படவில்லை.) 2. உணவு. 3. குடியிருப்பு. 4. போக்குவரத்து. (விடுதியிலிருந்து வேலை செய்யுமிடத்துக்கும், திரும்ப விடுதிக்கும்) 5. பிரசவச் சலுகைகள். (45 நாட்கள் விடுமுறையும் ஒரு கட்டி சிவப்புச் சர்க்கரையும்) 6. உடல் நலம்-இலவச வைத்திய உதவி. 7. இலவச முதியோர் பாதுகாப்பு. 8. இலவச இறுதிச் சடங்குகள், 9. இலவசக் கல்வி, 10. குழந்தைகளுக்கு இலவசப் பராமரிப்பு. 11. இலவச விளையாட்டு வசதிகள். 12. கல்யாணப் பரிசு, (சிறு பண உதவியும் ஒரு விருந்தும்) 13. வருஷத்துக்குப் பன்னிரண்டு முறை இலவசமாக முடி திருத்திக் கொள்ளும் வசதி. 14. ஆண்டுக்கு 20 முறை வெந்நீர் குளிப்பு. 15. இலவசத் தையல் (நீல நிஜாருக்கும் அதைப் பழுது பார்ப்பதற்கும்) 16. இலவச மின்சார விநியோகம்.

இந்தச் சலுகைகளின் ஜாபிதாவை எனக்குப் படித்துக் காட்டிவிட்டு, தொட்டிலிலிருந்து மயானம் வரை ஒருவனுக்கு எல்லாவித பாதுகாப்பும் அளிக்கும் இந்த முறையில் "இதற்கு மேலாக என்ன தேவைப்படும்? ஒரு தொழிலாளி என்ன விரும்பக் கூடும்?" என்று பெருமிதத்துடன் கம்யூன் அதிகாரி கேட்டார்.

ஆயுட் காலம் முழுதும் எவ்விதக் கேள்வியும் கேட்காமல் பணித்த வேலையைச் சலிப்பின்றிச் செய்யத் தன்னை நிரந்தர அடிமையாக்கிக் கொள்ளும் இந்த வாழ்க்கை முறையில் அகப்பட்டுக் கொண்ட ஒரு குடியானவனுக்கு வேறு என்ன தேவைப்படும்? ஒன்றும் தேவைப்படாதுதான். இருந்தாலும், "இவற்றைத் தவிர, சுயேச்சையாக ஏதாவது தேவைப்பட்டால் அதைப் பூர்த்தி செய்து கொள்ள அவனுக்கு வகை உண்டா?" என்று கேட்டு வைத்தேன்.

அதிகாரி சளைக்கவில்லை. "ஆம், இருக்கிறது" என்று விவரிக்கத் தொடங்கினார். அதிக உழைப்பினாலோ, ஊக்கத்தாலோ, மாதத்துக்கு ஐந்து யுவான் வரையில் ரொக்கமாக ஒரு குடியானவன் சம்பாதிக்க அனுமதிக்கப்படுகிறான். இது உற்பத்தி போனஸ் மாதிரி. ஆனால் இதை இதுவரை இந்தக் கம்யூனில் ஒருவரும் சம்பாதித்ததே இல்லையாம்!

முடிவுரை

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக் கூடிய உண்மைகள் இரண்டு. முதலாவது குடும்ப அமைப்பும் சமூக அமைப்பும் இம்முறையின் கீழ் புரட்சிகரமாக மாறி விடுகின்றன. தனி விவசாயிகளின் சுதந்திர வாழ்க்கை கம்யூனின் கூட்டு வாழ்க்கையில் மறைந்து விடுகிறது. இம்மாதிரி மாறுதல்கள் இந்தியாவின் நிலைமைக்கும் பண்புக்கும், நலனுக்கும் ஒவ்வாதவை. இந்த முறையை நாம் பின்பற்ற முயலுவது நன்மை பயக்காது. இரண்டாவது மக்களின் நன்மையும் அவர்கள் தேவைகளும்தான் எந்த விதத் திட்டத்துக்கும் முடிவாக இருக்க வேண்டுமே தவிர, திட்டத்தை நிறைவேற்றி வைப்பதை லட்சியமாகக் கொண்டு அதற்காக மக்களைக் கருவிகளாக உபயோகப்படுத்துவது விரும்பத்தக்கதல்ல. உற்பத்தியை அதிகரிக்க இதர முறைகளைக் கையாள வேண்டுமே தவிர மக்களின் கலாசாரத்தையும் பண்பையும் சீர்குலைக்கும் வகையில் சமூகத்தை மாற்றி அமைக்க முற்படுவது தவறு.

கூட்டு விவசாயம், நில உச்சவரம்பு, சர்க்கார் வர்த்தகம்

ஆகிய விஷயங்கள் பற்றிய இந்த ஆராய்ச்சி அரங்கத்தில்
அடுத்த வாரம் ஆகஸ்ட் 30-ந் தேதி கல்கி இதழில்

ராஜபாளையம் பண்ணையார் திரு ஆர். வி. ராமசுந்தரம் பிள்ளை, திரு வி. கே. ராமஸ்வாமி முதலியார், (சென்னை சட்டசபை அங்கத்தினர்) திரு எம். ஆர். மஸானி (லோகசபை அங்கத்தினர்)

ஆகியோரின் கட்டுரைகள் வெளிவரும்.



ஸ்ரீ P. மருதைப் பிள்ளை

சூரியன் மார்க் மைதா, சூஜி, ஆட்டா தயாரிப்பவர்களான மதராஸ் செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்டின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ பி. மருதைப் பிள்ளை, வியாபார சம்பந்தமாக இங்கிலாந்திலும், ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்யப் போயிருக்கிறார்



அரிய சந்தர்ப்பம்!

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

20 - 8 - 59

மாலை 6-31க்கு

சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம்மேதி தலைமையில்

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் ஆஞ்சநேயராக நடிக்கும்

ஸ்ரீமத் சம்பூர்ண

ராமாயணம்

நாடகம் ஆரம்பமாகி தினசரி நடைபெறும்

காண்ட்ராக்டர் பி. கே. வி. ஐயர்

CHARI

SOLDIN

SOLID PHENYLE

WITH D. D. T. AND CRESOL



MANURIN

FERTILIZER TABLETS

COMPLETE PLANT FOOD



INDIA ALKALIES LTD.

5, GARSTIN PLACE, CALCUTTA-1

மெஸர்ஸ் ஏ. வி. தாமஸ் கோ.,

ஆலப்புழை - கொச்சி

[பாரதத்தின் பொருளாதாரத் துறையில் முன்வரிசையில் நிற்கும் அறிஞர்களுள் டாக்டர் பி. ஆர். ஷெனாய் ஒருவர். அகமதாபாத் சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர். திட்டக் கமிஷன் ஆலோசனைக் குழுவின் அங்கத்தினர். எந்த லட்சியங்களுக்காக அரசாங்கம் உணவு தான்ய வியாபாரத்தில் தலையிட்டதோ அந்த லட்சியங்கள் நிறைவேறாது என்று கூறுகிறார் டாக்டர் ஷெனாய்.
—ஆசிரியர்]

அரசாங்க வர்த்தகத்தால் பற்றாக்குறை தீராது

டாக்டர் பி. ஆர். ஷெனாய்

உணவுப் பிரச்னையைச் சமாளிக்க அரசாங்கம் பல்வேறு சமயங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளை நான்கு பெரும் பிரிவுகளாகக் கருதலாம். நாட்டை ஐந்து கோதுமைப் பிரதேசங்களாகவும் இரண்டு அரிசி மண்டலங்களாகவும் பிரித்து அந்தந்த மண்டலத்துக்குள்ளோ அல்லது அதிலிருந்து வெளியிலோ அரிசியும் கோதுமையும் அனுமதியின்றிச் செல்லக் கூடாது என்று தடை செய்யப்பட்டது ஒன்று. அரிசி, கோதுமை இவ்விரண்டு தான்யங்களையும் ஈடாக ஏற்றுக் கொண்டு ஷெட்யூல் பாங்கிகள் கொடுக்கும் கடன் வசதிகளைக் கட்டுப்படுத்தியது இரண்டாவது. சில ராஜ்யங்களில் கோதுமைக்கும் அரிசிக்கும் உச்சபட்ச விலை நிர்ணயம் செய்து, 1955ம் ஆண்டு அத்தியாவசியமான பண்டங்கள் சட்டத்தை இவ்விரண்டு தான்யங்களுக்கும் விஸ்தரித்து, மொத்த வியாபாரிகளுக்கு லைசென்சு வழங்கி, அவர்கள் கைவசமிருக்கும் தானியங்களில் முழுவதையுமோ, அல்லது ஒரு பாகத்தையோ அரசாங்கத்துக்குச் சராசரி விலைக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்து, அவ்வாறு கிடைத்த தானியங்களைப் பற்றாக்குறைப் பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்தது மூன்றாவது வகை. அயல்நாடுகளிலிருந்து கோதுமையும் அரிசியும் அவ்வப்போது இறக்குமதி செய்யப்பட்டது நான்காவது வகை. இந்நான்கு வகைகளில் இப்போது நமது அரசாங்கத்தின் கவனத்தை விசேஷமாகக் கவர்ந்துள்ளது 1957 ஏப்ரல் 2-ந் தேதியன்று மக்கள் சபையில் உணவு விவசாய மந்திரி அறிவித்த கொள்கையில் அடங்கியுள்ள அரசாங்க வர்த்தகம் என்னும் திட்டம்.

2. நாட்டை உணவு மண்டலங்களாகப் பிரித்ததனால் நச்சரிப்பு அதிகமாயிற்றே தவிர, உணவுப் பிரச்னையின் அடிப்படைக் குறைபாடுகளைத் தீர்த்து வைக்க முடியவில்லை. இந்த நடவடிக்கைக்கு ஆதாரமான கருத்தே சரியில்லை என்று கூற வேண்டும். அந்தந்த மண்டலங்களில் உபரியாகவுள்ள பகுதிகளில் இருக்கும் தானியத்தைச் சேமித்து வைக்கவும் அங்கே வியாபாரிகளின் பதுக்கல் நடவடிக்கைகளைத் தடுத்து, பற்றாக்குறைப் பகுதிக்குச் சேகரித்து வைத்த தானியங்களை அனுப்பி அங்கே விலை உயர்வைத் தடுப்பதுதான் இந்த நடவடிக்கையின் லட்சியம். இது முற்றிலும் சரியல்ல. உணவுப் பண்டத்தில் நாட்டுத் தேவையிலேயே பற்றாக்குறை இருக்கும் போது, தனி மண்டலங்கள் இக்குறையைப் பூர்த்தி செய்யாது. பற்றாக்குறையுள்ள பகுதிகளில் விலைகள் ஏற்கனவே உயர்ந்து விட்டதால், இந்த நடவடிக்கையினால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் பரிகாரம் கிடைக்காது. உபரியாகவுள்ள பகுதிகளில் விவசாயிகளுக்கும் இதனால் நன்மையில்லை. ஏனெனில் அங்கெல்லாம் விலைவாசிகள் சரிந்து விட்டன. உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்காமல் செய்ததோடு சாதாரண மக்களுக்கும் விலையைக் குறைக்க முடியவில்லை. இதுதான் கண்ட பலன். விலைகள் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால் நேர் முறை வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டது. இதன் விளைவாக, இதுவரையில் உணவுப் பொருள்கள் பயிரிடப்பட்ட நிலங்கள் இனி கரும்பு, பஞ்சு, சணல் போன்ற இதர விலை பொருள்களுக்காக மாற்றப்படலாம். இதனால் உணவு உற்பத்தி மேலும் குறையவே செய்யும். பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் உபரியாக உள்ள பகுதிகளிலும் பற்றாக்குறை நிலைமையை ஏற்படுத்துமானால் இது விசித்திரமான விளைவு அல்லவா? இடைக்காலத்தில் யாருக்கும் லாபம் கிடைக்கக் கூடாதென்று லைசென்சு வழங்கப்பட்ட மொத்த வியாபாரிகளுக்குச் சில சந்தர்ப்பங்களில் விலை வித்தியாசங்களின் பலனாகச் சிறிது அநியாய லாபம் கூடக் கிடைக்க வாய்ப்பு உண்டு.

3. கடன் வசதிகளைக் குறைத்து விட்டால் விலைவாசி குறைந்து விடும் என்னும் செய்முறையும் தவறான கருத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை. "பதுக்கல் செய்வதால்தான் விலை உயர்ந்து விட்டது. கடன் கொடுக்காமல் செய்து விட்டால் பதுக்கல் நடைபெறாது. அதன் மூலம் விலை உயர்வைக் குறைத்துவிடலாம்" என்பது சர்க்காரின் கருத்து. இது 1956ல் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. 1956 மே மாதம் பாங்கிகள் உணவுத் தானியங்கள் மீது வழங்கியுள்ள கடன் தொகை அதற்கு முந்திய ஆண்டு கொடுக்கப்பட்ட கடன் தொகையைப் போல் இரு மடங்கு இருந்தது என்பதை அதிகாரிகள் கண்டனர். இதனால்தான் விலைவாசிகள் உயர்ந்து விட்டன என நினைத்து ரிஸர்வ் பாங்கி ஷெட்யூல் பாங்கிகளுக்கு எச்சரிக்கை விடுத்தது. அதன்படி ரூ. 50,000க்கு அதிகமாக எந்தப் புது நபர்களுக்கும் இந்த வகையில் கடன் கொடுக்கக்கூடாது என்றும், ஏற்கனவே கடன் வசதி பெற்றவர்களின்

கடன் அளவை 100லிருந்து 75 சதத்துக்குக் குறைத்துவிட வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது. இதன் விளைவாகக் கடன் அளித்த தொகை குறைந்தது. ஆனால் அரிசி விலை குறையவில்லை. அரிசி வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு பாங்குகளைத் தவிர இதர வழிகளிலிருந்து பண வசதி கிடைத்துக் கொண்டிருந்தது போலும்!

4. அனுபவம் இவ்வாறு இருப்பினும் 1957 டிசம்பரிலும் இதே முறையை மறுபடியும் கையாண்டனர். கடன் வசதி முந்திய ஆண்டு அளவில் முக்கால் பாகத்துக்குக் குறைக்கப்பட்டது. 1958 செப்டம்பரில் இந்தத் தடுப்பு நடவடிக்கை கோதுமைக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இவற்றின் பலனாக அப்போதைக்கு மொத்த விலைகள் சிறிது இறங்கினாலும், மறுபடியும் அவை ஏறத் தலைப்பட்டு விட்டன. அரிசி விலை குறியீட்டு எண் 1958 பிப்ரவரியில் 99க்கு இறங்கி (1952-53—100) 1958 ஆகஸ்டில் 118க்கு உயர்ந்து விட்டது. கோதுமை விலை குறியீட்டு எண்ணும் அவ்வாறே 1958 செப்டம்பரில் 105லிருந்து 1959 ஜனவரியில் 125ல் நின்றது. இவற்றிலிருந்து பாங்கு கொடுக்கும் கடன் வசதி அரிசி கோதுமை விலைகளைக் கொஞ்சமேனும் பாதிக்கவில்லை என்பது தெளிவாகும்.



டாக்டர் பி. ஆர் ஷெனாய்

5. மேலும் பாங்கிகள் பலவகைகளில் வழங்கும் மொத்தக் கடனில் அரிசிக் கடன் 1.76 சதவீதம் தான். அதாவது சுமார் 800 கோடி ரூபாய் கடன் தொகையில் அரிசியின் மீது அளிக்கப்படுவது ரூ. 13.96 கோடியே. கோதுமை விஷயத்தில் இந்தத் தொகை இன்னும் குறைவு. இவ்விரண்டு துறையிலும் வியாபாரியின் தேவை மிகவும் குறைவாக இருப்பதால், இதைச் சமாளிப்பது அவர்களுக்கு ஒரு பெரும் கஷ்டமல்ல. இதிலிருந்து உணவுப் பண்ட விலை உயர்வைக் கட்டுப்படுத்தக் கடன் வசதிகளைக் குறைப்பது அர்த்தமற்ற நடவடிக்கை என்பது நன்றாகத் தெரிந்தும் ரிஸர்வ் பாங்க் அதிகாரிகளுக்கு மட்டும் இம்முறையில் நம்பிக்கை குறைந்ததாகத் தெரியவில்லை. சென்ற டிஸம்பர் 29-ந் தேதியன்றுகூடக் கடன் வசதியளிப்பதில் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

6. அது போலவே, கெஜட்டில் விலை நிர்ணயம்செய்து அறிவிப்பதன்மூலமோ, அல்லது அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தை விஸ்தரிப்பதன் மூலமோ உணவுப் பொருள்களின் விலைகளை நிலைக்கச் செய்ய முடியாது. எனினும் இதைத்தான் நமது அரசாங்கம் செய்கிறது. கெஜட்டில் அறிவித்துவிட்டால் நிலைமை சமாளிக்கப்பட்டு விட்டது என்று நிம்மதியுடன் அவர்கள் எண்ணுகிறார்கள். உண்மையில் உணவுப் பண்டங்களின் விலை அவற்றின் தேவைக்கும் விநியோகத்துக்கும் உள்ள ஏற்றத் தாழ்வை அனுசரித்து மாறுகிறது. பொருளாதார ரீதியில் இப்படித்தான் விலை ஏற்றத் தாழ்வுகள் நிகழ்கின்றன. அவற்றின் போக்கை கெஜட் அறிக்கைகள் மூலம் கட்டுப்படுத்த முடியாது. அதனால் நியதிக்கு விரோதமாகப் பல்வேறு விலைகள் தலைதூக்கும். சில பேரங்களுக்கு மட்டும் சர்க்கார் நிர்ணயம் செய்த விலைகளும், பெருவாரியான இதர பேரங்களுக்கு 'மார்க்கெட்' விலையும் நிலவும். இரண்டையும் கூட்டிச் சராசரியாகப் பார்த்தால், 'கன்ட்ரோல்'கள் இல்லாமலிருந்தால் என்ன விலை இப்பொருள்களுக்கு இருக்குமோ அந்த விலைதான் கணக்காகும். மொத்த வியாபார பேரங்கள் எல்லாம் ஏட்டில் கன்ட்ரோல் விலைக்குத்தான் பதியப்படும். ஏனெனில் அதற்கு உயர்வாகப் பதிவு செய்தால் குற்றமாகும். அதனால் வருமானத்தை மறைத்து வைக்கவும், பொய்க் கணக்கு எழுதவும் வருமான வரி கொடாமல் ஏமாற்றவும் சமூக அமைப்பில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படவும் அமோக வாய்ப்புக்கள் உண்டாகின்றன. விலைக் குறியீட்டு எண்களும் அர்த்தமற்றுப் போகின்றன.

7. நியாயவிலைக் கடைகள் சில்லறைக் கடைகளின் விலைவாசிகளைச் சமன்படுத்த உதவும் என்று எண்ணுவது வெறும் கற்பனைதான். பஜார் விலைகள் எப்போதும் பற்றாக் குறையைச் சமாளிப்பதற்கு எவ்வளவு புதுச் சரக்கு மார்க்கெட்டுக்கு வருகின்றன என்பதைப் பொறுத்தே இருக்கும். கையிருப்புச் சரக்கை வெளியே கொணர்ந்தாலும் சரி, இறக்குமதி செய்து பண்டங்களைத் தருவித்தாலும் சரி, எப்படியும் புதிதாகச் சரக்கு மார்க்கெட்டுக்கு வர வேண்டும். அப்படிக்கில்லாமல் பற்றாக் குறை நிலைமையில் மாறுதல் ஒன்றும்ஏற்படாமல் விநியோக முறைகளில் ஏற்படுத்தப்படும் மாறுதல்களினால் மட்டும் விலைவாசிகளில் எவ்வித ஏற்றத் தாழ்வும் உண்டாகாது.

8. மாறாக, ஒரு பகுதியை நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதால மார்க்கெட்டுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் சப்ளை மேலும் குறையத்தொடங்கி அங்கேகூட பற்றாக்குறை அதிகரித்து ஏற்கனவே உயர்ந்துள்ள விலை மேலும் உயரத் தொடங்கும். மார்க்கெட்டில் நிலவும் விலைவாசிகள்தான் உணவுப் பொருள்களின் உண்மை நிலையை விளக்கி வைக்கும். நியாய விலைக் கடைகளில் ஏற்கெனவே உள்ள வெவ்வேறு விலைகள்


உதவாது. இதையும் தவிர நியாயவிலை விநியோகத்திலும் அவ்வப்போது நஷ்டஈடு மான்யங்கள் (Subsidies) கொடுக்கவேண்டியிருக்கும். நாட்டின் நிதி நிர்வாகம் பற்றாக்குறை நிலையிலிருக்கும்போது இம்மாதிரி மான்யங்கள், வரி கொடுக்கும் மக்களுக்கு மற்றொரு சுமையாகத்தான் அமையும். இவ்வாறு செய்வதற்குப் பதிலாக எப்போதும் போலவே வியாபாரிகளிடமே விநியோகப் பொறுப்பை விட்டு விட்டால் இப்போதுள்ள விலைவாசிகளில் எவ்வித மாறுதலும் உண்டாகாது. சர்க்கார் 'ஸப்ஸிடி' கொடுக்க வேண்டிய அவசியமும் இருக்காது.

9. அரசாங்க வர்த்தகத் திட்டத்தின் தற்போதைய அம்சம், இறுதி லட்சியம் இரண்டுமே விநியோக முறையைத்தான் பாதிக்கின்றனவே யொழிய அடிப்படை உற்பத்தி—தேவை சாம்ய நிலையை அல்ல. இடைக்கால அம்சமாகிய மொத்த வியாபாரம் நாட்டில் பல பாகங்களில் அமுலில் இருக்கின்றது. இறுதி லட்சியமான முழுக் கூட்டுறவு முறை விநியோகம் அமுலுக்கு வரச் சில ஆண்டுகள் பிடிக்கலாம். அதற்குத் தேவையான திறமை வாய்ந்த சிப்பந்திகளும் அனுபவஸ்தர்களும் போதிய அளவு நாட்டில் இல்லை. தவிரவும், கூட்டுறவு முறையில் செய்யப்படும் விநியோகத்துக்குப் பிடிக்கும் செலவுகள் தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் விநியோகிப்பதில் ஏற்படும் செலவைக் காட்டிலும் அதிகமாக இருக்குமே தவிர குறையாது. எப்படியிருந்தாலும் நாட்டின் மொத்த தேவைக்குச் சமமான 'சப்ளை' இல்லாதவரையில் வர்த்தகக் கட்டுப்பாட்டிலும்-தற்போது மேற்கொண்டுள்ள முறையிலும் சரி, இறுதியாக மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கையிலும் சரி - உயர்ந்துகொண்டே செல்லும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியாது. உற்பத்தியாளர்களுக்கும் உபயோகிப்பவர்களுக்கும் நியாயமான அளவில் உணவுப் பண்டங்களின் விலையை நிலை நிறுத்துவதுதான் அரசாங்க வர்த்தகத்தின் லட்சியம் என்று கூறப்பட்டது. இந்த லட்சியம் நிறைவேறாது என்பது மேலே சொல்லியவற்றிலிருந்து விளங்கும். மேலும், லைசென்சுதாரர்கள் மட்டுமே உணவுப் பண்டங்களை வாங்கவும் விற்கவும் செய்யலாம் என்ற ஏகபோக உரிமை நிலை ஏற்பட்டால்-கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் நிலைமை பெரும்பாலும் இப்படித்தான் இருக்கும் - அவ்வுரிமையை அவர்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளமாட்டார்களென்பது என்ன நிச்சயம்? உற்பத்தியாளர்களுக்கும் உபயோகிப்பவர்களுக்கும் நியாயமான விலை நிலைக்க வேண்டுமானால் வியாபாரிகளிடையே எவ்வித சலுகையுமில்லாத போட்டி வர்த்தகம் நடைபெற வேண்டும். வேறு வகையில் எதிர்பார்க்க முடியாது.

10. அரசாங்கம் வர்த்தகத்தில் தலையிடுவதன் மூலம் விலையைக் கட்டுப்படுத்த முடியாதென்றால் உயர்ந்து கொண்டே செல்லும் விலையைக் குறைப்பது எப்படி என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ஒரு விடைதான் உண்டு. உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இறக்குமதி மூலம் பற்றாக்குறையைச் சமாளிப்பது தற்கால நடவடிக்கை. நிரந்தரமாக இதை நம்பிக்கொண்டிருக்கக் கூடாது. இந் நடவடிக்கையினால் நாட்டுக்குச் செலவு அதிகம். 1957—58-ம் ஆண்டில் இதற்காக 153 கோடி ரூபாய்கள் பிடித்தது. 1958—59-ம் ஆண்டில் இருந்த அளவுக்குக் குறையாதென்று எதிர்பார்க்கலாம். இதைத் தொடர்ந்து இப்படியே செய்து கொண்டு போக இயலாது. ஆனால், நமது விவசாயிகளை நோக்கி, "அரிசிதான் உற்பத்தி செய்ய வேண்டும். ஏக்கராவுக்கு ரூ. 129 வருஷ வருமானம் கிடைத்தாலும், அதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும்; கோதுமைதான் பயிரிட வேண்டும். ஏக்கராவுக்கு ரூ. 97 தான் கிடைக்கும். அதைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். அதிக வருமானம் கிடைக்கக்கூடிய கரும்பு, புகையிலை போன்ற பொருள்களைப் பயிரிடக் கூடாது" என்று சர்க்கார் சொன்னால் அதுவும் நியாயமாகாது. நாட்டில் உணவுப் பண்டங்களில் பற்றாக்குறை இருக்கிறதென்றாலும் விவசாயிகளுடைய வருமானத்தை அதிகரிக்கவும் வகை செய்ய வேண்டும். அதற்கு இப்போது ஒரு ஏக்கரிலிருந்து உற்பத்தியாகும் மகசூலைப் பெருக்கவும், அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் அரசாங்கம் முன் வர வேண்டும். இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, வர்த்தகத்தில் தலையிடுவதன் மூலம் எவ்விதமான பலனும் ஏற்படாது.

மறுபடியும் **ஆச்சரியப்படும்படியான**

ஆரோக்கியத்துடன் இருங்கள்



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

ஆரோக்கியத்தை அளிக்கும் சிறந்த டானிக் என்று நிரூபணம் செய்யப்பட்டது. அதை ஆரோக்கியத்துடன் இருக்க விரும்புவோர்களும் அவர்களது குழந்தைகளும் உலகமெங்கும் தினசரி உபயோகப் படுத்துகிறார்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில்

போஷாக்கை ஊட்டும் கலவைகள் இருக்கின்றன. அவைகள், நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் வீர்யத்துடனும், ஆரோக்கியத்துடனும் சந்தோஷத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படி சக்தியை அளிக்கின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இடைவிடாதிருந்து வரும் இருமலையும், ஜலதோஷத்தையும், தொண்டைப் புண்ணையும் போக்குகிறது. நோயுற்று குணமடைந்தபின் உடம்பு சீக்கிரமாகத் தேற்றுவதற்கு டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுகிறது.

மோசடி செய்ய முடியாத மூடியுடைய பாட்டில்களில், புதிய சிகப்பு லேபில்களுடன் இப்பொழுது விற்பனைக்குக் கிடைக்கும்.




இப்பொழுது சிகப்பு தாளில் பாக்கிங் செய்யப் படுவதில்லை.

நீங்களும் ஆரோக்கியத்துடன் இருக்க நாவிற்கினிய

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சாப்பிடுங்கள்

வேங்கையின் மைந்தன்



பதினைந்தாம் அத்தியாயம்

பெண்ணா இவள்?

அகிலன்

கப்பகல்லகம் கோட்டை கலகலத்து விட்டது. முற்றுகை முறிந்துவிட்டது. முடி மன்னர் மாயமாய் மறைந்து போனார். அரண்மனையோ அமளிதுமளிப்பட்டு அலறித் தவிக்கிறது. இந்த நிலையில், வெற்றி கொண்டுவிட்ட வேற்று நாட்டு இளைஞனின் முன்பு நின்றுகொண்டு, கலகலவென்று அலட்சியமாய்ச் சிரிக்கிறாள் ஓர் இளம் பெண். இத்தனை துணிவு இவளுக்கு எங்கிருந்து வந்தது? இவள் என்ன, பெண்தானா!

வியப்படைய வேண்டிய இளங்கோ அவளைக் கண்டு வெறுப்படைந்தான்; வேதனையுற்றான்.

மன்னர் மகிந்தனைத் தேடிப் பிடித்து மாமன்னரின் முன்பு நிறுத்துவதற்காக ஓடோடியும் வந்தவன் அவன். மன்னரைத்தான் காண முடியவில்லை; மைந்தனையாவது கைப்பற்றியிருக்கலாமே! வினையாற்ற வந்த இடத்தில் அந்தச் சிறுவனுடன் விளையாட்டு எதற்கு?

‘சே,சே! பெருத்த அவமானம்!’ என்று தன்னையே நொந்து கொண்டு தனக்கெதிரில் நின்றவளை ஏறிட்டுப் பார்த்தான். அவளுடைய இதழ்க் கோணத்தில் நெளிந்த சிரிப்பின் சுவடு அவன் ஆத்திரத்தைக் கிளறி விட்டது. ‘இந்தச் சாகசக்காரி மட்டிலும் என் கரத்தைப் பற்றித் தடுத்து நிறுத்தியிரா விட்டால்...?’

“எங்கே அவன்?” என்று அவளிடம் உறுமினான் இளங்கோ. “அவன் இருப்பிடத்தைச் சொல்லிவிடு! இல்லாவிட்டால் நான் உன்னைச் சும்மா விடப் போவதில்லை.”

“ஓ! என்னையா கேட்கிறீர்கள்?” என்று குறும்புத்தனம் நிறைந்த விழிகளால் அவனைக் குத்திக் கிளறிக் கொண்டே, அவனிடம் திருப்பிக் கேட்டாள் அவள். “நன்றாய்த் தேடிப்பாருங்கள்; அவன் கிடைக்கா விட்டால் நானும் உங்களை இலேசில் விடப் போவதில்லை.”

அவளிடம் கேட்டுப் பயனில்லை என்பதைக் கண்ட இளங்கோ, தன்னை ஏமாற்றி விட்டுச் சென்ற சிறுவனைத் தேடி அங்குமிங்கும் அலைந்தான். கிடைக்கவில்லை. பிறகு மேல் மாடத்துக்குச் செல்லும் பாதையில் ஏதோ காலடிச் சத்தம் கேட்டதால் தயங்கி நின்றான். மாடத்துக்குச் செல்லும் கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. கதவிடுக்கில் காது கொடுத்துக் கேட்டான். சந்தேகமில்லை; யாரோ பரக்கப் பரக்க மேலே ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சுற்றுமுற்றும் தேடி, மூலையில் கிடந்த ஓர் இரும்பு உலக்கையை எடுத்துக் கொண்டு வந்தான் இளங்கோ. வெறி கொண்டவனைப் போல் கதவில் மோதி அதை இரண்டாகப் பிளந்தான். வாயிலுக்குள் அவன் நுழைந்த மறுவிநாடியில் அந்தப் பெண்ணின் உருவமும் அதற்குள் தலை கொடுத்தது. இளங்கோவுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.


“எதற்காக இங்கே வருகிறாய்?” என்று கத்தினான். அவள் பதில் அளிக்காமல் அவனை முந்திக் கொண்டு மேலே வேகமாகச் சென்றாள்.

“பெண்ணைப் பார், பெண்ணை! மறுபடியும் என்னைத் தடுக்க வந்தாயோ...?”

“நீங்கள் ஒன்றும் என்னைப் பார்க்க வேண்டாம்; பையனைப் பார்த்துத் தேடுங்கள்!”

அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், அவளை ஒதுக்கித் தள்ளி விட்டுப் படிகளில் பாய்ந்தான். படிகளில் இப்போது யாரையும் காணவில்லை. அதன் மேல் பக்கத்துக் கதவு வெளிப்





புறம் தாளிடப்பட்டிருந்தது! அந்த இரும்பு உலக்கையைக் கையோடு எடுத்துக்கொண்டு வந்திருக்கக் கூடாதா?

கட்டெரித்து விடுவதைப் போல் அவனை நோக்கினான் இளங்கோ.

"கோபித்துக்கொள்ளாதீர்கள்; இருங்கள். நானே கீழே இறங்கிச் சென்று அந்த உலக்கையை எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்றான் அவன். மறுகணம் அவன் கால்களின் சிலம்பொலி 'கல கல' வென்று நகைத்து மறைந்தது.

போனவன் போனவன்தான்! வேண்டுமென்றே தாமதம் செய்கிறான் என்பதைப் புரிந்துகொள்ள அவனுக்கு வெகு நேரமாகவில்லை. இரண்டே எட்டுக்களில் பாதிப் படிகளைத் தாண்டிவிட்டான்.

அப்போது அவன் எதிரில் உலக்கையைத் தூக்க முடியாமல் சுமப்பவனைப் போல் பாவனை செய்துகொண்டு வந்து சேர்ந்தான் அவன். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நின்றான்.

"அத்தனையும் சாகசம்!" வெடுக்கென்று அவனிடமிருந்து பிடுங்கி, "அத்தனையும் நடிப்பு! அத்தனையும் வேஷம்! அத்தனையும் பொய்!" என்று சொல்லிக்கொண்டே 'மடார் மடார்' என்று கதவில் சாத்தினான். அவனுடைய தலையைப் பிளப்பதாக நினைத்துக் கொண்டு கதவைப் பிளக்க முயன்றான்.

"நிறுத்துங்கள்! போனால் போகிறதென்று உதவி செய்ய வந்தால் என்னைத் திட்டவா செய்கிறீர்கள்?" என்று அவன்



கவனத்தைத் திருப்ப முனைந்தாள் அவள். "நான் ஒன்றும் உங்களைப்போல் முரட்டு ஆண்பிள்ளையில்லை, அதை ஒற்றைக் கையால் தூக்கிக்கொண்டு விரைவாக ஓடி வருவதற்கு!"

"நீ இங்கிருந்து போய்விடு!" என்று சீறினான் இளங்கோ. "அப்போதும் என்னைத் தடுத்தாய்; இப்போதும் என்னிடம் பேச்சுக் கொடுத்துத் தடுக்கப் பார்க்கிறாய். கோபத்தில் கதவோடு கதவாய்ச் சேர்த்து உன்னையும் நொறுக்கித் தள்ளி விடுவேன். போய்விடு!"

அவள் போகவில்லை.

கதவு கலகலத்து விழுந்தது. மேல் மாடத்தின் இறந்த வெளியைத் தொடும் பாதை அது. விரைந்தோடி, மாடத்தில் கைப்பிடிச் சுவருக்கு வந்து, கீழே எட்டிப் பார்த்தான். அங்கே ஒரு நூலேணி தொங்கிக்கொண்டிருந்தது. அதன் கீழ் நுனிவரையில் இறங்கிவிட்ட சிறுவன், இளங்கோவைக் கண்டவுடன் பதறிப் போய்க் கீழே குதித்தான். தரையில் நின்றுகொண்டு மேலே பார்த்துப் பழிப்புக் காட்டினான்.

இளங்கோவின் நெஞ்சு குமுறியது. குதித்து வாளெறிந்து அவனை நொடிப் பொழுதில் குற்றுயிர் குலை உயிர் ஆக்கி விடலாம். மகா பாவம்! பெண்கள், குழந்தைகள், முதியோரைத் துன்புறுத்துவது வீரனின் இலட்சணமல்ல.

நல்லவேளை, புலிக்கொடி தாங்கிய சோழநாட்டுக் குதிரை வீரன் ஒருவன் அந்தச் சிறுவனை நோக்கித் தன் குதிரையைத் திருப்பிக் கொண்டு வந்தான். சிறுவன் முதலில் தயங்கினான். பிறகு



பம்பாய் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் ஜெனரல் மானேஜர் திரு டி. எஸ். கிருஷ்ணன் அவர்களின் புதல்வர் மாஸ்டர் ஜனார்த்தனனுக்கு உபநயனம் சிறப்பாக நடை பெற்றது. இந்த வைபவத்துக்குப் பம்பாய் முதன் மந்திரி திரு ஒ. பி. சவான், ரிஸர்வ் பாங்க் கவர்னர் எச்.வி.ஆர். ஐயங்கார் முதலியோர் விஜயம் செய்து பிரும்மோபதேசம் பெற்ற சிறுவனை ஆசீர்வதித்தனர்.

அந்த வீரன் அவனிடம் ஏதோ சொல்லவே, தானாகச் சென்று குதிரையின் அருகில் நின்றான். அவனைக் குதிரையில் ஏற்றித் தனக்குப் பின்னால் அமர்த்திக் கொண்டு, மாடத்தின் உச்சியைத் திரும்பிப் பார்த்தான் வீரன்.

வீரனின் முகம் இளங்கோவுக்குச் சரியாகத் தெரியவில்லை. பல்லாயிரக் கணக்கான சோழ நாட்டுக் குதிரை வீரர்களில் அவனும் ஒருவன் போலும்?

"சேவகா!" என்று கூவி அழைத்து, "சிறுவனை நேரே அரண்மனைக்குக் கொண்டு போ; சாமந்த நாயகர் வல்லவரையரிடம் சேர்ப்பிக்கச் சொல்" என்று கட்டளையிட்டான். மகிந்தனின் மகன் அந்தச் சிறுவன் என்பதையும் தெரிவித்தான்.

"சித்தம், இளவரசே!" என்று அடித் தொண்டையால் கத்தினான் குதிரை வீரன். அவனுடைய குரலைக் கேட்டவுடன் இளங்கோவுக்கு அருகில் நின்றவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

குதிரைமேல் அமர்ந்திருந்த சிறுவன் அந்தப் பெண்ணிடம் கைகாட்டி, "நீயும் வா!" என்று தன் தாய்மொழியில் கூவி அழைத்தான். அவள் அதற்குப் பதில் அளிக்கவில்லை. பயத்துடன் தன் இடது கையால் வாயைப் பொத்திக்கொண்டு, 'நீ போ! என்னைக் கூப்பிடாதே!' என்று சொல்லுவதுபோல் சைகை காட்டித் துரிதப்படுத்தினாள்.

குதிரை வீரன் உடனே கிளம்பவில்லை. கடிவாளத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டே மேலே நின்ற பெண்ணை ஏறிட்டுப் பார்த்தான். இளங்கோவுக்குக் கோபம் வந்துவிட்டது. பெண்ணின் அழகைக் கண்டு ரசிக்கும் நேரமா இது? சோழ நாட்டு வீரனா இப்படிச் செய்கிறான்? தன்னருகில் அவள் நிற்பதைக் கண்டு ஏதேனும் ஐயமெழுந்து விட்டதா அவனுக்கு!

"விரைந்து போ!" என்று பதறினான் இளங்கோ. பிறகு தன்னருகே நின்றவளை நோக்கி, "தயவு செய்து நீ கீழே போக மாட்டாயா?" என்று கெஞ்சுவது போல் கேட்டான்.

அப்படி அவன் கேட்ட சமயத்தில் அவளுடைய கரங்கள் அவனுக்குத் தெரியாமல் நூலேணியைமாடத்திலிருந்து கழற்றிக் கீழே நழுவ விட்டுக் கொண்டிருந்தன. அதைக் கவனிக்காத இளங்கோ அங்கிருந்து திரும்பி நடக்கவே, அவளும் அடிக்கடி பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டே அவனைப் பின்பற்றினாள்.

இரண்டு பாக தூரம் இருவரும் நடந்திருப்பார்கள். திடீரென்று அவனைப் பார்த்துக் கலகலவென்று நகைத்தாள் அவள். விடாமல் சிரிக்கத் தொடங்கினாள். ஏன் இப்படிச் சிரிக்கிறாள் என்று அவனுக்கு விளங்கவில்லை. பித்துப் பிடித்த பெண்ணா என்ன!

"எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் கோபத்தோடு.

"ஏன், உங்கள் சோழ நாட்டுப் பெண்களுக்கு அழத்தான் தெரியுமோ?"

இளங்கோவுக்கு எரிச்சல் ஒருபுறம்; வியப்பும் திகைப்பும் மறுபுறம். அலறிப் புடைத்துக் கொண்டு அழுது புலம்ப வேண்டிய நேரத்தில் இவளால் எப்படிச் சிரிக்க முடிகிறது?

"யார் நீ?" என்று கேட்டான்.

"சொல்லட்டுமா?-நான் இந்த அரண்மனைப் பணிப்பெண். இப்போது உங்களிடமிருந்து தப்பிச் சென்றிருக்கிறானே, அந்த இளவரசனை வளர்ப்பவள்!"

இளங்கோவின் உச்சித் தலையில் அவள் இரும்புலக்கையைச் சுழற்றி வீசியதுபோலிருந்தது. "என்ன? நீ என்ன சொல்கிறாய்? என்னிடமிருந்து இளவரசன் தப்பிச் சென்றுவிட்டானா?"

சூறாவளியெனச் சுழன்று மாடத்துச் சுவரருகே போய் நின்றான் இளங்கோ. கீழே குனிந்து பார்த்தான். வலது கைப்புறமிருந்த அரண்மனைப் பக்கம் நோக்கினான். குதிரை வீரனையோ அந்தச் சிறுவனையோ அந்தப் பக்கத்தில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை காணவில்லை.


COLGATE
HAIR OIL

கவர்ச்சியாக இருக்க
கற்றுக்கொள்கிறான்...

இன்னமும் சிறுவன்தான். இருந்தாலும், அவனுக்கும் கவர்ச்சியாக இருக்க ஆசைதான். அவனுடைய அடர்த்தியான முடியை அழகாகப் படிய வைக்கும் 'குட்டு'தான் அவனுக்கு விளங்கவில்லை. டாடாவின் பரிமள கோகனட் கூந்தல் தைலத்தின் மேன்மையை அவனுக்கு விளக்குங்கள். இந்த சுத்தமான தேங்காய் எண்ணெயின் பரிமளம் மனதிற்கு உல்லாச மூட்டும். அடர்த்தியான முடியை கண்கவர் கருமையுடன் படியச் செய்ய இருபத்தைந்து வருஷங்களாக உபயோகத்தில் இருந்துவரும் கூந்தல் தைலம் இது..



டாடாவின்
பரிமள
கோகனட்
கூந்தல் தைலம்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



"அதோ, அங்கே பாருங்கள்!" அவனுடைய இடது கைப்புறம் சுட்டிக் காட்டினாள் அவள்.

கோட்டை மதிலின் பின்புறத்து வாயில் தொலை தூரத்தில் தெரிந்தது. அந்த வாயிலும் இதற்குள் திறக்கப்பட்டு விட்டதால், அங்கு ஒரே கூட்டமும் குழப்பமுமாகத் தோன்றியது.

சிறுவனை ஏற்றிக் கொண்டிருந்த குதிரை வீரன் அந்தக் கூட்டத்துக்குள் புகுந்து வெளியேறிக் கொண்டிருந்தான். நொடிப் பொழுதில் முற்றிலும் மறைந்தே போய்விட்டான்!

அவளைத் திரும்பி நோக்கி, "யார் அவன்?" என்று கர்ஜித்தான் இளங்கோ.

"ஏன், சோழ நாட்டு வீரன் என்று அவனுடைய உடையையும் கொடியையும் பார்த்தால் விளங்கவில்லையா?" என்று அவனையே திருப்பிக் கேட்டுவிட்டு, "நகரத்துக்குப் புதியவனாக இருப்பதால் அரண்மனை இருக்குமிடம் தெரியாமல் அலைகிறான் போலும்!" என்றாள்.

நன்றாக ஏமாற்றிவிட்டாள் என்பதைக் கண்டுகொண்ட இளங்கோ, இறங்கிச் சென்று அந்த வீரனைத் துரத்துவதற்காகத் துடி துடித்தான். படிகளில் இறங்கிச் சுற்றி வளைத்துக் கொண்டு ஓடுவதென்றால் தாமதமாகும். மாடத்துச் சுவரில் தொங்கிய நூலேணியைத் தேடினான். அதை அங்கே காணவில்லை.

"எங்கே நூலேணி?"

"என்னைக் கேட்கிறீர்களா?" சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள் அந்தப் பெண்.

பிறகு அவனோடு சேர்ந்து தேடுவதைப் போல் தேடிவிட்டு, "அதோ பாருங்கள்; கீழே கிடக்கிறது!" என்று தரையைச் சுட்டிக் காட்டினாள். "நான் போய் எடுத்துக்கொண்டு வரட்டுமா?" என்று கூறிக்கொண்டே படிகளில் இறங்கி ஓடுவதற்குச் சித்தமானாள்.

'இவளைச் சித்திரவதை செய்து இந்த மாடத்தின் மீதிருந்தே கீழே தூக்கி எறிந்தால் என்ன? செய்ததெல்லாம் செய்துவிட்டு இவளும் தப்பி ஓடப் பார்க்கிறாளா?' - ஓடத் தொடங்கிய அவளை இளங்கோ தாவிச் சென்று பற்றினான்.

எந்தக் கரத்தினால் அவனைப் பிடித்து நிறுத்திச் சிறுவனைத் தப்ப விட்டாளோ, அந்தக் கரத்தைப் பிடித்து அவளைப் பரபரவென்று படிகளில் இழுத்துக் கொண்டு வந்தான். அவள் எழுப்பிய கூக்குரல்களையும் போட்ட கூச்சலையும் அவன் பொருட்படுத்தவில்லை. கீழே வந்து எந்தக் கூடத்துக்குள்ளிருந்து அவள் வெளிப்பட்டாளோ அதே கூடத்துக்குள் தள்ளி வெளியே தாழிட்டான்.

கூடத்தில் ஏற்கனவே சில பெண்கள் அழுது புலம்பி அரற்றிக் கொண்டிருந்தார்கள். தேம்பல்களுக்கிடையில் வேறொரு பெண்மணியின் குரல் மெல்ல எழுந்தது. "ரோகிணி! வந்தாயா மகளே? காசிபன் எங்கே? இந்தக் கிராதகர்களின் கண்ணில் நீ பட்டுவிடக் கூடாதென்று கூறினால் கேட்கவே மாட்டேனென்கிறாயே?"

மேற்கொண்டு இளங்கோ அங்கு நிற்கவில்லை. வீரர்கள் சிலரை அழைத்து, "இந்தக் கூடத்தைச் சுற்றிலும் பலமான காவலுக்கு ஏற்பாடு செய்யுங்கள்; ஐம்பது வீரர்களை நிறுத்தி வையுங்கள்" என்று கட்டளையிட்டுவிட்டு, வெளியில் விரைந்து சென்றான்.

அவனுடைய கறுப்புக் குதிரை கப்பலகம் அரண்மனையின் பின்புறத்துக் கோட்டை வாயிலைக் குறி வைத்துப் பாய்ந்து சென்றது.

பதினாறாம் அத்தியாயம்

மாய மோகினி!

இளங்கோவின் குதிரை கோட்டை வாயிலை நெருங்குவதற்கு முன்பே அதை நன்றாக இழுத்து மூடி விட்டார்கள். வல்லவரையர் வந்தியத்தேவர் நெருப்புப் பொறி பறக்கும் கண்களோடு அங்கு நின்று கொண்டே வீரர்களுக்குப் பற்பல விதமான கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

"ஓடுங்கள்! அரண்மனையின் எல்லா வாயில்களையும் மூடச் சொல்லுங்கள்!" என்றார் சிலரிடம். "எதிரிகள் எங்கு தென்பட்டாலும் அவர்களை வளைத்துக் கொண்டு காவலில் வையுங்கள்!" என்றார் இன்னும் சிலரிடம். "நிலவறைப் பாதைகள், ரகசிய வழிகள், தப்பிச் செல்வதற்கான மார்க்கங்கள் எங்கேயாவது தென்படுகின்றனவா என்று தேடிப் பாருங்கள்!" என்றார் மேலும் சிலரிடம்.

வல்லவரையரிடம் நெருங்கிப் பேசுவதற்கே அச்சமாக இருந்தது இளங்கோவுக்கு. நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் வாயில் கதவுகளைத் திறக்கச் செய்வாரா அவர்? வீரர்களின் மத்தியில் புகுந்து, தயங்கிக்கொண்டே போய், அவர் முன்னால் குதிரையிலிருந்து கீழே இறங்கினான் இளங்கோ.

"நீ எங்கு இங்கே வந்தாய்?" என்று வியப்புடன் கேட்டார் வல்லவரையர்.

"மகிந்தனின் மகனை யாரோ குதிரை மேல் தூக்கி வைத்துக் கொண்டு இந்த வழியாகச் சென்றார்கள். நம்முடைய வீரன் என்று நம்பி ஏமாந்து போய் விட்டேன். வாயிலைத் திறந்துவிடச் சொல்கிறீர்களா?" என்றான் இளங்கோ.

"இதற்காக இந்த வேளையில் நீ அரண்மனையை விட்டு வெளியே கிளம்பலாமா? உடனே திரும்பிப் போ! அரண்மனை, அந்தப்புரம், அரச மாளிகைகள் எல்லாவற்றையும் நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்."

தயங்கிய வண்ணம் அங்கேயே நின்று கொண்டிருந்தான் இளங்கோ.



"எதற்காக நிற்கிறாய்? அரண்மனைக்குப் போ; இதோ நானும் வந்துவிடுகிறேன்" என்றார் வல்லவரையர்.

"தாத்தா! என் கண்ணெதிரில் அவன் தப்பிவிட்டான், தாத்தா! அவனை எப்படியாவது பிடித்துக் கொண்டு திரும்புகிறேன். வாயிலைத் திறக்கச் சொல்லுங்கள்" என்று கெஞ்சினான் இளங்கோ.

"மன்னரே தப்பி ஓடிவிட்டாரென்று செய்தி வந்திருக்கிறது; அவருடைய மகனுக்காகக் கவலைப்படுகிறாயே!" என்று வருத்தத்துடன் சிரித்தார் வந்தியத்தேவர். "இதோ பார், இந்த ரோகணமே ஒரு பெரிய எலி வளை. ஒளிந்து கொள்வதும் மறைந்து கொள்வதும் இந்த நாட்டுக்குப் புதிதல்ல. மெதுவாக அவர்களை யெல்லாம் தேடிப் பிடித்துக் கொள்ளலாம். நீ போய் மற்றவர்களும் மறைந்துவிடாமல் பார்த்துக்கொள்."

இளங்கோவின் பரபரப்பு இதனால் அடங்கவில்லை. 'எப்படியாவது அவனைப் பிடித்துக்கொண்டுதான் வரவேண்டும்!'- வல்லவரையரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டு, வாயில் கதவுகளைத் திறக்கச் செய்து வெளியில் விரைந்தான்.

"நான் அரண்மனைக்குப் போகிறேன். விரைவில் திரும்பிவிடு, இளங்கோ!"

அரண்மனையைச் சுற்றி நான்கு புறத்திலும் நகரமும், நகரத்தைச் சுற்றிப் பெரிய கோட்டை மதில்களும் இருந்தன. சிறுவனை ஏற்றிக்கொண்டு சென்றவன் நகரத்துக்குள் மறைந்திருப்பானோ? அல்லது வெளிக் கோட்டையைத் தாண்டி மலைக்காடுகளுக்குச் சென்றிருப்பானோ?

வெளிக் கோட்டை வாயில்களையும் அடைத்து விட்டார்கள் என்ற செய்தி இளங்கோவுக்கு ஆறுதலைத் தந்தது.

எதிரே தென்பட்ட சோழ நாட்டு வீரர்களிடம் அடையாளம் சொல்லி விசாரித்துப் பார்த்தான். யாருடைய கண்களிலும் அவர்கள் தென்படவில்லை. பத்துப் பதினைந்து வீரர்களை நகரத்தின் நாலா பக்கங்களுக்கும் அனுப்பிவிட்டு அவனும் தேடுவதில் முனைந்தான்.

தெருவின் ஒரு முனையில் திரும்பிய போது, எதிரில் புலிக் கொடி தாங்கிய குஞ்சர மல்லர்கள் யானைகள் மீதமர்ந்தவாறே முரசறைவித்துக் கொண்டு வந்தனர். யானைக் கூட்டத்துக்கு வழி விட்டுத் தன் புரவியை ஒதுக்கியவன், முரசறிவிப்புச் செய்தியை உற்றுக் கேட்டான்.


"ரோகணத்து மக்கள் யாவரும் இனி முன் போலவே அமைதியுடன் வாழலாம். வீணாகப் பீதியுற வேண்டாம்'; கலங்க வேண்டாம்; அஞ்ச வேண்டாம்! சோழ நாட்டு வீரர்களால் உங்களுடைய உயிர், உடைமை, மானத்துக்கு எவ்விதத் தீங்கும் நேராது. அப்படியேதும் தவறுகள் நடந்தால், தெரு மூலைச் சதுக்கங்களில் உள்ள பாதுகாவல் நிலையிடம் தெரிவியுங்கள். தவறு செய்தோர் தண்டிக்கப்படுவர்!"

கடைசியாகச் சென்ற யானையின் மீது வீற்றிருந்த மாமன்னர் இளங்கோவைக் கண்டு விட்டார். யானையை நிறுத்தச் சொல்லி, இளங்கோவை அருகில் வருமாறு சைகை காட்டினார். வல்லவரையரிடம் கூறிய அதே செய்தியை மாமன்னரிடமும் கூறினான். மாமன்னரின் மறுமொழியும் வல்லவரையர் கூறியதைப் போலவே இருந்தது.

"அதனால் பாதகமில்லை; போனவர்கள் போகட்டும்; நீ போய் அரண்மனைப் பெண்டிருக்கு ஆபத்து ஏதும்

நேராமல் பார்த்துக் கொள்" என்றார் சக்கரவர்த்தி. "நம்முடைய பண்பை நம்பித்தான் எதிர் நாட்டார் இப்படியெல்லாம் பெண்களைத் தனியே விட்டுச் சென்றிருக்கிறார்கள் போலும்! அந்த நம்பிக்கைக்கு நாம் உரியவர்களாக நடந்து கொள்ள வேணும். திரும்பிப் போ!" என்றார் சக்கரவர்த்தி.

வல்லவரையரை மீறிக் கொண்டு வெளியில் வர முடிந்தது இளங்கோவால். இப்போது மாமன்னரின் சொற்களை மீற முடியவில்லை. தலையைத் தொங்க விட்டுக் கொண்டே அரண்மனைப் பக்கம் தன் குதிரையைத் திருப்பினான். போகும்போது வேகமாகப் பாய்ந்து சென்ற புரவி, திரும்பும்போது தளர் நடை போட்டது.



அரண்மனைக்குள் நூற்றுக்கணக்கான வீரர்கள் நுழைந்து, எங்கெல்லாம் சோதனையிட்டுப் பார்க்க முடியுமோ, அங்கெல்லாம் சோதனையிட்டுக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு இடமாகச் சென்று எதையோ தேடிப் பார்ப்பதில் முனைந்திருந்தனர். அவர்களுக்கு மத்தியில் நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார் வந்தியத்தேவர்.

அவரைத் தனியாக அழைத்து, "சக்கரவர்த்தி என்னைத் திருப்பி அனுப்பி விட்டார், தாத்தா!" என்று வருத்தத்துடன் கூறினான் இளங்கோ.

"மன்னரின் சொல்லுக்குத்தான் மதிப்புத் தருகிறாய். கிழவனின் சொல் குமரனிடம் எங்கே எடுபடுகிறது?" என்று நகைத்தார் அவர்.

"அது சரி, தாத்தா! இப்போது எதைத் தேடுகிறார்கள் இவர்கள்?"

"நாம் எதற்காக இங்கே படையெடுத்து வந்தோமோ, அதைத்தான் தேடுகிறார்கள்."

"மணிமுடி தேடும் படலமா?" என்று கேட்டு விட்டு வாய்விட்டுச் சிரித்தான் இளங்கோ. "ஏன் தாத்தா, ஓடி ஒளிந்து கொண்ட மகிந்தர் அதை எப்படி இங்கே வைத்து விட்டுப் போயிருப்பார்? மனிதர்களை ஒளித்து வைக்கவே மலைக் குகைகள் நிறைந்த நாட்டில், மணிமுடிக்குத்தானா சிறு இடம் கிடைத்திருக்காது?— தாங்கள் முன்பு என்னிடம் அப்படிக் கூறியிருக்கிறீர்கள்."

"தேடிப் பார்த்துவிட வேண்டியது நம்முடைய கடமை" என்றார் வந்தியத்தேவர். "எங்கேதான் அதை வைத்திருக்கிறார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. கோட்டைக்கு வெளியில் இருப்பதை விட அரண்மனைக்குள் வைத்திருந்தால், அதுவே அதிகப் பாதுகாப்பாகும் என்று அவர்கள் நினைத்திருக்கவும் இடம் உண்டு அல்லவா?"

"எனக்கு என்னவோ அது இங்கே இருக்குமென்றுதோன்றவில்லை."

"தேடிப் பார்ப்பதிலும் தவறில்லை" என்று கூறிய வல்லவரையர், "வா! இவர்கள் இங்கே தேடிக் கொண்டிருக்கட்டும்; நாம் அதற்குள் அந்தப்புரத்தில் போய்த் தேடிப் பார்த்து விட்டு வருவோம்" என்று அவனை அழைத்தார்.

அந்தப்புரம் என்ற சொல் இளங்கோவின் செவிகளில் விழுந்தவுடன் ஆயிரம் தேள்கள் அவனை ஒன்றாகக் கொட்டின! 'அந்தப்புரத்துக்குள் எந்த முகத்தை வைத்துக் கொண்டு நுழைவது? அந்தப் பெண்ணின் முகத்தில் இனி எப்படிப் போய் விழிப்பது? வழியில் மாமன்னர் என்னைத் தடுத்து நிறுத்தியதை அவள் எங்கே அறியப் போகிறாள்? கையும் களவுமாகக் கள்வனைப் பிடிப்பதுபோல் அந்தச் சிறுவனைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தால், அவள் முன்பு தன் வீரத்தை நிலைநாட்டியிருக்கலாம்! வெறும் கையுடன் அங்கே போய் நின்றால் அவள் புருவங்கள் நெரிய வேல் விழிகளால் ஏளனமாகப் பார்ப்பாள். பார்த்துக் கொண்டே கேலிச் சிரிப்புச் சிரிப்பாள். அந்தக் கண்களின் ஏளனத்தையும், முத்துப் பல்வரிசையின் கேலிச் சிரிப்பையும் எப்படிப் பொறுத்துக் கொள்வது. முடியாது, தன்னால் பொறுத்துக் கொள்ளவே முடியாது!'

வேகமாக முன்னால் நடந்து சென்று கொண்டிருந்த வந்தியத்தேவர்

இளங்கோ தன்னுடன் வராததைக் கண்டு தயங்கி நின்று திரும்பினார். அவன் கைகளைப் பிசைந்து கொண்டு நிற்பதைக் கண்டார்.

"என்ன இளங்கோ இது!"

"தாங்கள் மாத்திரம் போய் வாருங்கள் தாத்தா; எனக்கு அங்கே வருவதற்குப் பிடிக்கவில்லை."

"உன்னை யாரும் அங்கே பிடித்துக் கொள்ள மாட்டார்கள். வா!"

பரபரவென்று அவனுடைய கரத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு போனார் வல்லவரையர். அவன் தயங்கித் தயங்கிச் சென்றது அவருக்கு வியப்பைத் தந்தது. "காரணத்தைச் சொல்; விட்டு விடுகிறேன்" என்றார்.

மென்று விழுங்கிக் கொண்டு, மேலும் கீழும் விழித்துக் கொண்டு, நடந்ததை விவரமாகக் கூறினான் இளங்கோ. தன்னுடைய கரத்தைப் பற்றித் தடுத்து விட்ட பெண்ணின்மேல் அவனுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. சிறுவனைப் பிடித்து வராமல் போனதால், அவளுக்கு வெற்றி கிடைத்து விட்டதைப் போலவும், தான் தோல்வியுற்றது போலவும் உணர்ந்தான் இளங்கோ.

இந்தத் தோல்வி மனப்பான்மை அவனுடைய ஆத்திரத்தை இன்னும் பல மடங்கு கிளறி விட்டது.

"தாத்தா! எனக்கு இருக்கும் கோபத்தில், இப்போது நான் அவளைப் பார்த்தால், இரண்டு துண்டாக வெட்டிப் போட்டு விடுவேன். வேண்டாம்; நீங்கள் மட்டும் போய் வாருங்கள்."

கிழவருடைய கடைக் கண்கள் குமரனின் முகத்தில் பதிந்து கேலிச் சிரிப்புச் சிரித்தன. "பெண்ணைக் கண்டு அஞ்சும் அளவுக்குக் கோழையா நீ? நமக்கு வேண்டியது மணிமுடி! வா, போகலாம்" என்று அவனை அழைத்துக் கொண்டு போனார்.

அந்தப்புரத்தில் ஒரு கூடத்தைச் சுற்றிலும் ஐம்பது வீரர்களுக்கு மேல் காவல் நிற்பதைக் கண்டவுடன் அவருக்குத் திகைப்பு ஏற்பட்டது.

"இதென்ன, இளங்கோ! பாவம், பெண்களை வீணாகப் பயமுறுத்துவதற்கா இப்படிச் செய்திருக்கிறாய்?"

"பெண்களுக்கிடையில் ஒரு பேயும் இருக்கிறது தாத்தா! நான் உங்களிடம் கூறினேனே, அவள் பெண்ணேயல்ல; மாய மோகினி!"

தாழிடப்பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு இருவரும் கூடத்துக்குள் நுழைந்தார்கள். சுற்று முற்றும் பார்த்து விட்டு இளங்கோ, "தாத்தா!" என்று அலறினான். அலறிவிட்டு அங்குமிங்கும் ஓடினான். மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று ஆராய்ந்தான்.

அவனுடைய பதற்றத்தின் காரணம் விளங்கவில்லை. அறைக்குள்ளே மூன்று பெண்கள் இருந்தார்கள். அவர்களுடைய முகங்களை நன்றாக உற்றுப் பார்த்தான் இளங்கோவேள். பிறகு வெளியே ஓடிப் போய்க் காவல் காத்து நின்று கொண்டிருந்தவர்களிடம் கேட்டான். "அறைக்குள்ளிருந்த பெண்ணொருத்தியைக் காணவில்லையே, எங்கே அவள்?"

"கண்ணிமைக்காமல் காத்து நிற்கிறோம், இளவரசே! யாரும் இந்தக் கூடத்தை விட்டு வெளியில் வரவில்லை."

"அந்த மாயமோகினி மாயமாய் மறைந்து விட்டாள், தாத்தா!"

இளங்கோவின் தலை ஏற்கனவே சுற்றத் தொடங்கி விட்டது. இப்போது அத்துடன் வந்தியத்தேவரின் தலையும் சேர்ந்து கொண்டது — வாளிருக்க, வேலிருக்க, வீரர் படை விழித்து நிற்க அந்த வேல்விழியாள் எங்கு போனாள்?

எங்கே அவள்?

காவல் காத்து நின்ற வீரர்கள் அனைவரும் ஒருவரை யொருவர் பார்த்து விழி பிதுங்க விழித்தனர். **(தொடரும்)**

கொச்சைத் தமிழ்

பிறமொழிச் சொல்!

நாட்டுப்புறங்களில் 'ஏட்டையா' என்பவரைக் கண்டால் ஒரே ஓட்டந்தான். 'ஏட்டையா' என்பவர் எட்கான்ஸ்டெபிள். ஆங்கிலச் சொல்லாகிய (Head) என்பது 'ஏட்டு' என்று சிதைந்து வழங்குகின்றது. இவ்வாறு வழங்கும் கொச்சைத் தமிழ்ச் சொற்களை ஆராய்ந்தால் பாமர மக்களின் மனப்பான்மையும், தமிழின் நீர்மைக்குத் தக்கவாறு அவர்கள் பிறமொழிச் சொற்களை எடுத்தாளும் பெற்றியும் நன்கு விளங்கும்.

—பேராசிரியர் திரு ரா. பி. சேதுப் பிள்ளை

இலவசப்
பரிசுத் திட்டம்
1959 ஸெப்டம்பர்
15ம் தேதி வரை
நீடிக்கப்பட்டுள்ளது

குழந்தைகளுக்கான
ஜான்ஸனின் தயாரிப்புகளை வாங்கி
உங்கள் குழந்தைக்கு
இலவசப் பரிசைப் பெறுங்கள்

ஜான்ஸன் குழந்தைகள் மாதம் ஜூன் மாதத்தில் முடிவடைந்தது. ஆனால் இலவசப் பரிசுத் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. 1959 செப்டம்பர் 15ம் தேதிக்குமுன் வந்துசேரும் அல்லது 1959 செப்டம்பர் 15ம் தேதியின் தபால் ஈந்த முத்திரையுடன் கூடிய உறைகள் மட்டுமே இலவசப் பரிசுக்குத் தகுதியானவை. ஆகவே, சீக்கிரமே ஜான்ஸன் தயாரிப்புகளை வாங்கி உங்கள் குழந்தைக்கு அழகான இலவசப் பரிசைப் பெறுங்கள்.

பரிசு பெறும் விதம் :

- ஜான்ஸன் பேபி சோப், ஜான்ஸன் பேபி க்ரீம், மற்றும் ஜான்ஸன் பேபி ஆயில், இவைகளின் மொத்தம் ஆறு உறைகளையோ, அல்லது ஜான்ஸன் 'த்ரீ-இன்-ஒன்' பேபி சோப் 'கிப்ட் பாக்'கின் இரண்டு அட்டை உறைகளையோ 'ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்'கின் கீழ் தபால் பெட்டி நி. 1976, பம்பாய், என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.
- உறைகளுடன் ஜான்ஸன் தயாரிப்புகள் வாங்கும் கடையில் கிடைக்கும் பரிசுக் கூப்பனோ அல்லது ஒரு கடிதமோ வைத்து அனுப்பவேண்டும். கடிதத்தில் கீழ்க்கண்ட விபரங்கள் எழுதவும் :

1. எந்தத் தயாரிப்புகளின் உறைகள் அனுப்பியிருக்கிறீர்கள் என்ற விபரமும், அவைகளின் எண்ணிக்கையும்
2. உங்கள் குழந்தை பெண் குழந்தையா, ஆண்குழந்தையா என்ற விபரம்
3. தெளிவாக, பெரிய எழுத்துக்களில் உங்கள் பெயரும் முழு விலாசமும்


பதிலுக்கு தபால் செலவு இல்லாமல் இலவசமாக உங்களுக்கு பரிசு வந்து சேரும்!



ஜான்ஸன் அண்டு ஜான்ஸன்

60 ஆண்டுகளுக்கு மேலாக குழந்தைகளுக்கான சிறந்த சாதனங்களைத் தயாரித்து வருபவர்கள்

ஜான்ஸன் அண்டு ஜான்ஸன் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்



மனைவியே மனிதனின் மாணிக்கம்

தமிழ்ப் படங்கள் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து வருவதற்குக் காரணம் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர்.

புதுப்புது மெட்டுக்களில் பாடல்கள் போடாததுதான் தோல்விக்குக் காரணம் என்கிறார் ஒரு ஹிந்திப்பட ரஸிகர்.

பாடல்கள் அதிகமாயிருக்கின்றன. அதனாலேயே படங்கள் தோல்வியடைகின்றன — என்கிறார் ஒரு புதுமைப் பிரியர்.

'நம் படங்களில் புரட்சிகரமான கதை இல்லை' என்கிறார் ஒரு புரட்சிதாசர்.

நம் தமிழ்ப் படங்களைத் திறமையாக டைரக்ட் செய்ய இங்கே யாரும் இல்லை; அது தான் தோல்விக்குக் காரணம் என்கிறார் ஒரு சினிமா ரஸிகர்.

மேலே கூறியவைகளெல்லாம் ஓரளவு உண்மை தான் என்றாலும் அப்படியே அதை ஒப்புக் கொண்டு விடுவது சரியல்ல.

தமிழ்ப் படங்களின் ஒழுங்கான தோல்விக்கு முக்கியமான காரணம் படத்துக்கு ஏற்ற கதை தேர்ந்தெடுக்கப்படாமல்! இருப்பது தான். சாதாரணமாக, நாடகத்தில் பார்த்து ரஸிக்கக் கூடிய கதை சினிமாப் படத்துக்கு ஏற்றதாக இருப்பதில்லை.;

சினிமாவுக்கு ஏற்ற கதை என்றால் கண்ணைக் கவரும் காட்சிகளும் இருக்க வேண்டும்; கருத்தைக் கவரும் கதையம்சமும் இருக்க வேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சினிமாக் கலையின் மூலம் பெறக் கூடிய கலைத் திறன் நுணுக்கங்களை யெல்லாம் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்குப் படாதிபதியின் ஒத்துழைப்பும், டைரக்டரின் திறமையும் இன்றியமையாதவையாகும்.



"மனைவியே மனிதனின் மாணிக்கம்" என்னும் படம் "மணாளனே மங்கையின் பாக்கியம்" என்ற படத்தின் உடன்பிறந்த சகோதரன் என்று கொள்ளலாம்.

அந்தப் படத்திலும் மனைவியின் பெருமை தான் எடுத்துக் கூறப்படுகிறது. கணவன் — மனைவி இருவரும் சேர்ந்து சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆளாகிக் கடைசியில் ஒன்று சேர்ந்து இன்பமாக வாழ்கின்றனர்.

பண்டரிபாயைக் கதாநாயகியாகப் போட்டிருப்பதற்குக் காரணம் பிற்பகுதியில் 'மனிதனின் மாணிக்கம்' ஆவதற்கு மிகவும் அநுபவம் உள்ளவர் என்பதனால்தான்.

ஒரு பெண்ணை மணந்து கொண்டு ஒரு கெட்ட நண்பனின் தொடர்பால் மது, மங்கையர்பால் ஈடுபட்டுத் தவிக்கும் ஒரு அப்பாவியின் கதை இது. அந்தக் கெட்ட நண்பன் அப்பாவியைக் கெடுத்ததுமல்லாமல் அவன் மனைவியையே தான் அடையப் பார்க்கிறான். தன் மனைவி ஒரு மாணிக்கம் என்பது மனிதனுக்குக் கடைசியில்தான் தெரிகிறது. இந்தக் கதையில் ஒரு புதுமையும் இல்லை. அலுத்துப் போன பழைய காட்சிகள்தான் நிறைய இருக்கின்றன!

'மனித'னாக பாலாஜி வருகிறார். சாதாரண மனிதனாகவே கடைசிவரையில் இருக்கிறார். ஒரு சினிமாப் படத்தின் பாத்திரமாகவே தோன்றவில்லை. குடிகாரனாக நடிக்கும் கட்டங்களில் ஆட்டம் அதிகமாய்ப் போய் விடுகிறது. காதல் காட்சிகளில் பாலாஜிக்கு நிறைய 'சான்ஸ்' அடிக்கிறது. பண்டரிபாய், விஜயகுமாரி இருவருடனும் கனவிலும் நனவிலும் மெய்ம்மறந்து காதல்புரியக் கிடைத்த சந்தர்ப்பங்களை யெல்லாம் அவர் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

கணவனை இழந்து, கண்ணீர் வடித்து, அவதிப்படும் கண்ணறுவிக் கோலங்களிலே தோன்றிப் பழக்கப்பட்ட பண்டரிபாய்க்கு, இந்தப் படங்களில் காதலிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. மேற்படி காதல் காட்சிகளும் அப்பொழுது பாடப்படும் பாடல்களும் (ரஸிக்க முடியாவிட்டாலும்) எல்லோருடைய அநுதாபத்தையும் பெற்று விடுகின்றன!



விஜயகுமாரியும் விசேஷமாகப் பாராட்டும்படி நடிக்கவில்லை. கதாநாயகன் சுந்தருக்காக அவர் ஆடும் நடனங்களில் கவர்ச்சியே இல்லை. தமிழ்ப் படம் பார்ப்பவர்கள் என்ன குற்றம் செய்தார்கள், அவர்களுக்கு இம்மாதிரி கடுந் தண்டனை கொடுக்க என்று கேட்கத் தோன்றுகிறது.

இந்தப் படத்தில், நடிப்பில் மணியாக விளங்குபவர் மணியாக வரும் தங்கவேலுதான். காதலி கமலாவைச் சந்திக்க முடியாமல் அவன் தந்தை இடைஞ்சலா யிருக்கிறார். அந்தக் கட்டத்தில் தங்கவேலுவின் நடிப்பு மிக நன்றாயிருக்கிறது. அப்பொழுது அவர் தவிக்கிற தவிப்பு பிரமாதம்.

கணக்குப் பிள்ளையாக வரும் நாகேஷின் முக பாவங்களும் நடிப்பும் நன்றாயிருக்கின்றன.

இந்தப்படத்தின் மாணிக்கமாகப் பாராட்ட வேண்டிய நடிகர் தட்சிணாமூர்த்தி என்பவர். அவர் சினிமாவுக்குப் புதுமுகம் என்று நினைக்கிறேன். சுந்தர் வீட்டு வேலைக்காரன் முத்துவாக வந்து அவர் சக்கைப் போடு போடுகிறார்.

''ஐயோ, இந்தப் படத்தில் வந்து மாட்டிக் கொண்டு விட்டோமே! படுமோசமா யிருக்கும்போல்



இருக்கிறதே' என்று சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் போது முத்துவின் 'கட்டபொம்மன், - சிமைத்துரை வாதம்' வந்ததும் பிரமாதமா யிருந்தது. ஒன்றுக்கு ஒன்று எதிரிடையான கதாபாத்திரங்களை ஒருவரே ஏற்று நடிப்பதை நேரில் பார்த்துத்தான் ஆனந்திக்க வேண்டும். அசோக வனத்தில் சீதாதேவியை ராவணன் சந்தித்துப் பேசும் கட்டத்தையும் அவரே நடித்துக் காட்டுகிறார். அவரிடம் இயற்கையாகவே நடிப்புத்திறன் குடிகொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் தேவையில்லை என்று சொல்லக் கூடிய அம்சம் ஒன்று இருக்கிறது. (இந்தப் படமே தேவையில்லையே என்கிறீர்களா?) அதுதான் ஈ. வி. சரோஜாவின் நடனம்! ஒருவர் மனத்திலும் பதியாமல் போய் விடுகிறது.

கதையைப் பற்றிச் சொல்ல ஒன்றுமில்லை யென்றால், திரைக்கதை, வசனம் இவைகளைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? ஒரு விருந்து நன்றாயில்லாமல் இருக்கலாம். ஆனால் நன்றாயில்லாத அந்த விருந்தைத் தயாரிக்க, சமையல் நிபுணர்கள் தேவையில்லையென்று சொல்ல முடியாதல்லவா? அதுபோல், இந்தப் படத் தயாரிப்பிலும் பல கலைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் பாராட்டிச்சொல்ல ஒரு கலையம்சமும் இல்லை.

சுந்தரின் தந்தையாக வரும் நாகையா வந்த சுவடு தெரியாமல் வந்து போய் விடுகிறார்: வழக்கம் போல் இறந்து போகவில்லை!

சுந்தரின் மனைவியை வில்லன் கலிவரதன் கெடுக்க முயல்வது புளித்துப் போன பழைய விஷயம். அதற்கு அவன் குழந்தையையே பணயமாக வைப்பது இன்னும் பழங்காலச் சம்பவம்.

ஒரு பெண்ணை ஏமாற்றித் தனி வீட்டுக்குக் கொண்டுபோய் இம்சிப்பதும், இறுதிவரையில் போலீஸார் வராமல் இருப்பதும் தமிழ்ப்படங்களின் தவிர்க்க முடியாத காட்சிகள்!

'' மனைவியே மனிதனின் மாணிக்கம் '' — தலைவலியே தமிழ்ப் படம் தரும் தண்டனை!





ஆதரவுடன் சீராட்டி

ஆஸ்டர்மில்க் பாலூட்டி...

...வளர்க்கும் பாசமன்றோ உயிருக்குயிரான உங்கள் செல்வத்தின் உள்ளம் நிரம்பும் அமுதம்! உங்கள் அன்புப் பாலிலே வளரும் குழந்தையின் நலத்தையே முன்னிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள ஆஸ்டர்மில்க், தாய்ப் பாலின் அருமைபெருமைகள் அனைத்தும் ஒருங்கிணைந்த தாய்மையான பாலுணவாகும்.

இலவசம்! "ஆஸ்டர்மில்க் புத்தகம்" (ஆங்கிலத்தில்) ... குழந்தைப் பராமரிப்பு பற்றிய விவரமான நல்ல நூல். தபால் செலவுக்காக 50 ந. பைசாவுக்குத் தபால்தலைகள் இணைத்து எழுதுக. விலாசம்: "ஆஸ்டர்மில்க், POST BOX NO. 202, பம்பாய் 1."



தாய்ப் பாலுக்கு நிகரானது

பாரெக்ஸ்: நாலு ஐந்து மாதம் முதல் குழந்தை உண்பதற்கான முதன்முதலான கெட்டிப் பதார்த்த உணவாகிய பாரெக்ஸ், மேன்மையான தானியங்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள சத்துணவாகும்.

OS. 1-50 TM

வெறி விளையாடியது. ஆனால்...

பி.வி.ஆர்.

மங்கிய ஒளியில் தெரியும் நிழல் உருவமாக மாளிகை விளங்கியது. குளிர் தாங்கமாட்டாமல் சந்திரன் மேகப் போர்வையில் மறைந்து கொண்டிருந்தான். முதுகுத் தண்டில் குளிர் ஊசியாகக் குத்தியது.

அடித்த பேய்க் காற்றையும் லட்சியம் செய்யாதவனாய் உக்கே மாளிகையையே பார்த்து நின்றான். எத்தனை நேரம் நின்றானென்று அவனுக்கே தெரியாது. பற்ற வைத்த சுருட்டை அவன் உதடுகள் மறந்தன. கால மண்ணில் புதைந்து போன நிகழ்ச்சிகளும் சம்பவங்களும், குழந்தை கையில் கிடைத்த நூல் பந்து அவிழ்ந்து விழுவதுபோல் விழுந்து சிக்க, அந்தச் சிக்கலில் அவன் தன்னையே மூழ்கடித்துத் தத்தளித்தான்.

எத்தனை நேரம்தான் ஒருவன் அந்த வேளையில் அப்படி இருக்க முடியும்? ஏதோ ஒரு உள்குரல் அவனைத் தட்டி எழுப்பியது.

அவன் அங்கிருந்து நகர்ந்தான். திரும்பினான். நடந்தான்.

* * * *

“எங்கே போயிருந்தே?” கிழவியின் குரல் அவனுடைய அந்தகாரத்தில் நாராசமாகத்தான் கேட்டது.

“சும்மா வெளியே...”

“நடு வட்டத்துக்குப் போயிருப்பியோன்னு நெனைச்சேன்” என்கிறாள் கிழவி.

“இல்லே...”

“மண்டிக்காரன் வந்தான்...கால பஸ்ஸிலே மேட்டுப்பாளையம் போறானும். உன்னைப் பார்க்க நின்றான். நான்தான் அனுப்பினேன். நீதான் நடு வட்டத்துக்குப் போயிருக்கியோன்னு நெனைச்சேனே?”

‘அம்மா! கொஞ்சம் பொரியது வை... தம்பி வந்தானா?” என்று கேட்டான் உக்கே.

“இல்லே...மண்டிக்காரன் பார்த்தானும்... பணத்தைக் குடுன்னு கேட்டிருக்கான்...உன்கிட்டேதான் குடுப்பேன்னு அவன் சொல்லிட்டுப் போயிட்டான்... ரொம்பக் கோவம் வந்திடுச்சாம் ரங்கையனுக்கு...”

“அம்மா...!” சாப்பிட்டு முடித்தும் உக்கே இலையை விட்டு எழுந்திராமல் தாயையே வைத்த கண் வாங்காமல் பார்த்தவனாய் அழைத்தான்.

“என்ன?”

“நான் சொல்றதைக் கேட்பியா?”

“தினம் பாடற பாட்டுத் தானே...?”

“நான் சொல்றது கேவலம் பாட்டுமாதிரி யாயிடிச்சா?” என்றான் உக்கே அழாக் குறையாக.

“பின்னே...போகாத ஊருக்கு நீ வழி தேடறவனாயிருக்கே...” என்று பதிலளித்தாள் அவள்.

“ஏன்?” அவன் எழுந்தான்.

“ஏனு?”

“ஆமாம்...” கைகழுவி விட்டுச் சுருட்டைப் பற்றவைத்தான்.

“உனக்குக் கல்யாணமில்லாமல் ரங்கையனுக்குக் கல்யாணமா?”

“நான் பண்ணிக்கப் போவது நிச்சயமாக இல்லே. உன் பிள்ளை உருப்படவேண்டுமானால் முதல்லே கல்யாணத்தைப் பண்ணி வை...போன தடவை இரண்டாயிரம் ரூபாய் குதிரை ஓட்டத்திலே நஷ்டம். உனக்குத் தெரியுமா? ஒரு ஏக்கரா பூமி குறைஞ்சிருக்கு. தெரியுதா?”

“அறியாப் புள்ளே...”

அறியாப்புள்ளைக்கு மைசூரிலேயும் பங்களூரிலேயும் என்ன வேலே? அங்கே குடிச்சது போறாதுன்னு இங்கேயும் பாட்டில் பாட்டிலாகக் கொண்டு வாரான். முந்தா நாளு பங்களாவுக்குப் போனேன் கண்ணாடிகளைத் துடைக்க. அலமாரிலே ஒளிச்சு வைச்சிருக்கான். வந்த கோவத்திலே தூக்கி எறிஞ்சு உடைச்சேன்...”

தாய் வாய்பேசாமல் நின்றாள்.

“இப்போ என்ன அம்மா சொல்லறே? இந்தப் புள்ளே இப்படியே ஊதாரியாகப் போனால் நம்ம குடும்ப மானம் எத்தனை நாளுக்கு அம்மா தக்கும்?”

“நீ போற வரைக்கும்.”

திடீரென்று எழுந்த முரட்டு — ஆனால் நிதானமான — குரல்



நீலகிரி மாவட்டச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை

அந்தச் சின்னஞ் சிறு வீட்டையே அதிர வைத்து விட்டது.

"ரங்கா ! நீ ஏன் இப்படி ஆகிவிட்டாய்?"

கிழவி தான் பெற்ற இரு கண்களையும் பரிதாபமாகப் பார்த்தாள். ஒன்றில் ரத்தம் கசிந்தது. அவள் தன்னையும் அறியாமல், பாசம் என்னும் பாலை அதிகம் ஊட்டி ஊட்டி ஒருவனைத் தனக்கே சத்ருவாக ஆக்கிவிட்டாள். இரு பிள்ளைகளுக்குமிடையே உதித்துவிட்ட பிளவுக்குப் பாலமாக நிற்க முயல முயல பிளவு விரிந்ததுதான் மிச்சமாயிற்று.

ரங்கையன் ஒரு நிமிஷம் தாயாரைப் பார்த்துவிட்டு, அண்ணன் பக்கம்திரும்பினான்.

"உக்கே...!" குரலில் திமிர் எக்களித்தது.

"என்ன ?"

"பங்களாவை என்றைக்கு என் கைவசம் தரப் போகிறாய் ?"

"உன் கைவசமா...தர வேணுமா?" உக்கே இலேசாகச் சிரித்தான்.

"நீ சிரிக்காதே. இப்பொழுது எனக்கு வரும் கோபத்தில்..."

"குடிகாரனுக்கும் கோபத்துக்கும் உள்ள சிநேகம்..."

உக்கே பேச்சை முடிக்கவில்லை.

அவன் உதடுகளில் குத்து அழுந்தி விழுந்தது.

"குத்துக்கும் வலிக்கும் உள்ள சிநேகம் மாதிரி !" ரங்கேயின் வெறிச் சிரிப்பு அந்த வீட்டையே அதிரச் செய்தது.

தாயின் இரு கண்களிலும் இரத்தம் கசிய ஆரம்பித்தது.

"இப்போது சொல்லு. வீட்டை என் விடம் கொடுக்கிறாயா, மாட்டாயா ?"

உக்கே என்றைக்குமே நிதானத்தை இழந்தவன் அல்ல. அதுவும் தம்பியிடம் வாக்கு வாதம் உண்டாகும்போது அவன் தன்னை மறந்து எதையும் சொல்லுவதில்லை; செய்வதில்லை.

"இப்போது என்ன? எப்போதுமே கிடையாது. நான் செத்தால் வீடு தானாக உன்னிடம் வரும்."

"கொர்ட்டு இருக்கிறது !"

"போ. நம் மானம் சந்தியிலே பறக்க வேண்டுமானால் போ..."

"எனக்கு அதில் அக்கறையில்லை."

"எனக்கு உண்டு."

"வீடு வேண்டும்."

"கிடையாது."

"அப்படியானால் இருபது வருஷங்களாக அந்தப் பாழாப் போகிற சிமானுக்கு விட்டிருந்தாயே, நாலு நாலு மாசமாக. அந்த வாடகையில் என் பாகத்தைத் தா..."

"நான் வாடகை வாங்கவில்லை..."

"தெரிந்துதான் கேட்கிறேன்... இரண்டு பேருக்கும் சொந்தமான பங்களா! நீ கட்டின சத்திரமா...சீமையிலிருந்து பணத்தை வாரி இறைத்து வருகிறவனுக்கு நீ இனாமாக இருக்கக் கொடுக்கிறாய்..."

"அது அவர் அப்பாவுக்குத் தந்த வீடு..."

"தந்த பிறகும் சொந்தம் கொண்டாட என்ன உரிமை...?"

"அவருக்கு இல்லாவிட்டால் உனக்கும் இல்லை..."

"அப்போ உனக்கும் இல்லாமல் ஒரு வழியாகத் தீர்த்து விடுவேன்..."

உக்கே சிறிது நேரம் யோசித்தான். அண்ணன் இணங்கத்தான் யோசனை செய்கிறான் என்று எண்ணின ரங்கே மௌனமாக நின்று கொண்டிருந்தான்.


"ரங்கே..."

"சொல்லு..."

"நீ ஏன் என்னுடன் காட்டில் உழைக்கக் கூடாது...? தைலம் இறக்க என்ன செலவு ஆகிறது தெரியுமா...நீயும் ஒத்துழைத்தால் எவ்வளவோ குறையும்..."

"நீ பாதையை விட்டுப் பேசுகிறாய்..."

"இல்லை...சொத்து பரம்பரைச் சொத்து. அதில் பங்கு கேட்கிறாயே...உழைத்து வருவதும் பரம்பரைக் குணம்...தொழில். அதில்



ஏன் பங்கு எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறாய்?''

எதையோ எதிர்பார்த்த ரங்கே அண்ணனுடைய பேச்சைக் கேட்டுப் பொறுமை இழந்தான். வந்த கோபத்தில் அவன்மேல் பாய்ந்தான். கன்னத்திலும், தாடையிலும் குத்துகள் சரமாரியாக விழுந்தன.

உக்கே கீழே சாய்ந்தான். விரல்களிடையில் இருந்த சுருட்டு விழுந்து, உருண்டு, சிந்திக் கிடந்த நீரில் அணைந்தது.

''இது முதல் பாடம்...அடுத்த பாடத்துக்கு அப்புறம் நீ இருக்க மாட்டாய்!''

கறுவின பிள்ளையைக் கண்டு தாய் பயந்து விட்டாள். கசிந்த பிள்ளையைக் கண்டு வெதும்பி வேசாறினாள்.

''உக்கே...''

''அம்மா...!''

''பங்களாவைக் கொடு...''

''முடியாது...'' மெள்ள எழ முயன்றான்.

அண்ணன் முதுகில் தடால் என்று ரங்கேயின் கால் உதைத்தது. எழ முயன்றவன் மீண்டும் சாய்ந்தான்.

''கடைசியாகச் சொல்லுகிறேன்...இன்னும் ஏழுநாட்களில் பங்களாவை எனக்குத் தரா விட்டால், அது உனக்கும் இல்லை. எனக்குமில்லை...அந்த வெள்ளைக் கிழத்துக்குமில்லை!''

தம்பியின் இரைச்சலின் எதிரொலி அடங்கி எவ்வளவோ நேரமாகி விட்டது.

உக்கே மெதுவாக எழுந்து, வேறு ஒரு சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

தம்பியின் குணத்தைப் போல், காற்று பேயாக வீசிக் கொண்டிருந்தது. ஓங்கி வளர்ந்த மரங்களின் இலைகள் ரங்கேயின் வார்த்தைகள் போல் பொருமிக் கறுவிச் சீறிக் கொண்டிருந்தன.

கழுத்தைச் சுற்றியிருந்த மப்ளரை, நீலத் தொப்பியைச் சுற்றிக் கட்டிக் கொண்டான். தூரத்தே அங்கும் இங்குமாகப் பள்ளத்திலும் மேட்டிலும் தெருக்களிலும் வீடுகளிலும் எரிந்து கொண்டிருந்த விளக்குகள், பனிப் படலத்தில் நூல் பந்துகளாகத் தெரிந்தன.



ரங்கேயின் கடைசி வார்த்தைகளை அவனால் மறக்க முடியவில்லை. அவன் ஏன் கடந்த பல மாதங்களாக ஒரே பிடிவாதமாக, பங்களாவைக் கொடு கொடு, என்று கதறுகிறான்? எத்தனையோபேர்கள் நல்ல விலைக்கு அதைக் கேட்கிறார்கள். பணத்தை உத்தேசித்துத் தான் தம்பி வாதாடுகிறான்.

ஆனால் அந்தப் பங்களாவை அவன் விற்பதா?

உக்கேவுக்கு வாழ்க்கையே நரகமாகத்தான் தோன்றியது.

நடந்தான்.

இரவின் அமைதியில், மலை மண்ணில் பூட்சின் சத்தம் அவன் காதுகளுக்கே பயங்கரமாக ஒலித்தது. நீலக் கோட்டும் மப்ளருமாக ஒரு சிலர் தெருக்களின் திருப்பங்களில் நின்று பீடி குடித்துக் கொண்டிருந்தார்கள்.

உக்கே பாதையின் ஏற்றத் தாழ்வுகளையும், பாம்பாக வளைந்து செல்லும் போக்குகளையும் மனப்பாடம் செய்தவன். குறுக்கு வழிகளை அவன் கால்கள் தாமாகத் தேடிச் செல்லும். மேல் தெருவிலிருந்து கீழ்த் தெருவுக்கு அவன் நடப்பதே அபூர்வம். எல்லாம் மலைப்பாதையில்—ஒற்றையடிப் பாதையில் — இறங்கியே செல்வது வழக்கம்.

ஆனால் அன்று அவன் மனம் தெரு வழியே சென்றது.

நடந்து நடந்து கடைசியில் அவன் பங்களாவை அடைந்தான்.

சிறந்த மர வேலைப்பாடுடைய மாடி வைத்த பங்களா. காம்பவுண்டுக்கு அருகில் நின்று பார்த்தான். தூய வெண்மையில், சந்திரனுடைய இளம் ஒளியில் அது அன்னப் பட்சிபோல் விளங்கியது.

உக்கே மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு பங்களாவை நோக்கி நடந்தான். எல்லா விளக்குகளையும் போட்டு ஒரு தரம் வீடு முழுவதையும் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது. அதிக நாட்கள் அந்தப் பங்களா அவன் வசம் இருக்காது என்ற பயம் மனத்தில் பொறியாகத் தோன்றி விட்டது. ரங்கே எதற்கும் துணிந்தவன்; எந்தக் கொடிய காரியத்தைச் செய்யவும் தயங்க மாட்டான். முன் ஒரு தரம் உருளைக் கிழங்கைச் சாக்கு சாக்காக, மூட்டை மூட்டையாகக் கோயமுத்தூர் வியாபாரிக்கு அனுப்ப மேட்டுப்பாளையத்துக் கிடங்கில் போட்டு வைத்திருந்தான். அதன் வருவாயில் பெரும் பகுதியை ரங்கே கேட்டான். பணம் கொடுக்க உக்கே விரும்பவில்லை. நல்ல காரியத்துக்கு என்றால் எத்தனை வேண்டுமானாலும் கொடுக்கலாம். மைசூர் மதுவில் பணத்தைக் கரைப்பதற்கு அவனும் ஒரு கருவியாக இருப்பதா? தம்பிக்குப் பணம் தர மறுத்தான். விளைவு? மேட்டுப் பாளையம் கிடங்கு பற்றி எரிந்தது. நெருப்பை அணைத்த போது, கருகிய கிழங்கு முகத்தில் அடித்தது. நஷ்டம் ஆயிரம் ரூபாய்தான். ஆனால் தம்பியின் செய்கை அண்ணனின் உள்ளத்தில் புண்ணைப் படித்து விட்டது.

இப்போது இந்தப் பங்களாவையும் அவன் கிடங்கில் இருந்த கிழங்காக எண்ணி விட்டான்?...மனிதனுக்குக் கோபத்திலும் துக்கத்திலும் அறிவு மழுங்கி விடுகிறது. பங்களா என்ற சொத்தின் மதிப்பு பறி போவதைப் பற்றி உக்கே என்றுமே நினைத்துப் பார்த்ததில்லை. ஆனால் அந்தப் பங்களா அவனுடைய உள்ளத்தில், இதயத்தின் ஆழத்தில் வேரூன்றி நிலைத்துவிட்ட பொக்கிஷம். அதை ஒரு வைரமாக மதித்தான் உக்கே. 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷம் கிளம்புவதற்கு இருபது வருஷங்களுக்கு முன்னால் உக்கேயின் தந்தை ஸர் டிக்ஸனிடம் வேலை பார்த்து வந்தார். இந்திய அரசாங்கத்தில் மாபெரும் வேலை அவருக்கு. உதகையில் ஒரு பங்களாவைக் கட்டினார். அஸ்திவாரத்திலிருந்து, முடியும் வரையில் கூட நின்று மேற்பார்வை பார்த்தவர் உக்கேயின் தந்தை. பங்களாவின் அழகுக்கும் கவர்ச்சிக்கும் காரணமாக இருந்தவரும் அவரேதான்.

சென்னை உயர்தர நீதிமன்றத்தில் ஜட்ஜாக இருந்த ஸர் டிக்ஸன் விடுமுறைக்குத் தம் பங்களாவுக்கு வந்து விடுவார். இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தங்குவார். அப்போதெல்லாம் மாளிகை ஜகஜ்ஜோதியாக விளங்கும். சின்னஞ் சிறு பையன்களாக இருந்த உக்கேயும் ரங்கேயும் தோட்டத்தில் ஓடி விளையாட, டிக்ஸன் சிரித்துக் களிப்பார். உத்தியோக வாழ்க்கையில் எத்தனைக்கு எத்தனை உயர்ந்த பதவி வகித்தாரோ அத்தனைக்கும் சொந்த வாழ்வில் பெரும் ஏமாற்றம் தோல்வி எல்லாம். தாம் விரும்பிய பெண் கிடைக்காத ஏமாற்றம் அவரைக் கடும் பிரம்மச்சாரியாக மாற்றியது. தம் துக்கத்தை மறக்க உதவியது உதகை பங்களாவும், சின்னஞ் சிறு பையன்களின் களங்கமற்ற பேச்சும், விளையாட்டும்.

எல்லா வெள்ளையர்களையும் போல் ஒருநாள் அவரும் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போக வேண்டிய நாள் வந்தது. போகுமுன் கடைசி முறையாக உதகை வாசத்துக்கு வந்தார். திரும்பிப் போகுமுன், உக்கேயின் தந்தையை அழைத்தார்.

“ இனி இந்தப் பங்களா உன்னுடையது!” என்றார் அவரிடம்.


“ எனக்கா... !”

“ ஆமாம். எனக்கு இதை விற்றுப் பணமாக்கிக் கொள்ள வேணும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. நீ மேற்பார்வை பார்த்துக் கட்டினாய். வருஷத்தில் பத்து மாதம் பார்த்து வந்தாய்... என் பரிசாக உனக்கு இருக்கட்டும். ஆனால் ஒன்று. இதை எப்போதும் எந்தக் காரணத்தைக் கொண்டும் விற்கக் கூடாது...”

“இல்லை எசமான்!” உக்கேயின் தந்தையின் குரல் தழுதழுத்தது. அவர் கையைப் பிடித்துக் கொண்டு நின்ற உக்கே—பன்னிரண்டு வயதுச் சிறுவன்—வாயைப் பிளந்து கொண்டு அவரையே பார்த்து நின்றான்.

“ நான் ஏன் சொல்லுகிறேன், தெரியுமா... அவளுக்காகக் கட்டிய வீடு. ஆனால் அவள் என்னுடன் இருக்கவில்லை. ஆனால் நான் இருந்தபோதெல்லாம், அவளும் கூட இருந்தாள் என்ற நினைவே எனக்கு நிம்மதியைத் தந்தது. இதை விட்டுத் தொலை தூரத்துக்கு நான் போனாலும், இதன் நினைவு என்றுமே போகாது...மனத்திலே கரை கட்டி நிற்கும்.”

இங்கிலாந்துக்குப் போன ஸர் டிக்ஸன் இரண்டு வருஷங்களுக்குத் திரும்பவில்லை. மூன்றாவது வருஷம் இளவேனிற் காலத்தில் வந்தார். ‘ இனிமேல் வருஷா வருஷம் வரப் போகிறேன் !’ என்றும் கூறினார்.


"நான் இந்த ட்ரௌஸரைத் தைத்து வெகுகாலமாகி விட்டதல்லவா, ஐயா?"
"ஐந்து வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன! அதனால்தான் நான் எப்பொழுதும் விரும்புவது
பின்னியின்
ட்ரில்"
உயர்தர பருத்தியிலிருந்து தயாரிக்கப்பட்ட பின்னியின் ட்ரில்—வெள்ளையோ அல்லது காக்கியோ—பல வருஷங்களுக்கு நீடிக்கிறது. பல சலவைகளுக்குப் பிறகும் அதன் கவர்ச்சித்தன்மை கெடாமல் இருக்கிறது. உங்கள் தையற்காரரை கேளுங்கள். பின்னியின் ட்ரில்தான் நீங்கள் வாங்கக்கூடியது என்பார்.
பின்னி துணிகள் எப்பொழுதும் கன்ட்ரோல் விலைக்கு விற்கப்படுகின்றன என்பது ஞாபகமிருக்கட்டும்.
BY 650-a
பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
மானேஜிங் ஏஜெண்டுகள்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

முதல் வருஷம் திரும்பிப் போகையில் உக்கேயின் தந்தையிடம் ஐந்நூறு ரூபாயைக் கொடுத்தார்.

''எதற்கு எசமான்...?''

''இது நான் உனக்குத் தந்த வீடு. அதன் வாடகை....''

''எசமான், என்ன வார்த்தை சொல்லு கிறீர்கள்? இது உங்கள் பங்களா. நான் உங்கள் வேலைக்காரன்...''

''பத்திரப் பிரகாரம் இது உன் வீடு... இதை வாங்கிக் கொள்...''

அன்பு கலந்த பிடிவாதத்துடன் உக்கேயின் தந்தை மறுக்கவே அவர் திரும்பிச் சென்றார்.

அதற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஸர் டிக்ஸன் வந்தார்.

ஒரு வருஷம் உக்கே வரவேற்றான். அவனுடைய தந்தை இறந்துபோன செய்தியைக் கேட்டு ஸர் டிக்ஸன் வெகுவாக வருந்தினார்.

அந்த வருஷம் திரும்பிப் போகும்போதும், டிக்ஸன் வாடகைப் பணமாக ஐந்நூறு ரூபாய் நீட்டினார். தந்தையைப் போலவே பிள்ளையும் மறுத்து விட்டான்.

''பங்களாவைச் சுத்தம் செய்து வைக்கவும், ரிப்பேர் செய்யவும் வரிப் பணம் செலுத்தவும் செலவு இல்லையா?'' என்று டிக்ஸன் கேட்டார்.

''உருளைக் கிழங்கிலும் நிலகிரித் தைலத் திலும் நிறைய வருவாய் வருகிறது எசமான்!'' என்றான்.

கடைசிவரை உக்கே மறுக்கவே, டிக்ஸனுக்கு வேறு வழி யில்லாமற் போய் விட்டது.

''உக்கே எப்போது பணம் வேண்டுமானு லும் ஒரு வார்த்தை எழுது!'' என்றார்.

''ஆகட்டும், எசமான்!''

''பங்களாவை மட்டும் விற்று விடாதே...''

''என் பிணத்தை விற்ற பிறகு தான் அது விலைபோகும், எசமான்!''

''உன் தகப்பனாரை அப்படியே உரித்து வைத்திருக்கிறாய்!''

* * *


காலம் என்னும் மலை உயர உயர, அதனுள்ளே அமுந்திப் போன சம்பவங்கள் என்கிற மண்ணை, உக்கேயின் மனம் கிளறியது. கண் முன்னால் ஸர் டிக்ஸனின் சோகப் புன்னகை பூத்த முகமும், தந்தையின் திருப்தி நிறைந்த சிரிப்பும் நின்றன.

விளக்குகளைப் போட்டுப் பார்க்க வேண்டும் என்று நினைத்த அவன் இத்தனை நேரமாகச் சிந்தனையில் லயித்ததை எண்ணி வெட்கினான்.

ஹாலில் பரவியிருந்த கம்பளம் மாசு இன்றி, தூசியின்றிக் கிடந்தது. அடுத்தாற்போலிருந்த விசாலமான நடன அறையினுள் புகுந்தான். தம் காதலி தமக்குக் கிடைப்பாள் என்ற நம்பிக்கையோடு நிர்மாணித்திருந்த அறை. ஏமாற்றத்தின் விளைவாக, ஒருநாள்கூட அது உபயோகப்படவில்லை.

நடன அறையைத் தொடர்ந்து காமரா அறை. ஹாலின் இன்னொரு புறத்தில் அதிதிகளுக்காக அடுக்கு அடுக்காக மூன்று அறைகள்.

மாடிக்கு ஏறினான், உக்கே. கீழே இருப்பது போல் மாடியிலும் ஒரு ஹாலும் இரண்டு அறைகளும். ஸர் டிக்ஸனின் படுக்கை அறையில் அன்று இருந்ததுபோலவே இன்னும் கட்டிலும் கண்ணாடியும் இயேசு கிறிஸ்துவின்



எபிஷியண்ட் பப்ளிஸிட்டிஸ் கம்பெனியின் டைரக்டர் திரு எஸ். கிருஷ்ணன் அவர்களின் புதல்வர்கள் திரு கே. சங்கரனும், திரு கே. நடராஜனும் வர்ண அச்சுக் கலையில் மேலும் விசேஷப் பயிற்சி பெறக் கிழக்கு ஜெர்மனிக்குப் பயணமானார்கள்.

படமும் இருந்தன. படத்தை ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்த உக்கே பெருமூச்சுடன் கீழே வந்தான்.

''இந்தப் பங்களாவை ரங்கேயிடம் கொடுத்தால், மூன்று நாட்களில் விற்றுப் பணமாக்கி, அதை மதுவிலும் பந்தயத்திலும் உப்பாகக் கரைத்து விடுவானே!'' என்ற எண்ணம் அவனுக்கு எழுந்தது.

''கொடுக்க மறுத்தால்....?''

எழுந்த வினாவின் விடை பயங்கரமாக உள்ளத்தில் மோதியது. மேட்டுப்பாளையத்தில் உருளைக்கிழங்கு அடைந்த கதியை இதுவும் அடைந்து விடுமோ? அந்த நஷ்டம் தூசி போன்றது. இது போனால்?......

அவனுடைய உள்ளமே வெடித்தது, அதை நினைத்துப் பார்த்தபோது.

அடுத்த கணமே ஒருயோசனை தோன்றியது. அன்றையிலிருந்து அதைக் காரியத்திலும் காட்ட லானான்.

நாட்கள் சென்றன.

மார்கழி மாதத்துக் கடுங்குளிர் ஆரம்பித்து ஒரு வாரத்துக்கு மேலாயிற்று. உதகை நகரமே, குளிர் அரக்கனின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. உச்சி வேளையில் கூட, தெருவில் ஆள் அரவம் இல்லை. ரங்கே எத்தனையோ தடவை, நயமாகவும், கெஞ்சியும், பயமுறுத்தியும் கேட்டுப் பார்த்தான் அண்ணனிடம். அண்ணனின் தோரணையும், உபதேச வார்த்தைகளும், பிடிவாதமும், அவனுடைய ஆத்திரத்தைக் கிளறி விட்டன. இதுவரையில் அவனுக்கு ஏற்பட்டது மூவாயிரம் ரூபாய் கடன். மைதுனும் பங்குனும் 'வா, வா' என்று அழைத்துக் கொண்டிருந்தன. பல ஆயிரம் ரூபாய்க்குச் சொத்து இருந்தும் அண்ணனுல் தனக்கு ஒரு காலணுவும் கிடைப்பதில்லை என்ற எண்ணமே ஆத்திரத்தை அள்ளி வீசியது.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் கோயமுத்தூர் மில் முதலாளி ஒருவருக்குப்



யுனைடெட் இந்தியா பப்ளிசிட்டி கார்ப்பரேஷனைச் சேர்ந்த திரு பி. பி. ஹரன் அவர்களின் புதல்வர்களான அனந்துக்கும் ராமசாமிக்கும் உபநயனம் சிறப்பாக நடைபெற்றது.

பங்களாவை, உக்கே அறியாமல் காட்டியிருந்தான். முப்பதாயிரம் ரூபாய் தருவதாக அவர் சொல்லியிருந்தார். அதற்குப் பிறகு உக்கேக்கும் அவனுக்கும் ஏற்பட்ட வலுத்த சண்டையினால் அவனும் பயந்துகொண்டு எதுவும் செய்ய முடியாமற் போய் விட்டது. கோயமுத்தூர் வாசியும் வேறு பங்களா வாங்கி விட்டார்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்த ரங்கேயினால் பொறுக்க முடியவில்லை. வைராக்கியமும் கோபமும் கண்களை மூடின. இனி உக்கேயைப் பார்ப்பதிலும் அவனுடன் சண்டை பிடிப்பதிலும் கொஞ்சங்கூடப் பிரயோசனம் இல்லை எனப்பட்டது.

எங்கோ ஆறுயிரம் மைல் தூரத்திலிருந்த வெள்ளைக் கிழத்தை நினைத்தும் நெஞ்சம் கறுவியது. அவனும் தானே இவன் இதை விற்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கிறான்?

இரவு மணி பதினொன்று. இருளிலும் பனியிலும் உதகை உறங்கிக் கொண்டிருந்தது. மேட்டிலும் பள்ளத்திலும் ரங்கே விரைந்து கொண்டிருந்தான். உடம்பையும் தலையையும் மறைத்த நீலக் கம்பளி நடுநடுவே காற்றில் இலேசாக ஆடியது. பங்களாவின் நிழல் உருவம் அவ் வேளையில் பயங்கரமாக நின்றது. நேரே பின்கட்டுக்குச் சென்றான். கொட்டிலுள்ளிருந்து சோலையும் துணியையும் எடுத்தான். நெருப்புப் பெட்டி எளிதில் கிடைக்கவில்லை. கிடைத்ததும் அவன் செய்ய வேண்டியதைச் செய்தான். உதகை நகரம் ரங்கேயின் செய்கையினால் குளிர் காயத் தொடங்கியது.

*

வெறி பிடித்து ஓடின ரங்கே தன் வெறியின் கோலத்தை அண்ணனிடம் காட்டுவதற்கு ஓடினான். தடதடவென்று கதவை இடித்தான். கிழவி கதவைத் திறந்தாள்.

''எங்கே உன் உக்கே...?''

'பங்களாவில்...''

''என்ன?''

'' அன்றைக்கு நீ அவனைக் குத்தினாயே.... அதிலேயிருந்து அங்கேதான் அவன் படுத்துக் கொண்டிருக்கிறான்!''

''என்ன?...'' ரங்கே நிற்கவில்லை. அவன் ஓடினான். தலைதெறிக்க ஓடினான். அவனுடைய பழைய வெறியை வென்று கொண்டு ஒரு புது வெறி கிளம்பியது! அவனுடைய கீழ்த்தரமான செய்கை ஓர் உயிரை—அதுவும் அவனுடைய அண்ணனுடைய உயிரை — குடிக்கிறதா? ஐய்யய்யோ.....அவன் என்றுமே அண்ணனை அன்புடன் மதித்தவன். இடையிலே ஏற்பட்ட துர்க்குணங்கள் கூடப் பிறந்தவனைப் பலி வாங்க வேண்டுமா? என்ன பிராயச் சித்தம் செய்ய முடியும் அவனால், இனிமேல்?......

அவன் ஓடி ஓடி பங்களா வாசலில் நின்ற போது பங்களாவைச் சுற்றி ஜனங்கள் தாங்கள் செய்ய வேண்டிய காரியத்தில் மூழ்கிக் கொண்டிருந்தார்கள்.

தீயில் மூழ்கிய பங்களா அதிகாலையில் எலும்புக் கூடாகக் காட்சி யளித்தது.

'கருட்டைக் குடித்து விட்டு, ''ஜன்னல் வழியாகப் போட்டேன்!'' என்று உக்கே வருவோர் போவோரிடம் முணுமுணுத்தான்.

* * *

நாட்கள் சென்றன.

உக்கே வீட்டை விட்டு வெளியே வரவில்லை. உள்ளத்தில் பிறந்த புண் வளர வளர, அதன் வலியில் அவன் தன்னை மறந்து விட்டிருந்தான்; அடைந்து கிடந்தான்.

ரங்கேவுக்கு அண்ணனைப் பார்த்து மன்னிப்புக் கேட்கத் தெம்பு இல்லை. நடு வட்டத்திலும் குன்னூரிலுமாக அவன் அலைந்தான்.

ஒரு நாள் இளவேனிற் காலம் பிறக்க இன்னும் பதினைந்து நாட்கள் இருந்தன.

லண்டனிலிருந்து ஒரு கடிதம் வந்தது.

வருஷா வருஷம் டிக்ஸன் வருகையை அறிவிக்க ஒரு கடிதம் வரும்.

'இந்த வருஷம் அவரை எந்தப் பங்களாவில் வசிக்கச் செய்வது? தம் பங்களா இல்லை என்று தெரிந்தவுடன் அவர் திரும்பி விடுவாரே?''

கண்களில் நீர் மல்கக் கடிதத்தைப் பிரித்தான். அது டிக்ஸனுடைய கடிதம் அல்ல.

* * *

இரண்டு மூன்று நாட்கள் தேடியபிறகு உக்கே ரங்கேயைக் கண்டுபிடித்தான்.

''ரங்கே...இந்தா...''

ரங்கே அவமானத்தில் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

''டிக்ஸன் துரை இறந்து போய் விட்டார். அவர் உயிலில் இருபது வருஷ வாடகைப் பணத்தை எழுதி வைத்திருக்கிறார்.—பத்தாயிரம் ரூபாய். அவருடைய வக்கீலிடமிருந்து கடிதமும் பணமும் வந்திருக்கின்றன...''

ரங்கே அழுது கொண்டிருந்தான்.

''என்றைக்குப் பங்களா அழிந்ததோ, அன்று இரவுதான் அவரும் இறந்திருக்கிறார். இது ஓர் அதிசயமில்லை!''

ரங்கே பதில் சொல்லவில்லை.

''எனக்குப் பணம் தேவையில்லை...பங்களாதான் வேண்டியிருந்தது. நீ வேண்டியது இப்போது உனக்குக் கிடைத்து விட்டது. எடுத்துக் கொள்...'' தன்னுடைய இயற்கையான நிதானத்துடன் உக்கே பேசினான்.

ரங்கே வாய் திறக்கவில்லை.

அண்ணனுடைய இரு கால்களையும் கட்டிக் கொண்டு அவன் வெகு நேரம் வரையில் அழுது கொண்டேயிருந்தான்.

[ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், ஸ்ரீ அஹோபில மடம், ஸ்ரீ உடுப்பி பேஜவார் மடம், ஸ்ரீ மதுரை திருஞானசம்பந்த ஆதீனம் இவற்றின் பீடாதிபதிகளின் ஆசியைப் பெற்று, தமிழ் மக்களுக்கு விடுத்த பாரதப் பண்பாடு என்னும் செய்தி வரிசையில் ஏற்கனவே இரண்டு அறிக்கைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவ்வரிசையில் மூன்றாவது அறிக்கையைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். —ஆசிரியர்]

புண்ணிய பாவ விளக்கம்

உலகத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு நிலையில் பிறந்திருப்பதற்குக் காரணம், அவரவர் முன்பு செய்த புண்ணிய பாவத்துக்குத் தகுந்தபடி ஆண்டவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நிலைமையில் பிறக்கும்படி செய்திருப்பதேயாம்.

ஒருவன் செய்கிற நன்மையும் தீமையும் பலவகைப்படும்: பிறர் அறியும்படி செய்வது: தான் உணர்ந்து செய்வது, உணராமற் செய்வது; பயன் கருதிச் செய்வது, பயன் கருதாமற் செய்வது; தீமையாகத் தோன்றியது நன்மையாகப் பயன் கொடுப்பது, நன்மை போலத் தோன்றியது தீய பயனைக் கொடுப்பது; என்பன அவ் வகைகள்.

ஒருவன் இப்பிறவியில் செய்த நன்மைக்கும் தீமைக்கும் பயனாக இன்ப துன்பம் இவ்வுலகிலேயே அனுபவிப்பதும் உண்டு. மறு பிறவிகளில் அனுபவிப்பதும் உண்டு. ஒருவன் மற்றவனுக்குச் செய்கிற நன்மைக்குப் பதிலாக அவனே இவனுக்கு நன்மை செய்து விடுவதையும், கூலிக்கு வேலை செய்பவன் வேலை செய்த வினைக்குப் பயனாக உடனே கூலியாகிய பயனைப் பெறுவதையும் இவ்வுலகிலேயே வினையின் பயனைப் பெறுவதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஒருவன் கைம்மாறு கருதாமல் பிறருக்கு நன்மையான காரியம் செய்தால், அந்த வினை நல்வினையாகப் பதிவு செய்யப்படுகிறது. அது மறுபிறவியில் முன் செய்த புண்ணியமாக வருகிறது. ஒருவன் செய்த தீய காரியத்தின் பயனை இவ்வுலகத்தில் அனுபவியாதிருந்தால், அது அவனுக்கு மறு பிறப்பில் பாவமாக வருகிறது. பிறர் அறிய முடியாமல் மறைத்துச் செய்தாலும், அவையெல்லாம் தவறாமல் பதிவாகி விடும். புண்ணிய பாவங்கள் மனத்தினாலும், வாக்கினாலும், செய்கையினாலும் உண்டாகின்றன. தனித்தனியே, புண்ணியத்துக்கு உரிய பலனையும் பாவத்துக்கு உரிய பலனையும் அனுபத்தே தீர வேண்டும். ஒன்றை ஒன்றிலிருந்து கழிக்க முடியாது. ஒருவர் செய்த வினையை மற்றவர் அனுபவிக்கவும் முடியாது. அவரவர் செய்ததன் பயனை அவரவரே அனுபவிக்கும்படி செய்கிறார் கடவுள்.

நாம் செய்வனவற்றிற்கெல்லாம் கடவுளே பொறுப்பு என்று கூறுதல்கூடாது. அவர் நமக்கு ஒவ்வொரு பிறவியிலும் உடலைக் கொடுத்து, உயிரை அதில் புகுத்தி, உலகத்திலுள்ள பலவகைப் போகப் பொருள்களையும் கொடுத்து, பேருபகாரம் செய்கிறார். இதனால் பயன் பெறுகிறவர்கள் நாமேயல்லாது கடவுளல்ல. மேலும், அவர் நமக்கு ஒவ்வொரு பிறவியிலும், இந்த உலகம் என்னும் பள்ளிக்கூடத்தில் அனுபவமாகிய பாடம் போதிக்கின்ற உபாத்தியாயராகவும் இருந்து, நமக்கு அறிவைப் புகட்டி வருகிறார். இப்படி அனுபவ பாடம் படிப்பதும், அறிவு பெறுவதும் நாமேயல்லாது கடவுளல்ல. இன்னும் அவர் நமக்கு வைத்தியநாதராக இருந்து, நமது அறியாமையாகிய நோயை நீக்குவதற்காக இனிப்பு மருந்தாகிய இன்பத்தையும், கசப்பு மருந்தாகிய துன்பத்தையும், அவரவர் தேவையறிந்து கொடுத்து வருகிறார். இதனால் அவர் பக்ஷபாதமுடையவர் ஆகார். ஓர் அரசன், குடிகளின் நடத்தைக்குத் தக்கபடி அவர்களுக்குப் பலவித தண்டனைகளும் பலவித பரிசுகளும் தருவது பட்சபாதமான செயலன்று.

ஒரு சிலர், மனிதரைப் படைத்தவர் கடவுளேயாதலால், மனிதரின் கெட்ட குணஞ் செயல்களுக்கும் அவரே பொறுப்பாளி அல்லவா? என்றும் கேட்பதுண்டு. கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை. அவை அநாதியாய் உள்ளவைகளே. பற்பல உடல்களையும், அவை உலவுவதற்குரிய உலகத்தையும், அதில் பற்பல பொருள்களையும் படைத்து அவற்றில் அவ்வுயிர்களை வாழ வைத்து, ஒரு நியதிப்படி அவைகளின் குறைகளைப் போக்கி, அவற்றின் அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதுதான் அவர் செய்யும் உபகாரம். இம் முறையில்தான் கடவுள், படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய கிருத்தியங்களையும் நம் பொருட்டாகச்

செய்து வருகிறார்; தம் பொருட்டாக அன்று.

இவ்வாறு எம் மனிதனாலும் செய்ய முடியாத பேருபகாரத்தை நமக்குச் செய்து வரும் ஆண்டவனிடம் நாம் என்றும் பெருநன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும். அவனைச் சிந்தித்து வந்திக்க வேண்டும். அவன் வகுத்துள்ள நன்னெறியில் நடந்து அவனை அடைய முயல வேண்டும்.

கடவுளை எந்தப் பெயர் சொல்லியும் வழிபடலாம். அவரவர் வழிபாட்டின் தரத்துக்கு ஏற்ப நற்பயன் அவரவர்களுக்குக் கிடைக்கும். 'அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து' இருக்கின்ற அவ்விறைவனைச் சிறந்த குருவினிடத்திலும் கண்டு வழிபடலாம். ஆலயத்திலுள்ள திருவுருவங்களிலும் ஆன்மார்த்த பூசைக்கு உரிய வடிவங்களிலும் வழிபடலாம். ஆண்டவனுக்குப் பிறர் கூறும் பேர்களைப் பழித்தல் பாவமாகும்.

உயிர்களிடம் காணப்படும் 'நான்' என்ற முனைப்பு, 'எனது' என்ற மமதை காமம், குரோதம், லோபம், பொய், கொலை, களவு முதலிய குற்றங்கள் எல்லாம் உயிர்களைப் பிணித்துள்ள அறியாமையிலிருந்து கிளைப்பனவே. தன்னல ஆசை, கோபம், பகை போன்ற குறைபாடுகள் இல்லாமல் பிற உயிர்களுக்கு இதம் (நன்மை) செய்தல் புண்ணியம். அவற்றுக்கு அகிதம் (தீமை) செய்தல் பாவம். இதை ஆன்மாக்கள் உணர்தற்காகத்தான், ஆண்டவன் நியதிப்படி, புண்ணிய பாவச் செயல்கள் அவைகளுக்கு முறையே இன்பமும் துன்பமும் விளைக்கின்றன. பிறருக்குச் சம்பந்தம் இல்லாமல் தனக்குத்தானே செய்து கொள்ளும் புண்ணிய பாவங்களும் உண்டு.

பிறர் நமக்குத் தரும் இன்பத்தையோ துன்பத்தையோ நாம் அனுபவிக்கும் போதுதான், நாம் பிறருக்குச் செய்யும் காரியங்கள் எப்படி அவர்களுக்கு மகிழ்ச்சியையோ துக்கத்தையோ விளைக்கின்றன என்பதை நாம் நன்றாக உணர முடிகிறது.

"பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின், தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்" என்பது தெய்வ நியதி. இதனை யாவரும் உணர வேண்டும். குற்றவாளிக்குத் தண்டனை விதித்தலும் நன்மை செய்தோர்க்குப் பரிசளித்தலும், நீதியையும் உலக நல வளர்ச்சியையும் நாடும் ஆட்சியின் பண்புகளாகும்.

புண்ணிய செயல்களை, தெய்வத்தை நோக்கிச் செய்வன என்றும், உயிர்களை நோக்கிச் செய்வன என்றும் இரு வகைப் படுத்திக் கூறுவதும் உண்டு. தெய்வ வழிபாடு, மன்னுயிர்க்கு அன்பு என்னும் இவ்விரண்டையும், நல்லோர் யாவரும் இயன்ற அளவு நாள்தோறும் வளர்த்து வருதல் அவசியம்.

பணமிருந்தால் புண்ணியம் செய்ய முடியும் என்று எண்ணுவது தவறு. புண்ணியம் தேடுதற்குப் பணம் அத்தியாவசியமல்ல. நல்ல மனந்தான் முதன்மையான தேவை. மனத்தால்—வாக்கால்—காயத்தால் புண்ணியத்தைப் பெரிய அளவில் தேடிக் கொள்ளல் கூடும். "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்றனர் ஆன்றோர். மனம் திருந்த வேண்டுமானால், எல்லா உயிர்களிடத்திலும் கருணை காட்டும் அன்புக் கடலாகிய ஆண்டவனைப் போற்றிப் புகழ்ந்து பூசித்துவர வேண்டும். அப்போது, நமது மனம் திருந்துவதோடு, இறைவன் உயிர்களிடம் காட்டும் கருணையும், அவனிடம் நாம் கொள்ளும் அன்பும் நம் உள்ளத்தில் பிரகாசிக்கும். எனவே, மக்கள் வாழ்க்கையின் முதன்மையான தேவை அன்பு என்னும் உண்மையை அனைவரும் உணர்வார்களாக! நன்மையே கடைப்பிடித்து, புண்ணிய செயல்களையே புரிந்து, மக்கள் இகபர சௌபாக்யங்களை எய்துவார்களாக!

ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி

இவ்வருஷம் ஆவணி மீ 10உ புதன் கிழமை தினம் ஸ்ரீ ஜயந்தி புண்யகாலம் வருகிறது. அதற்கு எட்டு நாட்கள் முன்போ பின்போ ஸ்ரீ பாகவதத்தின் அர்த்தானுசந்தானம் செய்ய அபிப்பிராயமுள்ளவர்கள் ஸ்ரீ மடத்துக்கு எழுதினால் தமிழ் அர்த்தத்துடன் பாகவத கதையை சங்க்ரஹமாய் நிரூபிக்கும் பாகவத சதுச்சதி என்னும் கிரந்தம் அனுப்பப்படும். சௌகர்யமுள்ளவர்கள் தபால் செலவுக்காகக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு நான்கு அணா ஸ்டாம்பு அனுப்பலாம்.

மானேஜர்

ஸ்ரீ சங்கராச்சார்யார் மடம்

22—7—1959

நாம்பல், பூனமல்லி வழி, செங்கல்பட்டு ஜில்லா

தானுவதியின் திட்டம்

அன்று காலை எட்டு மணி சுமாருக்கு மரகதத்தம்மாள் வீட்டில் அடுப்படியில் சமையல் செய்து கொண்டிருந்தாள். இப்பொழுதெல்லாம் அவளுக்குக் காலை நேரத்தில் ஒரே நெரிபடும் வேலை. ஆறு மணிக்கு முன்பே ஆற்றுக்குச் சென்று குளித்து நீர் எடுத்து வரவேண்டும். உடனே அடுப்பு பற்றவிட்டு முதலில் காப்பி தயாரிக்க வேண்டும். சுந்தரம் பதினொரு மணிக்கெல்லாம் சாப்பிட்டு விட்டு வேலைக்குப்போக வேண்டியிருந்ததால் அவன் காலையில் வெறும் காப்பி மட்டுமே பருகுவான். ஆனால் புஷ்பவனம் பிள்ளைக்கோ காலையில் எட்டு மணிக்கு முன்பு பலகாரம் சாப்பிட்டுப் பழக்கம். மகனுக்காக அந்தப் பழக்கத்தை மாற்றிக் கொள்ள அவரால் முடியவில்லை. நடுப் பகல் உணவை அவர் மெதுவாகப் பன்னிரண்டு, ஒரு மணிக்குத்தான் சாப்பிடுவார். அது வரையில் வெறும் காப்பியைப் பருகி

டால் பொழுது போகாது. போதாக் குறைக்கு வீட்டுக் கொல்லையில் காய் கறித் தோட்டம் வேறு இருந்தது. அது அவளுடைய ஒழிவு நேரம் முழுவதையும் எடுத்துக் கொண்டு விடும்.

அப்படிப்பட்டவளுக்கு இப்பொழுது வீட்டு வேலைகளில் அலுப்புத் தட்டிற்றென்றால், அது வயதின் முதிர்ச்சியை ஒட்டிய இயலாமையால் இல்லை. தன் வீட்டுக்குத் தன்னைப் போல் பரபரவென்று காரியங்களைச்செய்யும் மருமகள் ஒருத்தி வந்து, விரைவில் தனக்கு இந்த வேலைகளிலிருந்து விடுதலை அளிப்பாள் என்று அவள் அந்த நாளுக்காக ஆவலுடன் காத்திருந்தாள். அதற்கு ஓர் எல்லை கட்டிக் கூட வைத்திருந்தாள், அதாவது மகனுக்கு வேலை கிடைக்கும் வரையில். வேலை கிடைத்தது. எதிர் பாராதபடி அவனுக்கும் தங்களுக்கும் பிடித்தமான பெண்ணும் கிடைத்தாள். ஆயிற்று, இன்னும் இரண்டு மாதமோ,



கண்கள் உறங்காவோ?


வீட்டு இரட்டதும் முடியாதிருந்தது. ஆகையால் முதலில் மகனுக்கு வெறும் காப்பி, பிறகு கணவருக்கும் தனக்கும் காப்பி, பலகாரம், பிறகு பதினொரு மணிக்கு முன் மகனுக்குச் சாப்பாடு, இப்படியாக நடுப் பகலில் தங்கள் சாப்பாடு முடியும் வரையில் அவளுக்கு அடுக்கு அடுக்காகக் காரியங்கள் இருந்து கொண்டே யிருந்தன.

என்னவோ தெரியாது, இப்பொழுதெல்லாம் மரகதத்தம்மாளுக்கு வீட்டு வேலைகளைச் செய்யவே பிடிக்கவில்லை. "மரகதத்தம்மாளா? அவங்களுக்கு வீட்டை விட்டு வெளியே வர நேரம் எங்கே இருக்குது? வீட்டிலே இருக்கிறது மூணே மூணு பேரு. அதிலே வருசத்தில் முக்கால்வாசி தான் மகன் ஊரிலே இருக்கிறதில்லை. அவங்க புருசன் டெண்டாட்டிக்கு ரெண்டு வேளை பொங்கித் தின்ன என்னதான் இப்படி விழுந்து விழுந்து வேலை செய்ய இருக்குதோ!" என்று அவளைப் பற்றிய பேச்சு எழும்போது கிராமத்துப் பெண்டிர் வியப்பார்கள். ஆனால் மரகதத்தம்மாளுக்கோ என்றால், அதைத் தூக்கி இதில் போட்டு, அங்கே பெருக்கி, இங்கே மெழுகி இப்படி ஏதாவது செய்துகொண்டே இருக்காவிட்

ஒரு மாதமோதான் நமக்கு வேலைத் தொல்லையெல்லாம் என்று அவள் களித்திருந்த போது, மகனும் கணவரும் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டித் திருமணத்தைத் தள்ளிப் போட்டது அவளுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்து விட்டது. அதுதான் அவளை இப்போது வீட்டு வேலைகளில் முன் எப்போதும் இல்லாதபடி சலிப்படைய வைத்தது.

அன்று கணவரும் மகனும் அவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னதற்காக அவள் திருமண ஏற்பாட்டைத் தள்ளிப் போட இணங்கினாள். ஆனால் பிறகு அதற்குச் சம்மதித்தது தவறு என்று அவளுக்குத் தோன்றியது. 'என் மகன் என்ன படிச்சவன் இல்லையா? இங்கே வேலை போனால் அவனுக்கு வேறு வேலையே கிடைக்காமலா போகும்? கிடைக்காட்டித்தான் என்னவாம்? என் மகன் ஒண்ணும் அப்படி வேலை செய்துதான் பிழைக்கணுமின்னு இல்லையே!' என்று அவள் எண்ணினாள். வேலை போய் விட்டால் வீட்டுக்கு வருகிற பெண்ணைக் குறை கூறுவார்கள் என்ற சுந்தரத்தின் காரணம் இப்பொழுது அவளுக்குச் சரியாகப் படவில்லை. 'ஊர்க்காரங்களுக்கு என்ன? அவங்க எதுக்குத்தான் எக்காளமும்

ஏடாசியும் பேசுவாங்க. அதை யெல்லாம் நாம் காதிலே போட்டுக்கிடாமல் இருந்துட் டாப் போகுது. இதுக்காகக்



மாயாவி

கல்யாணத்தைத் தள்ளிப் போடுவாங்களா? அவங்க ளுக்கு எப்பவுமே மகன் சொல் றதுதான் வேத வாக்கு. அட, போனுப் போகுது. ஆறு மாசமோ ஒரு வருசமோதானே, அவன் போக்குப்படி விட்டுப் பிடிப்போமின்னு அவனும் அந்த வீணுவும் பழகிக்கிட் டிருக்கிறதைப் பார்த்தால் பயமாக இருக்குது!' என்றெல்லாம் அவள் அல்லற்பட்டாள்.

வீணுவுடன் சுந்தரம் பழகுவதையா வது ஒரளவு குறைக்க வேண்டுமென்று கருதிய அவள் மகனிடம் சாடை மாடை யாகச் சொல்லிக்கூடப் பார்த்தாள். ஆனுல் சுந்தரம் அவள் பேச்சுக்களைக் காதிலே போட்டுக்கொள்ளவே இல்லை. வேலைக்குப் போகும் நேரம் தவிர மீதி நேரமெல்லாம் வீணுவுடன்தான் சுற்றிக் கொண்டிருந்தான்.

அதிலும் அன்று மரகதத்தம்மாளின் கலக்கம் சிறிது அதிகமாகி விட்டிருந்தது. அதற்குக் காரணம், என்றுமில்லாதபடி சுந்தரம் இன்று அவளை எதிர்த்துப் பேசி விட்டான். அதுவும் எந்த விஷயமாக அவள் கவலையும் கலக்கமும் கொண்டிருந் தாளோ, அதே விஷயமாக!

சாதாரணமாக இதர குடும்பங்களில் பிள்ளைகளோ பெண்களோ, 'அம்மா-பிள்ளை' 'அம்மா-பெண்'ணாகத் தான் இருப்பார்கள். அதாவது தாயிடமிருந்து தான் அவர்களுக்கு அதிகமான செல்லம் கிட்டும். தந்தையிடம் நேரில் சொல்லிச் சாதித்துக் கொள்ள முடியாத காரியங்களை அவர்கள் தாயின் வழியே அவருக்கு எட்டவிட்டு, அவளுடைய சிபாரிசின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளுவார்கள். ஆனால் இவ்வீட்டில் அம்முறை தலைகீழாக இருந்தது. சுந்தரம் 'அப்பா பிள்ளையே'யன்றி 'அம்மா-பிள்ளை' இல்லை. புஷ்பவனம் மகனின் போக்குக்கெல்லாம் விட்டுக் கொடுப்பவர். செல்லம் கொடுப்பவர். மரகதத்தம்மாள் அவனிடம் கண்டிப்பாக இருப்பாள். ஆகையால் குழந்தைப் பிராயந் தொட்டே சுந்தரத்துக்கு அப்பாவைவிட அம்மாவிடம்தான் பயம் அதிகம். அவளை எதிர்த்துப் பேசுவதென்றால் அவனுக்கு நடுக்கம்தான். அப்படி இருந்தவன் இன்று படபட வென்று அவளை எடுத்தெறிந்து பேசி விட்டான்.

ஒரு சிறிய விஷயத்தில்தான் அது ஆரம்பமாயிற்று. தினந்தோறும் மகனுக்கு ஏழரை மணிக்கெல்லாம் காப்பி தயாரித்துக் கொடுத்து விடுவாள், மரகதத்தம்மாள். ஆனால் இன்று சிறிது நேரமாகி விட்டது. காலையில் ஆற்றுக்குப் போயிருந்தபோது அங்கே குளிக்க வந்திருந்த அண்டை வீட்டுக் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி மயங்கி விழுந்து விட்டாள். மற்றப் பெண்டிருடன் அந்தப் பெண்ணுக்குத் தேவையான உதவிகளைச் செய்து விட்டு மரகதத்தம்மாள் வீடு திரும்பியபோது மணி ஏழரைக்கு மேல் ஆகிவிட்டது.

வீட்டுக்கு வந்து பார்த்ததும் சுந்தரம் அடுப்பை மூட்டிக் காப்பிக்குத் தண்ணீர் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா, நான் வருகிறதுக்குள்ளே அப்படி என்னடா தலை போகிற அவசரம்?" என்று அவள் கேட்டாள்.

"வேலை இருக்கு, அம்மா!" என்று முணுமுணுத்தான் சுந்தரம்.

"என்னடா வேலை? ஆசுபத்திரிக்குப் போய் அந்தப் பொண்ணு வைத்தியத்துக்கு வந்தவங்களைப் பார்க்க முடியாமல் கூத்து அடிச்சுக்கிட்டிருக்கிற வேலை தானே! அதுக்குச் சித்தெ மெதுவாப் போனால்தான் என்ன, குடியா மூழ்கிப் போயிடும்?" என்று கேட்டாள்.

"அவள் வேலையைக் கெடுக்க ஒன்றும் நான் அங்கே போகவில்லை, அம்மா! அப்படித் தப்பாக நினைத்துக் கொள்ளாதே. நான் போறதினாலே அவளுக்கு எவ்வளவோ உதவியாகத்தான் இருக்கு."

"ஆமாம் உதவியோ, உபத்திரவமோ? அந்தப் பொண்ணை இப்படி விடாமல் சுத்திக்கிட்டு இருக்கிறது உனக்கும் நல்லதில்லை; அவளுக்கும் நல்லதில்லை. ஏண்டா! அது ஆகாமப் போன பொண்ணு; அதுகூடச் சுத்திக்கிட்டு இருந்தால் ஊர்க்காரங்க நாலும் பேச மாட்டாங்களாடா; உனக்கு ஏண்டா சொன்னு விளங்குதில்லை?"

"எல்லாம் விளங்கித்தான் இருக்கு. நீ சும்மா இரு. உங்கள் பட்டிக்காட்டுப் பெண் பிள்ளைகளுக்கே தொட்டதற்கெல்லாம் சந்தேகந்தான்."

"நீயும் பட்டிக்காட்டிலே தாண்டா பிறந்தே, வளர்ந்தே, இப்போ இருக்கவும் இருக்கிறே. அதை மறந்துடாதே, நினைப்பிலே வைச்சுக்கிடு."

"இந்தப் பட்டிக்காட்டு பழக்க—வழக்கங்களையெல்லாம் குப்பையிலே கொண்டு கொட்டு, அம்மா! எனக்கு வேண்டாம். நாங்க படிச்சவங்க. அந்தக் கணக்கிலே நடந்து கொள்கிறோம்."

"நீங்க நடந்துக்கிடுவீங்கடா. ஆனால் ஊர்க்காரங்க எங்க தலையையில்லா போட்டு உருட்டுவாங்க."

"எதுக்காக அவர்கள் உங்கள் தலையைப் போட்டு உருட்டணும்?"

"உங்களைப் பெற்றதுக்காகடா 'படிச்சவங்க படிச்சவங்கன்னு பழக விட்டுட்டு, இப்போ பரதவிக்கிறாங்க பாருங்க' என்ற சொல்லுக் கேட்க வைச்சுடாதேடா சுந்தரம்!"

தான் செய்யத் துணிந்திருந்ததையே தாய் கூடாது என்று கூறத் தொடங்கியதும், சுந்தரத்துக்கு அவளுடன் பேசவே பிடிக்கவில்லை. "போ அம்மா, போ. உனக்கும் ஒரு வேலை இல்லை; உங்க ஊர்க்காரங்களுக்கும் ஒரு வேலை இல்லை. நானும் வீணாவும் பழகுவதற்கு யார் தடை போட்டாலும் நான் லட்சியம் செய்ய மாட்டேன். நீயானாலும் சரி; உங்க ஊர்க்காரங்களானாலும் சரி" என்று அவன் வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப் பேசி விட்டு அங்கிருந்து வேகமாகப் போய் விட்டான்.

அவன் காரை எடுத்துக் கொண்டு வீணாவின் ஆஸ்பத்திரிக்குப் போனபின் புஷ்பவனம் பலகாரம் சாப்பிட அடுக்களைக்கு வந்தார். அவருக்குப் பலகாரத்தைத் தட்டில் எடுத்து வைத்துவிட்டு, "கேட்டீங்க இல்லே, உங்க மகன் பேசிட்டுப் போன பேச்சை. எல்லாம் நீங்க கொடுக்கிற இடந்தான்!" என்று முகத்

ஸாண்டோஸ்

காப் ஸிரப்

இருமலுக்கு இதமளிக்கிறது

இருமல்—ஜலதோஷ நிவாரணமாக, இயற்கை யன்னை அளித்தருளிய வைத்திய மூலிகைகளுள் மிகவும் கைகண்ட மூன்று மூலிகைகளில் இருக்கும் அதே சத்துக்கள், விஞ்ஞான முறையில் ஒன்றுசேர்த்த நவீன மருந்தே ஸாண்டோஸ் காப் ஸிரப்.

தொண்டையிலுள்ள இரணவீக்கத்தை சட்டென்று கண்டித்து இதமளிப்பதற்கான மூலிகை பாபாவேர் ஸோம்னிவேரோம்; கட்டிப்போன கபத்தைக் கரைத்து வெளியேற்றிவிட உதவுவதற்கான மூலிகை ஸெபலிஸ் இபெகாகுவான்ஹா; மூச்சடைப்பு வேதனையை அதிவிரைவில் தணித்துவிடுவது எபேத்ரா என்ற 'இளைப்பாற்றும்' சக்தியுள்ள மூலிகை;—ஆகிய மூன்று சத்துக்களும் இதில் இணைந்துள்ளன.

அதனால்தான் ஸாண்டோஸ் காப் ஸிரப், டாக்டர்கள் குறித்துக் கொடுக்கும் மருந்தாக விளங்குகிறது. மேலும், செர்ரிப் பழம் போன்ற அதன் இனிப்பை குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர்.

ஸ்விஸர்லந்து நாட்டு ஸாண்டோஸ் ஆராய்ச்சி சாலையின் மருந்துச் சரக்கு.



SANDOZ

லைஸென்ஸ் பெற்று, ஸாண்டோஸ்ப்ரொடக்ட்ஸ்ப்ரைவேட் லிமிடெட் கம்பெனியினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

SCS.P. 2-50 TM.

தைத் தோளில் இடித்துக் கொண்டாள் மரகதத்தம்மாள்.

" நான் கொடுத்த இடம் ஒண்ணும் இல்லே. நீ உலகத்தைப் புரிஞ்சுக்கிடலே, அவ்வளவுதான் " என்று சிரித்துக் கொண்டே சொன்னார் புஷ்பவனம்.

" சிரிப்பாப் போச்சாக்கும் ஒங்களுக்கு இந்த விசயம்."

" பின்னே என்ன மரகதம்? அவன் தலைக்கு மேலே வளர்ந்துட்ட பிள்ளே. அவன்கிட்டே போய், அப்படி நடந்துக் கிடாதே, இப்படி நடந்துக்கிடாதேன்னு சும்மா சும்மா நச்சரிச்சுக்கிட்டே இருந்தியானா? அவனைப் பாலூட்டுற பிள்ளை கணக்கிலே அடக்கி ஆளப் பார்த்தியானா?"

" பின்னே அவனை அடக்கி ஆளாமல், நல்லது பொல்லாதது சொல்லாமல் பிரியம்போலே கெட்டலைய விட்டுடணும் என்கிறீங்களா?"

" இதோ பாரு, நீ பேசற பேச்செல்லாம் இருபது வருசங்களுக்கு முன்னாடி பேச வேண்டிய பேச்சு. இந்தக் காலத்திலே பிள்ளைகள் பெற்றவங்களுக்கு ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் கண்ட இடத்திலே பொண்ணைக் கட்டிக்கிட்டு வந்து நிற்கிறாங்க. அப்படியெல்லாம் செய்யாமல் இவன் கலியாணத்துக்குக் கொஞ்சம் பொறுத்துக்கிடுங்கன்னு சொன்னானேன்னு சந்தோசப் பட்டுக்கிட்டிருக்கேன். இவன் என்னடான்னா....?"

" அதை நானுந்தான் ஒத்துக்கிட்டேனே. இப்போ அந்தப் பேச்சை யாரு பேசினாங்க? சும்மா அந்த ஆகாமப் போன பொண்ணோட சுத்திக்கிட்டு இராதேடான்னு சொன்னதுக்கில்லா என் விசயத்திலே தலையிட நீ யாரு என்கிற கணக்கிலே பேசிட்டுப் போறான்!"

" ஆமாம்! நானுந்தான் கேட்கிறேன், அவன் விசயத்திலே தலையிட நீ யாரு? மகன் தப்பு வழியிலே போறான்னாக் கண்டி. நான் ஏன்னு கேட்கலே. நாலு எழுத்துப் படிச்ச அதுகள் ஒன்னாக் கூடிப் பேசிக்கிட்டிருக்குது. நீ உடனே அது கூடாதின்னியானா எவனுக்குத் தான் கோபம் வராது?"

" நீங்க எப்பவும் ஒங்க மகன் கட்சி தான். எனக்கு என்ன வந்தது? நாளைக்கு ஊர் சிரிக்கும்படியா ஏதாச்சும் நடந்தால் நீங்கதான் தலையிலே துணியைப் போட்டுக்கிட்டுப் போகும்படியா ஆகும். ஆமாம், இப்பொவே சொல்லிட்டேன்."

"அதெல்லாம் என் மகன், என் ரத்தத்திலே பிறந்த பிள்ளை, ஒருபோதும் நான் தலையிலே துணியைப் போட்டுக்கிடும் படியான காரியத்தைச் செய்துட மாட்டான். நீ வாயை மூடிக்கிட்டு இரு" என்று கூறி விட்டுப் பலகாரத்தை முடித்துக் கொண்டு வெளியே போய்விட்டார் புஷ்பவனம். அவருக்கு மகன்மீது அத்தனை நம்பிக்கை. ஆனால் அந்த நம்பிக்கையை அவன் குழி தோண்டிப் புதைக்க முனைந்திருக்கிறான் என்பதை அவர் எப்படி அறிவார்?

மரகதத்தம்மாளுக்கும் மகன் மீது நம்பிக்கை இல்லாமல் இல்லே. ஆனால் அவள் பயந்தது வீணாவுக்காகத்தான். எப்பொழுது விதவையான பெண் ஒருத்தி வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்காமல் படிப்பு என்றும் தொழில் என்றும் கிளம்பி விடுகிறாளோ, அப்பொழுது அவள் தனக்கு மறுவாழ்வு தேடிக் கொள்ளவும் துணிவாள் என்பது அவள் கருத்து. வீணா மறுவாழ்வு தேடிக் கொள்ளட்டும்: அதைப்பற்றி மரகதத்தம்மாள் சிறிதும் கவலைப்படவில்லை. ஆனால் அவள் தேடும் அந்த மறுவாழ்வில் தன் மகனும் பங்கு கொள்ளக் கூடாதே என்றுதான் கவலைப்பட்டாள். ஆகையால் மகனுக்கு உடந்தையாகக் கணவரும் பேசி விட்டுப் போனது அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'என்ன செய்யலாம்? எப்படித் தன் மகன் அவளோடு நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்கலாம்?' என்று அவள் ஆலோசனை செய்தவாறு சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தபோதுதான், அவளுடைய தவிப்புக்குத் தண்ணீர் வார்க்க வந்தவன்போல் அங்கே வந்து சேர்ந்தான் தாணுவதி.

சுந்தரமும் விசாகம் வீணாவைச் சுற்றி வந்து கொண்டிருக்கையில் தாணுவதி மட்டும் சும்மா இருந்துவிடுவானா? அவன் அவளை வெறுமே சுற்றிக்கொண்டிருக்கக் கூட விரும்பவில்லை. கிட்டே நெருங்கிக் கையைப் பிடித்துக் கொண்டு, "மரியாதையா என்னைக் கலியாணம் கட்டிக்கிறியா, இல்லையா?" என்று இரண்டிலொன்று கேட்டுத் தெரிந்து கொண்டு விடக்கூட விரும்பினான். ஆனால் சாமியைப் பூதம் காத்துக் கொண்டிருப்பது போல், இரண்டு பூதங்கள் வீணாவைக் காத்து அவளைக் கிட்டே நெருங்க விடாமற் செய்து வந்தன.

வீணாவைத் தனியே சந்தித்துத் தன் ஆசை முழுவதையும் கொட்ட அவனுக்கு இரண்டு இடங்களில்தான் வாய்ப்பு இருந்தது. ஒன்று, அவனுடைய கேசவபுரத்து ஆஸ்பத்திரியில்; மற்றொன்று, புங்களூற்று டிஸ்பென்சரியில். அவளுடைய வீட்டில் அவன் அதைச் செய்ய முடியாது. ஏனென்றால் அங்கே சச்சிதானந்தம் இருந்தார்.

தைலம்மாள் இருந்தாள்; அந்தக் குட்டி மாலாவும் இருந்தது.

ஆனால் ஆஸ்பத்திரியிலும் டிஸ்பென்சரியிலுமோ, சுந்தரமும் அந்த வடநாட்டானும் முறை வைத்து அவளைக் காவல் புரிந்து வந்தனர். "பாவிப் பயலுகள்! ஒரு நிமிசமின்னு ஒரு நிமிசம்கூட அங்கிட்டு இங்கிட்டுப் போக மாட்டேங்கறாங்களே!" என்று அவன் வருந்தினான். பாவம், எத்தனை நாட்கள் அவன், சுந்தரம் ஆஸ்பத்திரியை விட்டு எப்பொழுது போகப் போகிறான் என்று தன் வீட்டுத் திண்ணையே கதியாகக் காத்துக் கிடந்திருக்கிறான். எத்தனை நாட்கள் புங்கனூற்றுக்கு வண்டி கட்டிக் கொண்டு போய் அந்த வடநாட்டான் ஓர் ஐந்து நிமிஷமாவது டிஸ்பென்சரியை விட்டு வெளியே போய்த் தொலைய மாட்டானா என்று ஏங்கி இருந்திருக்கிறான்! அது சாத்தியமில்லை என்று கண்டதும், அவன் ஏதோ சாக்கு-போக்கு ஏற்படுத்திக் கொண்டு ஆஸ்பத்திரிக்கும் டிஸ்பென்சரிக்கும் சென்று அந்தப் 'பயல்'களிடம் ஏதாவது கதைகட்டி வெளியே அனுப்பி விடலாமென்று முயற்சி செய்து பார்த்தான். ஆனால் அவர்களோ தாணுவதியின் தலையைக் கண்டதுமே கொதித்து எழுந்து அவனை வெளியே அனுப்பி விட்டுத்தான் நின்றனர். "அந்த விசயத்திலே நம்ம புஷ்பவன மாமா மகனுவது கொஞ்சம் தேவலாம். வாய் வார்த்தையாகச் சொல்லித்தான் போகச் சொன்னான். ஆனால் அந்த வடநாட்டுக்காரப் பயல் இருக்கானே, அவன் கராபுரான்னு பேசிக்கிட்டு என்னைக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளவில்லா வந்துட்டான்! சுத்த முரட்டுப் பயல் அவன். அவன் கிட்டே கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் நடந்துக்கிடணும். இல்லாட்டிப் பேனை நசுக்கிற கணக்கிலே நசுக்கிப் போடுவான்" என்று எண்ணிக் கொண்டான் தாணுவதி.

ஆகையால் இப்பொழுது அவன் சுந்தரத்தை வீணாவின் ஆஸ்பத்திரிப் பக்கமே வராமல் செய்ய வேறொரு திட்டம் வகுத்துக் கொண்டு, அதை நிறைவேற்றவே மரகதத்தம்மாளிடம் வந்தான்.

அடுக்களையிலிருந்த மரகதத்தம்மாள் தாணுவதியின் குரல் கேட்டதும் கூடத்துக்கு வந்து, "வாங்க, தம்பி! சுகந்தானா? மாமாவைப் பார்க்க வந்தீங்களா? அவங்க இப்போத்தான் வயக்காட்டுப் பக்கம் போனாங்க. சாயங்காலமா வாங்க. வீட்டிலே இருக்கச் சொல்லுறேன்" என்றாள்.

ஆனால் இப்பொழுது தாணுவதி புஷ்பவனம் பிள்ளையைப் பார்க்க வரவில்லையே. ஆகையால் அவன், "இல்லே, அத்தை! ஒங்களைப் பார்க்கத்தான் வந்தேன். மகனுக்கு வேலை ஆன விசயத்தைச் சொல்லவே இல்லையே! என்ன, சோலிக்கெல்லாம் ஒழுங்காப் போய்க்கிட்டு இருக்கிறானா?" என்று பேச்சுக் கொடுத்தவாறு தரையில் சம்மணமிட்டு உட்கார்ந்து விட்டான்.

"ஆமாம்! இவன் வேலைக்குப் போகலைன்னுதான் நாங்க அழுதுக்கிட்டிருந்தோமாக்கும். இருக்கிறதைத் தின்னுக்கிட்டு வீட்டோடு இருந்தாப் போதாது? என்னவோ அவனுக்குத் தொப்பியும், சராயும் போட்டுக்கிட்டு, 'தாட்டுப் பூட்டு'ன்னு பேசிக்கிட்டு உத்தியோகம் பண்ணணும் என்கிற ஆசை. பண்ணிட்டுப் போகட்டும். வேண்டாண்டான்னா கேக்கவா போறான்?"

"அது சரிதான், அத்தை! ஆனா சின்ன பிள்ளை பாருங்க, சும்மா சும்மா எல்லாத்துக்கும் ஆசைப்படும். பிள்ளை ஆசைப்படுதேன்னு எல்லாத்துக்கும் விட்டுக் கொடுத்துக்கிட்டே இருக்க முடியுமா அத்தை? சொல்லுங்களேன், நான் சொல்றது நெசந்தானே?"

"ஆனால், இது நியாயமான ஆசைதானே தம்பி! எப்போ சுந்தரத்தையும் படிக்க வச்சுட்டோமோ, அப்போ அது வேலைக்குப் போகணுமின்னு ஆசைப்படத்தானே செய்யும்?"

"தம்பி வேலைக்குப் போகட்டும், வரட்டும் அத்தை. அதிலே அவனுக்கு மட்டுமா பெருமை? நமக்கு எல்லோருக்கும் பெருமைதான். நான்கூட இப்போ அணைப்பக்கம் போனேன்னு நிமிர்ந்து தான் நடந்து போறேன். எங்க ஊர்க்காரப் பிள்ளை இன்ஜினியராக இருக்கிற பெருமை எனக்கு இருக்காதா, என்ன?

ஏங்க, சொல்லுங்களேன். நான் சொல்றது நெசந்தானே!''

"ஆமாம்! ஆமாம்!"

தானுவதி வழக்கம்போல் சட்டென்று தட்டைத் திருப்பினுன். "என்ன ஆமாம் போட்டுட்டீங்க! தம்பி ஊர்க்காரங்களுக்கும் அவனைப் பெத்தவங்களுக்கும் பெருமை கொடுக்கட்டும், சரி. ஆனு, சிறுமைப்படும்படியான காரியங்களுக்குப் போகக் கூடாதில்லே?''

மரகதத்தம்மாளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. "என் மகனு, ஊர்க்காரங்க சிறுமைப்படும்படியாக நடந்துக்கிட்டான்! எப்போ தம்பி? எங்கே? என்ன செய்தான்?'' என்று அவள் பதறியபடியே கேட்டாள்.

"அட, நீங்க என்ன அத்தை, ஒரு வார்த்தை சொல்லுறத்துக்குள்ளே பதறிட்டீங்க? தம்பி அப்படியெல்லாம் இலேசாத் தப்புவழியிலே போயிடுவானு? ஆனு பாருங்க, இந்த வயசு இருக்குதே, அதுதாங்க இருபத்தைஞ்சுக்கும் முப்பதுக்கும் உள்ளே இருக்கிற வயசு, இது ஆம்புள்ளேகளுக்கும் சரி, பொம்புள்ளேகளுக்கும் சரி, பொல்லாத வயசுங்க. நல்லதா ஒண்ணைக் கண்ணிலே கண்டுட்டா அதைப் 'பக்'குனைப் போய்ப் புடிச்சுக்கிடத்தான் பார்க்கும். நல்லது நல்லதாகவே இருந்துட்டாப் பாதகமில்லே; ஆனுல் அது நஞ்சா இருந்தா, தடுக்கிறது நம்ம கடமையில்லேயா? ஏங்க, நான் சொல்றது நெசந்தானே?''

"விசயத்தைச் சொல்லுங்க, தம்பி!''

"நான் என்ன அத்தை புதுசாச் சொல்ல இருக்குது. எல்லாத்தையும் நீங்கதான் கண்ணுலே பார்த்துக்கிட்டே இருக்கிறீங்களே. நம்ம சச்சிதானந்த மாமா தங்கமான மனுசர். அவர் மகளும் அவரைப்போல் தங்கக்கட்டியாத்தான் இருக்கணும். ஆனு, நான்தான் சொன்னேனே, இந்த வயசு ஒண்ணு...! அதிலேயும் அது அறுத்த பொண்ணு. அதுங்கூடத் தம்பி ரொம்ப இழைஞ்சுக்கிட்டு இருக்கிறுன். இது நல்லா இருக்குதா? அவன் கலியாணம் கட்டிக்கிடப் போகிற பிள்ளை. பெரிய இடத்திலேயிருந்து பொண்ணு எடுக்க வேண்டிய பிள்ளை. ஊரிலே நாலு பேர் நாலு பேசும்படியா நடந்துக்கிட்டிருந்தால் இதுக்கெல்லாம் ஆபத்து இல்லேயா? சொல்லுங்களேன், நான் சொல்றது நெசந்தானே?''

தன்னை வருத்தி வந்த விஷயம் இப்படி வெளி ஆள் ஒருவனிடமிருந்தும் வந்ததைக் கண்டபோது மரகதத்தம்மாள் அளவு கடந்த விசனம் அடைந்தாள். 'இந்த அரைப் பைத்தியத்துக்கே அதுகள் பழகிக்கிட்டிருக்கிற விதம் வித்தியாசமாப் பட்டிருக்குதே; மற்றவங்களுக்குப்

பட்டிராதா?' என்ற நினைவுதான் அவளுக்குச் சட்டென்று அப்பொழுது ஏற்பட்டது. ஆகையால் அவள் சொன்னாள்: "நீங்க சொல்லுறது நிசந்தான், தம்பி! நாங்களும் எவ்வளவோ சொல்லிக்கிட்டுத்தான் இருக்கோம். 'அடேய்! பனைமரத்தின் கீழே நின்னு பாலைக் குடிச்சாலும் கள்ளைக் குடிச்சேன்னுதான்டா சொல்லுவாங்க. ரொம்ப இழைஞ்சுக்கிட்டு இராதே'ன்னு கெஞ்சிக்கிட்டுத்தான் இருக்கோம். ஆனால் அவன் கேட்டாத்தானே?"

"ஆங்...! கேட்கலே, பார்த்தீங்களா? அதிலேதான் விசயம் இருக்குது, அத்தை! இது ஆபத்திலே கொண்டு விட்டுடத்தான் போகுது. இந்தத் தாணுவதிச் சிங்கம் இன்னைக்குச் சொல்லுது, முடிஞ்சு வைச்சுக்கிடுங்க. ஒங்க மகன் அந்தப் பக்கமே போகாம இருக்க வழி பண்ணலே, அப்புறம் இந்தக் கேசவபுரமே ஒங்களை ஒதுக்கி வைக்கும்படியான ஆபத்து வந்துடப் போகுது."

"ஆனால் அவன் வயசு வந்த பிள்ளையாச்சே, தம்பி! சொல்லுறத்துக்கு அதிகமாக அவனை என்ன செய்ய முடியும்?"

"நல்ல கேள்வி கேட்டீங்க அத்தை! நான் இப்போ என்ன, அவன் கையிலும் காலிலும் விலங்கை மாட்டி வீட்டுக்குள்ளே பூட்டி வையுங்கன்னு சொல்லுறேன்! சாட்சிக்காரன் காலிலே விழுறத்தைவிடச் சண்டைக்காரன் காலிலே விழுங்க, அத்தை! அந்தப் பொண்ணைக் கூப்பிட்டு வைச்சு, 'உனக்கும் அவமானம்; எங்களுக்கும் அவமானம். மகன் சொன்னாக் கேட்க மாட்டேன் என்கிறான். நீதான் அவனை உன் ஆசுபத்திரிப் பக்கம் வராமப் பண்ணனும்'ன்னு சொல்லுங்க. டாக்டர் அம்மா நல்லவங்க; புரிஞ்சுக்கிடுவாங்க."

என்ன செய்வது என்று தவித்துக்கொண்டிருந்த மரகதத்தம்மாளுக்கு இது நல்ல ஆலோசனையாகப்பட்டது. அவள் அவ்வாறே செய்வதாகச் சொல்லித் தாணுவதியை அனுப்பி வைத்தாள். பிறகு அன்று நடுப்பகல் சாப்பாட்டுக்குப் பின்னர் தன் கணவர் வெளியே எங்கோ செல்லப் புறப்பட்டபோது, "ஏங்க, நீங்க போகும்போது நடுத் தெருவிலே அந்தப் பொண்ணு வீடு இருந்தாச் சித்தே அவசரமா இங்கே வந்துட்டுப் போகச் சொல்லுறீங்களா? அடுத்த வீட்டுக் கற்பகம் இன்னைக்கு ஆற்றங்கரையிலே தலை சுற்றி விழுந்திரிச்சில்லே. அது என்ன காரணமின்னு விளைவைக் கொண்டு பார்க்கச் சொல்லணுமாம். மறந்துடாம வரச் சொல்லுங்க" என்று சொல்லி அனுப்பினாள். (தொடரும்)





அசுத்தங்கள்




அதை நினைக்கும்போதே பயமேற்படுகிறது! ஏனென்றால் ஈக்கள் அசுத்தங்கள், மலம் முதலான அழுக்குகளைப் புசித்து வளர்ந்து உங்கள் ஆகாரங்களில் வந்து உட்காருகின்றன. அந்த ஆகாரங்களை நீங்கள் உண்ணும்போது, வாந்திபேதி, ரத்தபேதி, சீதபேதி, டைபாய்ட், முடக்குவாதம் முதலிய ரோகங்களை உண்டுபண்ணக் கூடிய கிருமிகள் உங்கள் உடலில் சென்று கொடிய நோய்க்கு நீங்கள் ஆளாகிறீர்கள்—மரணமும்கூட உண்டாகலாம். வியாதிகளைக் கொண்டுவந்து உங்கள் வீட்டில் துக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னால் இவ்வித பூச்சிகளைக் கொன்றுவிடுங்கள்.



ஈக்கள்

உணவு





இப்பூச்சிகளை டுகோன் பெய்ட்டினால் கொல்லுங்கள்!

ஈக்களையும், கரப்பான் பூச்சிகளையும், மற்றுமுள்ள ஜந்துக்களையும் கொல்லுகின்ற ஒரு பிரத்தியேகச் சேர்மானப் பொருள் டுகோன் பெய்ட்டில் இருக்கிறது...டுகோன் பெய்ட் மிகச் சிக்கனமானது—பூச்சிகள் கூடுமிடங்களில் கொஞ்சம் டுகோன் பெய்ட்டை உபயோகித்தாலே போதுமானது. டுகோன் பெய்ட் அபாயமற்றது.

டுகோன்
பெய்ட்

BAYER

TB-3

எளிதில் உபயோகிக்கக்கூடியது	தூவுவது சுலபம்	பயனளிக்கிறது
 சரமான ஒரு துண்டு கடுதாசியில் டுகோன் பெய்ட்டைத் தூவுங்கள்.	 அக்கடுதாசியை பூச்சிகள் கூடுமிடங்களில் வையுங்கள்.	 பூச்சிகள் டுகோன் பெய்ட்டைச் சாப்பிட்டு, சில நிமிடங்களில் இறந்துபோய் விடுகின்றன.

டுகோன் பெய்ட் பதிவு செய்யப்பட்ட ஒரு பேயர் தயாரிப்பு—
சிக்கா பிரைவேட் லிமிடெட்டுக்காக தயாரிக்கப்பட்டது.
விநியோகஸ்தர்கள்: ஜப்ரீ மேனர்ஸ் அன்டு கம். பிரைவேட் லிட்., பம்பாய்


பாலாற்றில் பள்ளிகொண்டான்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

ஒரு சிறு சம்பவம் சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையில். அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது நடந்தது. ஒரு பெரிய உண்மையையே விளக்குகிறது. விவேகானந்தர் என்னும் நரேந்திரன் பத்துப் பன்னிரண்டு வயதில் ஒரு சிறு பள்ளியில் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் வகுப்பில் உபாத்தியாயர் பூகோளப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். நரேந்திரன் அப்போது கண்களை மூடி தியானத்தில் இருப்பவன் போல் இருந்தான். இதை உபாத்தியாயர் பார்த்து விட்டார். 'அடே! பாடம் நடக்கும் போது தூங்கவா செய்கிறாய்?' என்று சொல்லிப் பையன் நரேந்திரனைக் கோபித்துப் பிரம்பால் இரண்டு அடியும் கொடுத்து விட்டார். பாடம் முடியும் தறுவாயில் உபாத்தியாயர் பையன்களிடம் கேள்விகள் கேட்டார். விழித்தகண் விழித்த படியே இருந்து பாடம் கேட்ட பையன்கள் எல்லாம் கேள்விக்கு விடை சொல்லக் கூடாமல் 'திரு,திரு' என்று விழித்தார்கள். நரேந்திரனிடம் கேள்விகள் கேட்டபோது, அவன் ஒவ்வொரு கேள்விக்கும் 'டக்,டக்' என்று பதில் சொன்னான். ஐயோ! இந்தப் பையன் பாடம் கேட்கும்போது தூங்குகிறான் என்று அடித்து விட்டோமே என்று வருந்தினார் உபாத்தியாயர். உபாத்தியாயருக்கு அன்று ஒரு பெரிய உண்மை விளங்கிற்று. மனத்தை ஒருநிலைப் படுத்திப் பிறர் சொல்லும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளக் கண்களை அகல விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. கண்களை மூடி, அறிவைச் செலுத்திக் கூர்மையாக விஷயங்களைக் கிரகித்தல் வேண்டும் என்று அறிந்தார். நரேந்திரர் பின்னர் எவ்வளவு கூர்த்த மதியுடையவனாக வளர்ந்தார் என்றும், அரிய தத்துவங்களை யெல்லாம் உலக மக்களுக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்று, விவேகானந்தர் என்னும் பெயருக்கு ஏற்ப விளங்கினார் என்பதும் நாம் அறிந்ததே.

இந்தச் சம்பவம் ஒரு பெரிய தத்துவத்தையே விளக்குகிறது எனக்கு. 'பாற்கடலிலே பரந்தாமன் படுத்துக் கிடக்கிறான்; அரவணையிலே அறிதுயில் கொள்ளுகிறான் என்றெல்லாம் காத்தற் கடவுளான விஷ்ணுவைக் கவிஞர்கள் கற்பனை பண்ணி யிருக்கிறார்களே, அது சரிதானா?' என்று எண்ணினேன் நான். எண்ணிறந்த ஜீவராசிகளை யெல்லாம் காத்தளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள பரந்தாமன், சும்மா கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு, பூலோகத்திலும் வைகுண்டத்திலும் நடக்கும் காரியங்களை யெல்லாம் கண் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தால் அவர் காரியம் உருப்படுமா என்ன? ஆதலால்தான் கண்ணை மூடி அறிதுயிலில் அமர்ந்து மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாம் என்ன என்ன என்று அறிவதிலே தம் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறார். இப்போது விளங்குகிறது அரவணை கிடந்து அவர் ஏன் அறிதுயில் கொள்ளுகிறார் என்று.

இவனையே 'குன்றினில் நின்று, வானில் இருந்து நீள் கடல் கிடந்த ஆதிதேவன்' என்று **திருமழிசை யாழ்வார்** பாடுகிறார். இவன் பள்ளி கொள்வதற்குத் தேர்ந்தெடுத்த இடம் கடல், ஆறு, அரங்கம் (ஆற்றின் நடுவிலே உள்ள தீவு). தமிழ் நாட்டிலே இந்த அரங்கன் துயில் கொள்கின்ற இடங்கள் கிட்டத்தட்ட முப்பதுக்கு மேல் இருக்கும். அவைகளில் அதிமுக்கியமானவை இரண்டே. ஒன்று **உத்தர ரங்கம் என்னும் பள்ளி கொண்டான்**. மற்றொன்று **தென்னரங்க மென்னும் திருஅரங்கம் (ஸ்ரீரங்கம்)** ஆம் அவன் 'தென் சொல் கடந்தான் என்றும் வட சொற் கலைக்கு எல்லை தேர்ந்தவன்' ஆயிற்றே. சமீபத்தில் மகா சம்ப்ரோக்ஷணம் செய்து பிரசித்தி பெற்ற ஸ்ரீரங்கநாதனை எல்லோரும் அறிவோம். இன்று நாம் காணப் போவது அவனை அல்ல; உத்தர ரங்கநாதனை. எல்லா இடத்திலும் அவன் பள்ளிகொண்ட பரந்தாமனாகவே இருந்தாலும், இந்தத் தலம் ஒன்றிலே தான் அவன் பள்ளிகொண்டான் என்ற பெயரோடு விளங்குகின்றான். இந்தப் பள்ளி கொண்டான் கோயில் கொண்டிருக்கும் தலமே பள்ளிகொண்டான் (பள்ளிகொண்டை என்று மக்கள் அழைத்தாலும்) என்று பெயர் பெற்றிருக்கிறது. இந்தப் பள்ளிகொண்டான் வட



ஆண்டாள்

ஆர்க்காடு மாவட்டத்திலே பாலாற்றின் கரையிலே உள்ள ஒரு சிறிய ஊர். இங்கு வந்து இவன் பாயை விரித்துப் பள்ளி கொள்வானேன்? இதைத் தெரிந்து கொள்ள உத்தர ரங்க மகாத்மியத்தையே ஒரு புரட்டுப் புரட்ட வேண்டியதுதான். புரட்டினால் கிடைக்கும் ஒரு கதை. மாமியார் மருமகள் சண்டை உலகம் தோன்றுவதற்கு முன்னமேயே தோன்றியிருக்கிறது. செல்வம் கொழிக்கும் மாமியான லக்ஷ்மிக்கும், கல்வி நிரம்பிய மருமகளான சரஸ்வதிக்குமே ஒரு பலப் பரீக்ஷை, தங்களில் யார் பெரியவர் என்று. இந்தப் பிரச்னைக்கு முடிவு காணும் பொறுப்பு பாவம் அந்த அப்பாவி பிரமன் தலையில் விழுந்திருக்கிறது. அவர் எவ்வளவுதான் மனைவிக்கு அடங்கி நடப்பவர் ஆனாலும், உண்மையை ஒளிக்க வில்லை. இந்த நில உலகில், கல்வியை விடச் செல்வத்துக்குத்தானே மதிப்பு. ஆகலால் லக்ஷ்மியே பெரியவள் என்று தீர்ப்புக் கூறுகிறார். கோபம் பிறக்கிறது சரஸ்வதிக்கு. புருஷனிடம் கோபித்துக் கொண்டு பூலோகத்துக்கே வந்து விடுகிறாள். சஹ்ய பர்வதத்தில் வசிக்கிறாள். பிரம்மாவுக்கோ தனிமை. சத்யவிரத க்ஷேத்திரத்தில் ஒரு அசுவமேத யாகம் செய்ய முனைகிறார். சரஸ்வதி அந்த யாகத்தை அழிக்க விரைகிறாள். நதி உருவில் பெருக்கெடுத்து யாகசாலைக்குள் புக எண்ணுகிறாள். பிரம்மா தம் தந்தை மகாவிஷ்ணுவிடம் சரண் அடைகிறார். முன்னமேயே அம்ரீஷ முனிவர் தவத்துக்கு இரங்கி பூலோகத்தில் அவருக்குக் காட்சி தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார் அவர். ஆகவே, முனிவருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றவும் பிரமனது வேண்டுகோளைப் பூர்த்தி பண்ணவும் விரைந்து இப்பூமிக்கு இறங்கி, பெருக்கெடுத்து வரும் ஆற்றுக்குக் குறுக்கே, சங்கு சக்ரதாரியாய், ஆதிசேஷசயனராக, தெற்கே தலையும் வடக்கே காலுமாகப் பள்ளி கொண்டு விடுகிறார். பாலாறுப் பெருகி

வெண்ணெய் உண்ணும் கண்ணன்



வந்த சரஸ்வதியை மேற்கொண்டு போக விடாமல் தடுத்து விடுகிறார். அம்பரீஷருக்கும் சேவை சாதிக்கிறார். கல்வியறிவால் ஏற்படும் அகங்காரத்துக்கு அணை போட்டு அறிவை வளரச் செய்யும் பெருமானாக, இப்பள்ளி கொண்டான் உத்தர ரங்கத்திலே பள்ளி கொள்கிறார்.

இந்த ஊர் சென்று இந்தப் பெருமானைத் தரிசிக்கச் சென்னையிலிருந்து பங்களூர் அல்லது கோவை செல்லும் ரயிலில் ஏறலாம். குடியாத்தம் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கித் தெற்கு நோக்கி இரண்டு மூன்று மைல் வந்து பாலாற்றையும் கடந்தால் அந்த ஆற்றின் தென் கரையிலுள்ள கோயிலுக்கு வந்து சேரலாம். காரிலேயே செல்லக் கூடியவர்கள் வேலூருக்கு மேற்கே பதினைந்காவது மைலில் ஊருக்குள் திரும்பி வடக்கே பார்த்துச் சென்றாலும் கோயிலுக்குப் போய்ச் சேரலாம். சந்நிதித் தெருவில் உள்ள தேரடியில் இருக்கும் சிறிய திருவடி கோயிலில் அஞ்சலி ஹஸ்தராக இருக்கும் ஆஞ்சநேயரை வணங்கி விட்டு மேலும் மேற்கே நடந்தால் திருவந்திக் காப்பு மண்டபம் கோபுர வாசல் எல்லாம் கடந்தால் கோயிலுக்குள் செல்லலாம்.

கோபுரம், கோயில், மண்டபம், சந்நிதி எல்லாவற்றையும் பார்த்தால், இந்த வடரங்கர், தென்னரங்கரைப் போல் அவ்வளவு செல்வந்தர் இல்லை என்று தெரியும். இவருடைய வருஷ வருமானம் சர்க்கார் கொடுக்கும் தஸ்திக் பணம் ரூ. 1103—2—3 தான். ஏதோ கொஞ்சம் தோப்பும் பன்னிரண்டு செண்டு நன்செய் நிலமுமே இவருடைய ஸ்தாவர சொத்து. ஆதலால் இங்கு அர்ச்சகர்கள் கெடுபிடி எல்லாம் இருக்காது. அர்ச்சகருக்கே ஆள் அனுப்பித்தான் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கும். அர்ச்சகர் வந்தபின் பள்ளி கொண்டான் சந்நிதிக்குப் போகுமுன் ஒரு சிறு மாடத்தில் மேற்கே தலையும், கிழக்கே காலும் நீட்டிக் கொண்டு ஒரு சிறு ரங்கநாதர் இருப்பார். **கஸ்தூரி ரங்கர்** என்ற இவரை அங்குள்ளவர்கள் **'சோட்டா ரங்கநாதர்'** என்று நமக்கு அறிமுகம் செய்து வைப்பார்கள். விஷயம் என்ன என்று விசாரித்தால், முகமதியர்கள் படையெடுத்துக் கோவில்களை இடித்துக்கொண்டு வந்தபோது, இந்தத் தலத்தில் உள்ளவர்கள், பள்ளி கொண்டானைக் காப்பாற்றக் கர்ப்பக்கிருஹத்துக்குமுன் ஒரு பெரிய சுவர் எழுப்பி, அவருக்குப் பதிலாக இந்தச் சிறிய ரங்கநாதரை உருவாக்கி வெளியே கிடத்தி யிருக்கிறார்கள். கோயிலுக்குள் நுழைந்த மகமதியர் 'இவர்தானு உங்கள் சாமி? இது என்ன சோட்டா சாமி?' என்று சொல்லி விட்டுத் திரும்பி விட்டார்களாம். ஆம், மோட்டா ரங்கநாதரைக் காப்பாற்றிய சோட்டா ரங்கநாதர் தம்மையுமே காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். ஆதலால் இன்னும் இங்கு இவருக்கே அக்ரஸ்தானம்.

கர்ப்பக்கிருஹத்தில் இருக்கும் பள்ளி கொண்டான் (மோட்டா ரங்கநாதன்தான்) நல்ல ஆஜானுபாகு, கிரீடம் குண்டலம், திருமண் காப்பு, வேட்டி, உத்தரீயம் எல்லாம் சாத்திக் கொண்டு திருவனந்தாழ்வான் என்னும் ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டிருக்கிறார். ஸ்ரீதேவி அவரது கையைத் தாங்கப் பூதேவி

திருவடிகளை வருடிக் கொண்டிருக்கிறாள். நாபிக் கமலத்தில் நான்முகன்; எல்லாம் நல்ல சிலை உருவில். அரவணையில் அறிதுயில் கொள்ளும் இந்த அரங்கனைத் தொழுதுவிட்டு வெளியே வந்து கோயிலை ஒரு சுற்றுச் சுற்றலாம். தாயார் சந்நிதியில் விசேஷம் ஒன்றும் இல்லை. ரங்கநாதனுக்கு ஏற்ற ரங்கநாயகி அங்கிருந்து பக்தர்களுக்கு அருள் புரிந்து கொண்டிருக்கிறாள்.

இந்தக் கோயிலுக்கு வரும் கலை அன்பர்கள் எல்லாம் கண்டு தொழ வேண்டிய சந்நிதி மூன்றும் கோயிலின் மேலப்பிராகாரத்திலே தான் இருக்கிறது. அவைதாம் **ராமன், கண்ணன், ஆண்டாள்** முதலிய மூவருக்கும் ஏற்பட்ட தனித்தனிக் கோயில்களாகும். கோயில் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் முன் மண்டபத்தோடு கூடிய ஒரு சிறிய கோயிலில் சீதாலக்ஷ்மண சமேதனாக ராமன் நல்ல சிலை வடிவில் நின்று கொண்டிருக்கிறார். மூன்று நான்கடி உயரமுள்ள இச் சிலாவடிவங்கள் மிகவும் அழகு வாய்ந்தவை. 'அல்லியாண்டு அமைந்த மேனி அழகனும்' அமைந்த ராமன், லக்ஷ்மணன், சீதை மூவரையுமே பார்க்கிறீர்கள் பக்கத்தில் உள்ள படத்திலே. ராமாயண பாராயணம் செய்து, கௌசலையாள் ராமனைத்தாலாட்டி, தசரதனும் ராமன் வனம் புகப் புலம்பி, கரதூஷண யுத்தத்தில் ராமனுக்கு உதவிபுரியத் தண்டெடுத்து அவை ஏதும் ராம கதையருளும் **குலசேகர ஆழ்வாரையும்** இந்தச் சந்நிதியிலேயே கண்டு விடலாம் செப்புச் சிலை உருவில்.

ராமர் சந்நிதியை விட்டுக் கொஞ்சம் வடக்கே நகர்ந்தால் அங்கொரு சிறு கோயில். அங்கே வெண்ணெய் உண்ணும் கண்ணன். 'கண்ணன் என்னும் கருந் தெய்வ'க் காட்சிக்கு ஏங்கி நின்றவர்கள் எல்லாம் இங்கு கல்லிலும் செம்பிலும் கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கும் கண்ணனைக் கண்டு வணங்கலாம். கண்ணன் உதடுகளிலே தவழும் குறுநகை நம்மைப் பரவசப்படுத்தும். வெண்ணெய் உண்டவாயனாக ரங்கநாதனைக் கண்டு வேறொன்றையும் காணாதவர் அல்லவா **திருப்பாணாழ்வார்**. அவரையுமே பார்க்கலாம், இந்தச் சந்நிதியிலே. குழந்தைக் கண்ணனைப் பிரிந்து இன்னும் கொஞ்சம் வடக்கே நகர்ந்தால் ஆண்டாள் சந்நிதி. கல்லுருவிலும், செப்பு வடிவத்திலும் உருவாகியிருக்கும் ஆண்டாள் வடிவத்தில், அவள் வடிவழகு அத்தனையையும் கண்டுவிட முடியாது. அதற்கு இன்னும் கொஞ்சதூரம் நடக்க வேண்டும். திரும்பவும் பள்ளி கொண்டான் சந்நிதியில் நுழைந்து திருவுண்ணாழிப் பிராகாரத்தையே ஒரு சுற்றுச் சுற்ற வேண்டும். அங்கு செல்லும் போது அர்ச்சகர் 'இங்கு கர்ப்பக்கிருஹம், பிரணவ வடிவத்திலே அமைந்திருக்கிறது. இந்தப் பிரணவ வடிவமான கர்ப்பக்கிருஹம், இந்த உத்தர ரங்கத்திலும், அந்தத் திருவரங்கத்திலும் தவிர வேறு இடங்களில் இல்லை' என்றெல்லாம் சொல்லுவார். அதற்கெல்லாம் செவி சாய்க்காது இருட்டில் கொஞ்சம் உற்று நோக்கினால், இரண்டு சிலா உருவங்களைப் பார்க்கலாம். ஒன்று ஆண்டாள்; மற்றொன்று கண்ணன். திறமையான சிற்பி செதுக்கிய



சீதா லக்ஷ்மண சமேத ராமன்

பொற்சிலைகள் அவை. இந்தச் சிலைகளை மட்டும் காண்பதற்கென்றே ஒரு நடை போகலாம் இந்தக் கோயிலுக்கு. அத்தனை அழகு வாய்ந்தவை. அந்த நல்ல சிலை உருவங்களையே பார்க்கிறீர்கள் பக்கத்தில் உள்ள படங்களிலே.

கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் இருந்து கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இருந்த **விக்ரம சோழன்** காலத்துக்கு முன்னாலேயே இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. விக்கிரம சோழன் கீழ் சிற்றரசனாக இருந்த **குலசேகரச் சாம்புவராயன்** செய்துள்ள தானங்களைப் பற்றியும் பல்லவ மன்னன் நந்திவர்மன் மகன் **அம்பவர்மன்** செய்துள்ள தானங்களைப் பற்றியும் கல்வெட்டுகள் அங்கே உண்டு. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே இந்த ஊருக்கே நந்திவர்ம சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் வழங்கியதாகவும் அறிகிறோம். இவை யெல்லாம் இக் கோயில் நிரம்பப் புராதனமானது என்பதைக் காட்டும். இந்தக் கோயில் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்படவில்லை என்பர். அரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் பெருமானைப் பற்றிய பாடல்கள் திவ்ய பிரபந்தத்தில் எவ்வளவோ உண்டு. என்றாலும் பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டு கூறும் பாடல் ஒன்றே ஒன்றுதான்.

உடுத்துக் களைந்த நின்
பீதக ஆடை உடுத்து,
கலத்தது உண்டு
தொடுத்த துழாய் மலர்
சூடிக் களைந்தன சூடும்
இத்தொண்டர்களோம்,
விடுத்த திசைக் கருமம்
திருத்தித் திருவோணத்
திருவிழவில்
படுத்த பைந்நாகணைப்
பள்ளி கொண்டானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

என்று பாடியவர் பெரியாழ்வார். நாமும் பள்ளிகொண்டானுக்குச் சென்று பள்ளி கொண்ட பெருமானுக்குப் பல்லாண்டு பாடிக் கொண்டே திரும்பலாம் தானே!



96

ஊக்கம் என்பது ஒரு சாதாரணத் தமிழ்ச் சொல். ஆயினும் அது இன்னது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

" மனம் மெலிதலின்றி வினை செய்வதில் கிளர்ச்சி உடைத்தாதல் ஊக்கம் " என்றார் பரிமேலழகர்.

உடையர் எனப்படுவது
ஊக்கம் அஃது இல்லார்
உடையது உடையரோ மற்று.

உண்மைச் சம்பத்து ஊக்கம் ஒன்றே. அது இல்லாதவர் வேறு எந்தப் பாக்கியம் பெற்றிருந்தும் அது இல்லை போலவே.

* * *

உள்ளம் உடைமை
உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.

ஊக்கம் நிறைந்த உள்ளமே உள்ளம். அத்தகைய உள்ளத்தை அடைந்திருப்பதே நிலையான செல்வம். பொருட் செல்வம் எல்லாம் நிலையற்றது. அதை நம்பிப் பயனில்லை. ஊக்கமே மற்றப் பொருட் செல்வத்தைப் பயன்படுத்தும் ஆற்றல் தரும்.

* * *

உள்ளுவது எல்லாம்
உயர்வு உள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

எண்ணும் எண்ணங்கள் எல்லாம் உயர்ச்சி எண்ணங்களாகவே இருக்க வேண்டும். அந்தக் கருத்துக்கள் நிறைவேறாமற் போனாலும் அதற்காகச் செய்த முயற்சியே ஒரு நன்மையாகும். முயற்சியினால் மனம் பயனடைந்து விடுகிறது. பயனை வெற்றியுடன் அடைந்தாலேதான் என்பது இல்லை!

தள்ளினும் தள்ளாமை நீர்த்து— எண்ணிய பயன் அடையாமற் போயினும் அடைந்ததோடு ஒக்கும்.

நீர்த்து—தன்மையது.

* * *

ஆக்கம் அதர்வினாய்ச்
செல்லும் அசைவுஇலா
ஊக்கம் உடையான் உழை.

இடுக்கண்களைக் கண்டு தளராமல் ஊக்கத்தோடு முயல்பவனைப் பொருள் தானே வழி கேட்டுச் சென்று சேரும். நமக்கு வேண்டியவர் நம்மைப் பார்க்க வரும்போது நாம் முன்சென்று எந்த வழியில் வருகிறார் என்று விசாரித்து அந்த வழியில் சென்று எதிர்கொள்வது போல். நல்ல முயற்சியுடையானை இலட்சுமி தானே முன் வந்து வரவேற்பாள். இது ஊக்கத்தின் பெருமை.

* * *

வெள்ளத்து அனைய
மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

நீரில் வளரும் பூக்களின் தாள் நீர் மட்டத்துக்கு வளரும். அதற்குமேல் செல்லாது. அதைப்போல் நம்முடைய ஊக்கத்தின் அளவு நம்முடைய உயர்ச்சி.

'உள்ளம்' ஊக்கத்தின் பொருளில் வந்தது. முயற்சியில் வெற்றி பெற்றே தீருவேன் என்கிற உறுதியான எண்ணம். அந்த எண்ணத்தில் உறுதி எம்மட்டோ அம்மட்டு பயன்.

* * *

பொறியின்மை யார்க்கும்
பழியன்று அறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி.

பிறவியிலேயே மதிநுட்பம் அல்லது உடல் வலிமை இல்லாதிருந்தால் யாரும் உன்னைக் குற்றம் சொல்ல மாட்டார். ஆனால் அறிவு அடைந்தும் தக்க முயற்சியோடு எடுத்த காரியத்தைச் சாதிக்காமற் போனால் பழிப்பார்கள்.

பொறி இன்மை : பயனைத் தருவதாய விதி இல்லாமை என்று பரிமேலழகரும் மணக்குடவரும் உரை சொல்லுகிறார்கள்.

'மெய் வாய் கண் முதலியன குறைந்தது' என்று பரிதியார் உரை.

பொறி என்னும் சொல் விதி என்ற பொருளில் சிலப்பதிகாரம். சீவக சிந்தாமணி இந் நூல்களில் வந்திருப்பதைத் தமிழ் 'லெக்ஸிகனி'ல் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பொருளையே பரிமேலழகரும் மணக்குடவரும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

51. ருக்மிணி கல்யாணம்

அந்தணன் உரைத்த மொழியைக் கேட்டுக் கண்ணன் மகிழ்ந்தான். அவருடைய இரு கைகளையும் பற்றிக் கொண்டான். “நானும் ருக்மிணியிடம் என் மனத்தை இழந்து விட்டேன். அங்கு நடப்பதெல்லாம் இங்கு நான் அறிவேன். ருக்மிணியைத் துவாரகைக்கு அழைத்து வருவேன்” என்று வாக்களித்தான்.

பிறகு தன் தேர்ப்பாகனை விளித்து, “விரைவில் தேரைப் பூட்டு” என்று கட்டளையிட்டான். நான்கு குதிரைகள் பூட்டிய தேருடன் சாரதியும் தயாராக வந்து முன்நின்ருன். அந்தணனும் கண்ணனும் ஒரே இரவில் விதர்ப்ப தேசத்தை அடைந்தனர்.

பீஷ்மகன் தன் மகனை மீறி ஒன்றும் செய்யமுடியாது. ருக்மிணியைச் சிசுபாலனுக்கே மணம் செய்து கொடுப்பதாய்த் தீர்மானம் செய்தான். வேண்டிய சடங்குகளை ஆரம்பித்தான். ஊரைத் தோரணம் கட்டி, அலங்காரம் செய்தான். தெருவெல்லாம் நீர் தெளித்து நிர்மலமாய் இருந்தது. வீடுகளில் அகில் புகை கமழ்ந்தது. ஆங்காங்கு நல்லாடை உடுத்து ஆடவரும் பெண்டிரும் நடமாடிக் கொண்டிருந்தனர். நீராடிப் புத்தாடை உடுத்து நகை அணிந்து நிற்கும் மணமகளுக்கு அந்தணர் மறை ஓதிக் காப்பு கட்டினார்கள். ஓமத்தை வளர்த்துத் தீமைகளை அகற்றினார்கள். அரசனும் அவர்களுக்குப் பொன், வெள்ளி, சர்க்கரையோடு கலந்த என்ன, அன்னம் எல்லாம் தானம் செய்தான். சேதி தேசத்து மன்னன் தமகோஷனும் (மணமகனின் தந்தை) இவ்வாறே எல்லாச் சடங்குகளையும் சரிவர நடத்தினன். பிறகு தமது பரிவாரங்களுடன் விதர்ப்ப தேசத்துக்கு வந்தான். பீஷ்மகன் அவனை எதிர்கொண்டு அழைத்து உபசாரம் செய்து தனி விடுதியில் அமர்த்தினன். சிசுபாலனுக்கு நண்பரான சால்வன், ஜராஸந்தன், தந்தவக்தரன், விதூரதன் முதலிய அரசரும் அங்கு வந்து கூடினார்கள். நம் எல்லோரையும் எதிர்த்துப் போர் புரிந்தன்றோ கண்ணன் ருக்மிணியை மணந்து கொள்ள வேண்டும், பார்ப்போம் என்று இவர் அலை வரும் மார்தட்டிக் கொண்டார்கள். கண்ணன் தனித்துச் சென்றதை அறிந்த பலராமனும் ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக் கொண்டு விதர்ப்ப தேசத்துக்கு விரைந்தார்.

தூது சென்ற அந்தணன் திரும்பி வரவில்லையே என்று எண்ணி ருக்மிணி ஏக்கம் கொண்டாள். “ஓரிரவே பாக்கியிருக்கிறது. செந்தாமரைக் கண்ணன் இன்னும் வரவில்லையே. அந்தணனையும் காணேம். என் மீது ஏதாவது குற்றம் குறையைக் கண்ணன் கண்டானே? இல்லை, வரும் வழியில் தடங்கல் ஏற்பட்டதோ? ஏன் என்னைப் படைத்த பிரமனும், முக்கண்ணனும், மலைமகள் அன்னையும் கைவிட்டு விட்டார்கள்?” இவ்விதம் மனம் கலங்கித் துயர் தாங்காது ருக்மிணி நீர்மல்கும் கண்களை மூடிக் கொண்டாள். ஆனல் அந்தச் சமயம் அவளுடைய இடது தொடையும், கையும், கண்ணும் துடித்தன. என்ன ஆச்சரியம்! அப்பொழுதே அந்தணனும் அங்கு வந்து சேர்ந்தார். அவருடைய மலர்ந்த முகம் கண்டு உரையாடு முன்னரே மங்கை மகிழ்ந்தாள். கண்ணன் வந்திருப்பதை அந்தணர் தெரிவித்தார். கண்ணன் கொடுத்த வாக்குறுதியையும் கூறினார். பரிசளிக்கப் பண்டம் காணது அந்தணரை ருக்மிணி வணங்கினள். செல்வத்துக்குச் செல்வியான ஸ்ரீதேவி வணங்கி நின்ருல், பின் வேறு என்ன வேண்டும்?

கண்ணனும் பலராமனும் தமது மகளுடைய திருமணத்தைக் காண வந்திருப்பதாகக் கேட்டு பீஷ்மகன் அவர்களை வரவேற்று உபசரித்தான். வேறு விடுதியில் அவர்களுக்கு வசிக்க இடம் அளித்தான். கண்ணன் வரவைக் கேட்ட ஊரார் திரண்டு வந்து திருமேனியைக் கண்டு களிப்பெய்தினர். “ருக்மிணிக்குத் தகுந்த மணாளன் இவனின்றி மற்றவர் யாருமில்லை. எமை ஆளும் ஈசன் இவ்விருவருக்கும் மணம் செய்வித்து அருள வேண்டும்” என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்.

இவ்வாறு நகரத்து மக்கள் உரையாட, ருக்மிணி தனது குல ஒழுக்கத்துக்கு

இணங்கிப் போர்வீரர் பலர் சூழ அரண் மனையினின்று ஊருக்கு வெளியே இருந்த அம்பிகையின் ஆலயத்துக்குப் புறப்பட்டாள். சேடிகள் மங்கையோடு பின்சென்றனர். வாத்தியங்களின் ஒலி திசையெங்கும் நிரம்பியது. பல பெண் கள் நைவேத்தியங்களைக் கையில் ஏந்திச் சென்றார்கள். அந்தணப் பெண்மணிகள் சந்தனமும் பூமாலையும் ஆடையும் அணி யும் எடுத்துப் பின் வந்தனர். பாடகர் பாட, சூதர்கள் துதிக்க, ருக்மிணி கால் நடையில் ஆலயத்தை அடைந்தாள். அங்கு சென்றதும் கைகால்களைக் கழுவிக் கொண்டு அம்பிகையின் அருகில் சென் றாள். வயது முதிர்ந்த அந்தண மாதர்கள் ருக்மிணியை விதிப்படி பவானியை வணங்கச் செய்தார்கள்.

"அன்னையே! மங்கலம் மிகுந்து தலைவனோடிருக்கும் உன்னைத் திரும்பத் திரும்ப வணங்குகிறேன். கண்ணனைக் கணவனாக நான் அடைய நீ அருள வேண்டும்" என்று பார்வதி தேவியை வேண்டினாள்.

பிறகு முறைப்படி பூஜை செய்து பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டாள். ரத்தினம் இழைத்த மோதிரம் பூண்ட கையால் தோழியைப் பிடித்துக்கொண்டு ருக்மிணி அன்னமென நடந்து கோவிலை விட்டு வெளியேறினாள்.

நடந்து வரும் மணமகளை வந்திருந்த வீரர்கள் கண்ணுற்றுச் செயலற்றுத் திகைத்து நின்றனர். மெல்லிய மருங் கசைய, வதனத்தில் குண்டலம் ஒளி வீச, குழல் மறைத்துப் பயம் கொண்டு நிகில் தோற்றம் வெளித் தெரிய, புன்னகை தவழும் முகத்துடன், செவ் வுதடின் சேர்க்கையிலே சிவந்த முல்லை யெனத் தோன்றும் பல் வரிசை அழ கோடு, அன்னமென அசைந்து வரும் இள நங்கையைப் பார்த்த மன்னவர் கூட்டமெல்லாம் மோகத்தில் மூழ்கி நின்றது. ருக்மிணி வெளியேறியதே தனது அழகைக் கண்ணனுக்குக் காணிக் கையாகக் கொடுப்பதற்கன்றோ? ஆகவே, ஒரு புறம் மோகமடைந்த மன்னர்கள் வில்லை நழுவ விட்டுத் தேரில் நின்று தரையில் விழ, ருக்மிணி மெல்லமெல்ல அடிவைத்து, இடது கைவிரல்களால் நெற்றி மீது விழுந்திருக்கும் குழலை அகற்றி, வந்திருக்கும் வேந்தர்களை அச்ச முடன் நோக்கினாள். அப்பொழுது அவள் கண்ணனைக் கண்ணுற்றாள்.

அச் சமயம் கண்ணன் ருக்மிணியைத் திடீரென்று கைகொடுத்துக் கருடக் கொடி பறக்கும் தன் தேரில் ஏற்றிக் கொண்டான். நரிக்கூட்டத்து நடுவே நின்று தனக்குரிய உணவைப் பறித்துச் செல்லும் சிங்கமென, பகை மன்னர் பலர் சூழ்ந்த கூட்டத்தில் கண்ணன் ருக்மிணியைத் தூக்கிச் சென்றான்.

அப்பொழுதுதான் ஜராசந்தன் முதலி யோர் விழித்துக் கொண்டார்கள். தோல்வியுற்றோம் என்று தெரிந்து கொண்டனர். இதென்ன அநியாயம்! வில்லேந்திய வீரர் குலப் புகழெல்லாம் இடையர் பறிப்பதா என்று வருந்தினர். உடனே தமது தேர்களில் ஏறிக் கண்ண னைப் பின்தொடர்ந்து சென்றனர். கண்ணன் மீது சரமாரி பொழிந்தார்கள். அச்சம் அதிகரித்து ருக்மிணி கண்ணனை லஜ்ஜையுடன் பார்த்தாள். "அஞ்சாதே! இவர்கள் இப்பொழுது அழிந்து போவார்கள்" என்று புன்னகையுடன் கண்ணன் ஆறுதல் அளித்தான். பெரும் போர் நடந்தது. கண்ணனுடைய சேனை ஆவேசத்துடன் வேற்றரசர்களை எதிர்த் தது. போராட வந்த வேந்தர்கள் முதுகு காட்டி ஓடினர். மணக்கோலம் பூண்டும் மனையாளை அடையாத சிசுபால னிடம் அனைவரும் சென்றார்கள். புவி மீது பிறந்தால் நன்மையும் தீமையும் மாறி மாறித்தான் வரும் என்று வாடி யிருக்கும் வேந்தன் மகனுக்குத் தத்துவம் எடுத்துரைத்தனர். பொம்மையென

நம்மை ஈசன் ஆட்டி வைக்கிறான்என்று ஆறுதல் அளித்தார்கள்.

"பதினேழு தடவை கண்ணனிடம் தோல்வியுற்றாலும் நான் வருந்துவதில்லையே" என்றான் ஜராசந்தன். நமக்கும் ஒரு காலம் வரும் என்று தம்மைத் தேற்றிக் கொண்டார்கள்.


ஆனால் தனது தங்கைக்கு நேர்ந்த அவமானத்தை ருக்மி மட்டும் பொறுக்கவில்லை. ஒரு சேனையைத் திரட்டிக் கொண்டு கண்ணனைப் பின்தொடர்ந்தான். "கண்ணனைக் கொன்று ருக்மிணியைத் திருப்பி அழைத்துக் கொண்டு வராமல் இந்த நகரத்துள் நான் புகமாட்டேன்" என்று பலர் முன்னிலையில் ஆணையிட்டான். கண்ணனை விரைவில் அணுகினான். "நில், நில்" என்று கூக்குரல் இட்டான். வில்லை நாணேற்றி மூன்று பாணங்களைக் கண்ணன் மீது குறி வைத்து விட்டான். "ஓமத்து அன்னத்தைக் காக்கையென எனது தங்கையைத் தூக்கிச் செல்கிறாய். ஒளிந்திருந்து மாயப் போர் செய்யும் உனது செருக்கை இதோ அடக்குகிறேன்" என்று கண்ணனை நோக்கிக் கத்தினான். கண்ணன் சிரித்தான். ருக்மியின் தேரையும் பரியையும் பாகனையும் கொடியையும் தனது பாணங்களால் அடித்து வீழ்த்தினான். புவிமீது நின்று கொண்டு ருக்மி மற்றொரு வில்லை எடுத்துக் கொண்டான். கண்ணன் அதையும் முறித்தெறிந்தான். எடுத்த ஆயுதங்களை யெல்லாம் கண்ணன் துகளாக்கினான். ருக்மியை வதம் செய்யக் கண்ணன் சித்தமாகித் தனது வாளை எடுத்தான்.

அப்பொழுது ருக்மிணி கண்ணனின் தாள்களைப் பிடித்துக் கொண்டு, துயர் மிகுந்தவளாய், "தேவதேவனே! கல்யாண குணங்கள் பொருந்திய தேவரீர் எனது உடன் பிறந்தோனைக் கொல்லலாகாது" என்று மன்றாடினாள். கண்ணன் தயைகூர்ந்து ருக்மிக்கு உயிர்ப் பிச்சை அளித்தான். ஆயினும் அவனை அலங்கோலம் செய்து துணியால் கட்டி அவமானம் செய்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பலராமன் கட்டை அவிழ்த்து, "அவமானம் வதம் செய்வதற்குச் சமானம்" என்று கூறி, ருக்மிணிக்கும் ஆறுதல் மொழிகள் பல பேசித் தேற்றினான்.

ருக்மி தனக்கு வந்த அவமானத்தைப் பொறுக்கவில்லை. நகரத்துக்குத் திரும்பாமல், வேறு இடத்தில் "போஜகடம்" என்ற ஒரு புது நகரை நிர்மாணித்து அங்கே வாழ்ந்து வரலானான்.

கண்ணன் ருக்மிணியைத் துவாரகைக்கு அழைத்துச் சென்று முறைப்படி மணம் செய்து கொண்டான். துவாரகையில் இந்தத் திருமணத்தை ஒவ்வொருவரும் தமது வீட்டில் தனித்திருவிழாவாகக் கொண்டாடினார்கள். நகரவாசிகள் மணமகனுக்கும் மணமகளுக்கும் பல பரிசுகளை வழங்கினார்கள். வீடுதோறுமொரு தோரணமும், வீதிதோறுமொரு கொடியுமாய்த் துவாரகை அழகோடு விளங்கியது. மணத்துக்கு விருந்தினராக வந்த மன்னர்களின் மதயானைகள் மதத்தைப் பெருகவிட்டு வழிகளை நனைத்தன. பல குலத்தோர் ஒன்று கூடிச் சந்தித்துப் பேசி ஆனந்தம் அடைந்தனர். வந்தவர் அனைவரும் கண்ணன் ருக்மிணியைத் தூக்கிவந்த வரலாற்றைக் கேட்டு வியப்புற்றனர்.

லக்ஷ்மிதேவியின் திருஅவதாரமான ருக்மிணியோடு கண்ணனைக் கண்ணாரக் கண்டு துவாரகா நகரவாசிகள் தீராத மகிழ்ச்சியை அனுபவித்தார்கள்.



விஜயா புரொடக்ஷன்ஸ் மானேஜிங் டைரக்டர் திரு நாகிரெட்டி தமது புதல்வர் **வேணுகோபாலனின்** திருமணத்தை சென்னையில் மிகச் சிறப்பாக நடத்தினர். மணமகள் **சௌ. பத்மாவதி** விஜயா புரொடக்ஷன்ஸ் டைரக்டர் திரு ரமண ரெட்டி அவர்களின் புதல்வி.

தேன்கூடு

அத்தியாயம் 39

துண்டுக் கனவுகள்

உலகமே இருளில் ஆழ்ந்து கிடந்தது. பொழுது என்பதே புலராமல், என்றென்றும் எப்பொழுதும் எல்லாமே இந்த இருளில் ஆழ்ந்து கிடக்கலாகாதா என்று சுசீலாவின் நெஞ்சம் புலம்பியது. வேட்டையில் அடிபட்டு, குருதி வடிய விழுந்து கிடக்கும் பறவையென அவள் படுக்கையில் கிடந்தாள். கண்ணீரால் பஞ்சுத் தலையணையெல்லாம் நனைந்து விட்டது. அந்த அறையிலிருந்த பொருள்கள் ஒவ்வொன்றும் அவள் தலையைத் தூக்கினால் இழிவு செய்ய முனைந்து நிற்பதுபோல் தோன்றியது. தலையணையில் கறை படிந்த முகத்தைப் புதைத்துக் கொண்டு, கண்களில் நீர் வற்றிப் போகும் வரையில் அவள் விசித்து விசித்து அழுதாள்; அரற்றினாள்.

அவளிடம் இருந்தவற்றிலெல்லாம் எது மிக மிகச் சிறந்ததோ, எது மிக மிகப் புனிதமானதோ, எது உயிரினும் அருமையானதோ, எதற்காக எதை வேண்டுமானாலும் பணயம் வைக்கலாமோ, அதை நொடிக்கும் இமைப் பொழுதில், வலிமை குன்றிய ஒரு நிலையில், உணர்ச்சிக்கு வசப்பட்டு இழந்தது. சர்வநாசமடைந்து விட்டதை எண்ணி எண்ணி அவள் உள்ளம் ஓலமிட்டது; வேதனை தாளாமல் ஏங்கிப் புழுங்கியது. இழத்தற்கரிய மேலான பொருளைக் கண நேரத்தில் இடறித் தடுமாறி, கை தவறி உடைத்து விட்டு, பரிதாபமாய், பஞ்சையாய் விழுந்து கிடப்பதாகத் தோன்றிய போது, அடக்க முடியாத பெரும் சினம் சீறிக் கொண்டு பொங்கிவந்தது.

எதற்கும் பயனற்ற இழிந்த உடலை இன்னும் சுமந்து கொண்டிருப்பதாக அவளுக்குத் தன்மீதே அந்தச் சீற்றம் திரும்பியது. மானமின்றி, ரோசமின்றி, படித்திருந்தும் பகுத்தறிவு இன்றி எப்படி இந்தக் கேவலமான நிலைக்கு அவள் வந்தாள்? ஏன் இன்னும் இந்த உயிர் தன் கூட்டிலிருந்து பறந்து ஓடவில்லை? இந்தக் குற்றத்துக்கு அவள் மனச்சாட்சி எப்படி உடந்தையாக இருந்தது? எது அவளுடைய உணர்வை மயக்கியது? எது அவளுடைய சிந்தையைக் குரூரமாக வஞ்சித்தது?

முதலில் வேலையற்ற வேளையில் கண்ணபிரானுடைய மோட்டாரின் சத்தத்தைக் கேட்டதுமே, அவளுக்கு விவரம் புரியாத திகில் உண்டாகி விட்டது. ஏதோ நடக்கப் போகும் விபரீதம் ஒன்றுக்கு அது முன்னறிவிப்பு போலவும் தோன்றியது. இருந்தாலும் விருந்தினர்களையும், முக்கியமாக உஷாவையும் பொருட்படுத்தாமல், தன்னையே பெரிதென்று மதித்து வந்த கண்ணபிரானைக் கண்டதும் அவள் நற்பெருமையோடு ஓடி வந்து கதவைத் திறந்தாள். ஆனால் வாயிற்படியருகிலேயே அவனுடைய வேகத்தையும் பார்வையையும் கண்டு அவள் கலவரமடைந்தாள். பெண்களுக்கு மட்டுமே உரிய உள்ளுணர்வு விழித்துக் கொண்டு அவனுடைய மனநிலையைப் புரிந்து கொண்டு விட்டது. அவள் உறுதியோடுநின்றாள். அந்த உறுதியோடு கடைசி வரையிலும் இருந்திருக்கலாம். அவளுடைய இதயம் என்னும் போர்க்களத்தில் அவனிடம் வைத்த அன்புக்கும் அவனிடம் கொண்ட பயத்துக்கும் மூண்டெழுந்த போரில் அந்த அன்பே வென்று விட்டதை உணர்ந்து, அவள் உறுதி குலைந்து, செயலிழந்து போனாள். அதுவே அவளை அடியோடு வீழ்த்தி விட்டது. அவள் பேச்சற்று மூச்சுத் திணறினாள்; நினைவு தவறினாள். என்ன செய்தும் இனிமேல் எப்போதும் அழிக்க முடியாத ஒரு பிணைப்பிலே அவள் அகப்பட்டுக் கொண்டு விட்டாள். இது யாருடைய தவறு? அவளைத்தான் ஆகட்டும், இதற்கு எப்படி முழுப் பொறுப்பாளியாக்குவது?



பாய வேண்டிய இலக்குத் தெரியாமல், அவளுடையகோபம் புஸ்வாணம் போல் பின்னால் பீச்சிக் கொண்டு வந்து மறைந்து விட்டது. குற்றமோ, கொடுமையோ இதற்கு

யார்மீதும் பழியைச் சுமத்த அவள் மனம் இடம் தரவில்லை. இந்த விபரீதம் திடீரென்று நிகழ்ந்து விட்டதாக எப்படிச் சொல்ல முடியும்? அவனோடு தனியாகக் காரில் போகவும் வரவும் துணிந்த அன்றே இதற்கு வித்தூன்றியாகி விட்டது என்று அவளுக்குத் தெளிவாகப் பட்டது. பின்னர் இருவரும் கிராமத்தில் தனியாகப் பழகியதும் அந்தரங்கமான விஷயங்களை மனம் விட்டுப் பரிமாறிக் கொண்டதும், கூச்சம் தெளிந்து தொட்டுச் சீண்டி ஆடியதும் அந்த வித்துக்கு உரமாக உதவி, இன்று வினையாக விளைந்து விட்டது. இதற்கு வேளையைத் தான் எப்படி நொந்துகொள்ள முடியும்?

'இனி என்ன, இனி என்ன?' என்று இருட்டில் நடப்பவனைப் போல் நெஞ்சம் குருட்டாம் போக்கில் குமைந்தது. உறக்கம் பிடிக்காமல் அவள் படுக்கையில் புழுவைப் போல் நெளிந்தாள். அவர்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த அன்பு இந்தக் கசப்பான தொடக்கத்திலேயே முடிவடைந்து போகாது என அவளுக்கு நம்பிக்கை எழுந்தது. எல்லையற்ற துன்பத்தின் இடுக்கிலே, மனத்தளத்தின் அடியிலே ஒரு துளி இன்பம் தேங்கி ஒட்டிக் கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். அந்தச் சிறு துளியைப் பெரிய வெள்ளமாகவும் பெரும் துன்பத்தைத் துளியாகவும் மாற்றும் முயற்சியில் அவள் இப்படியும் அப்படியுமாகப் புரண்டு படுத்தாள்.

இருளிலும் அவளுடைய அககக்கண்ணெதிரே தோன்றி ஒளி வீசிய அவனுடைய விழிகளைப் பார்த்து, "இனி நீங்கள்தான் எனக்கு எல்லாம். எல்லாமே எனக்கு இனி நீங்கள்தான்!" என்று முணுமுணுத்தாள். அந்த முணுமுணுப்பிலே உள்ளத்துக்கு ஒரு பெரிய ஆறுதல் இருப்பதை அவள் கண்டாள். திரும்பத் திரும்ப அந்த வார்த்தைகளை மந்திரம்போல் உருப் போட்டுக் கொண்டே இருந்தன உதடுகள். சிறிது நேரத்துக்குப் பிறகு இதுகூட நீளமாக இருப்பதால் அலுத்துவிட்டது. வாசகம் மாறி விட்டது; "இனி நீங்களே நான்; நானே நீங்கள்!"—இது சுருக்கமாக இருந்ததுடன் திருப்தியாகவும் ஒலித்தது!

எவ்வளவு நேரம் அவள் இதை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள் என்பது அவளுக்கே தெரியாது. உதடுகள் அசைவது நின்று, உணர்வும் உறங்கிவிட்டது. அவள் அப்படியே மெய்மறந்த தூக்கத்தில் ஆழ்ந்து போனாள்.

தூங்குமுன்பு நாவிலே புரண்ட சொற்கள் உறக்கத்தில் அவளுக்கு மிகவும் துணை புரிந்தன. துண்டு துண்டாகப் பற்பல கனவுகள்—ஒன்றுக் கொன்று தொடர்பு இல்லாமல், பொருள் விளங்காமல் தோன்றிக் கொண்டே இருந்தன. துன்பமும் துர்ப்பாக்கியமும் கலந்த அந்த விபரீதமான சம்பவம் மீண்டும் தொடர்வது போன்ற அதிர்ச்சியைக் கொடுத்தன. இரு விழிகளிலும் அவனை இறைஞ்சுவது போல் பார்க்கிறான்; அவனுடைய பிடியிலே விடுபட முடியாமல் திணறுகிறாள், நிலை தடுமாறுகிறாள்; வாய் அரற்றுகிறது. துன்பம், வேதனை, துளியிலும் துளி இன்பம்!





"நீங்களே நான்!" என்கிறாள் அவள்.

"நீயே நான்!" என்கிறான் அவன்.

அவளுடைய செவிகளிலும், உள்ளத்திலும் அந்த இன்பத் துளி அருவியாகப் பெருகிப் பாய்கிறது. அமுத வெள்ளமாக இனிக்கிறது. இருந்தாலும் ஏதோ ஒரு சந்தேகம்! தெளி வின்மை!

"என்னைக் கைவிட மாட்டீர்களே! என் கையை ஊரறியப் பிடிக்கத் தவற மாட்டீர்களே!" என்று தாபத்தோடு கெஞ்சுகிறாள். தணியாத வேட்கையோடு தழுவுகிறான் அவன்.

"பைத்தியமே! ஆயிரம் பாரிஸ்டர்கள் குறுக்கே வந்தாலும் பெரியப்பா ஆயிரம் விதமாகத் தடுக்க முயன்றாலும் நானா உன்னைக் கை விட்டு விடுவேன்? உன்னை ஊரறிய, உலகறியக் கைப் பிடிக்கத்தானே நான் ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து ஓடோடி வந்திருக்கிறேன்; இதை நீ நம்பவில்லையா? இன்னுமுமா உனக்குச் சந்தேகம்?" என்று அவளைத் தேற்றுகிறான் அவன்.

"இது என்ன, யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்!" என்று அஞ்சுகிறாள் அவள்; கையைத் திமிருகிறாள்.

"பார்க்கட்டுமே! இது யாருக்குத்தான் நாளைக்குத் தெரியாமல் போய்விடப் போகிறது? எல்லாருக்கும் மேளதாளத்துடன் தெரிய வேண்டியது தானே!" என்று மீண்டும் கையைத் தன் கையிலே எடுத்துக் கொள்கிறான்.





இப்படி அந்த ஒரு ஜாமத்துக்குள் எத்தனையோ கனவுத் துண்டுகள். பாரிஸ்டர் அவனுடைய பெரியப்பாவுக்கும், அவனுடைய மாமாவுக்கும் கடிதம் எழுதுவதாக மிரட்டுகிறார். இருவருமே இதைக் கேட்டுச் சிறிது மிரளுகிறார்கள். ஆனால் கம்பியில்லாத் தந்தி மூலம் அக்கரைச் சீமையிலிருந்து செய்தி வருகிறது. அவர்களுடைய விருப்பப்படியே கல்யாணத்தை நடத்தி வைக்கப் போவதாக இருவரும் முடிவு செய்து விட்டார்களாம்.

அப்பா ! இது எத்தனை மகிழ்ச்சிகரமான செய்தி !

''ஷீலா ! பார்த்தாயா, நான் அப்பொழுதே என்ன சொன்னேன்?'' என்று ஓடி வருகிறான் கண்ணபிரான்.

'சீச்சீ ! அவர் வரும்போது இப்படியா ஆடை கலையப் படுத்திருப்பது?' என்று கனவிலேயே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள் சுசீலா.

சுசீலா கண்ணைத் திறந்து பார்க்கும் போது எதிரே யாரையும் காணவில்லை. பொழுது நன்றாகப் புலர்ந்து, அவளுடைய அறைக்குள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் கதிரவன்.

''டங்...டங்...'' என்று கடிகாரம் இன்னிசையுடன் ஒலித்தது. மணி எட்டு!

சுசீலா தனது படுக்கையை விட்டு எழுந்து ஓடினாள். போகும் போது முதல் நாள் தேதி அவளைப் பார்த்து ஏதோ கூறுவது போல் இருந்தது. அவள் சிறிது நின்று அதையே உற்றுப் பார்த்தாள். அந்தத் தேதியைக் கிழிக்கக் கையை நீட்டினாள். ஆனால் ஏதோ ஒன்று அவள் கையை இழுத்தது; கண்களைத் தேதிக்கு அடியில் குறிப்பிடப்பட்டிருந்த சிறிய எழுத்துக்கள் கவர்ந்து இழுத்தன. ''சதயம்-அமிர்த யோகம்-மரண யோகம்'' சுசீலா இந்த நட்சத்திரத்தையும் யோகத்தையும் பற்றி ஏதும் அறியாதவள். ஆனால் அந்த நாளும் நாளுக்குக் கீழ் இருந்த குறிப்பும் தன் வாழ்நாளோடு ஏதோ நெருங்கிய சம்பந்தப்பட்டவை என்று மட்டும் எண்ணினாள். அந்தத் தேதியைக் கிழித்து அதையே வெகு நேரம் கையிலே வைத்துக் கொண்டிருந்தாள்.


அதை என்ன செய்வது? புரியவில்லை அவளுக்கு. பிறகு அதைக் கிழித்து எறிய மனம் வராமல் அதை மேஜை அறையை இழுத்து அதனுள் பத்திரமாக வைத்தாள். பிறகு ஏதோ நினைப்பு வந்தது. பேனாவை எடுத்து, 'பதினொன்றரை மணி !' என்று அதனடியில் எழுதினாள். அதன் பிறகு அதை நலுங்காமல் வைத்து விட்டுப் பல் துலக்கப் போனாள்.

அவள் குளியறையில் இருக்கும்போது, வெளியே மோட்டாரின் அழைப்பு மீண்டும் கேட்டது. அவள் குளியலை முடித்துக் கொண்டு வெளியே வர முயன்றபோது, மாடிப்படிகளில் யாரோ ஏறி வரும் சத்தம் கேட்டது.


அந்த ஒலியை உணர்ந்ததும் அவள் இரு கைகளாலும் தன் முகத்தை மூடிக் கொண்டு, அந்த மறைவிலேயே நின்றாள். காதைப் பொத்திக் கொள்ள வேண்டிய அவள் கண்களைப் பொத்திக் கொள்வானேன்? குளிரால் நடுங்குவது போல் கைகளும் உடம்பும் வெடவெடவென்று நடுங்கின. தன்னைப் பார்க்க வந்திருக்கும் கண்ணபிரானுடைய கண்களில் விழிக்கவே அவள் நாணினாள்; ஒளியில் உள்ளம் கூசிக் குறுகியது.

''ஷீலா !'' கண்ணபிரானுடைய குரலே மாறியிருந்தது.

அவள் மறைவில் நின்றபடியே மௌனமாக இருந்தாள். மூன்றாவது குரலுக்குத்தான் அவள், ''ம்'' என்றாள்.

*  *

ஈரோடு மொடக்குறிச்சி திரு. எஸ். பி. சுப்பராய கவுண்டர் அவர்களது குமாரர் செஞ்சிவி எஸ். பழனிசாமி, எம்.ஏ.க்கும், பழையகோட்டை பட்டக்காரர் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார், எம். எல். ஸி; அவர்களது குமாரத்தி சௌ. சண்டிகாதேவி மங்கையர்க்கரசிக்கும் 1959 ஜூன்மீ 25ம் தேதி கோயமுத்தூரில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்.



பெங்களூர் பேட்டை திரு டி. கே. முனுசாமி செட்டியார் குமாரன் திரு டி. எம். கோபன்னாவுக்கும், சேலம் திரு. ஏ. கோபால் செட்டியார் குமாரத்தி திருமதி ஜமுனாவுக்கும் திருமணம் நடந்தேறியது. வாழ்க முனுசாமி — ஜமுனா!

"உன்னை அழைத்துப் போகத்தான் வந்திருக்கிறேன், ஷீலா! புறப்படேன் சட்டென்று!"

"இல்லை; நான் இப்பொழுது எங்கும் வருவதற்கில்லை!"

கண்ணபிரான் தான் இருக்குமிடத்தை நோக்கி வருவதை உணர்ந்ததும், "இல்லை; அங்கேயே இருங்கள்! நான் எங்கும் இப்போது வர முடியாது!" என்று சற்று உரக்கக் கூறினாள்.

அவளுக்கு அவனிடம் பேசித் தீர்க்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருந்தன. ஆயினும் அவன் முகத்தைப் பார்ப்பதற்கு முன்பாக, தனியே யோசித்துப் பார்க்க வேண்டியவை எத்தனையோ இல்லையா?

கண்ணபிரான் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் வரையில் அவள் அந்த மறைவிடத்தை விட்டு வெளி வரவேயில்லை! அவன் போய் விட்டதை அறிந்த பின்னர்தான் அவளுக்கு நல்ல மூச்சு வெளிப்பட்டது; ஆயினும் அதே சமயத்தில் உள்ளத்தில் சிறு கலக்கமும் தலை நீட்டி அவளை வாட்டியது.

அத்தியாயம் 40

பார்வையும் படங்களும்

உஷா கல்லூரியிலிருந்து வந்து வண்டியில் ஏறிக் கொண்டதுமே அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்த டிரைவர் குப்பன், "வென்னையன் தோட்டத்து வழியாகத்தானே?" என்று கேட்டான்.

"எங்கும் இல்லை; நேரே பங்களாவுக்குப் போனால் போதும்!" என்றாள் உஷா.

"அங்கே போக வேண்டாமா?"

"எனக்கு எங்கும் போக வேண்டாம்!"

வண்டி மரீனா வழியாகச் சென்று, பங்களாவுக்குப் போகும் பாதையில் திரும்பியபோது அவள் மனம் ஏனோ கசப்பாகக் கசந்தது. அங்கே ஏன் போகிறோம் என்று கூட இருந்தது. பசி தீர இளைப்பாறலாம் என்பது உண்மைதான்; ஆனால் ஏக்கம் தீர யார் வந்து அவளிடம் அன்பு பாராட்டப் போகிறார்கள்? பொன்னி ஒருத்தியைத் தவிர, வேறு யாரும் தன்னிடம் உண்மையான வாஞ்சையோடு முகம் கொடுத்துப் பேசுவதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. சொந்தப் பெற்றோர்களே வேற்றுமை பாராட்டும்போது, அவளுக்கு வேறு போக்கிடம் ஏது? வயதடைந்த பெண்கள் சொந்த அன்னையைத் தவிர வேறு யாரிடம் அந்தரங்கமாகப் பழக முடியும்? பேச முடியும், ஆறுதல் பெற முடியும்?

பாரிஸ்டரைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. அவள் விஷயத்தில் அவர் எப்போதும்போல இருப்பதாகவே பட்டது. ஆனால் அவர் எப்படியிருந்தாலும் அவளுக்கு ஒன்றுதானே! உஷா வீட்டிலிருக்கும் வேளைகளில் ஒன்று அவர் கிளப்புக்குச் சென்று சீட்டாடிக் கொண்டிருப்பார்; அல்லது தம்முடைய அலுவல் அறையில் உட்கார்ந்து ஜூனியர்களிடமோ, கட்சிக்காரர்களிடமோ வழக்குகள் விஷயமாக உரையாடிக் கொண்டிருப்பார். அவருக்கு வீட்டிலிருப்பவர்களிடம் மனம் விட்டுப் பேச, பெரும்பாலும் நேரமே இருப்பதில்லை. அவர் உஷாவிடமும் அப்படித்தான் இருந்தார்; சுந்தரியிடமும் அப்படித்தான் இருந்தார். சொர்ணம்பாளிடம் எப்போதும் போலவே இருந்தார்.

தப்பித் தவறி உஷாவைப் பார்த்து விட்டால், "என்ன குழந்தை! சாப்பிட்டாச்சா? காலேஜுக்குப் புறப்பட்டு விட்டாயா?" என்று கேட்பதைத் தவிர அவருக்குப் பேச வேறு விஷயமே உதிப்பதில்லை.

ஆனால் சொர்ணம்பாள் அப்படி இருக்க முடியுமா? அவள் எப்போதும் போல் வந்து பேசுவதற்கும் கேட்பதற்கும் அன்பு காட்டுவதற்கும் கொஞ்சி மகிழ்வதற்கும் என்ன தடை வந்து முளைத்து விட்டது? தன் கையால் தலை வாரிப் பின்னிவிட்டு, அன்னமிட்டு, பள்ளிக்கு அனுப்பும் வரையில் பக்கத்திலேயே இருக்கும் அவளுக்கு இப்பொழுது வெறும் விசாரணை செய்யக்கூட நேரம் இல்லாமல், தன்னுடைய அறையை விட்டு வெளியில் வரக்கூட போதில்லாமல் போவானேன்? எந்த நேரம் எந்த வேளையும் அவளுக்குச் சுந்தரியைக் கொஞ்சுவதிலுமே பொழுது கழிந்து கொண்டிருந்தது.

"குழந்தை என்னடி செய்கிறாள், பொன்னி?" என்று தன்னுடைய அறையில் இருந்தவாறே கூப்பாடு போடுவாள் அவள்.

"தலையைத் தானே வாரி முடிச்சுப் போட்டுக்குது, அம்மா! நான் பின்னிப் போடறேன்னு வேணாங்குது! அதுக்குக் காலேஜிக்குப் போக நேரம் ஆயிடுச்சாம்!" என்பாள் பொன்னி.



பம்பாய் ஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பரேஷன் அஸிஸ்டெண்ட் மானேஜர் திரு வி. எச். ராவ் அவர்களின் புதல்வர் திரு ஜெயராவ் சௌ. பிரேமாவை மணந்தார்.



இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி மின்சார சூபர்வைசர் திரு பி. வி. குப்புசாமி முதலியார் சகோதரர் திரு பி. வி. கலைமணிக்கும் சௌ. சற்குணத்துக்கும் திருமணம் நடந்தது.

"அவனைக் கேட்கவில்லையடி! சுந்தரி என்ன செய்கிறாள் என்று கேட்கிறேன். இன்னும் அது குளிக்கவில்லை; சாப்பிட வில்லை. கான்வென்டுக்குப் போக நேர மாகவில்லையா? ஒன்றும் செய்து கொள் ளாமல் எங்கே போய் விட்டாள்?"

சொர்ணம்பாள் கவலை காட்டும் அந்தச் சின்னப் பெண் சுந்தரியிடம் பொன்னிக்கு அத்தனை அக்கறையில்லை; அன்பும் இல்லை. அவள் உதட்டைக் கோணிப் பழித்துவிட்டு, "எங்கே போச்சோ, இதோ போய்ப் பாக்கறேன், அம்மா!" என்று சொல்லிவிட்டுப் போய் விடுவாள். ஆனால் அடுத்த கணமே அவ ளுக்குத் தான் சொல்லி விட்டு வந்தது என்ன என்பது மறந்துவிடும். காலேஜுக் குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் உஷா வைக் கவனிக்கப் போய்விடுவாள். தாயி ருந்தும் தாயற்ற பெண்ணைப் போல் ஏங்கி நிற்கும் உஷாவினிடத்தில்தான் அவளுக்கு உண்மையான பற்றுதல் இருந்தது; பாசமும் இருந்தது. ஆகவே சொர்ணம்பாள் கவலை காட்டும் சுந்தரி எங்கே போனால் என்ன? எப்படிப் போனால் என்ன?

அந்தப் பொன்னி ஒருத்தியைத் தவிர போனதும் 'வந்தாயா?' என்று புன்னகை செய்து வரவேற்கக் கூடியவர்கள் தன் வீட்டில் யார் இருக்கிறார்கள்? இப்படியா இன்னொரு குழந்தை பிறந்த பிறகு ஒரு தாய் அடியோடு மாறிப் போவாள்? பத்திரிகையில் வெளி வந்த தன்னுடைய படங்களைக் கூடப் பார்க்க ஆவல் கொள்ளாத தாயை எண்ணி அவள் நெஞ்சு வெறுப்பின் எல்லையை எட்டி விட்டது. 'அம்மாவாம், அம்மா! இந்த அம்மாவைப் போல் ஆயிரம் பேரை விலைக்கு வாங்கி விடலாமே!'


இருந்தாலும் அவள் வேறு வழியின்றி, வெள்ளையன் தோட்டத்துக்குப் போக



திரு வி. பத்மநாபனுக்கும் சௌ. விஜய லக்ஷ்மிக்கும் திருப்பத்தூரில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.



கும்மிடிப்பூண்டி வட்டார அபிவிருத்தி அதிகாரி ச. டேவிட் சாமுவேல் அவர்கள் மெர்சி சாலோமி அவர்களை மணந்தார்.



ஆனந்த விகடனைச் சேர்ந்த திரு ஆர். கோபாலய்யர் அவர்களின் புதல்வி சௌ. சாவித்திரிக்கும் திரு எஸ். வேங்கடராமனுக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது.



கார்ன் புராடக்ட்ஸ் கம்பெனியின் கண்ட்ரோலர் திரு வி. ஆர். ராவ் அவர்களின் புதல்வி சௌ. பிரேமாவுக்கும் திரு கே. வி. துரைசாமி பி.ஈ.க்கும் திருமணம் நடந்தது.

மனமின்றி, பங்களாவுக்கே போக வேண்டியிருந்தது. பாபுவின் மீது கொண்டுள்ள கோபத்தை அவளால் அதிக நாள் பாராட்ட முடியவில்லை. வேலையை விட்டு விட்டு, கைப்பணத்தையும் செலவழித்துவிட்டு, அவன் எப்படியெல்லாம் திண்டாடி அலைகிறானோ என்று அவன் நினைவு வந்தபோதெல்லாம் ஒரு கவலை உண்டாயிற்று. டிரைவர் குப்பனிடம் கேட்கவும் அவளுக்குக் கூச்சமாக இருந்தது. அவனாக ஒன்றும் சொல்வதாகவும் காணோம்!

தேன்கூட்டில் விருந்து நடக்கப் போகும் அன்று மாலை அவளுக்கு இருந்த மனக் கலவரத்தில், கல்லூரியை விட்டதும் உடனே பங்களாவுக்குத் திரும்பப் பிடிக்கவில்லை. எனவே அவள் கூச்சத்தை ஒதுக்கிவிட்டு, "ஏன் குப்பா! அப்புறம் அந்தப் பாபுவை நீ பார்க்கவே இல்லையா? வேலை என்று எங்கேயாவது அமர்ந்து விட்டானா? ஒன்றுமே சொல்லவில்லையே நீ; நானும் அவனைப் பற்றிக் கேட்கவே மறந்துபோய் விட்டேன்!" என்றாள். இவ்வளவு தூரம் தனக்குப் பாசாங்கு செய்யத் தெரியும் என்பது கூட அவளுக்கு வியப்பைத் தந்தது.

"நீ கேட்டால் சொல்லிக்கலாம் என்று இருந்திட்டேன், குழந்தை! அவன்கூட நீ நல்லபடியா இருக்கியான்னு நேத்துக் கேட்டான்!" என்றான் குப்பன்.

"ஏது, என் பேச்சு எங்கே வந்தது? எதற்காக வந்தது?"

"சிங்கப்பூர் மைனரைப் பத்திப் பேச்சு வந்தப்போதான் உன்னை அவருக்குக் கட்டிக் கொடுக்கிறதாக ஐயாவுக்கு எண்ணமிருக்குதான்னுகூடக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டான்!"

உஷாவின் முகம் மாறியது. "நீ என்ன அதற்குச் சொன்னாய்? அவன் என்ன தெரிந்து கொண்டான்?"



திரு. ஆர். கே. எச். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் புதல்வி சௌ. கௌரிக்கும் திரு அனந்தராமனுக்கும் விவாகம் நடைபெற்றது.



சென்னை ஸ்டேட் பாங்கைச் சேர்ந்த திரு கே. கணபதி அவர்களுக்கும் சௌ. லலிதாவுக்கும் விவாகம் நடைபெற்றது.

சிரிக்காதே!

தனிமை தேவை

ரொம்ப நேரம் வேதாந்தம் பேசி 'போர்' அடித்தவர்: வாழ்க்கையில் நீங்கள் எப்பொழுதாவது தனிமையில் இருக்க ஆசைப்பட்டது உண்டா?

ஒருவர்: முன்னால் இல்லே. ஆனால் இப்பொழுது அப்படியிருந்தால் தேவலேன்ற ஆசை அளவு கடந்து ஏற்பட்டிருக்கிறது!

அ(ட) சிங்கமே!

"உன் முகத்தில் இருக்கிற மாதிரி நானும் தாடி மீசை வைத்துக் கொண்டிருந்தேன். முகம் பார்க்க அசிங்கமா இருந்தது. வெட்டி எடுத்து விட்டேன்!"

'முதலில் என் முகம் உன் முகம் மாதிரி அசிங்கமாகத்தான் இருந்தது. அதை மறைப்பதற்குத்தான் தாடி வளர்க்க ஆரம்பித்தேன்!"

உப்பு மா!

"உப்புமா ரொம்பக் கொஞ்சமாகக் கிளறி விட்டாய். இன்னும் இரண்டு படி கிளறியிருக்கணும்."

"ஏன்! ரொம்ப நன்றாயிருக்கிறதா?"

"இல்லே! நீ போட்டிருக்கிற உப்புக்கு இன்னும் இரண்டு படி ரவை போட்டிருக்க வேணும்!"

எப்படித் தெரியும்?

"நான் ஒரு உயர்ந்த 'ஸெண்டு' போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். தெரிகிறதா?"

"தெரியவில்லையே! எனக்குக் கொஞ்ச நாட்களாக வெள்ளெழுத்து. சரியாகத் தெரிவதில்லை!"

வாழ்விலே...!

சம்பளத்தைப் பற்றி ஒரு வார்த்தை; இது இல்லாமல் வாழ்வது கஷ்டம்: இருந்து வாழ்வதும் கஷ்டம்.

புரிந்தது!

"காலம் சென்றவர் தம் குடும்பத்தார் எல்லோருக்கும் ஏதேனும் பணம் எழுதி வைத்துச் சென்றாரா?"

"ஒன்றும் இல்லே என்று நினைக்கிறேன். ஏனென்றால் குடும்பத்தார் எல்லோரும் சுமுகமாக ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்."

இவ்வளவுதானா?

டாக்டரிடம் ஒருவர்: உட்காரவும் முடியல்லே, நிற்கவும் முடியல்லே! பல தடவைகள் தடுமாறிக் கீழே விழும்படியாகவும் நேரிடுகிறது.

டாக்டர்: நான் மருந்து கொடுக்கிறேன். சரியாகப் போய் விடும்.

அவர்: பஸ்ஸில் போகும்போது கூட்டம் ஜாஸ்தியா இருக்குன்னு சொல்ல வந்தால்...நீங்க ஒண்ணு.









"ஐயாவுக்கு அந்த எண்ணம் தான்; ஆனால் குழந்தைக்கு என்ன எண்ணமோ தெரியாதுன்னேன் நான். ஏன், குழந்தை! நான் சொன்னது சரிதானே? அப்போ வந்தது அந்தப் பேச்சு!"

உஷா பெருமூச்சு விட்டாள். "...ம்... அப்படியானால் அவன் வேலைக்கு எங்கும் போகவில்லை என்று சொல்லு!" என்று பெரிய தனமாகக் கேட்டாள்.

"ஏதோ சண்முகத்தோடே போறான், வரான். என்ன செய்யிறான்னு சரியாத் தெரியலே. பணம் காசு இருந்து கொடுத்தால் சொந்தமா ஏதாச்சும் ஒரு தொழிலைச் செய்வான். இப்போகூட ஏதோ பழைய பேப்பர்களை வாங்கிப் போட்டுக்கிட்டிருக்கான். இனிமே இன்னொரிடத்திலே போய் வேலை செய்ய அவனுக்குப் பிடிக்கலே!" என்றான் அவன்.

உஷா மரீனாச்சாலையில் வண்டி திரும்பும் வரை பேசாமல் இருந்துவிட்டு, "வண்டியை அந்த வழியாகத் தான் விடேன். இவ்வளவு தூரம் விசாரித்தவனை எப்படி இருக்கிறான் என்றுதான் பார்க்கலாம்!" என்றாள்.

"இல்லே குழந்தை! ஐயா இன்னிக்குச் சட்டுனு வந்திடச் சொல்லியிருக்காங்க. மைனரு வீட்டிலே நடக்கிற விருந்துக்குப் போகணுமில்லே?" என்றான் குப்பன்.

"எல்லாம் போய்க் கொள்ளலாம் மெதுவாக. அதற்குத்தான் அவசரமாக்கும்! வெள்ளையன் தோட்டத்துக்கு விடு, வண்டியை!" என்று வற்புறுத்திச் சொன்னாள் உஷா.

வண்டி பங்களாவுக்குத் திரும்பாமல் நேராகச் செல்லத் தொடங்கியது. 'மைனராம், மைனர்! கல்யாணமாம், கல்யாணம்! எண்ணமாம், எண்ணம்!' என்று அவள் உள்ளம் முணுமுணுத்துக் கொண்டது. 'என் நாட்டியத்தை முழுவதும் இருந்து பார்க்காமலே ஒரு பாராட்டாம்! அதற்காக ஒரு விருந்தாம்! யாருக்குத் தெரியாது இந்தச் சூழ்ச்சியெல்லாம்? நான் கண்டிப்பாக விருந்துக்குப் போகப் போவதில்லை; கல்யாணப் பேச்சு வந்தால் காது கொடுத்துக் கேட்கப் போவதில்லை. யாருக்கு விருப்பமோ அவர்கள் கல்யாணம் செய்து கொள்ளட்டும்!' என்று தனக்குத்தானே சொல்லிப் பல்லைக் கடித்துக் கொண்டாள். (தொடரும்)



காலையில் இருக்கும் புதுமலர்ச்சி
நாள் முழுவதும் இருக்க

பாண்ட்ஸ்

ட்ரீம்ப்ளவர் டால்க்



நாள் முழுவதும் புதுமலர்ச்சியுடனும் குளுமையுடனும் இருக்க, ஸ்நானத்திற்குப்பின் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்!

பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் இன்பகரமான பரிமளமுள்ளது; மற்றும் வியர்வையை உறுஞ்சும் தன்மையுடையது. அது உங்களுக்கு நாள் முழுவதும் நீடித்திருக்கும் புத்துணர்ச்சியை அளிக்கும்!

செஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)

திட நம்பிக்கையுள்ளவர்கள்

"அதிகாலை முதல் இரவு வெகுநேரம் வரை, பம்பாயில் டாடா அலுவலகங்களில், பங்குப்பணம் செலுத்தும் பொருட்டு, தேசமக்கள் மிக்க ஆவலுடன் குழுமியிருந்தனர். வைதீகர்கள், வியோதிகர்கள், ஏழைமக்கள், பணம் படைத்தவர்கள், ஆண்கள், பெண்கள், எல்லோரும் தங்களாலான பொருளுதவி செய்ய முன்வந்தனர். மூன்றே வாரத்தில் சுமார் 8,000 இந்திய மக்கள் அளித்த சிறுசிறு தொகை கூட ஏற்றுக்கொள்ளப்பட்டு, கட்டிடத்திற்குத் தேவையான £ 1,630,000, (இரண்டு கோடி ரூபாய்க்குமேல்) வசூலாகிற்று."

—ஆக்ஸெல் ஸாலின்

இந்தியாவில் முதன்முதலாக ப்ருமாண்டமான இயந்திரத் தொழிலில் தைரியமாக ஈடுபட்ட தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி பங்குதாரர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் அதிக அளவிற்கு ஆதரவு பெற்று, 1907 ஆகஸ்டுதிங்கள், 26 தேதி அன்று உருவாகியது. மிகப்பெரிய முயற்சியில் தனிப்பட்ட முறையில் முன்னேற்றம் அடைவதிலும், பிரதம எஃகு தயாரிப்பாளராக வளர்ச்சி அடைவதிலும், போராட்டங்களும், தொல்லைகளும் இல்லாமல் இல்லை. 1920லிருந்து சில ஆண்டுகள்வரை கம்பெனி சீர்குலைந்து அழிந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்டது. அந்தக் காலத்திலும் அஞ்சா நெஞ்சம் படைத்த பல பங்குதாரர்கள் தளரா நம்பிக்கையோடு தேசத்திற்கு வழிகாட்டியாயுள்ள இத்தகைய பெருமுயற்சியில் வரும் லாப நஷ்டங்களை எல்லாம் சந்தோஷமாக ஏற்கத் தலைப்பட்டனர்.



கம்பெனியில் முதன் முதலில் சேர்ந்த பங்குதாரர்களில் ஒருவராகவும், இன்றும் பங்குதாரராக இருந்து வருபவருமான 70 வயது நிரம்பிய திரு. ராய் பிஹாரி லா, 13-பி. கார்ன்வாலிஸ் தெரு, கல்கத்தா-6.

டாடா ஸ்டீல்

The Tata Iron and Steel Company Limited

TN 3716





எங்கோ ஒரு பொட்டைக் காட்டில் அவனை இறக்கி விட்டுப் போய் விட்டான், பஸ்காரன். ஆனால், அவன் தன்னை அங்கே இறக்கிவிடச் சொல்லி முன்பே கண்டக்டரிடம் கேட்டுக் கொண்டிருந்ததை யொட்டித் தான் ஞாபகமாக அந்தக் கண்டக்டர் அவனை அங்கே இறக்கிவிட்டு விட்டான். ஒரு தடவை சுழன்று சுற்றுமுற்றும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை இயற்கையை ஊடுருவிப் பார்த்தான். கிழக்கு மேற்குப் புரிந்தது. நெடுகிலும் மரங்களும் மட்டைகளுமாகத் தெரிந்தன.

பஸ்ஸில் வந்த போது ஏற்பட்டிருந்த கிறு கிறுப்பு இன்னும் மறையவில்லை; அவனுள்ளேயே இப்போது பஸ் ஓடிக் கொண்டிருந்தது. மெதுவாக ஊருக்குள் போகிற பாட்டையைக் கண்டு பிடித்தான். எருக்கு, காட்டு ஆவாரை, ஊமத்தை போன்ற செடிக் கூட்டங்களிடையே ஒளிய ஓடுவது போல் பாட்டை நெளிந்து ஓடிக் கொண்டிருந்தது.

இரண்டு பர்லாங்கில் ஊர் வந்தது; வந்ததோடு மட்டுமில்லை; முடிந்தும் விட்டது. சின்னப் பிள்ளைகள் இட்டுத் திட்டாக மண் வீடுகள் கட்டி விளையாடி விட்டுக் கலைத்துப் போட்டு விட்டுப் போனாற் போல் இங்கும் அங்கும் இரண்டு மூன்று ஓட்டு வீடுகள்; ஏழெட்டுக் குடிசைகள்; எப்போதோ வீடுகள் இருந்ததன் அடையாளமாகப் பல பாழ் மனைகள். இவைகளை ஒரு சுற்றுப் பார்த்து விட்டுத் திடீரென்று நினைவு வந்தவனாக அவன், தான் பார்க்கவென்று தேடி வந்த இடத்தைக் காண்பதற்காக ஒரு கண்ணோட்டம் விடத் திரும்பினான். காட்டுவெளியில், 'நான் ஒன்றுதான் பாக்கி' என்று மௌன பாஷையில் கூறுவது போல் அந்தச் சிறு கோயில் அவன் கண்களில் பட்டது.

மறு நிமிஷம் கோயிலை நோக்கி நடந்தான் அவன். சின்னக் கோயிலானாலும் புகழ் மிகுந்து, சரித்திர முக்கியத்துவம் பெற்று, வானளாவிய மதிப்பையும் கொண்டு விளங்குவது அது. பல்லவப் பேரரசின் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சிறு கோயில் அது. கோயிலின் வெளிப்புறத்தையெல்லாம் அநேகமாகக் காலமும், கலைப்பற்று இல்லாத பல மனிதர்களும் அழித்தது போக உள்ளே சில சிற்பங்கள் மட்டும் வாழ்வுக்கும் அழிவுக்குமாகப் போராடிக் கொண்டு ஒளிர்ந்தன. அவற்றை யெல்லாம் பார்த்துத் தன் கைவண்ணம் சிறக்க எழுதி வருவதற்குத்தான் அவன் இந்தப் பொட்டைக்காட்டைத் தேடி வந்திருக்கிறான்.

கோயிலின் வெளித் தோற்றத்தைப் பார்த்தபடி நினைவை அப்படி இப்படி மாற்ற மனம் இல்லாமல் நின்றிருந்தான் அவன். வெகு நேரம் இப்படி நின்றிருந்த அவன் கவனத்தை ஒரு குரல் கலைத்தது. ''கோயிலில் பார்க்க வேண்டியதெல்லாம் உள்ளேதான் இருக்கு.''

திரும்பிப் பார்த்தான் அவன். ஒரு பெண், கையில் ஒரு குடத்தை வைத்துக் கொண்டு வெகு சமீபத்தில் நின்றுகொண்டிருந்தாள்.



உள்ளத்தின் உள்ளே

லவெ. சுப்ரமண்யன்

"உள்ளே நல்ல சிற்பங்கள் இருக்கின்றன என்று தெரியும். அதை யெல்லாம் பார்க்கத்தான் வந்திருக்கிறேன். ஆனால் கோயிலின் வெளித் தோற்றம் என்னை இந்த இடத்திலிருந்து நகர விடவில்லை!"

"வெளித் தோற்றத்திலே என்ன வைச்சிருக்கு! எருக்கஞ்செடி முளைக்காத இடம் பாக்கியில்லை; குத்துக்கல் சரியாத இடமும் பாக்கியில்லை!" என்று அலட்சியமாகச் சொல்லிக் கொண்டு கோயிலின் உள்ளே நுழைந்து விட்டாள் அவள்.

சித்திரக்காரனின் பார்வை இப்போது அவள் தோற்றத்தில் பதிந்தது. கோயில் மதிலின் பின்னணியில் அவள் தோற்றம் சிந்தனையைத் தொட்டு அசைப்பதாகத்தான் இருந்தது. கோயிலின் பழமைக்கும் ஊரின் எளிமைக்கும் இளைய அவளும் ஏழைமையும் உறவு கொண்டு விளங்கினாள். ஆனால் அழகின் செல்வம் கொழிப்பவளாக இருந்தாள். உள்ளே ஏதோ அழகான சிற்பங்கள் இருப்பதாகச் சொல்கிறார்களே, அவற்றில் ஒன்று எழுந்து நடமாடிப் பேசி, இயங்குகிறதோ என்றெல்லாம் கூட நினைக்கத் தோன்றியது அவனுக்கு.

அவனும் உள்ளே போய் விட்டான். வந்தவர்களையெல்லாம் 'வா வா' என்று அழைப்பது போன்ற பிரமையைத் தோற்றுவிக்கத் தொடங்கியது கோயிலின் அமைப்பு.

சிற்பங்கள் பேசிக் கொண்டன. தமக்குள்ளும் சிரித்துப் பேசி விளையாடி மகிழ்ந்தன; அவனிடமும் பேசின. அவற்றின் அழகைப் பார்த்து 'என்ன அற்புதம்! எத்தகைய படைப்பு! எந்தச் சிற்பி படைத்தானோ!' என்று அவன் மனத்தில் சொற்கள் புரள்வதைக் கண்டு கொண்டாற் போல் அவை, 'முதலில் உன் நினைவினின்றும் ஆயிரம் ஆண்டுகளை இழுத்துப் பிடி; அப்புறம் சொல்கிறோம் பதில், உன்னுடைய வித்தைக் குறி உணர்வுகளுக்கு!' என்றன.

திறந்த கண்களை மூடிக் கொண்டு ஒரு மண்டபத்தில் உட்கார்ந்துவிட்டான் அவன். மணி மாலை நாலு, நாலரை, ஐந்து.....

. . .

"இதென்ன கூத்து! இங்கே கோயில் பார்க்க வருகிறவர்களெல்லாம் கண்ணை விழிச்சுண்டுதான் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு ஆச்சு போச்சுன்னு பஸ்ஸைப் புடிக்க ஊருக்குப் போகிற வழியைப் பார்ப்பார்கள்! நீங்க என்ன. தூங்கிலே உட்கார்ந்து விட்டேளே! இப்போது மணி என்ன தெரியுமா? இதோடே நான் ஏழாவது நடை ஜலம் கொண்டு போக வந்தாச்சு."

கண் திறந்து பார்த்தான் அவன். அவள் எதிரே குடமும் தானுமாக நின்றிருந்தாள். காற்று வீசியது! இத்தனை நேரமும் வீசிய வெய்யிலுக்குப் பயந்து ஒய்வெடுத்துக் கொண்டாற் போல் மறைந்திருந்த காற்று இப்போது வடிகட்டி விட்டாற்போல் குளிர்ந்து வீசியது. கூடவே ஒரு மணம். பன்னீர்ப் பூவின் மணம் மாதிரி இருந்தது. அதுவேதானா? அல்லது அவளிடமிருந்து ஏதாவது மணம் வீசுகிறதா? அவளை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தான் அவன். சற்று முன் அந்த மண்டபத்திலிருந்த லட்சுமியின் சிலையைப் பார்த்து விட்டுப் போய்த்தான் அவன் சிந்தனையில் மூழ்கியிருந்தான். அத்தனை லட்சணங்களும் பொருந்தியிருந்த இவள்...அந்தக் கற்சிற்பம் கல்லிலிருந்து பெயர்ந்து எழுந்து...?

"பஸ்ஸில் வந்த களைப்பே எனக்கு இன்னும் அடங்க வில்லை. அதற்குள் என்னைப் பிடித்துப் பஸ் ஏறத் துரத்துகிறீர்களே!"

"இதென்ன 'கிறீர்களே' என்றெல்லாம் பெரியவர்களைப் பார்த்துப் பேசுகிறமாதிரி மரியாதையாகப் பேசுகிறீர்களே? நான் உங்களைவிடக் கட்டாயம் நாலைந்து வயசு சின்னவளாகத்தான் இருப்பேன். சின்னவர்களிடம் எப்படிப் பேசணுமோ அப்படிப் பேசுங்கள். என் பேர் கஸ்தூரி!"

'சரியான புள்ளிதான்! இளநீர் கண் திறந்து கொண்டு கொட்டுவதாற் போல் கொட்டுகிறாளே பேச்சை! கேட்ட கேள்வி, கேட்காத கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிச் சமாளிக்கிறாளே' என்று எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டான் அவன்.

"கஸ்தூரி! ரொம்ப நல்ல பெயர்! கஸ்தூரி, சிந்தப் பல்லையெல்லாம் பற்றிப் பேசி என்னைக் கவலை கொள்ளும்படி செய்யாதே! முதலில் எனக்கு ஒரேயடியாகத் தாகமாக இருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கொடு. இங்கே நல்ல காப்பியாக எங்கே கிடைக்கும்? அதையும் சொல்லு."

காப்பிக் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவள் அவனுக்குத் தண்ணீர் கொடுக்கப் பாத்திரம் எதுவும் இல்லையே என்பதைப் பற்றி யோசித்தாள்.

"இரண்டு கைகளையும் பிடிக்கிறீர்களா? குடத்தோடேயே ஜலம் விடுகிறேன்."

"ஓ! குடத்தோடேயே வேண்டுமானாலும் குடித்து விடுகிறேன்; அத்தனை தாகம்!"

தாக சாந்தி ஆயிற்று.

"காப்பியா கேட்டீர்கள்? இந்த ஊரிலே காப்பி ஏது? கிளப் இருந்தால் அல்லவா காப்பி கிடைக்க? இந்த ஊரிலே காப்பியைக் கண்ணால் காண்கிற வீடு ஒன்னே ஒன்னுதான். ஆர்மோனஜியாபீஸ் மாமி வீட்டிலே தான் அந்த வாசனை. காப்பிப் பொடியும் சர்க்கரையும் டவுனிலிருந்து வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தால் எங்கள் வீட்டிலே போட்டுத் தருவோம்."

"அதைப் போட்டுத் தர முடியாதென்று சொல்லி விடுங்களேன்!" என்றான் அவன் சிறிது குறும்பு கலந்த தொனியில்.

"வாடிக்கைக்காரர்கள் கேட்டால் முடியாதுன்னு எப்படிச் சொல்றது?"

"வாடிக்கையா? என்ன வாடிக்கை?"

"சாப்பாட்டு வாடிக்கை. வெளியூரிலிருந்து வருகிறவர்களுக்குக் காசு வாங்கிக் கொண்டு சாப்பாடு போடுகிறோம்!"

"அப்பாடி! கஸ்தூரி, கொஞ்சம் இரு! போன உயிரை வரவழைத்துக் கொள்கிறேன். நீ காப்பிக்குப் பல்லவி பாடின உடனேயே என் உயிர் பஸ் ஸ்டாண்டைத் தேடிப் போகத் தொடங்கி விட்டது...."

"நீங்கள் வருவதானால் வந்து சட்டையைக் கழற்றிக் கொண்டு கைகால் அலம்பிக் கொள்ளுங்கள். அதோ அந்த முதல் ஓட்டு வீடுதான்

எங்கள் வீடு'' என்று ஆள்காட்டி விரலால் சுட்டிக் காட்டினாள் கஸ்தூரி.

அந்தத் திசையை அவன் கூர்ந்து பார்க்கத் தொடங்கியபோது அதில் நடையைக் கட்டிக் கொண்டிருந்தாள் அவள்.

கோயிலை விட்டு வெளியே வர மனமின்றி வர முனைந்த அவனைத் தன் பங்குக்கு மீண்டும் பன்னீர் மணம் கண்டி இழுத்தது. இனைற்றங் கரையையொட்டிப் பரவலாகப் பச்சை மூடிய இலைகளுடன் சாய்ந்தாடிக் கொண்டிருந்தது பன்னீர் மரம். இனைற்றங்கரையில் குளுகுளு வென்று தண்ணீர் பரவி நின்றிருந்தது. அவற்றைப் பார்த்தபடியே சிறிது நேரம் நின்று கொண்டிருந்து விட்டு அந்த ஓட்டு வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான் அவன்.

• • •

"இந்த ஊரில் எத்தனை நாட்கள் தங்கு வீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

"இத்தனை நாட்கள்தான் தங்கலாமென்று சட்டம் ஏதாவது உண்டா?''

"அதற்கில்லை; இரண்டு மூன்று நாட்கள் தங்கினீர்களானால் டவுனுக்குப் போகிற பஸ்ஸில் சொல்லியனுப்பிச் சாமான், கறிகாய் வாங்கிக் கொண்டு வரச் சொல்லணும்.''

"நான் ஒரு மாசம் இங்கே தங்கப் போகிற தாக உத்தேசம், கஸ்தூரி! ஏன் இந்தக் கவலை யெல்லாம் நீ படுகிறாய்? உங்க அப்பா அம்மா யாரும் ...!''

"அம்மா இல்லே எங்களுக்கு. அப்பா-இது கல்யாண ஸீஸனல்லவா, அதனாலே இரண்டு மாதங்களுக்கு வெளியூரிலேதான் சுற்றுவார்.''

"என்ன வேலே அவருக்கு?''

"சமையல் வேலே.''

நெய் காச்சும் நிலையில் வெண்ணெய் இளகி நடுச் சட்டியில் வழுக்கிக் கொண்டு விழுவது போல அந்தச் சித்திரக்காரனின் அபிப்பிராயமும் மனமும் இளகி வழிந்தது.

"உங்கள் பெயரையும் விலாசத்தையும் இந்த நோட்டில் எழுதுங்கள்'' என்று ஒரு நோட்டைக் கொணர்ந்து கொடுத்தாள் கஸ்தூரி. ஒரு பரம்பரைக்கு இனிய வாழ்ந்து விட்ட பழைமை அந்த நோட்டின் பிசுக்கிலி ருந்தும் மஞ்சள் கறையிலிருந்தும் தெரிந்தது.

'சாரங்கன், 'மணிமலர்', சென்னே' என்று விலாசத்தை எழுதி விட்டு, இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து முன் பணமாகக் கொடுத்தான் அவன் கஸ்தூரியிடம். ஏற்று மல் இருந்த விளக்கைத் துடைத்து ஏற்றி வைத்த மாதிரி அவள் முகம் பிரகாசித்தது.

"நான் திரும்பிப் போகும்போது பாக்கிப் பணம் தருகிறேன்.''

"எதுக்கு? ஒரு மாசம் வரைக்கும் உங்க ளுக்குத் தண்டியாகச் சாப்பாடு போட இந்தப் பணம் வெள்ளமாச்சே!''

அன்று முதல் ருசியான சாப்பாடு கிடைத் தது சாரங்கனுக்கு. எல்லாவற்றிலும் ருசி அவன் மனத்தைக் கவ்விப் பிடிக்க ஆரம்பித் தது. கஸ்தூரியின் அழகிலே ஒரு ருசி; அவள் கைவண்ணம் மிளிர்ந்த சாப்பாட்டிலே ருசி; கோயிலுக்குச் சென்றால் கல்மன்னன் தீட்டி வைத்த சிற்பங்களைக் காண்பதிலே ஒரு ருசி;



'என்ன ஸார் விசேஷம், வெந் நீர்த் தவலே வாங்கிக் கொண்டு போகிறீர்களே!

'நானும் குற்றாலம் போகலாம்னு இருக்கேன் . . . எங்கே போனாலும் நான் வெந்நீர்லேதான் குளிக்கிற வழக்கம். . . அதனாலே கையோடே ஒரு வெந்நீர்த் தவலேயும் எடுத்துண்டு போயிடப் போறேன்!''

வாழ்க்கையே அப்போதுதான் ருசிக்கத் தொடங்கினாற் போல்...

அவன் நினைவில் இப்போது கஸ்தூரி இடம் பிடித்து விட்டாள். பளிச்சென்று துலங்கும் அவள் தோற்றத்தை நினைத்துப் பார்த்தால் தன் உள்ளத்திலேயே திடீரென்று ஒரு ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கிறாற் போலத் தோன் றியது அவனுக்கு.

அந்தப் பழம் பெரும் வீட்டில், புழுது எழும்பி, இருள் அடர்ந்து, ஈரம் கசிந்து மூச்சை அடைக்கும் குப்பை குவிந்து கிடக்கிற அந்தச் சாப்பாட்டுக் கூடத்தில், அவள் வந்து நின்றாளானால் குத்துவிளக்கை ஏற்றி வைத் தாற் போல் இருக்கும்.

"என்ன இப்படிப் பூசுன்றி பண்றுகிறீர் களே சாப்பிட! பணம் கொடுத்துத்தானே சாப்பிடுகிறீர்கள்? வயிறு நிறைய...''

"அப்போ ஒன்னு செய், கஸ்தூரி! இருபது ரூபாய் கொடுத்திருக்கிறேனில்லியா? அடுத்த வேளைக்கு ஒரு மூட்டை அரிசி வடித்து...''

ஒரு கையில் பரிமாறும் கலம் இருக்க, மற்றொரு கையால் வாயைப் பொத்திக் கொண்டு கலகலவென்று சிரித்தாள் கஸ்தூரி. சதங்கையொலியும் வீணையொலியும் கேட் டன; கோயில் மணிச் சத்தமும் அதில் கலந்து கொண்டாற் போலிருந்தது.

சாரங்கனின் காதுகள் இன்ப ஒலியை அநுபவிக்க, உள்ளம் பன்னீர் மணத்தை அநுபவித்தது.

கோயிலிலேயே குடியிருக்க ஆரம்பித் தான் சாரங்கன். அவன் உள்ளத்திலுள்ளே கஸ்தூரி குடியிருந்தாள். சிற்பங்களைக் காண வென்று வந்த இடத்தில் அவைகளைக் கண்டு



Be Bright Call Madras 55965

ரசிப்பதா? அவனைக் காணாத இடத்திலும் காண்கிறாற்போல் உள்ள மதி மயக்கத்திலேயே திளைப்பதா? வாடாத மலராக, மங்காத வண்ணம்போல், அழியாத சத்தியத்தைப் போல், தேயாமல் இருந்தால் முழு நிலவு எப்படி இருக்குமோ, அதன் ஒளி வடிவாய்த் தன்னைப் பிடித்து அலைக்கழிக்கிற அவனுடைய தொடர்பு எதற்கோ ஆரம்பமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது...

சாரங்கன் அவள் சிந்தனையைச் சிறிது ஒதுக்கி விட்டுத் தன் வேலையில் நாட்டம் செலுத்த முனைந்தான். ஆனால், அங்கே முளைத்தாள் கஸ்தூரி.

"இங்கே ரொம்ப நாழியாக நின்று கொண்டு என்ன பண்ணுகிறீர்கள்?"

"இதைத்தான் பண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்று சாரங்கன் தன் நோட்டுப் புத்தகத்தைக் காண்பித்தான்.

"அட! இதையெல்லாம் போய் ஏன் படம் எழுதிக் கொண்டு கிடக்கிறீர்கள்? போட்டோவிலே புடிச்சப்பிட்டா எல்லாம் தன்னாலே அதுலே விழுந்துட்டுப் போறது!" என்று முகவாயிலே விரலை வைத்து அதிசயித்தபடி கேட்டாள் கஸ்தூரி.

"விழும், விழாமல் என்ன?"

"பின்னே ஏன் இந்தப் பாடு?"

இலேசாக ஒரு சிரிப்பை உதிர்த்தான் சாரங்கன். "ஏன், நான் எழுதியிருக்கிற படங்கள் நன்றாக இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே மீண்டும் ஒரு முறை தன் கை நோட்டை அவளிடம் சாய்த்துக் காண்பித்தான் சாரங்கன்.

அந்த மண்டபத்துச் சித்திரங்களில் சிலவற்றை அப்படியே அழகுபடத் தீட்டியிருந்தான் அவன்.

"நன்றாயிராமல் என்ன! அப்படியே தத்ரூபமா இருக்கே!" என்று கண்களைப் புருவம் வரை உயர்த்திக் கூறினாள் அவள். பிறகு "நீங்கள் பார்ப்பதையெல்லாம் படமாக எழுதி விடுவீர்களோ?" என்று கேட்டாள்.

"அதுதான் என் தொழில்."

"என்னைப் பார்த்துப் படம் எழுதுவேளா?"

அவளைப் பார்த்தான் சாரங்கன். அவளும் அவனை நிமிர்ந்து பார்த்தாள். பூப்போட்ட வெள்ளைச் சிற்றாடை யுடுத்தி யிருந்தாள் அவள். ஏழைமை குடியிருக்க இடம் தேடி, அந்தச் சிற்றாடையில் பொது நோக்கிலேயே தெரிந்த பல தையல்களில் கொலுவிருந்தது. மரவட்டைபோல் சுரடுமுரடான தையல்கள். ஆனால், எளிமையைத் துணைக்கொண்டு ஏழைமையை விரட்டும் அருள் அவள் முகத்தில் இருந்தது. வெக்கப் பழுத்த ஏதோ ஒரு பழம் போல் மேனி முழுதும் ஒரு அழகு நிறம். அவள் சிரித்தால் தன் இதயம் குளிர்வது போலிருந்தது சாரங்கனுக்கு. ஆனால், தனது தொடர்பு நேற்றும் இன்றும்தான். ஆகையால் அந்தச் சிரிப்பில் பூமியே குளிர்ந்து, அதன் குளிர்ச்சியில் தன் இதயமும் தானும்... என்று நீளச் சிந்தித்தான்.

"ஓ! தாராளமாக. உன்னைப் பார்த்து எழுதுவேன்!" என்றான் சாரங்கன், கனவின் தழுவல் கலைந்து எழுந்தாற்போல்.

"எங்கே, எழுதுங்கோ!"

அவன் எழுதினான்....உயிர் உருவைச் சித்திரமாகத் தீட்ட முனைந்து, அது உயிர் உருவாகிக் கொஞ்ச, எதிர் இருந்த உருவைச் சிலையாக நினைத்து ஒரே கலை வெறியில் மூழ்கிவிட்டான் அவன். அவளும் சிலையாக நின்றிருந்தாள்...

* * *

"இதோ, உன் படம்!"

கண்களை அகலத் திறந்து, சிலை நிலையினின்றும் உயிர் நிலைக்கு மாறி ஆவலுடன் அதை வாங்கிப் பார்த்தாள் கஸ்தூரி. அவளது அகன்ற பெரிய கண்கள் இன்னும் அகன்றன.

"இத்தனை அழகாகவா நான் இருக்கேன்?"

இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை சாரங்கன். "இதோ, இந்தச் சிலையைப் பார், கஸ்தூரி! இது எப்படி இருக்கிறது?" என்று கேட்டான், ஒரு சிற்பத்தைச் சுட்டிக்காட்டி. பருவத்துக்கும், கவர்ச்சிக்கும் இலக்கணம் கூறும் ஒரு சிலை அது.

"கொள்ளை அழகாக இருக்கு."

"இதற்குப் பக்கத்திலே கல்லைப் பதித்து உன்னை அங்கே அதற்கு இணையாகப் பதித்து விட வேண்டுமென்று என் மனமும் கைகளும் துடிக்கிறதென்றால் நீ எத்தனை அழகாய் இருப்பாய், பார்த்துக் கொள்!"

"பொல்லாதவராக இருக்கிறீர்களே நீங்கள்! என்ன பேச்சு! அப்பாடியோவ்!"

"நீ கேட்ட அந்த 'நல்ல கேள்வி'க்கு இப்படித்தான் பதில் சொல்லணும்."

"இந்தப் படத்தை எனக்குத் தருவீர்களா? எனக்கே எனக்கு?"

குழந்தைபோல் அவள் கேட்க, அவனும் பங்காளிக் குழந்தைபோல் 'எனக்கு?' என்று கேட்டான்.

"உங்களுக்கு எதற்கு என் படம்?"

எப்படிப் பதில் சொல்வது? என்ன பதில் சொல்வது? அந்தப் படத்தில் பென்சிலை ஓட விட்டவாறு அவளையும் படத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி பூச்சு வேலை செய்து கொண்டிருந்தான் அவன். மனம் மட்டும் பெரும் பாறை ஒன்றை வெளியே புரட்டிவிட முடியாமல் தத்தளித்தது.

* * *

இரவு முழுதும் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்து விட்டுக் காலையில் ஏதோ வாசனை கண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் சாரங்கன். கொத்துமல்லி விதைப் பொடி கலந்த காப்பியைக் கலந்து கொண்டிருந்தாள் போலும் கஸ்தூரி. அதை இன்னும் சற்று நேரத்தில் அவன் எதிரில் கொண்டு வைத்து விடுவாள். 'எல்லாவற்றிலும் சிறப்பாக நடந்து கொள்ளுபவள் காப்பி விஷயத்தில் இப்படி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறாளே!' என்று எண்ணினான் அவன்.

இரவு முழுவதும் ஒரே சிந்தனை, கனவு, காதல் களியாட்டம். கஸ்தூரியிடம் தன் நெருக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள என்ன வார்த்தைகளைத் தொடுப்பது என்ற திண்டாட்டம். இது நினைவில், கனவில் அவளிடம் காதல் மொழிகளை அடுக்க வார்த்தைகள் பூப்பந்துபோல் உருண்டு வந்து மனத்திலே காத்திருந்தன. நடப்பில் காப்பியைக் கொண்டு வந்து வைத்தாள் கஸ்தூரி. இரவு முழுதும்

களையில் நுகர்ந்த பன்னீர் மணம் இந்தக் காப்பியைக் கண்டதும் சொல்லிக் கொள்ளாமல் நழுவியது.

"உடனே இப்போ வெளியிலே கிளம்பப் போகிறேளா?"

"கோயிலுக்குத்தான் போக வேண்டும்."

"இருங்கள், இதோ வருகிறேன்." உள்ளே ஓடிப் போய், ஓடிய குருவி வாயில் ஒரு சருகுடன் திரும்பி வருவது போல், கையில் ஏதோ ஒரு பொருளுடன் திரும்பி வந்தாள் கஸ்தூரி.

"என்ன அது?" என்றான் சாரங்கன்.

"என்னன்னு பாருங்களேன் நீங்களே."

அது ஒரு போட்டோ. அவளுடையதுதான் என்று இரண்டாம் முறை பார்த்த பிறகுதான் தெரிந்தது.

"உன் போட்டோவா? எப்போது எடுத்தது?" என்று கேட்டான் சாரங்கன்.

"எங்க ஊரிலே திருநாள் நடந்த போது வாசலிலே வந்து எட்டணாவுக்கு எடுத்தான் இந்த போட்டோ!" என்று கதை ஆரம்பித்தாள் கஸ்தூரி.

"எட்டணாவுக்கு ஒன்றுதான் எடுத்தானா. மூணு எடுத்தானா?"

"கேளுங்கோ நடுவிலே பேசாமே. இந்தப் போட்டோ எதுக்கு எடுத்தது தெரியுமா? எங்க அப்பா கல்யாண வேலைகளுக்குப் போன இடத்திலே எனக்கு ஒரு வரன் பார்த்தார். அவருக்கு அனுப்பறதுக்காக இதை எடுத்து அனுப்பினோம். படத்தைப் பார்த்துவிட்டு, 'நீங்கள் நேரிலே சொன்னபடி பெண் அவ்வளவு அழகாக இல்லே'ன்னு ஒரு காகிதம் எழுதி, இந்தப் போட்டோவையும் திருப்பி அனுப்பி விட்டார் அந்த மகானுபாவன். எனக்கு ரொம்பக் கஷ்டமாய்ப் போயிட்டுது... அதனாலேதான் நீங்க எழுதின படத்தைப் பார்த்துவிட்டு நான் அத்தனை அழகாக இருக்கேனான்னு கேட்டேன்."

"கஸ்தூரி! முதலிலே இந்தப் போட்டோவைக் கொண்டு இது உன் போட்டோதான் என்று யாராவது சத்தியம் பண்ணினால்தான் தீர்மானிக்க முடியும். இரண்டாவது, உன் அழகை நன்றாக எடுத்துக் காட்டுவதற்குப் பதிலாக ஒரேயடியாக அலங்கோலப் படுத்தியிருக்கிறது இந்தப் போட்டோ..."

"அதுக்குத்தான் நீங்கள் எழுதின என்னுடைய படத்தைக் கேட்டேன்."

"எதையும் போட்டோ எடுப்பதை விடக் கையாலே எழுதுகிறது மேல் என்பது தெரிகிறதா? அது சரி; எதற்கு அந்தப் படம்?"

"மறுபடியும் அதை அவருக்கு அனுப்பி வைத்து, அப்பாவை விட்டுக் கடிதம் எழுதச் சொல்வதற்காக!"

சாரங்கனின் மனத்தில் பாறை இருந்த இடத்தில் இப்போது ஒரு கப்பல் சில விநாடிகளாகத் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதையும் புரட்டித் தள்ளி விட்டாள் கஸ்தூரி.

"அந்தப் பிள்ளையாண்டான்தான் உன்னை வேண்டாம் என்ற ரீதியில் எழுதி விட்டதாகச் சொன்னாயே, கஸ்தூரி!"

"அவர் எழுதி விட்டார்; நீங்கள் எழுதின படத்தை அனுப்பி இன்னொரு காகிதம் நாங்கள் எழுதினால் முன்னே எழுதினதை அழித்துக் கூட எழுதுவார் என்று தோன்றுகிறது எனக்கு!" என்றாள் கஸ்தூரி. இப்போதுதான் அவள் கன்னங்களில் சிவப்பு இழை போடிற்று. சூரியகாந்திப் பூவைப்போல் எப்போதும் நிமிர்ந்து நின்ற அவள் முகம் இப்போதுதான் கவிழ்ந்தது. 'அவர்' என்ற வார்த்தை அவள் நெஞ்சிலிருந்து பிறந்த போதுதான் இந்தச் சின்னங்களும் இணைந்து பிறந்ததைக் கண்டு கொண்டான் சாரங்கன்.

அவன் உடனே எழுந்து சென்று, தான் முதல்நாள் அவளைப் பார்த்து எழுதிய படத்தைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான். கஸ்தூரி அதைக் கையில் வாங்கிக் கொண்டபோது அவன் மனம் அவள் காதலுக்கு வாழ்த்துக் கூறியது.

அரை மணி நேரத்தில் தன் மூட்டை முடிச்சுகளைக் கட்டினான் சாரங்கன்.

"என்ன, ஊருக்கா கிளம்புகிறீர்கள்? ஒரு மாதம் தங்கிப் படம் எழுதப் போகிறேன் என்றீர்களே?" என்றாள் கஸ்தூரி.

"ஒரு மாதத்தில் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய என் கைவண்ணத்தை நேற்று ஒரு மணி நேரத்தில் பார்த்து விட்டேன். நான் வந்த வேலை முடிந்தது!" என்றான் சாரங்கன்.


இந்தப் பேச்சு ஒன்றும் புரியாத கஸ்தூரி வேறு நினைவின் தொடக்கத்தில் இருந்தாள்.

எலும்புக்கூடு

இளம் வயது கூட்டாளிகளான நாங்கள் மூவரும் படுக்கும் அறைக்குப் பக்கத்து அறையின் சுவரில் மனித எலும்புக்கூடு ஒன்று தொங்கி கொண்டிருக்கும். இரவில், காற்று வீசும் போது அதன் எலும்புப் பூட்டுக்கள் அசைந்து 'கட் கட்' என்று ஒலிப்பது எங் களுக்குக் கேட்கும். பகல் வேளையிலும் அதன் எலும்பு உறுப்புக்களை நாங்கள் தொட்டு அசைக்க வேண்டியிருந்தது. அச்சமயம் பண்டிதரிடம் நாங்கள் மேகநாதவதமும்* காம்பெல் ஸ்கூல் மாணவன் ஒருவனிடம் உடற்கூறு நூலையும் பயின்று வந்தோம். நாங்கள் எல்லா வித்தையிலும் கரை கண்டவர்களாகி விட வேண்டுமென்பதே எங்கள் பெரியவர்களின் விருப்பம். அந்த விருப்பம் எம்மட்டும் நிறைவேறியதென்பதை எங்கள் திறமையைக் குறித்து நன்கு அறிந்தவர்களிடம் வெளியிடுவது மிகையாகும்; எங் களை அறியாதவர்களிடம் அதைக் கூறாமல் மறைப்பதே நலமெனக் கருதுகிறோம்.

அதன் பின்னர் எத்தனையோ நாட்கள் கடந்து சென்றன. அந்த அறையிலிருந்து அந்த எலும்புக் கூடும் எங்கள் மூளையிலிருந்து அந்த எலும்புகளைப் பற்றிய அறிவும் வேறு இடத்துக்கு எங்கோ ஒதுங்கிப் போயின; தேடினுல்கூடக் கண்டு பிடிக்க முடியாது.

சில நாட்களுக்குமுன்பு, இரவு நேரம் இட வசதியிராது போகவே, நான் அவ்வறையில் படுக்க நேர்ந்தது. பழக்கமிராத இடமாதலால் தூக்கம் வரவில்லை எனக்கு. இப்படியும் அப்படியும் புரண்டு கொண்டே இருக்கும் போது அண்டையிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் நள்ளிரவைக் குறிக்கும் மணியோசை கேட்டது. என் அறையின் ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்த மெழுகு வத்தி மங்குவதும் ஒளிர்வதுமாய்ச் சட்டென அவிந்து விட்டது. எங்கள் வீட்டில் இரண்டொரு துர்ச்சம்பவங்கள் நடந்துள்ளன. இந்த விளக்கு அணைந்ததுமே இயற்கையாகவே மரணத்தைப் பற்றிய நினைவுகள் எழுந்தன. இந்த இரவில் இரண்டாவது யாமம் விளக்குச் சுடர் ஒன்று பேர் இருளில் மறைந்துவிட்டது போல், மனிதரின் சின்னஞ் சிறு உயிர்ச் சுடர்கள் எத்தனைதாம் இரவிலும் பகலிலும் அணைந்து மறைந்தனவோ.



மெல்ல அந்த எலும்புக் கூட்டின் நினைவு வந்தது எனக்கு. அந்தக் கூட்டுக்குரிய ஆளைப் பற்றி நான் கற்பனையில் ஆழும் பொழுது உணர்வுள்ள பொருள் ஒன்று இருளிடையே அவ்வறையின் சுவரைத் தடவிக் கொண்டே நான் படுத்திருக்கும் கட்டிலின் கொசு வலையைச் சுற்றிச் சுற்றி வருவது போல் மருள் கொண்டேன். யாரோ நெடுமூச்செறிவது போலவே என் செவியில் ஒலித்தது. எதையோ தேடி அது கடுவேகமாய் அறை முழுவதும் அலைவது போலவும் இருந்தது. இவை யாவும் தூயில் இன்மையால் கொதிப்படைந்த என் மூளை உருவாக்கும் கற்பனை என்பதை நன்கு அறிவேன். என் மூளைக்குள் ஓவென்ற இரையும் ரத்தத்தின் சலசலப்புப் போன்றே ஏதோ ஒன்று விசையாகக் கால் வைத்துச் சென்றது. எனக்கு உடல் சிலிர்த்தது. காரணமின்றி எழுந்த இந்தக் கிலியைப் போக்கிக் கொள்ள வலிவான குரலிலேயே, 'யார் அங்கே?' என்றேன். காலடியரவம் கொசுவலைக்கு அருகில் வந்து சட்டென நின்றது. யாரோ இவ்வாறு பேசுவது போலக் கேட்டது. 'என் உடல் போன இடத்தைத் தேடிக்கொண்டு வந்தேன் நான் இங்கே.'

என் கற்பனை உருவாக்கிய ஒரு பொருளிடம் நான் எதற்காகப் பயம் கொள்ள வேண்டும்? அதெல்லாம் ஒன்றுமில்லை எனக்கு. பக்கத்துப் பஞ்சணையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே நான் நெடுநாட்கள் பழகியவனைப்போல் சற்றும் நடுக்கம் கொள்ளாமல் அந்த அருவத்தை விளித்து, ''இந்த நடுராத்திரியிலா அதைத் தேடிப் புறப்பட்டாய்? ரொம்ப நல்ல காரியந்தான்...... அந்த உடல் உனக்குத் தேவையா?' என்றேன்.

என் கொசுவலைக்கு அருகிலேயே அவ்விருளில் அதன் குரல் வந்தது – ''என்ன சொன்னும்? என் உயிர் அந்த எலும்புக் கூட்டினுள் இருந்ததே! எனது ஆயுட்காலமான இருபத்து நான்கு வருடங்கள் அதனுள் இருந்துதானே இளமை பூரிக்க, அழகு மலர வளைய வந்தேன். அதைக் காண ஆசை இருக்காதா எனக்கு?''

நான் உடனேயே சொன்னேன்—''நீ சொல்வது சரியே. தாராளமாக உன் உடலைத் தேடு...நான் சற்றுக் கண்ணயருகிறேன்.''

வங்காளியில் மூலக்கதைக்குப் பெயர்- கங்காள். * மைக்கேல் மதுசூதன தத்தரின் புகழ் மிக்க காவியம்.



அருவம் கூறிற்று—' நீ இந்த அறையில் தனியாக இருக்கிறாய்...நான் சற்று உட்காருகிறேன். கதை ஏதாவது அளந்து கொண்டிருக்கலாம். நான் மனிதர்கள் அருகே வந்து அவர்களுடன் அளவளாவி முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. இந்த நீண்ட காலம் நான் மயானத்தில் காற்று போல், நிழலென உலாவிக் கொண்டிருந்தேன். இன்று உன்னுடன் மனிதருள் ஒருத்தி போல் உரையாடப் போகிறேன்.'' அதே சமயம் என் கொசுவலையின் பக்கமாகக் கட்டில் விளிம்பில் யாரோ அமருவது போல் எனக்குத் தோன்றியது. வேறு வழியின்றி நான் திடத்துடன் அருவத்தை நோக்கி 'நல்லது: மனத்துக்குத் தெம்பு தரக் கூடிய விஷயம் ஏதாவது இருந்தால் சொல்லலாம்' என்றேன். 'எல்லாவற்றையும் விட மனத்துக்குத் தெம்பு தரக் கூடியது என் வாழ்க்கையைப் பற்றிய கதை தான்—' என்று தொடங்கியது அருவம். பக்கத்தில் இருக்கும் கிறிஸ்தவ ஆலய கடிகாரத்தில் 'டங் டங்' கென்று மணி இரண்டு அடித்தது.

'' நான் மானிடப் பிறப்பு எடுத்திருந்தபோது யமனைப் போல் இருந்த ஒருவனிடமே எனக்குப் பயம். அவன் என் கணவன். தூண்டில் முள்ளில் மாட்டிக் கொண்ட மீனைப்போல் நான் துடி துடித்தேன். எனக்கு முற்றிலும் அறிமுகமிராத ஒரு ஜீவன் என்னைத் தூண்டிலில் சிக்க வைத்து, நான் தெம்புடன் பயமின்றி உலவிய ஆழ்ந்த நீரிலிருந்து என்னை வெளியேற்றியது. அந்த யமனின் கையிலிருந்து தப்பிச் செல்வதற்கே வழியில்லை. எனக்கு மணமாகி இரண்டு மாதங்களுக்கெல்லாம் கணவன் இறந்து போனான். உற்றார் உறவினர் என்னைச் சூழ்ந்து கொண்டு கண்ணீர் வடித்துத் துக்கம் கொண்டாடினர். என்னுடைய மாமனார், எனக்குள்ள அநேக லட்சணங்களைக் காட்டி என் மாமியாரிடம், '' விஷகன்னிகை என்று நம் சாத்திரங்கள் கூறுகின்றனவே, அவளேதான் இந்தப் பெண்'' என்றார். அவர் அன்று சொன்னது இன்னும்என் மனத்தில் பதிந்திருக்கிறது...என் கதையைக் கேட்கிறாயா? எப்படி இருக்கிறது?'' என்றது அந்த அருவம்.

'' பலே ஜோர்....ஆரம்பத்திலேயே விறு விறுப்பாக இருக்கே!'' என்றேன் நான்.

'' சரி, கேள்! நீயே கொள்ளா ஆனந்தத்துடன் பிறந்தகத்துக்குத் திரும்பி வந்தேன். எனக்கு வயது ஏறத் தொடங்கியது. மற்றவர்கள் என்னிடம் வெளியிடாமல் மறைத்துவைத்த போதிலும் எனக்கு மட்டும் தெரியும் நான் அபூர்வமான அழகி. என்னைப் போல் வடிவும் வனப்பும் உடையவர்கள் இவ்வுலகில் காண்பதே அரிது என்று. உனக்கு எப்படித் தோன்றுகிறது?''

'' இருக்கலாம்......ஆனால் உன் உருவம் என் கண்ணில் பட்டால்தானே சொல்ல முடியும் உன் அழகு எத்தகையதென்பது?''

'' நீ பார்க்கவில்லை: ஆமாம்! ஓ அந்த எலும்புக் கூட்டைத்தானே பார்த்திருக்கிறாய்! ஹஹ்ஹஹ! நான் தமாஷுக்குக் கேட்டேன்! என் அழகை இத்தகையதென்று உனக்கு எதை அத்தாட்சியாகக் காட்டுவது நான்? விழிகள் இராத அந்த எலும்புக் குழிகளுள் மையார் நீடக் கண்கள் சுழலமிட்டன. கோவைக் கனியொத்திரண்டு சிவந்து விளங்கிய என் வாய் இதழ்களில் தெளிந்த அந்த மோகன முறுவலுக்குப் ஓர் உவமை உண்டோ! சுருங்கிப் போன அந்த

எலும்புக் குவை மீது தசையும் ரத்தமும் கூடிய இளமைச் செல்வியும், மலர்ச்சியும் மினுமினுப்பும் படர்ந்திருந்தனவே அதைச் சொன்னால் நீ சிரிப்பாய்; உனக்கு இப்போது எரிச்சலாகவும் இருக்கும். அத்தகைய மேனிப் பொலிவுடன் விளங்கிய என் உடல், இப்படி எலும்பின் நுட்பங்களை அறிவதற்கு உதவுமென்று எந்த டாக்டராவது ஒரு சமயம் நினைத்திருப்பானா? எனக்குத் தெரியும்: ஒரு டாக்டர் மட்டும் தம் நண்பனிடம் என் அங்க லாவண்யத்தைக் காட்டி 'சம்பக மலர் இவள்' என்று கூறியிருக்கிறார். அதன் பொருள் இதுவே; என்னைத் தவிர உலகில் உள்ள மற்றவர்களுடைய உடல்கள் இந்த உடற்கூற்று நூலுக்கு உதாரணம் காட்டுவதற்கு உதவுவன; நான் ஒருத்தி மட்டுமே அழகார் மலருக்கு இணையானவள். சம்பக மலருக்குள் எங்கேயாவது எலும்புக் கோவை இருக்குமோ! "நான் ஒயிலாக நடந்து செல்லுகையில், வைரக்கல் ஒன்றை அசைத்தால் அதன் பல பட்டைகளிலிருந்து ஒளி சிதறுவது போலவே, என்னுடைய தேக சௌந்தரியம் அதற்குரிய அலை வரிசையுடன் இலகும். அடிக்கடி நான் என் கைகள் இரண்டினையும் பார்த்து அகமகிழ்வேன். உலகில், கட்டுக்கு அடங்காது திரியும் ஆண்மையை மயக்கித் தம்மிடம் அடக்கிக் கொள்ளும் திறனுடையவை. சுபத்திரை அர்ஜுனனைத் தன் வெற்றித் தேர் மிசை ஏற்றி மூவுலகத்தவரும் பிரமிக்கச் செருக்குடன் செலுத்தினளே, தெரியுமா...எனக்கு இருந்தவை போன்று வேயுறு தோள்களும் சிவப்பூறும் உள்ள நங்கைகளும், முருகின் சுடர் விடும் விரல்களும் அவளுக்கு இருந்திருக்க வேண்டும்.

ஆனால் வெளித்தோலும், அணிகலமும் இராமல் மானம் கெட்டு நிற்கும் அந்தச் சடலம் உனக்கு நான் சொல்வதெல்லாம் மெய் என்பதை எப்படி ருஜுப்படுத்தும்? வேறு வழி என்ன இருக்கிறது; எனக்கு விளக்கத் தெரியவில்லை. உலகில் எல்லாரையும்விட உன்மீதே எனக்குக் கோபம் உண்டாகிறது. "இப்போது எனக்கு உள்ள பரபரப்பு என்ன தெரியுமா? அந்தப் பதினாறு வருடங்கள், வெம்மை ரத்தம் ஊடுருவிச் சென்று இளமை ததும்பிய அவ்விணையற்ற வடிவமதை உன் கண்முன் கொண்டு வந்து நிறுத்த முடியுமானால் இப்போது உன் உறக்கமெல்லாம், உன் அசட்டை யாவும் எங்கோ பறந்தோடி விடுமே! நீ பயிலும் இந்த எலும்பு நுட்பங்களுக்கு ஒரு முடிவு கட்டிவிடுமே..."

நான் அருவத்தை விளித்து, "உனக்கு உடல் என்று ஒன்று இருந்தால், அதைத் தொட்டுச் சத்தியம் செய்வேன்; எலும்பு பற்றிய அந்த நுண்ணறிவு என் மூளையில் துளியேனும் இல்லை என்பதை. இதோ, நீ உன்னைப் பற்றி வருணிக்கும் அந்த யௌவன ரூபம் இந்த இருள் திரைமீது பளிச்சென்று ஒளிவிடுகிறதே...இதுவே போதுமல்லவா..?" என்று கூறினேன்.


அருவம் தன் கதையைத் தொடர்ந்து சொல்லியது.—"துணைக்கு எனக்கு யாருமே தோழிகள் இல்லை. நான் கைம்பெண்ணாகி விடவே, என் தமையன், தான் விவாகம் செய்து கொள்வதில்லையென்று விரதம் பூண்டான். அந்தப்புரத்தில் நான் ஒருத்தியே. எங்கள் வீட்டைச் சுற்றி அழகிய தோட்டம். அங்கே நான் மரங்களின் கீழ் அமர்ந்து அத்தனிமையில் நினைத்துக் கொள்வேன் — உலகமே என் மீது மயல் கொண்டுள்ளது; வானத்துச் சுடர்கள் என் அழகிலேயே மயங்கிக் கண் கொட்டாமல் பார்க்கின்றன; இளம் தென்றல் அடிக்கடி என்னைத் தொட்டு இன்புறவே மெல்ல மூச்செறிகிறது; எனது மெல்லிய பாதங்கள் புற்றரை மீது படியும்போது, ஒன்றையொன்று பார்த்து அவை பொறாமையால் வாடுவதுபோல் தோன்றும்; வையத்து ஆடவரெல்லாம் என் காலின் கீழுள்ள புல் கூட்டங்களாக வந்து எனது சேவடியை வருடி வணங்கக் காத்திருப்பது போலவே தோன்றும். காரணமின்றி ஒரு வேதனை என் உளமதை வாட்டிவிடும்.

"அண்ணனின் நண்பனான சசிசேகரன் வைத்தியக் கல்லூரியிலிருந்து தேறி வந்தவன். எங்கள் குடும்பத்து டாக்டரானான். மறைவிருந்தபடியே அவனைப் பன்முறை நான் பார்த்திருக்கிறேன். என் தமையன் விசித்திர சுபாவமுள்ளவன். கண்ணை நன்றாகத் திறந்து உலகில் நடப்பதை அவன் கவனிக்க மாட்டான். வாழ்வு, அவன் மட்டில் எந்த விதமான ஏமாற்றத்தையும் அளிக்கவில்லை. இதனால் அவன் சற்று விலகியே சென்றுகொண்டிருந்தான்.

"இந்தச் சசிசேகரன், ஒருவனே அவனுடைய ஆப்த நண்பன். இதனால் வெளி புருஷர்களையே காணாத நான் இவனையே எப்போதும் கண்டு வந்தேன்: மாலைப்பொழுது, மலர்க்காவில் நான் ராணியைப்போல் வீற்றிருக்கையில் இந்த உலகத்து ஆண் இனமே சசிசேகரன் வடிவில் தோன்றி என் காலடியில் விழுந்து கிடக்க வேண்டுமென்று ஆசை... என்ன காதில் விழுந்ததா, நான் சொன்னது? உனக்கு எப்படித் தோன்றுகிறது?"

நான் பெருமூச்சு விட்டேன். "எனக்கு என்ன படுகிறதென்றால், நான் அச் சசிசேகரனாகப் பிறந்திருக்கக் கூடாதா என்றுதான்."

"முதலில் நான் சொல்வதை யெல்லாம் கேள்....ஒரு நாள்; அப்போது மழைக்காலம் எனக்கு ஜுரம் கண்டது. அந்த டாக்டர் என்னைப் பார்க்க வந்தார். அதுவே முதல் தடவையாக அவரை நான் சந்திப்பது. ஜன்னல் பக்கமாக நான் முகத்தைத் திருப்பிப் படுத்துக் கொண்டிருந்தேன். மாலை நேரத்தில் காணும் செக்கர் ஒளி முகத்தில் படிந்து ஜுரத்தால் உண்டான பசலையை விலக்கியது. டாக்டர் என் அறைக்கு வந்து என் முகத்தையே நோக்கினார். அப்போது என் முகம் டாக்டரின் கண்களில் எவ்வாறு தோன்றும் என்று கற்பனை செய்து கொண்டேன். மெதுவான பஞ்சணையில் படிந்து சற்றே துவண்ட ஒரு மென் மலர் போலவே இருந்திருக்கும், என் முகம். கட்டுக் கடங்காத கருங்குழல் என் நெற்றியிலும் கழுத்திலும் வழிந்திருக்கும். நாணத்தால் கவிந்த என் கண்ணிமைகள் தாடையில் நிழலைப் பரப்பி இருக்கும். இவ்வாறெல்லாம் ஓடியது என் கற்பனை.




உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது

பயர்ஸ்டோன்

....நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்

'இண்டியானு பொலிஸ்'ல் நடைபெற்ற உலகப்பிரசித்தி பெற்ற 500 மைல் ஓட்டப் பந்தயத்தில், மோட்டார் ஓட்டிகளுக்குக் கடுஞ்சோதனையாக வாய்ந்த பந்தயப் பாதையிலே, கடுமையான அதிர்ச்சிகளுக்கும், அபாயகரமான நெளிவு சுளுவுகளுக்கும், உராய்தலுக்கும் ஈடு கொடுத்து மணிக்கு 180 மைல் வேகத்துடன் ஓடி வெற்றிபெற தனக்கு உதவிய பயர்ஸ்டோன் டயர்களை ஜிம்மி ப்ரையன் பெரிதும் பாராட்டினர்.

உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பது பயர்ஸ்டோன் டயர்கள். ஏனெனில், உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும், ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்பு தரும் அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. பயர்ஸ்டோன் அளிக்கும் சிறந்த பாதுகாப்பு செயலில் நிரூபிக்கப்பட்டது.



Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலக்ஸ் சாம்பியன்

ட்யூப் இல்லாதது அல்லது ட்யூப் உள்ளது

W. 67

"டாக்டர் அடக்கமான குரலில் என் அண்ணனிடம் சொன்னார், என் கைநாடியைப் பிடித்துப் பார்க்க வேண்டுமென்று.

"நான் என் போர்வையின் மறைவிலிருந்து சற்றே துவண்ட வளப்புடைய என் கையை வெளியே நீட்டினேன். அப்போது என் கையையே நான் பார்த்துக் கொண்டேன்; நினைத்தேன். தந்தம் போன்ற இந்தக் கரங்களில் நீலநிற வளையல்கள் இருந்தால் இன்னும் அழகாக இருந்திருக்குமே என்று. நோயாளியின் கையைத் தொட்டு நாடியைப் பரிட்சை செய்யும்பொழுது இப்படி எந்த டாக்டரும் இதற்குமுன் தயங்கித் தயங்கி நின்றதை நான் கண்டதே இல்லை. விரல்களில் நடுக்கம் தோன்ற என் நாடியைப் பிடித்துப் பார்த்தார். எனக்குள்ள ஜுர வேகத்தை அவர் உணர்ந்தார். நானும் அவருடைய இதய நாடி துடிக்கும் வேகத்தை ஒருவாறு உணர்ந்தேன். என்ன, நான் சொல்வது நம்பக்கூடியதாக இல்லையா?"

நான் அதற்கு, "நம்பாமல் என்ன? மனிதருடைய நாடி எல்லா நிலைமிலும் ஒரேமாதிரி அடித்துக் கொள்ளாது" என்றேன்.

"காலக்கிரமத்தில் இரண்டொரு தடவை இப்படிக் காய்ச்சல் வந்து குணமடைந்த பிறகு எனக்கு நன்றாகப் புரிந்தது. மாலை நேரங்களில் என் மனத்துள் எழுப்பிக் கொள்ளும் அந்தக் கொலுக் கூடத்தில் எனக்காக ஏங்கி நிற்கும் இந்த உலகத்தில் வாழும் கோடிக்கணக்கான ஆடவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்து கடைசியில் ஒருவனோடு நின்றது. எனது கற்பனை உலகு ஏறக்குறைய முழு சூன்யமாகிவிட்டது. அங்கே எஞ்சி இருந்தவரெல்லாம், ஒரு டாக்டரும், அவருடைய சிகிச்சையைப் பெறும் ஒரு நோயாளியுமே ஆவர்.

"மாலைப் பொழுதில் நான் வஸந்த வண்ண ஆடை அணிந்து கொள்வேன் ரகசியமாக. தலையை வாரி அழகிய கொண்டை போட்டு, அதில் மல்லிகைச் சரத்தைச் சூட்டிக் கொள்வேன். கையில் ஒரு கண்ணாடியை வைத்துக் கொண்டு தோட்டத்தில் போய் அமருவேன்.

"எதற்கா? என்னையே நான் எத்தனை நேரம் அந்த ஆடியில் அழகு பார்த்துக் கொண்டாலும் சலிப்பே தட்டாது. என்னை மட்டுமா பார்த்துக் கொண்டேன்? நான் அங்கே ஒருத்தியாக இருந்தாலும், இருவராகி விடுவேன். டாக்டராக என்னை பாவித்துக் கொண்டு அந்தக் கண்ணாடியுடன் பார்த்துக் காதல் கொள்வேன்; என்னையே நான் பாராட்டிக் கொள்வேன். அப்போது என் நெஞ்சிலிருந்து ஒரு நெடுமூச்சு மாலைவேளையில் எழும் சிறு காற்றென விம்மிச் செல்லும்.

"அது முதற் கொண்டே நான் தனிமையிலேயே இல்லை. நான் நடந்து செல்லும் பொழுது குனிந்து என் அழகிய கால்விரல்கள் தரைமீது எப்படிப் படிகின்றன என்று பார்த்துக் கொள்வேன். புதிதாகப் பரீட்சையில் தேர்ந்து வந்த அந்த டாக்டரின் கண்ணுக்கு அவை எவ்வாறு தோன்றும் என நினைத்துக் கொள்வேன். பகற்பொழுது, ஜன்னலுக்கு வெளியே கண்ணைக் கூசும் வெயில் காயும். எங்கும் ஓசையடங்கி இருக்கும். நடுவே எப்பொழுதாவது நீல வானிடை வெகு உயரே கழுகொன்று பறந்து கொண்டிருக்கும். தோட்டச் சுவருக்கு அப்பால் தெருவில் பொம்மைச் சாமான்கள் விற்பவனின் குரல் கேட்கும். 'பொம்மை வாங்கலியோ, வளையல் வாங்கலியோ' என்று. நல்ல வெளுப்புப் போர்வையைப் படுக்கைமீது விரித்துப் படுத்துக் கொள்வேன். தோள் வரைக்கும் திறந்த எனது மெல்லிய கைகளைப் பஞ்சணைமீது தூக்கி வைத்தபடி சிந்தனை செய்வேன்; இந்தக் கைகளின் வளைப்பு யார் கண்ணிலும் படாதா; அவற்றை மெல்லத் தூக்கித் தன்னுள் அணைத்துக் கொள்ளத் துடிக்கும் அந்தக்கை யாருடையதோ? எனது கொழுந்து விரல்களைத் தொட்டு மெல்ல முத்தம் தந்து திரும்பிச் செல்பவன் எவனோ...அப்படி யெல்லாம்... என் கதையை இத்துடன் நிறுத்திக் கொண்டால் எப்படி இருக்கும் சொல்?"

நான் சொன்னதாவது—"மோசமாக இருக்காது; குறையாக நின்றால்தான் மேற்கொண்டு கற்பனை விரிவாக ஓடுவதற்கு இடம் ஏற்படும்."

"அப்படி இருந்தால், கதை சற்று உருக்கம் நிரம்பியதாக அல்லவோ முடியும்? இதில் சுவாரசியம் எப்படி இருக்கும்? இதனுள் மறைந்திருக்கும் ஓர் எலும்புச் சட்டம் தன் பல்லையெல்லாம் காட்டி நகைத்திட வாய்ப்பு இருக்காதே."

"அப்புறம் கேள் மிகுதிக் கதையை...சற்று வசதியாய் ஏற்பட்டதும் எங்கள் வீட்டிலேயே கீழ்ப்புறம் டாக்டர் தம் மருத்துவ விடுதியை அமைத்துக் கொண்டார். அச்சமயம் நான் அவருடன் சிரிப்பாகவும் வேடிக்கையாகவும் பேசி மருந்துகளின் பெயர் விஷ மருந்துகள் யாவை சுகமாகச் சாவதற்கு என்ன வழி இவை போன்ற விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வேன். வைத்தியம் பற்றிய விஷயங்களைச் சொல்லப் புகுந்து என்னோடு நெருங்கி உரையாடுவதில் டாக்டருக்கும் விருப்பம் தூண்டிற்று. அவர் வாயிலிருந்து விஷயத்தைத் தெரிந்து கொண்டதும், மரணத்தைப் பற்றிய குளிரே எனக்கு இல்லாமல் போய்விட்டது. வீட்டில் என்னுடன் எப்போதும் பழகும் ஆளாகவே மறலி தோன்றினான். இந்த உலகில் நான் நோக்கிய இடமெல்லாம் காதல், சாதல் இவற்றின் இரு உருவங்களே என் முன் வந்து நின்றன.... சற்றுப் பொறு. என் கதை முடியும் கட்டத்தை அனுகி விட்டது...இன்னும் விஷயம் அதிகமில்லை."

நான் மெதுவாகவே சொன்னேன். "இரவும் முடியும் தறுவாய்க்கு வந்து விட்டது."

"சில நாட்களாகவே டாக்டர் வேறு எங்கோ மனம் தென்பே கொள்ளாமல் அலைய இருப்பதை நான் கவனிக்காமல் போகவில்லை. ஒரு நாள் அவர் சற்றுப் பகட்டாக உடைகள் அணிந்து கொண்டு அண்ணனிடம் வந்து குதிரை வண்டி சற்று உதவ வேண்டுமெனக் கேட்டார்.

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனேயே அண்ணனிடம் போய், பல விஷயங்களைப் பற்றிப் பேச்சுக் கொடுத்து நடுவில், 'ஆமாம், அண்ணா! டாக்டர் குதிரை வண்டி கேட்டாரே, எங்கே போகிறார்?' என்று

மெல்லக் கிளறினேன். சுருக்கமாகவே அண்ணு 'சாகப் போகிறார்' என்றார்.

"நிச்சயமாகவா அண்ணு?" என்றேன் நான். முன்னைவிடச் சிறிது உடைந்து அவர், 'விவாகம் செய்து கொள்ளப் போகிறார்' என்றார். 'நிச்சயமா?' என்றதும் எனக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. அப்புறம் தெரிந்தது. டாக்டருக்கு இந்த விவாகத்தால் ரொக்கமாகக் கையில் பன்னிரண்டாயிரம் ரூபாய் (வரதக்ஷிணை) கிடைக்குமாம். ஆனால் என்னிடம் இதை மறைத்து வைத்து என்னை அவர் அவமானத்துக்குள்ளாக்கியதன் காரணந்தான் என்ன? நான் என்ன, அவருடைய கால்களைக் கெட்டியாகப் பற்றி, 'வேண்டாம் இப்படி ஒரு காரியம் செய்ய வேண்டாம். என் இதயம் வெடித்து விடும்' என்று கண்ணீர் விட்டுக் கதறினேனா? இந்த ஆடவர்களையே நம்பக் கூடாது. இவ்வுலகில் நான் ஒரே ஆண் மகனைத்தான் நெருங்கினேன். ஒரே கணத்தில் என் அறிவுக் கண் திறந்துவிட்டது.

"டாக்டர் நோயாளிகளைப் பார்த்துவிட்டு அந்தி வேளைக்கு முன்னால் எங்கள் அறைக்கு வந்தபோது நான் வாய்விட்டுச் சிரித்து, 'என்ன டாக்டர்வாள்! இன்றைக்கா உங்களுக்குத் திருமணம்?' என்றேன். இப்படி நான் மலர்ச்சியுடன் இருப்பதைப் பார்த்து டாக்டர் திகைப்பு மட்டுமல்ல, வெறுவாய் மனவேதனையும் அடைந்தவராகவே தென்பட்டார். 'ஏது, மேளதாளம் ஒன்றுமே இல்லை போலிருக்கு' என்றேன்.

இதைக் கேட்டு அவர் நெட்டுயிர்ப்புடன் 'விவாகம் அப்படி மகிழ்ச்சிக்குரிய விஷயமா?' என்றார். எனக்குச் சிரிப்பாக வந்தது. இப்படி அவர் சொன்னபொழுது. இந்தமாதிரி ஒருவர் கேட்டதே இல்லை நான். 'அதெல்லாம் முடியாது. நல்ல வாத்தியம் வேண்டாமா; விளக்கெல்லாம் வேண்டாமா?' என்றேன் நான். உடனேயே அண்ணுவைத் தாண்டினேன். அவரும் வழக்கத்தையொட்டி மணவிழாவுக்கான இந்த ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தார். மணப் பெண் வீட்டுக்கு வந்ததும் என்ன நடக்கும், என்ன செய்வாள், இதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவலில் டாக்டரை நான், 'அது சரி, டாக்டர்வாள்! அப்போதும் நீங்கள் நோயாளியின் நாடியைப் பரீட்சை செய்து பார்ப்பீரா?' என்றேன். 'ஹஹ, ஹஹ' மனிதரின் உள்ளம் மட்டும், அதுவும் ஆடவர்களின் உள்ளம் மட்டும் கண்ணுக்குப் புலப்படுவதாயிருந்தால், இதோ சபதம் செய்து சொல்லுகிறேன், என்னுடைய சொற்கள் டாக்டரின் உள்ளத்துள் வேல் எனத் துளைத்து விட்டிருக்கும்.

"இரவு வெகுநேரத்துக்குமேல் முகூர்த்தம். அன்று மாலை நேரம் திறந்த மாடியில் அண்ணுவுடன் டாக்டர் மது அருந்தினார். இருவருக்கும் இந்தப் பழக்கம் உண்டு. அந்திப்பொழுது மங்கியதும் ஆகாயத்தில் மெல்ல நிலவொளி பரவிக் கொண்டிருந்தது. சிரித்த வண்ணம் நான் அங்கே வந்து, 'என்ன டாக்டர் மறந்து போய் விட்டீரா: மணப்பந்தலுக்குப் போக நாழிகை ஆகவில்லையோ?' என்றேன். இந்த இடத்தில் முக்கியமானதொன்று சொல்ல வேண்டியிருக்கிறது. டாக்டரின் மருந்துகள் வைத்திருக்கும் அறைக்குச் சென்று நான் திருட்டுத்தனமாகச் சூரணமொன்றை எடுத்து வந்திருந்தேன். அந்தச் சூரணத்தில் கொஞ்சம் யாரும் பாராத சமயமாக டாக்டர் அருந்தும் கிண்ணத்தில் மதுவுடன் கலந்து விட்டேன். அந்தச் சூரணத்தை உட்கொண்டால் மனிதன் மரித்து விடுவான் என்பதை அவர் மூலமாகவே நான் தெரிந்து கொண்டேன். டாக்டர் அந்தக் கிண்ணத்தில் உள்ள மதுவைத்தான் உட்கொண்டார். குரல் தழுதழுக்க என் உள்ளத்தை ஊடுருவும் வண்ணம் நோக்கியதும், 'நான் போகிறேன்' என்றார்.

"வாத்தியம் முழங்கும் ஒலி கேட்டது. நான் காசிப் பட்டுப் புடவையை அணிந்தேன். இரும்புப் பெட்டியிலிருந்து என் நகைகளை யெல்லாம் எடுத்துப் போட்டுக் கொண்டேன். நெற்றியில் பளிச்சென்ப் பெரிய அளவில் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டேன். எங்கள் தோட்டத்து மகிழமரத்தின் கீழ் பாயலைப் பிரித்துக் கொண்டேன். அழகு வழிந்தோடும் இரவு; பால் நிலவு, ஓய்ந்துபோன உலகுக்குத் தென்பூட்டும் மெல்லிய தென்றல் வீசியது. மல்லிகை மௌவல் இவற்றின் இன் மணம் எங்கும் கமழ்ந்தது. வாத்திய ஒலி மெல்ல மெல்லத் தொலைவில் மறைந்து போயிற்று. நிலவு மாறி இருளும் கவிந்தது. அம் மகிழ மரத் தளிர்களும், வானமும், நான் பிறந்தது முதல் என்னுடன் ஒன்றி இருந்த என் வீட்டின் காட்சியும், இவ்வுலகின் தோற்றமும் ஒரு மாயச் சுழலில் மெல்ல மறையத் தொடங்கின. அப்போது கண்களை நன்றாக மூடியபடி எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன். மனிதர் யாராவது என்னை வந்து பார்க்கும்போது அந்தச் சிரிப்பு ஒரு வண்ண மயக்கென என் இதழ்களில் திகழ்ந்திருக்க வேண்டுமென்பது என் விருப்பு. எல்லையற்ற இரவினிலே பள்ளியறையில் எனது பூஞ்சேக்கையில் பள்ளி கொள்ளப் போகையில் இந்த இன்பச் சிரிப்பு என் இதழ்களை விட்டு அகலக் கூடாதென்பது என் கோரிக்கை. ஆனால் அத்தகைய பள்ளியறை எனக்கு எங்கே இருக்கிறது? அத்தகைய மணக்கோலந்தான் எனக்கு ஏது? என்னுள் 'கட்கட்' என்று ஒரு ஒலி கேட்டது. விழித்தெழுந்து பார்க்கும்போது எனது எலும்புக் கூட்டை வைத்து இளைஞர் மூவர் உடல் நுணுக்கத்தை ஆராய்கின்றனர். என் இதயம் துடித்த இடத்தையும், என் இளமை ஒவ்வொரு இதழாக மெல்ல மலர்ந்த இடத்தையும் ஒரு பிரம்புக் குச்சியால் சுட்டியே உபாத்தியாயர் பையன்களுக்கு அந்த அந்த இடத்து எலும்பின் பெயரைச் சொல்லிக் கொடுத்தார். நான் கடைசியாகச் சிரித்தபோது என் உதடுகளில் தெரிந்த அதன் அடையாளம் எங்கேயாவது இருந்ததா? கதை எப்படியிருக்கிறது?'.

நான் அதற்கு, "கதைக்கு என்ன? அருமையான கதைதான்" என்றேன்.

அதே சமயம் முதல் காக்கை கரைந்தது. அருவத்தை விளித்து நான், "இன்னும் ஏதாவது சொல்வதற்கு இருக்கிறதா?" என்றேன். மறுமொழியே வரவில்லை. அறையினுள் வைகறை ஒளி மெல்லப் புகுந்தது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras 10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

